# பிதாவாகிய தேவன்

# பிதாவாகிய

# தேவன்

## ஹியூகோ மெக்கோர்டின் பாடங்கள்

1. ஏல் (?El?):? தேவன்?
2. YAHWEH:?கர்த்தர்?
3. தேவனை விவரிக்கும் பெயர்கள்
4. தேவனுடைய பணிப் பொறுப்புகளைப் பிரதிபலிக்கும் பெயர்கள்
5. ?எங்கள் பிதாவே?
6. ?பரமண்டலங்களிலிருக்கிற?
7. ?உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக?
8. ?இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் உம்முடையவைகளே?
9. தேவடைய ஆவி

## ஜேம்ஸ் பிரிஸ்டின் பாடங்கள்

1. ஓர் அறிமுகம்
2. பிரிவு 1: தேவனுடைய வரையறையுற்ற தன்மை
3. தேவனுடைய எங்கும் நிறைந்த தன்மை: நமது தேவன் அடிப்படைச் சாரத்தில்? அங்கு? இருப்பவரல்ல
4. தேவனுடைய எல்லையற்ற அறிவு: நமது தேவன்? கற்புத? இல்லை
5. தேவனுடைய சர்வ வல்லமை: நமது தேவன்? பலம் குறைந்தவராய்? ஆவதிதல்லை
6. பிரிவு II : நமக்காக தேவனுடைய சந்தர்ப்பப் பொருள்
7. நமது தேவன் சிருஷ்டிக்கும் வல்லமையுள்ளவர்
8. நமது தேவன் வரலாற்றுப் பூர்வமானவர்
9. நமது தேவன் வெளிப்படுத்தப்பட்டவராய் இருக்கின்றார்
10. பிரிவு III : நம்முடன் தேவனுடைய உறவு
11. நமது தேவன் வெளிப்படுத்தப்பட்டவராய் இருக்கின்றார்
12. நமது தேவன் ஏவுதல் செய்கின்றவராய் இருக்கின்றார்
13. நமது தேவன் அன்புக்குரியவராய் இருக்கின்றார்
14. பிரிவு IV : பிதாவாக தேவன்
15. தேவன் நம்முடைய பிதாவாக இருப்புது எப்படி?
16. நமது ஆவிக்குரிய தகப்பனாக தேவன்
17. தொகுப்புரை

# ஏல் (*'El*): "தேவன்"

*பழைய அல்லது புதிய ஏற்பாட்டில் ஒரு விசேஷித்த அர்த்தம் கொண்டிராத மனித அல்லது தெய்வீகத்துவப் பெயரைக் காண்பது மிகவும் கடினமாகும். மற்றும், வேதாகமம் எவ்வளவு கவனமாக எழுதப்பட்டுள்ளது என்பதை ஒருவர் கவனிக்கையில், தெய்வீகத்தின் எந்த ஒரு பெயரும் அல்லது விவரிப்பும் குறிப்பாகத் தனிச் சிறப்புடையதாகச் சுட்டிக் காட்டப்படுவதை அவர் அறிகின்றார். பின்வரும் பாடங்கள், பழைய ஏற்பாட்டில் தெய்வீகத்துவத்தின் பெயர்கள் மற்றும் விவரிப்புகள் பலவற்றைக் காட்சிப் படுத்தும் ஒரு முயற்சியாகும். பெயர்களைத் தேவன் தாமே தனிப்பட்ட வகையில் தேர்ந்து கொண்ட செயலானது அவரது மக்களால் அவருக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களின் வளமான அர்த்தத்தை நாம் கண்டுகொள்ள நம்மை அனுமதிக்கின்றன. காட்சிப் பெட்டியில் உள்ள விலையுயர்ந்த ஆபரணங்களை ஆய்வு செய்வது போல அந்தப் பெயர்களைப் படித்தறிவது என்பது தெய்வீகத்தைப் பற்றி ஒருவருடைய மதிப்பை ஆழப்படுத்துவதற்கானதாகும்.*

*எபிரெய மொழியில் தேவத்துவம் என்பதற்கான இயற்பெயரானது 'El அல்லது 'Eloh என்ற பெயர்ச்சொல் வேரின் மீது கட்டியமைக்கப் பட்டுள்ளது. எபிரெய ஆண் ஒருமைச் சொல்லுடன் im என்பதைச் சேர்க்கையில் அச்சொல்லானது பன்மைச் சொல்லாக்கப்படுகின்றது; இவ்விதமாக நாம் 'elohim என்ற வார்த்தையையும் எதிர்ப்படுகின்றோம். "பெயர்ச் சொல்லின் அமைப்பு பன்மைச் சொல்லாக இருக்கிறது, ஆனால் ஒருமைச் சொல்லைக் குறிப்பதாக இருக்கிறது. இது சில வேளைகளில் 'மகத்துவத்தின் பன்மைப்பதம்' என்று அழைக்கப்படுகின்றது."[1] பழைய ஏற்பாடானது எப்பொழுதுமே ஒரே ஒரு தேவன் இருக்கின்றார் என்று குறிப்பிடுவதுடன் பல தெய்வ விக்கிரகாராதனையைக் கண்டனம் செய்கின்றது. இவ்விதமாக இந்தப் பெயர்ச் சொல்லின் வேர் மீது கட்டப்பட்டுள்ள தேவனின் இயற்பெயர்களைப் புரிந்து கொள்வது இன்றியமையாததாக உள்ளது.*

## ஏலோஹிம் (*'ELOHIM*): "தேவன்"

*தெய்வீகத்துவத்தைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் முதல் விவரிப்பானது ஆதி. 1:1ல் உள்ளது. "ஆதியிலே தேவன் ['elohim] வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்."*

### *"தேவன்" என்ற வார்த்தையின் அர்த்தம்*

*தவறாக எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு கருத்து. "தேவன்" மற்றும்*

*“நல்லது” (good) என்ற வார்த்தைகள் தொடர்புடையவைகள் என்று சிலர் நினைத்துள்ளனர். இந்த வார்த்தைகள் ஆங்கில மொழியில் ஒன்று போலவே எழுத்துச் சரிப்பைக் கொண்டுள்ளன என்பது உறுதி. ஆங்கிலோ - சாக்ஸன் வார்த்தையான “god” என்பது தெய்வீகத்துவத்தையும் நற்பண்பையும் சுட்டிக்காட்டுவதாக ஆதி. 1:1 பற்றி ஆதாம் கிளர்க் விளக்கம் அளித்தார். வேதாகமத்தின் தேவனை ஒருவர் சிந்தித்துப் பார்க்கையில், “தேவன்” என்ற வார்த்தை எவ்விதம் நற்தன்மையுடன் சமானப்படுத்தப்படலாம் என்பதை ஒருவர் புரிந்து கொள்ள முடியும், ஏனென்றால் வேதாகமத்தின் தேவன் சாராம்சத்தில் நற்பண்பு உடையவராய் இருக்கின்றார். “கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்” என்று தாவீது வியந்து கூறினார் (சங். 34:8). வேதாகமத்திற்குப் புறம்பே, ‘‘தேவர்கள்’’ (‘‘கடவுள்கள்’’) நல்லவர்களாய் இருந்ததில்லை. “God” என்ற வார்த்தை நற்பண்பைக் குறிப்பிடுமென்றால், அது புற சமய தெய்வீகத்துவங்களைக் குறிப்பதற்கு முற்றிலும் தவறான வழியிலேயே பயன்படுத்தப்பட்டது எனலாம். யுரேனஸ் (Uranus) என்ற கடவுள் தனது சொந்தப் பிள்ளைகளையை வெறுத்து, சிறையில் இட்டதாகக் கூறப்படுகின்றது. யூப்பித்தர் (Jupiter) என்ற கடவுள், தான் “கடவுளர்களின் அரசன்” ஆவதற்காக தன் தந்தையைத் தூக்கியெறிந்தது எவ்விதம் என்பது பற்றி கதைகள் கூறுகின்றன. புறசமய(மத)க் கடவுள்கள், பேராவல், சண்டையிடுதல் மற்றும் சிற்றின்ப வெறி ஆகியவை உடையவைகளாகச் சித்தரிக்கப்பட்டன.*

*இருப்பினும், ஆதி. 1:1ல் மோசே பயன்படுத்திய ’elohim என்ற வார்த்தையானது, ‘‘நற்பண்பு’’ (‘‘நல்லது’’) என்று அர்த்தப்படும் வார்த்தையுடன் உறவு எதுவும் பெற்றிருப்பதில்லை. ‘‘நல்லது’’ என்ற வார்த்தை tobh என்ற எபிரெய வார்த்தையில் இருந்து வருகின்றது, இது ஆதி. 1:4ல்: வெளிச்சம் tobh நல்லது என்று தேவன் ’Elohim கண்டார் என்பது போன்ற வகையில் காணப்படுகின்றது. ஆங்கில வார்த்தைகளான “god” மற்றும் “good” ஆகியவை ஒரே வேளையில் ஒரே விதமான எழுத்துக்களைப் பெற்றிருப்பினும், இந்த ஆங்கில வார்த்தைகள் பெறப்பட்ட எபிரெய வார்த்தைகள் பொதுவான அம்சம் எதையும் கொண்டிருப்பதில்லை.*

*(கடவுள்) “god” என்ற வார்த்தை வழிபடுவதற்குரிய பொருள் என்று அர்த்தப்படுகின்றது. “god” என்ற வார்த்தையானது “வேண்டுதல் செய்ய, வழிபட’’ என்ற வேர் அர்த்தத்தையுடையதாக ஆங்கில அகராதி கண்டறிகின்றது; எனவே கடவுள் என்பது வழிபடுவதற்குரிய ஒரு பொருள் ஆகின்றது. அது போலவே, ’elohim என்ற வார்த்தையிலிருந்து மிகப் பெரும்பாலும் தரவழைக்கப்பட்ட வினைச்சொல் ‘alah ஆகும் (இது “Allah” ‘‘அல்லாஹ்’’ என்ற இஸ்லாமியச் சொல்லில் காணப்படுகின்றபடியானதாகும்), இது ‘‘பயத்துடன் சென்று வழிபடுதல்/வருதல்’’ என்று அர்த்தப்படுகின்றது. இந்த வார்த்தை “வழிபடுவதற்கு” என்று அர்த்தம் பெறலாயிற்று.*

*‘‘பயம்’’ என்ற வார்த்தையில் தொடக்கத்தில் அடங்கியிருந்த அச்சமானது மாபெரும் ஆராதனைக்குரியவரிடத்தில் கொண்டுள்ள பயபக்தி மற்றும் ஆழ்ந்த மரியாதை ஆகிய உணர்வில் மறைகின்றது, இதன்*

*விளைவாக ஒருவர் தேவனுக்குப் பயப்படுகின்றார் என்று கூறுகையில் அதன் சந்தர்ப்பப் பொருளானது ஒருவர் தேவனை வழிபடுகின்றார்/ஆராதிக்கின்றார் என்றாகின்றது. "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து" (உபா. 6:13) என்று மோசே எழுதினார்; ஆனால் மோசேயின் கூற்றை இயேசு மேற்கோள் காட்டிய பொழுது, அவர் "பயம்" என்ற வார்த்தையைத் தகுதியான சந்தர்ப்பப் பொருளுடன் விளக்கப்படுத்தினார், அவர் "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (மத். 4:10) என்று கூறினார். "தேவன்"* ("God") *என்ற வார்த்தை "பயம்"* "fear", *yare'* *என்பதற்கான வார்த்தையில் இருந்து தரவழைக்கப் பட்டதாலும், "பயம்",* "fear" *என்ற வார்த்தை வழிபடுதல் என்ற கருத்தில் பயன்படுத்தப்பட்டதாலும்,* "God", *"தேவன்" என்ற வார்த்தையும் வழிபடுதலின் கருத்தும் திட்டவட்டமாகவே தொடர்புடையவைகளாக்கப் படுகின்றன.*[2]

*ஆராதனைக்குரிய ஒரே ஒருவர். ஆதியாகமம் 1:1ல் பயன்படுத்தப் பட்ட வகையில், "தேவன்" என்ற வார்த்தையானது ஆராதனைக்குரியவர் என்பதை மட்டும் குறிப்பிடாமல், ஆராதனைக்குரிய ஒரே ஒருவர் என்பதையும் குறிப்பிடுகின்றது. ஆதி. 1:1ல் விசேஷித்த தெய்வீகத்துவத்தின் தனிப்பட்ட தன்மை என்ற வகையில், பின்னாளில் பத்துக் கட்டளைகளிலும் முதலாவது கட்டளையில் ஆராதிக்கப்பட வேண்டியவர் என்று எழுதப்பட்டுள்ளது: "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (யாத். 20:3). "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவரைச் சேவித்து, அவரைப் பற்றிக் கொண்டிருந்து," (உபா. 10:20) என்ற கூற்றில் "மாத்திரமே" என்ற வார்த்தை புரிந்து கொள்ளப்பட்டதென்று இயேசு கருதினார். அவர் "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (மத். 4:10) என்று கூறியதில் மறைமுகக் கருத்தையும் சேர்த்து அளித்தார். இவ்விதமாக, பழைய ஏற்பாட்டில் தெய்வீகத்தின் இந்த முதல் விவரிப்பானது உலகளாவிய வகையில் ஆராதனைக்குரிய ஒரே ஒருவரைப் பற்றிய கருத்தை வாசிப்பவர்களின் சிந்தைகளில் ஆழமாகப் பதியச் செய்திருந்தது.*

## *'Elohim* என்ற வார்த்தையின் பன்மைத் தன்மை

*"தேவன்" என்பதில் இருந்து "தேவர்கள்" என்று மாற்றம் பெற்ற வடிவம் போன்ற மோசேயின் எழுத்துக்களில், "தேவர்கள்"* (gods) *என்பது "கள்"* "s" *என்பதைச் சேர்த்துச் செய்யப்படவில்லை. பன்மைப் பதங்கள்* "im" *என்பதைச் சேர்த்து ஏற்படுத்தப்பட்டன; எனவே 'elohim என்ற வார்த்தை ஒரு பன்மை வார்த்தையாகும்.*[3] *இருப்பினும், 'elohim என்ற வார்த்தை மெய்யான, ஜீவனுள்ள ஒரே தேவனைக் குறிப்பிடும் பொழுது, மொழிபெயர்ப்பாளர்கள் எபிரெயப் பன்மை வார்த்தையை ஆங்கில ஒருமை வார்த்தையான* "God" *(தேவன்) என்பதால் தரவழைத்தனர். ஆதி. 1:1ல் உள்ளது போன்று, இது ஜீவனுள்ள ஒரே தேவனைக் குறிக்கின்றதா இல்லையா என்பதைச் சந்தர்ப்பப் பொருள் தான் முடிவு செய்கின்றது. யாத். 20:3ன் சந்தர்ப்பப் பொருளானது மாறுபட்டதாக உள்ளது. இங்கு 'elohim*

*என்ற அதே வார்த்தையே உள்ளது, ஆனால் பன்மை தெய்வீகத்துவங்கள் இங்கு குறிப்பிடப் படுவதைச் சந்தர்ப்பப் பொருள் காண்பிக்கின்றது: "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் [*'elohim*] உண்டாயிருக்க வேண்டாம்."*[4]

*ஒரே தேவனை விவரிப்பதற்குப் பழைய ஏற்பாடானது பன்மைப் பதத்தைப் பயன்படுத்தியது ஏன் என்ற கேள்வியானது அதிகமான விவாதங்களை எழுப்பியுள்ளது. தகவல் பெறாத நாத்திகவாதிகள் இந்தச் சிறு அறிவைக் கொண்டு இது பழங்காலத்தில் பல தெய்வ வணக்கம் இருந்ததற்கு "ஆதாரம்" ஆகும் என்று பயன்படுத்த அவசரப்படுகின்றனர், ஆனால் பழைய ஏற்பாட்டைக் கவனமாகப் படிக்கும் ஒரு மாணவரும் இப்படிப்பட்ட ஆதாரமற்ற கூற்றை ஒருபொழுதும் ஏற்படுத்தியதில்லை. ஆதி. 1:1ல் பேசப்படும் சிருஷ்டிகர் வேத வசனங்களில் "ஒருவர்" என்றே கருதப்பட்டார் (உபா. 6:4); அவரைத் தவிர, "வேறே தேவன் இல்லை" (ஏசா. 44:6). அத்துடன், எபிரெய வேத வசனத்தில் ஆதி. 1:1ல் எழுவாயானது பன்மைத் தன்மை உடையதாக இருந்தாலும், "சிருஷ்டித்தார்" என்ற வினைச் சொல்லில் ஒருமைத் தன்மையே உள்ளது. நன்றாய் எழுதப்பட்ட வேதவசனத்தில் இது, பன்மைப் பெயர்ச் சொல்லானது ஒரே தேவனைக் குறிக்கின்றது என்பதற்கு ஆதாரம் அளிக்கின்றது.*

*பழங்கால மக்கள் மத்தியில் அதிகாரமுடைமை/அதிகாரமுடையவர்கள் பன்மை வடிவங்களைப் பயன்படுத்துவதினால் மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டனர் என்று தோன்றுகின்றது. ஆதி. 42:30ல் யோசேப்பைப் பற்றி விவரிப்பதற்கு "அதிபதி"* (Lord) *என்ற வார்த்தையின் பன்மை வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது. பார்வோனை விவரிப்பதற்கு பன்மைப் பதங்கள் பயன்படுத்தப்பட்டன, மற்றும் விக்கிரகாராதனை செய்யும் மக்கள் ஒரு (தனிக்) கடவுளை விவரிக்கப் பன்மைப்பதங்களைப் பயன்படுத்தினர். இப்படிப்பட்ட பன்மைப் பதங்கள் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதில்லை, ஆனால் கனத்தையும் மற்றும் அதிகாரத்தையும் குறிப்பிடுகின்றன - இது வேதாகமத்திலும், அதற்கு வெளியிலும் ஒரு தெளிவான பயன்பாடாகும். இதை கருத்தில் உணரும் ஒருவர், இந்த அகிலத்தின் தேவனுக்குப் பன்மை வடிவம் பயன்படுத்தப்பட்டது பற்றி வியப்படையக் கூடாது. தேவனைக் குறிக்கின்ற மற்ற இயற்பெயர்கள் கூட பன்மை வடிவங்களில் காணப்படுகின்றன. இது, "கர்த்தர்" (ஆதி. 15:2), "பரிசுத்தர்" (நீதி. 9:10), "சிருஷ்டிகர்" (பிர. 12:1), மற்றும் "சிருஷ்டிகர்" (உண்டாக்கினவர்) (ஏசா. 54:5) என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைகளுக்கும் உண்மையானதேயாகும்.*

*தேவத்துவத்தைப்பற்றிய உபதேசமானது விலையேறப் பெற்றதாக/விலைமதிப்பற்றதாக உள்ளது. ஆதி. 1:2ல் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய திட்டவட்டமான குறிப்பானது ஏற்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் ஆதி. 1:26; 3:22; 11:7 (யோவா. 1:1-3ஐக் காணவும்) ஆகியவற்றில் கிறிஸ்துவைப் பற்றிய மறைமுகக் குறிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், தற்போதைய தகவல்கள் அனுமதிக்கின்ற அளவில், தேவத்துவத்தைப்பற்றிய எந்த ஒரு குறிப்பும் ஆதி. 1:1ல் உள்ள 'elohim என்ற பன்மை வடிவத்தின் பயன்*

*பாட்டினால் நோக்கம் கொண்டவைகளாய் இருப்பதில்லை. மாறாக, பன்மை வடிவமானது மாபெரும் சிருஷ்டிகருக்குரிய மாண்பையும் கனத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.*

## சிருஷ்டிக்கும் தேவன்

*வேதாகமத்தில் தெய்வீகத்துவத்தைப் பற்றிய முதல் விவரிப்பான ’Elohim என்பது ‘‘சிருஷ்டிக்க’’ என்று அர்த்தப்படும் பொழுது அதன் எழுவாயாக bara’ என்ற மனிதரைக் குறிக்கும் சொல்லை ஒருபொழுதும் பெற்றிராத ஒரு வார்த்தையுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. தேவன் சிருஷ்டித்திருப்பவற்றை மனிதன் வடிவமைக்கவோ, உருக்கொடுக்கவோ மற்றும் ஒத்துப் போகவோ முடியும்; ஆனால் தேவனால் மட்டுமே சிருஷ்டிக்க முடியும் (ஏசா. 65:17; ஆமோஸ் 4:13). மரம் கொடுக்கப்பட்டால் மனிதனால் அதிலிருந்து மேசை முதலிய பொருட்களை உண்டாக்க முடியும்; ஆனால் “தேவன் மட்டுமே ஒரு மரத்தை உண்டாக்க முடியும்.”*

*ஆதியாகமத்தின் சிருஷ்டிப்பு பற்றிய விபரமானது, தேவன் சிருஷ்டிப்பைத் தொடங்கப் பொருள் எதுவும் கொண்டிருந்ததாகக் குறிப்பிடுவதில்லை. மனிதனின் சரீரத்தை வடிவமைப்பதிலும் (ஆதி. 2:7) மற்றும் மிருகங்களை உருவாக்குவதிலும் (ஆதி. 2:19) தேவன் பொருளை (‘‘மண்ணை’’)க் கொண்டு செயல்பட்டார் என்று நாம் வாசிக்கின்றோம், ஆனால் பூமியின் மண்ணைத் தேவன் எதைக் கொண்டு உருவாக்கினார் என்று நாம் அறிவதில்லை. ஒன்றுமில்லாமையிலிருந்து சிருஷ்டித்தல் என்பது மறைவான கருத்தாக உள்ளது. அவர் பேசினார், அது ஆயிற்று; அவர் கட்டளையிட்டார், அது நின்றது (சங். 33:6; எபி. 11;3ஐக் காணவும்). சிருஷ்டித்தல் மற்றும் உருவாக்குதல் அல்லது வடிவமைத்தல் ஆகிய இரு செயல்களையும் தேவன் நிகழ்த்தினார் என்பது அவர் Bore’; ‘‘சிருஷ்டித்தவர்’’ என்றும் (ஏசா. 40:28), ’Oseh, ‘‘உண்டாக்கியவர்’’ (ஏசா. 54:5), மற்றும் Yotser “உருவாக்குபவர் அல்லது வடிவமைப்பவர்” (‘‘சிருஷ்டிகர்’’; ஏசா. 45:11) என்றும் அழைக்கப்படுவதினால் வலியுறுத்தப்படுகின்றது.*

*இவ்விதமாக ஆதி. 1:1ல் உள்ள ’Elohim (தேவன்) என்பது ஆராதனைக்குரிய ஒருவரை, ஆராதனைக்குரிய ஒரே ஒருவரை, எல்லா மேன்மையும், கனமும், அதிகாரமுடைமையும் உள்ள ஒருவரை, ஒன்றுமில்லாமையிலிருந்து உலகங்களையும், மனிதரையும் சிருஷ்டிக்கக்கூடிய ஒருவரைக் குறிப்பிடுகின்றது. தேவனைப்பற்றிய இந்த சித்தரிப்புகள் நமது இருதயங்களை, அவரைப் பற்றிய மதிப்பினாலும், அவருக்கு மரியாதை காண்பித்து அவரை நோக்கியே நமது ஆராதனை ஏறெடுக்கக் கூடிய தன்மையினாலும் நிரப்ப வேண்டும். “நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள்” (சங். 95:6).*

## *HA'ELOHIM*: "THE GOD," "தேவன்"

ஏனோக்கு (*Ha'elohim*) தேவனோடே சஞ்சரித்ததாக மோசே ஆதி. 5:22ல் குறிப்பிட்டார். இந்த "the God" என்ற வார்த்தை ("தேவன்") என்று அர்த்தப்படுகின்றது. எபிரெய வசனத்தில் "God" என்ற வார்த்தைக்கு முன் "the" என்ற வார்த்தை வருவது என்பது "[மெய்யான மற்றும் ஜீவனுள்ள ஒரே] தேவன்" என்றே வழக்கமாக அர்த்தமாவதைப் புரிந்து கொள்ளச் செய்கின்றது.

வேதாகமத்தின் "தேவன்" "God" என்ற வார்த்தைக்கு முன் "the" என்ற வார்த்தை முதன்முறை தோற்றம் அளிப்பதற்கு முன்பாக தெய்வீகத் துவத்தைப் பற்றிய குறிப்புகள் எழுபத்தியொரு முறை ஏற்படுத்தப் பட்டுள்ளன, தேவனைக் குறிக்கும் இந்த எழுபத்தியிரண்டாவது இடத்தில் "the" என்ற குறிப்புச் சுட்டுச் சொல் நுழைக்கப்பட்டதற்கு தகுந்த காரணம் ஒன்று இருக்க வேண்டும்.

சிருஷ்டிப்பின் தொடக்கத்தில் விக்கிரகங்கள், சொரூபங்கள் இன்னும் மற்ற பொய்த் தேவர்கள் இருந்ததில்லை, ஆனால் விக்கிரகாராதனை என்பது மிகப் பரவலான மனிதத் தவறுதலாயிருக்கத் தொடங்கிற்று. ஏனோக்கு சேவித்த தேவன் யார் என்பது பற்றி மோசேயின் குறிப்பிடுத லானது விக்கிரகாராதனை அடையாளப்படுத்தப்பட்ட ஒரு பிரச்சனை யாயிருந்த ஏனோக்கின் காலத்தைப் பற்றியது என்பது உண்மையாகும். மற்றவர்கள் என்ன செய்து கொண்டிருந்த போதிலும், மெய்யான மற்றும் ஜீவனுள்ள ஒரே தேவனை விட்டு விலகாத ஏனோக்கின் தேவபக்தியைப் பரிசுத்த எழுத்தாளர் பாராட்டினார். ஆதாமின் காலத்திற்கு நூற்றுக் கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு "தேவன்" என்ற வார்த்தைக்கு முன் இடப்பட்ட இந்தக் குறிப்புச் சுட்டுச் சொல்லானது, தொடக்கத்தில் இருந்த பல தெய்வ வணக்கமானது எட்டாம் நூற்றாண்டில் ஒரு தெய்வ வழிபாடாக பரிணமித்தது என்ற நிரூபணமற்ற கருத்துக்கு மிகவும் எதிர்ப்பானதாக உள்ளது. மாறாக, இது தொடக்கத்தில் இருந்த ஒரு தெய்வ வழிபாடானது பின்னாளில் பல தெய்வ வழிபாடாகச் சீரழிந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது.

*Ha'elohim* என்ற வார்த்தையின் முதலாவது பயன்பாட்டிற்குப் பிறகு, இச்சொற்றொடரானது அடுத்த அதிகாரத்தில் மறுபடியும் தோற்றம் அளிக்கின்றது. ஏனோக்கின் கொள்ளுப் பேரனான நோவாவின் நாட்களின் நிகழ்ச்சிகளைக் கூறுகையில், "தேவன்" என்ற வார்த்தைக்கு முன்னதாகக் குறிப்புச் சுட்டுச் சொல்லை மோசே மறுபடியும் பயன்படுத்தினார் - இது ஒரு கனத்த தனிச் சிறப்பான பயன்பாடாகும். தேவபுத்திரர்களாய் இருந்தவர்கள் (The Sons of Ha'elohim) விக்கிரகங்களை வழிபட மறுத்து, மெய்யான ஒரே தேவனுக்கு உண்மையுடன் இருந்தார்கள், அவர்கள் இன்னொரு திசையில் தவறிழைத்தவர்களாயினர்: அவர்கள் பல மனைவி களை உடையவர்களாய் இருந்தனர். பல தெய்வங்களை வழிபடத் தூண்டிய பிரபலமான தூண்டுதல்களை எதிர்த்திருந்த இவர்கள் பல மனைவிகளை மணக்கத் தூண்டுதல்களை மறுத்தோ/எதிர்த்தோ

*இருந்ததில்லை. ஒரே ஒரு மனைவியுடன் மட்டுமே ஒரே சரீரமாக வேண்டும் என்ற தேவனுடைய போதனையை அவர்கள் மீறி, பல மனைவிகளுடன் அவர்கள் ஒரே சரீரமாயினர்.*

*கவனமாக எழுதப்பட்ட எபிரெய வேதவசனமானது, பல தெய்வ வழிபாட்டிற்கு முன்னதாக ஒரு தெய்வ வழிபாடு இருந்ததாகக் கூறுகின்றது மற்றும் இதன் எதிர்நிலையைக் கூறுவதில்லை. விக்கிரகாராதனை பிரபலமான பொழுது, ஏனோக்கு உயிருள்ள ஒரே தேவனுக்கு, உண்மையானவராகத் தொடர்ந்து நிலைத்து நின்றார் என்பதற்கு உறுதியான சுட்டிக்காட்டுதலை நாம் காண்கின்றோம். பின்னாளில், நோவாவின் நாட்களில், உபதேசத்தில் உண்மையான தேவனைப் பற்றிக் கொண்டிருந்தவர்கள் ஒழுக்கத்தில் அவரைப் பற்றிக் கொண்டிருந்ததில்லை என்று தோன்றுகின்றது.*

## *’EL ’ELYON*: “உன்னதமான தேவன்”

*ஆதி. 14:18ல் தெய்வீகத்துவத்தைப் பற்றிய இன்னொரு விவரிப்பை நாம் காண்கின்றோம்: “அன்றியும் உன்னதமான தேவனுடைய [’El ’Elyon] ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்ச ரசமும் கொண்டுவந்து.”*

*இவ்விடத்தில் வேதாகம வசனங்களிலேயே முதல்முறையாக தெய்வீகத்துவமானது ’El என்று விவரிக்கப்படுகின்றது. இதன் தொடக்க அர்த்தமானது அநேகமாக “பலமான ஒருவர்” அல்லது “வல்லமை நிறைந்த ஒருவர்” என்றுள்ளது. தேவனுடைய பெலத்தினால், இந்த வார்த்தை “தேவன்” என்று அர்த்தப்படலாயிற்று. தெய்வீகத்தைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் முதல் விவரிப்பான ’Elohim என்பது “ஆராதனைக்குரிய ஒருவர்” என்று அர்த்தப்படுகிறது என்பதை நாம் ஏற்கனவே கண்டிருக்கின்றோம். இப்பொழுது நாம் தேவனைக் குறிப்பிடுகின்ற ஆனால் பலத்தின் குறிப்பிடுதலுடன் விவரிக்கின்ற ’El (ஏல்) என்ற இன்னொரு எபிரெயச் சொல்லை எதிர்ப்படுகின்றோம்.*

*ஆதி. 14:18ல் ’El என்ற வார்த்தையுடன் இணைக்கப்பட்டதும், “பலமுள்ள ஒருவர்” என்று பொருள்படுவதுமான கூடுதல் விவரிப்பான பெயர் ஒன்றை தெய்வீகத்திற்கு அளிக்கின்ற விவரிப்பான பெயர் ஒன்றை தேவனுக்குக் காண்கின்றோம்: ’Elyon. ’Elyon என்பது மேன்மையான, உயர்ந்த, உன்னதமான, மிக மேலான நிலையைக் குறிக்கப் பயன்படும் ஒரு சொற்றொடராகும். எனவே தெய்வீகத்தைப் பற்றிய பழைய ஏற்பாட்டின் இந்த விவரிப்பானது மிக உன்னதமானர் பலமுள்ளவர் என்பதில் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.*

*தேவன் உன்னதமான மற்றும் பரிசுத்தமான இடத்தில் வாசம் பண்ணினாலும் (ஏசா. 57:15; 66:1), ஆதி. 14:18 வசனப் பகுதியானது அவரைப் பற்றி, நாம் தேசியத் தலைவர், சேனாதிபதி ஆகியோரைக் குறிப்பிடுவது போலவே கூறுகின்றது. இவ்விதமாக தேவன் முழுமையான ராஜரீகம் உடையவராகப் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றார்.*

*தேவன் 'El 'Elyon, "உன்னதமான தேவன்" என்று முதன் முதலில் விவரிக்கப்படும் இடத்தின் சந்தர்ப்பப் பொருளானது பலமுள்ளவர் முற்றிலுமான இராஜரீகம் கொண்டுள்ள குறிப்பிட்ட இருபகுதிகளைப் பற்றி சுட்டிக்காட்டுகின்றது. தேவன், பரலோகம் மற்றும் பூலோகத்தின் உரிமையாளர் மற்றும் உடைமையாளர் என்ற வகையில் ஸ்தோத்திரிக்கப் படுகின்றார். மேன்மையான தளபதி என்ற வகையில் அவர் 318 குடிமக்களை மட்டுமே படைவீரர்களாகப் பயன்படுத்தி நான்கு இராஜாக்களின் படைகளை நிலைகுலையச் செய்வதற்கு முடிந்தது (ஆதி. 14:14-16).*

*தெய்வீகத்துவத்தைப் பற்றிய மிகச் சரியான விவரிப்பானது மிகவும் துல்லியமாக சரியான இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பலமுள்ளவர் தமது சுய உடைமையின் மீது - பரலோகம் மற்றும் பூலோகம் ஆகியவற்றின் மீது, அவ்விடங்களில் உள்ள சகல குடிகள் மீது - இராஜரீகமுடைய வராயிருந்தார். கலகம் செய்கின்ற நான்கு படைகளின் வலிமையினால் அவரைச் சலிப்படையச் செய்யவோ, தோற்கடிக்கவோ முடியாதிருந்தது.*

## *'EL SHADDAI:*
## *"சர்வ வல்லமையுள்ள தேவன்"*

*கர்த்தர் தம் பலத்தைச் சித்தரிக்கும் இன்னொரு சொற்றொடரை ஆபிராமிடத்தில் பயன்படுத்தினார். ஆதி. 17:1ல் இந்த சொல் விளக்கமானது முதன்முறையாகத் தோற்றம் அளிக்கின்றது: 'El Shaddai, "சர்வ வல்லமை யுள்ள தேவன்."*

*Shaddai என்ற வார்த்தையானது "வன்முறையில் ஈடுபடுதல், அழித்தல், பாழாக்குதல்" என்று அர்த்தப்படுகின்ற வினைச் சொல் ஒன்றிலிருந்து தரவழைக்கப்பட்டதால், தேவன் தம்மை shaddai (சர்வ வல்லமையுள்ள) என்று விவரிக்கும் செயலானது கணிசமான அளவுக்கு சிரமத்தில் வழி நடத்தியுள்ளது. இருப்பினும் shaddai என்பதன் இந்த முதல் பயன்பாட்டினு டைய சந்தர்ப்பப் பொருளானது மீறுதலான அல்ல பேரழிவுக்கான எதையும் காண்பிப்பதில்லை - இது தேவன் கூறியிருக்கின்றபடியாக அவரது செயல்திறனின் வல்லமையை மட்டுமே காண்பிக்கின்றது. 'El Shaddai, "சர்வ வல்லமையுள்ளவர்," நூறு வயதான ஒரு தகப்பனுக்கு ஒரு மகனைக் கொடுக்கக் கூடியவராக, மலடியும் அநாதைப் பெண்ணுமாய் இருந்த (ஏசா. 54:1) தொண்ணூறு வயதான ஒரு பெண்ணைத் தாயாக்கக் கூடியவராக, ஆபிரகாம் மற்றும் சாராள் ஆகியோரில் இருந்து ஜாதிகளை ஏற்படுத்தக் கூடியவராக இருந்தார். "உன்னை மிகவும் அதிகமாய்ப் பலுகப் பண்ணி, உன்னிலே ஜாதிகளை உண்டாக்குவேன்; உன்னிடத்திலிருந்து ராஜாக்கள் தோன்றுவார்கள்" (ஆதி. 17:6) என்று 'El Shaddai, "சர்வ வல்லமையுள்ள தேவன்" வாக்குத்தத்தம் செய்தார்.*

*Shaddai என்ற வார்த்தையானது கேள்விக்கிடமின்றி பலத்தையும் வல்லமையையும் குறிப்பிடுகின்றது, ஆனால் எப்பொழுதுமே அது பேரழிவு மற்றும் சிதைவின் திசையில் இருப்பதில்லை என்பது உறுதி. பரிசுத்த*

*வசனத்தில் இவ்வார்த்தையினுடைய தொடக்கப் பயன்பாட்டின் சந்தர்ப்பப் பொருளானது மொழிபெயர்ப்பில் இதற்கு வழக்கமாய்க் கொடுக்கப்படும் நம்பிக்கையை அளிக்கின்றது: "சர்வ வல்லவர்." தேவனுடைய வல்லமையைப் போல பெரிய வல்லமை எதுவும் இல்லை. ஆகவே பூமிக்குக் கீழும், பூமியிலும், பூமிக்கு மேலும் உள்ள ஒவ்வொரு வல்லமையும் "நான் சர்வ வல்லமையுள்ள தேவனாயிருக்கிறேன்" என்று ஆபிரகாமிடத்தில் கூறியவரின் அனுமதிக்கு கீழ்ப்படிந்தவராக, அதைச் சார்ந்திருப்பவராக, அதற்கு அடிபணிந்திருப்பவராக இருக்க வேண்டும்.*

*தேவன் சர்வ வல்லவராய் இருக்கிறார் என்று அறிந்த நிலையில் ஆபிராம், 'El shaddai "சர்வ வல்லவர்" கொடுக்கும் எந்த ஒரு உறுதிப் பாட்டிலும் இலகுவாக இளைப்பாற முடிந்திருந்தது. இப்படிப்பட்ட ஒரு தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்பதை ஆபிராம் அறிய முடிந்தது. ஆகையால், ஆபிரகாம் சர்வ வல்லமையுள்ள தேவனின் பலத்தில் நம்பிக்கை கொண்டு, "மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற" தேவன் மேல், "தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (ரோமர் 4:17, 18).*

*பல சிரமங்களுக்குப் பின், மற்றும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின், கர்த்தர், ஆராய்ந்து பார்க்க முடியாத தமது சுய ஆலோசனையின்படி ஆபிரகாமைப் பல இனங்களுக்குத் தகப்பனாக்குவதாகக் கொடுத்திருந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதை நோக்கிக் கடந்து செல்லுவதை ஒருக்காலும் மறக்கவில்லை. எந்த உறவுமுறை அல்லது இரத்தமாய் இருந்தாலும், கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் வாக்குத்தத்தத்தின்படியே ஆபிரகாமின் சந்ததியாகவும் சுதந்தரராகவும் இருக்கின்றனர் (ஆதி. 3:26-29). தேவன் தம்மை 'El Shaddai, "சர்வ வல்லமையுள்ள தேவன்" என்று மெய்ப்பித்துக் காட்டினார்.*

## *'EL 'OLAM:*

## *"சதா காலமுமுள்ள தேவன்"*

*தேவன் தமது பலத்தில் உள்ளது போலவே காலத்திலும் எல்லையற்றவராக இருக்கின்றார். இது ஆதி. 21:33ல் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயரில் பிரதிபலிக்கப் படுகின்றது: 'El 'Olam "சதாகாலமுமுள்ள தேவன்."*

*'Olam என்ற வார்த்தையானது "மறைக்க, ஒளிக்க" என்று அர்த்தப்படும் ஒரு வினைச் சொல்லில் இருந்து வருகின்றது. கொள்கையடிப்படையில், 'Olam என்பது "மறைக்கப்பட்ட ஒரு காலம்." "முடிவற்ற ஒரு காலம்" அல்லது "எல்லையற்ற ஒரு காலம்" என்று அர்த்தப்பட முடியும். 'Olam என்பதன் காலம் எவ்வளவு என்பதை சந்தர்ப்பப் பொருள்தான் தீர்மானிக்க வேண்டியதாக உள்ளது.*

## *சில வேளைகளில் 'Olam என்பது எல்லைக்குட்பட்டதாக உள்ளது*

*'Olam என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் வழிமுறைகளில் ஏறக்குறைய எல்லா வழிமுறையிலும், அந்த அர்த்தத்தின் மீது வைக்கப்படும் வரையறை தெளிவாகக் காண்பிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, எண். 10:8ல், ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதுதல் என்பது ஒரு கட்டளையினால் 'olam* ("perpetual"; NASB) *நித்தியமாக்கப்பட்டது. அந்தக் கட்டளை அறிவிக்கப்பட்ட காலம் தொடங்கியே, ஆரோனின் ஆசாரியத்துவமும் கூட இல்லாது ஒழிந்து போகக் கூடியதாகவே இருந்தது. இது போலவே, பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக இருந்த தொட்டியொன்றில் கைகளையும் கால்களையும் கழுவுதல் (யாத். 30:21) என்பதும் கூட 'olam (சதாகாலமும், நித்தியமும்) இருக்கும்படி கட்டளையிடப்பட்டது; ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, கழுவும் தொட்டியும், பரிசுத்த ஸ்தலமும், ஆசாரியர்களும் இல்லாத நிலை உண்டாகி விட்டது.*

*அது போலவே, விருத்தசேதனமும் (ஆதி. 17:13; கலா. 6:15ஐயும் காணவும்) மற்றும் ஓய்வுநாளும் (யாத். 31:16; கொலோ. 2:16ஐயும் காணவும்) கூட, யோனா மீன் வயிற்றில் இருந்ததைப் போலவே (யோனா 2:6) 'olam (என்றென்றைக்கும் உள்ளது) என்பதாக இருந்தது. ஆகையால், சிலவேளைகளில் 'olam என்பது குறுகிய காலத்தைக் குறித்து ஏற்பட்டதாயிருக்கலாம் என்பதை வசனப் பகுதியே காண்பிக்கின்றது.*

## தேவன்மீது வரையறை எதையும் வைக்க முடியாது

*'El 'Olam, "சதா காலமுமுள்ள தேவன்" மீது எவ்விடத்திலும் கால வரையறை வைக்கப்பட்டதில்லை. அவர் நித்திய வாசியாக (ஏசா. 57:15), அநாதியாய் என்றென்றைக்கும் இருப்பவராக (சங். 90:1, 2) உள்ளார், மற்றும் அவர் அழியாமையுடையவராயிருக்கின்றார் (1 தீமோ. 6:16)! அவர் நித்திய கன்மலையாய் இருக்கின்றார் (ஏசா. 26:4) மற்றும் நீண்ட ஆயுசுள்ளவராய் இருக்கின்றார் (தானி. 7:9).*

## தேவனுடைய அடிப்படைப் பண்புகளில் வரையறை எதையும் வைக்க முடியாது

*தேவன் காலமற்றவராய் இருப்பது போலவே, அவரது 'Olam (சதா காலமுமுள்ள) அடிப்படைப் பண்புகளின் மீதும் வரையறை எதையும் அமைக்க முடியாது. அவரது பெயர் (யாத். 3:15), அவரது அன்பு (ஏரே. 31:3), அவரது அன்பிரக்கம் (சங். 103:17), அவரது மகிமை (சங். 104:31), அவரது சத்தியம் (சங். 117:2) மற்றும் அவரது நீதி (சங். 119:142) ஆகியவை என்றென்றைக்கும் உள்ளன.*

## அவருடைய குமாரன்மீது வரையறை எதையும் வைக்க முடியாது

பிதாவாகிய தேவனைப் பற்றியவை உண்மையாய் இருப்பது போலவே, அவரது குமாரனுடைய புறப்படுதலும் அநாதி நாட்களாகிய 'Olam - பூர்வத்தினுடையதாக இருக்கின்றது (மீகா 5:2). இயேசு கிறிஸ்து தாமே "நித்திய பிதா" (ஏசா. 9:6) என்று அழைக்கப்படுகின்றார், மற்றும் அவரது ஆண்டுகள் முடிந்து போவதில்லை (எபி. 1:10-12). அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கின்றார் (எபி. 13:8).

ஒரு மகன் தனது தகப்பனைப் போலவே சம வயதுள்ளவராய் இருக்க முடியாது என்பதால், கிறிஸ்துவுக்கு உரிய எல்லையற்ற நித்திய தன்மை யானது பிதா/குமாரன் என்ற மொழிநடையானது ஒரு விவரிப்பாக மட்டுமே உள்ளது. மேலும், மனிதச் சொற்றொடர்களின்/சொல் வழக்குகளின்படியான வகையில் இயேசு நேரடி அர்த்தத்தில் ஒரு மகனாக இருந்தால், ஒரு தெய்வீகத் தாய் இருப்பது அவசியமாகும். சரீரப் பிரகாரமான இயேசுவுக்கு மரியாள் தாயாக இருந்த போதிலும், Logos என்ற வகையில் தேவனாக இருந்த வார்த்தையானவர் மரியாள் வாழ்வதற்கு முன்னமே இருந்தார் (யோவா. 1:1-3).

ஆகையால், பிதா/குமாரன் உறவு என்பது உருவக நடை என்ற வகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். கிறிஸ்து "நித்தியத்திற்குப் பெற்றெடுக்கப்பட்டவர்" என்று கூறுவது முரண்பாடான தாகும்; உண்மையில், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் "begotten" என்பது ஒரு தவறான மொழிபெயர்ப்பாக உள்ளது.[5] மேலும்/மற்றும், தேவத்துவமானது மனித குடும்பத்தைப் போலானது என்றால், அந்தக் குடும்பத்தில் பரிசுத்த ஆவியானவரின் நிலைப்பாடு அறியப்படாததாக உள்ளது. ஆகவே, குடும்ப மொழிநடையானது விவரிப்புப் பகுதிகளில் மட்டும் வைத்துக் கொள்ளப்பட வேண்டும், இல்லையென்றால் ஒருவர், கிறிஸ்துவின்மீது கால வரையறையை வைக்க வேண்டியிருக்கும்.

## தேவன் அருளிச் செய்கின்ற ஜீவன்மேல் வரையறை எதையும் வைக்க முடியாது

மனிதன் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பொழுது அவனது வாழ்நாள் வரையறைப் படுத்தப்பட்டது. அவன் இனியும், "தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து, என்றைக்கும் உயிரோடி"ருக்க முடியாது போயிற்று (ஆதி. 3:22). வரையறைகள் எதுவுமின்றி, என்றென்றைக்கும் வாழ்கின்ற இயேசு கிறிஸ்துவானவர் மனிதரை முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வருகின்றார்; அவர் தேவனு டைய பரதீசில் இருக்கும் ஜீவ விருட்சத்தை மறுபடியும் சென்றடையும் வழியை மனிதருக்கு கொடுத்திருக்கின்றார் (வெளி. 2:7). இப்படிப்பட்ட வாழ்வானது கடைசி நாளில் உயிர்ப்பிக்கப்படுவதில் கிடைப்பதாய் உள்ளது (யோவா. 6:40). தேவனானவர் குமாரன் மீது வைத்துள்ள நித்திய ஜீவன் (1 யோவா. 5:11) என்பது குமாரனைப் போலவே நித்தியமானதாக -

*மரிக்காததாக (லூக். 20:36; யோவா. 3:16ஐக் காணவும்), அழியாததாக மற்றும் சாகாததாக (ரோமர் 2:7; 1 கொரி. 15:51-55) உள்ளது.*

## கீழ்ப்படியாதவர்களுக்கு ஏற்படும் துன்பத்தின் காலத்தின் மீது வரையறை எதையும் வைக்க முடியாது

*சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல் சண்டைக்காரராய் இருக்கின்றவர்களுக்கு (ரோமர் 2:8) ஏற்படும் துன்பம் மற்றும் தண்டனையின் கால அளவின் மீது வரையறை எதையும் வைக்க முடியாது என்பது பரிதாபகரமானது ஆகும். பரலோகத்தில் தேவனுடன் இருக்கும் அகமகிழ்வான வாழ்வானது "நித்தியமானதாக" இருப்பது போலவே, நரகத்தில் பிசாசு மற்றும் அவனது தூதர்களுடன் துன்பப்படுவதும் "நித்தியமானதாகவே" உள்ளது (மத். 25:41, 46; 2 தெச. 1:6-9). மனிதர்கள், நரகத்தின் கால அளவில் வரையறைகளை ஆராயாது வைத்துள்ளார்கள், ஆனால் அவர்கள் பரலோகத்தின் கால அளவில் அவ்விதமான வரையறைகளை வைப்பதில்லை. இருப்பினும், வரையரையற்ற பரலோகம் ஒன்று இருப்பதாகப் போதிக்கின்ற அதே வேதாகமமே வரையறையற்ற நரகம் ஒன்று இருப்பதாகவும் போதிக்கின்றது. துன்மார்க்கமான மக்கள் யாவரும் துரும்பைப் போலச் சுட்டெரிக்கப்படுவார்கள், அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற் போகும் என்ற விளக்கத்தை ஒருவர் நேர்ப் பொருளாக எடுத்துக் கொண்டால் (மல். 4:1), அவர் மரணத்திற்குப் பின்பு ஐசுவரியவான் அடைந்த துன்பத்தின் வரலாற்றை மறுக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றார் (லூக். 16). மரணத்திற்குப் பின்பு சரீரம் மட்டுமே அழிகின்றது, ஆத்துமா அழிவதில்லை. நரகத்தில் செலவிடப்படும் காலத்தின் மீது ஒருவர் வரையறை வைத்தார் என்றால், அதே வேளையில் அவர் பரலோகத்தில் செலவிடப்படும் காலத்தின் மீதும் வரையறை வைக்கின்றார்.*

*'Olam "சதா காலங்கள்" என்ற வார்த்தையானது சில வேளைகளில் சந்தர்ப்பப் பொருளின் வரையறைகளுடன் பயன்படுத்தப்படுகின்றது என்பதில் வேதவசனங்கள் தெளிவாயுள்ளன. இருப்பினும், தேவனுடைய இருத்தல், கிறிஸ்து, தேவனுடைய தன்மைகள், அவர் அருளிச் செய்கின்ற ஜீவன், அல்லது தண்டிக்கும்படியாக வலிந்து அவர் நிர்ப்பந்திக்கப்படுதல் ஆகியவற்றின் மீது வேதாகமம் காலவரையறைகள் எதையும் வைப்பதில்லை. ஆபிரகாம் பலிபீடம் ஒன்றைக் கட்டி, அதை சதா காலங்களிலும் உள்ள தேவனுக்கு அர்ப்பணித்த பொழுது, அவர் (ஆபிரகாம்) தாமும் கூட மேன்மையான தேசத்தில் - அதாவது பரலோகத்தில் - என்றென்றைக்கும் இருப்போம் என்ற விசுவாசம் பெற்றிருந்தார் (எபி. 11:14, 15).*

---

*குறிப்புகள்*

[1]C. L. Seow, *A Grammar for Biblical Hebrew* (Nashville: Abingdon Press, 1986), 18n2.

[2] *'Elohim ("தேவர்கள்") என்பதன் தரவழைப்பானது ஆராதனைக்குரிய ஒரு*

பொருளைச் சுட்டிக்காட்டுகிறது என்றாலும், இவ்வார்த்தையானது தூதர்கள் (சங். 8:5 மற்றும் எபி. 2:7 ஆகியவற்றை ஒப்பிடவும்), மனித நியாயாதிபதிகள் மற்றும் ஆளுகை செய்பவர்கள் (யாத். 22:8, 9, 28; 1 சாமு. 28:13), மற்றும் மனிதர்கள் (சங். 82:6; யோவா. 10:34) ஆகியோருக்கும் பயன்படுத்தப்படலாயிற்று. [3]"தேவனுக்கு" ஒருமை வார்த்தையான 'eloah என்பது பழைய ஏற்பாட்டில் மிக அரிதாகவே உள்ளது. இது 57 முறைகள் மட்டுமே காணப்படுகின்றது, ஆனால் 'elohim என்ற பன்மை வடிவமானது 2570 முறைகள் காணப்படுகின்றது. [4]KJVயில், எபி. 9:5ல், "Cherub" என்பது ஆங்கிலம் மற்றும் எபிரெயப் பன்மைப் பதமான "Cherubims" என்று தரப்பட்டுள்ளது. [5]Monogenes (யோவா. 1:14, 18; 3:16, 18; 1 யோவா. 4:9) என்பது நேர்ப் பொருளில் "ஒரே பேறானவர்" என்று இருப்பதில்லை, ஆனால் "அவ்வகையில் ஒரே ஒருவர், தனிச் சிறந்த ஒருவர்" என்றே உள்ளது.

## *’EL-’ELOHE-YISRA’EL*:

## “தேவன், இஸ்ரவேலின் தேவன்”

*ஆதி. 33:20ல் யாக்கோபு தேவனுக்கு ஒரு விசேஷித்த பெயரைக் கொடுத்தார்: ’El-’Elohe-Yisra’el, “தேவன், இஸ்ரவேலின் தேவன்.” சீகேம் நகருக்குப் பத்திரமாய்ச் சென்று சேர்ந்த யாக்கோபு அங்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, தேவனைக் கனப்படுத்துவதற்காக இந்தப் பெயரைக் கொடுத்தார் (ஆதி. 33:18-20).*

*யாக்கோபு பிறந்த பொழுது தம் சகோதரரான ஏசாவின் குதிக்காலைப் பிடித்துக் கொண்டிருந்தார். அந்தக் காரணத்திற்காகவே “குதிங்காலைப் பற்றுபவர்” என்று அர்த்தப்படும் யாக்கோபு என்று அவர் பெயரிடப் பட்டார். பற்றும் இயற்கைப் பண்பும், வஞ்சிக்கும் இயல்புமே யாக்கோபின் குணமாய் இருந்தது. அவர் ஏசாவைச் சூழ்ச்சியால் வென்று, தங்கள் பிதாவினிடத்திலிருந்து வரும் பிறப்புரிமையைப் பெற்றார். பின்பு அவர் தமது தகப்பனாகிய ஈசாக்கை வஞ்சித்து, ஏசாவுக்கென்று ஈசாக்கு வைத்திருந்த ஆசீர்வாதத்தையும் பெற்றார். யாக்கோபு தமது வாழ்க்கையின் முதல் நாற்பது ஆண்டுகளாக குதிங்காலைப் பற்றுபவராக, வஞ்சிப்பவராக இருந்தார். வஞ்சிக்கின்ற தனது சகோதரனை ஏசா வெறுத்து கொலை செய்யத் தீர்மானித்ததில் வியப்பெதுவும் இல்லை.*

*யாக்கோபு அதிக கலக்கத்துடன் ஏசாவின் கோபத்திற்குத் தப்பியோடினார் (ஆதி. 27:41-44; 28:5). பின்னாளில், லூஸ் என்ற இடத்தில் அவர் தரையில் படுத்திருக்கையில், ஒரு தரிசனத்தில் கர்த்தர் அவருக்குத் தோன்றி அதன் மூலம் யாக்கோபு மாபெரும் ஆறுதலைப் பெற்றார் (35:6-15). யாக்கோபு தமது பாவத்திலிருந்து மனந்திரும்பி, கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி பொருத்தனை செய்து கொண்டார் என்பது உறுதி. அந்தப் பொருத்தனையைத் தனது சிந்தையில் கொண்டவராக அவர் சீரியா நாட்டில் இருபதாண்டுகள் வாழ்ந்தார். அவர் தமது இயல்பின்படியாக வஞ்சக சூழ்ச்சி மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றில் ஈடுபடுவதற்குப் பதில், நேர்மையாயிருக்கத் தன்னால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட்டார். லாபானின் மந்தையை மேய்த்த பொழுது, “பீறுண்டதை” (ஆதி. 31:39) தனது சொந்த நஷ்டத்தில் மேற்கொண்டார். யாக்கோபு மாறிய ஒரு மனிதராய் இருந்தார். உண்மையிலேயே அவர் மனம் மாறி, தகுதியாக வாழ முயற்சி செய்தார்.*

*மறு ஜென்மம் எடுத்த இம்மனிதர் மறுபடியும் பலஸ்தீனத்திற்குத் திரும்பிய பொழுது, இன்னமும் ஏசாவுக்குப் பயப்பட்டார், அவரது சிந்தனைகள் வஞ்சித்தலுக்குத் திரும்பாமல், கிருபைக்கும் ஜெபத்திற்கும் திரும்பின. “என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்” (ஆதி. 32:11) என்று அவர் வேண்டினார்.*

*மனித வடிவில் இருந்த தேவனுடன் அவர் ஒரு இரவு முழுவதும் போராடிய பிறகு, கர்த்தர் யாக்கோபின் பெயரை மாற்றினார். அவருடைய கடந்த கால இருபது ஆண்டு வாழ்க்கையில், ‘‘யாக்கோபு’’ என்கிற*

*பெயரானது அவருக்கு அநீதியை இழைத்திருந்தது. ஆகையால், தேவன் இப்பொழுது அவரை "இஸ்ரவேல்" என்று அழைத்தார், இது "தேவனோடு போராடியவர்'' என்று அர்த்தம் தரும் ஒரு சொற்றொடராகும். யாக்கோபின் புதிய பெயரின்படி, கர்த்தர் அவரிடத்தில், "தேவனோடும் மனிதரோடும் போராடி மேற் கொண்டாயே" (ஆதி. 32:28) என்றார். ''இஸ்ரவேல்'' என்ற வார்த்தை ''தேவனின் இளவரசன்'' என்று அர்த்தப்படலாயிற்று.*

*மாறிய இந்த மனிதர், இப்பொழுது தேவனுடைய இளவரசராய் இருந்தார், ஏசாவை அவர் சந்தோஷமாய் எதிர்கொண்டு, கானான் என்ற இடத்திற்குள் சமாதானமாய்ப் பிரவேசித்தார். அவர் ஒரு நிலத்தை வாங்கி, தாழ்மையுடனும், நன்றி பாராட்டுதலுடனும் தமது தேவனுக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டினார். அதை அவர் தக்க விதத்தில் 'El-'Elohe-Yisra'el, "பலமுள்ள ஒருவர், ஆராதனைக்குரிய ஒருவர், இளவரசரின் பலமாய் இருக்கும் ஒருவர்" என்று பெயரிட்டு அழைத்தார்.*

*'El-'Elohe-Yisra'el, பலிபீடத்தின் மீது முதல் பலியானது செலுத்தப்பட்ட வேளையில், யாக்கோபு தனிச் சிறப்பான மற்றும் அர்த்தம் நிறைந்த ஆராதனை ஊழியத்தை அனுபவித்திருக்க வேண்டும். இஸ்ரவேல் தம்மைக் கவனித்துக் கொள்ளவும், எல்லாத் தீமையிலிருந்தும் தம்மை விடுவிக்கவும், கானானுக்குத் தம்மைப் பத்திரமாய்க் கொண்டு வந்து சேர்க்கவும் தேவன் ஒரு தூதரை நியமித்திருந்தார் (ஆதி. 48:16) என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார்.*

## *'EL-BETHEL: "பெத்தேலின் தேவன்"*

*இஸ்ரவேல், ஆதி. 35:7ல் தேவனைக் கனப்படுத்த இன்னொரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு 'El-bethel "பெத்தேலின் தேவன்" என்று பெயரிட்டார். 'EL-'Elohe Yisra'el என்ற பலிபீடம் அர்ப்பணிக்கப்பட்டிருந்த சீகேமிலிருந்து இஸ்ரவேல் தமது பயணத்தைத் தொடர்ந்த பொழுது, அவர் மீண்டும்-தனிப்பட்ட, கலக்கம் அடைந்த, பயம் கொண்ட மனிதராக - அதே இடம் வந்து தேவனால் தேற்றப்பட்டிருந்தார். இந்த இடம் லூஸ் எனப்பட்டது, இது யாக்கோபினால் பெத்தேல் என்று பெயர் மாற்றப் பட்டது, இதன் அர்த்தம் ''தேவனுடைய வீடு'' என்பதாகும். இருபது ஆண்டுகளுக்குப் பின் அவர் மீண்டும் இங்கு வந்த போது, தேவனுடைய தரிசனம் மற்றும் வாக்குத்தத்தத்திற்கு மதிப்பளிக்கும்படியாக இஸ்ரவேல் மீண்டும் ஒரு பலிபீடத்தைக் கட்டினார். அதை அவர் "பெத்தேலின் தேவன்" என்று அர்த்தம் தரும் 'El-bethel என்று அழைத்தார். பெத்தேலில் முதலில் அவருக்குத் தரிசனமான தேவன் அவரைப் பராமரிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருந்து, தமது வார்த்தையை நிறைவேற்றியிருந்தார். இஸ்ரவேல் தாம் பயணம் தொடங்கிய இடத்திற்குச் சமாதானத்துடன் மறுபடியும் வந்து சேர்ந்திருந்தார். அவர் நன்றியுள்ளவராய் இருந்தார். 'El-bethel-இல் ஒரு பலியைச் செலுத்துகையில் இஸ்ரவேல் நன்றியுணர்வு மற்றும் மதிப் புடனான ஆராதனை அனுபவத்தை மீண்டும் மகிழ்வுடன் அநுபவித்தார்.*

# *YAHWEH*: “கர்த்தர்”

*தேவனுடைய உண்மையான ஒரே பெயர்* Yahweh *(யாவே) என்பதாகவே உள்ளது. இது இஸ்ரவேல் மக்களை எகிப்தில் அடிமைத்தனத்தில் இருந்து வெளியே வழிநடத்தி வரும்படி சீனாய் மலையில் மோசேயைத் தேவன் அழைத்த பொழுது மோசேக்கு வெளிப்படுத்தப்பட்ட பெயராக இருந்தது. கர்த்தர் மோசேயினிடத்தில், “... என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம்” என்று உரைத்தார் (யாத். 3:15).*

“Yahweh” *என்பது* “YHWH” *என்ற நான்கு எபிரெய எழுத்துக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் செய்த ஒரு முயற்சியாகும். இந்த எழுத்துக்கள் ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் வேறுபட்ட வழிமுறைகளில் கொண்டு வரப்பட்டுள்ளன.* KJV, RSV *மற்றும்* NASB (Updated edition) *ஆகியவை* “LORD” *(எல்லாம் பெரிய எழுத்துக்கள்) என்ற வார்த்தையைப் பயன்படுத்துகையில்,* ASV*யானது* “Jehovah” *என்ற வார்த்தையைப் பயன் படுத்துகின்றது.* “Yahweh” *என்பதே சரியான மொழிபெயர்ப்பு என்பதாகப் பெரும்பாலான வேதக் கல்வியாளர்கள் நினைக்கின்றனர். தேவனுடைய சொந்தப் பெயரின் இந்தப் பிரதிநிதித்துவப் படுத்தலானது (யாத். 3:15) தெய்வீகத்தின் வேறு எந்த இயற்பெயரைக் காட்டிலும் மிகவும் அதிகமாகவே, அதாவது சுமார் 6,823 முறைகள் பழைய ஏற்பாட்டில் தோற்றம் அளிக்கின்றது.* “Yahweh” *என்ற வார்த்தையுடன் மற்ற பல வித வார்த்தைகள் சேர்த்துப் பயன்படுத்தப்படும் பொழுது, அவைகள் இப்பெயருக்கு கூடுதலான அர்த்தத்தைக் கொண்டு வருகின்றன.*

## *YAHWEH ’ELOHIM:*
## *“தேவனாகிய கர்த்தர்”*

**“Yahweh” என்பதன் வேதாகமரீதியான முதல் பயன்பாடு**

*தெய்வீகத்தின் விவரிப்பொன்றில் முதன் முறையாக* “Yahweh” *என்ற வார்த்தை முந்திய பாடத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்ட ’Elohim என்று வார்த்தையுடன் இணைந்து உள்ளது. “தேவனாகிய கர்த்தர்* [*Yahweh ’Elohim*] *பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே’’ என்று ஆதி. 2:4ல் நாம் வாசிக்கின்றோம்.*

*ஆதி. 1:1-2:3ல் “தேவன்” என்ற வார்த்தை மோசேயினால் முப்பத்தி நான்கு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. பிறகு அவர்* “Yahweh” *என்ற பெயரை அறிமுகப்படுத்தி, அதை ஆதி. 2:4-3:24ல் ‘‘தேவன்’’ என்ற*

*வார்த்தையுடன் இணைத்து பத்தொன்பது முறைகள் பயன்படுத்தினார். ‘‘தேவன்’’ என்று கூறுவதிலிருந்து, திடீரென்று முற்றிலும் மாற்றமாக “தேவனாகிய கர்த்தர்” என்று கூறுவதானது இரண்டு எழுத்தாளர்களைக் குறிப்பதாகச் சிலர் யூகித்துள்ளனர். இப்படிப்பட்ட தர்க்கங்கள் ஆதியாகமம் புத்தகத்தின் ஒருமைப்பாடு மற்றும் சீரியநிலை ஆகியவற்றிற்கு வன்முறை புரிவதோடு, ஐந்து ஆகமத்தின் எழுத்தாளர் மோசேயே என்ற இயேசுவின் கூற்றிற்கும் (யோவா. 5:46, 47) அவமரியாதையைக் காண்பிக்கின்றன. இவ்விதமாகத் தோற்றமளிக்கும் வகையில் தேவன் தமது பெயர்களை எழுதச் செய்திருப்பதற்கு அவர் ஒரு நோக்கம் கொண்டிருக்க வேண்டும் என்பதே மிகவும் பயபக்திக்குரிய ஒரு யூகமாகும்.*

*இந்த தெய்வீக நோக்கமானது குறிப்பிடப்படவில்லை, ஆனால் தேவனுடைய சொந்தப் பெயரான* “Yahweh” *என்பதன் முதல் பயன் பாடானது தேவனுக்கும் மனிதனுக்கும்,* Yahweh*க்கும் ஆதாமுக்கும் இடையே மிகவும் தனிப்பட்ட உறவுமுறையின் சந்தர்ப்பப் பொருளில் கிடைக்கின்றது.* Yahweh, *ஆதாமின் நாசியில் ஊதியது, ஒரு தோட்டத்தை உண்டாக்கியது, தோட்டத்தில் நடந்தது, ஏவாளை உண்டாக்கியது, மற்றும் ஆதாம் - ஏவாளுடன் நேரடியான உரையாடலைக் கொண்டிருந்தது ஆகியவை பற்றி ஆதி. 2ம் அதிகாரம் கூறுகின்றது. கவனமாய் எழுதப்பட்ட வேதாகமமானது தெய்வீகத்திற்கு மிகச் சரியான இடங்களில் மிகத் தகுதியான விவரிப்புகளையே பயன்படுத்தியிருக்கும் என்பதே அறிவிற்கு ஏற்புடையதாகக் காணப்படுகின்றது.*

### “Yahweh” *என்பதின் அர்த்தத்தினுடைய வெளிப்பாடு*

“Yahweh” *என்ற பெயரின் முழு அர்த்தத்தையும் வெளிப்படுத்த தேவன் சில காரணங்களுக்காக ஆதாமின் காலத்திற்குப் பின்பும் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் காத்திருந்தார். பழங் காலத்தவர்கள் மத்தியில் இது அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருப்பினும்,*[1] *இந்தப் பெயரின் அர்த்தமானது, ஓரேப் மலையில் எரியும் அக்கினிச் சுவாலையில் கர்த்தர் மோசேக்குப் பேசியுரைக்கும் வரையிலும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. அரபியாவை விட்டுப் புறப்பட்டு, எகிப்திலிருந்து இஸ்ரவேலர்கள் அனைவரையும் வெளியில் வழி நடத்திச் செல்லும்படி மோசேக்குக் கட்டளையிடப்பட்ட பொழுது, இஸ்ரவேலர்கள் தேவனுடைய பெயரை அறிய விரும்புவார்கள் என்று மோசே கூறினார். பின்பு தேவன் தம்முடைய பெயரை* “Yahweh” *என்று குறிப்பிட்டதோடு மட்டுமின்றி (யாத். 3:15), ‘‘சுயமாக இருக்கின்ற ஒருவர்’’ என்ற அதன் அர்த்தத்தையும் விளக்கப் படுத்தினார்: “இருக்கிறவராக இருக்கிறேன்” (யாத். 3:14), அல்லது “நான் இருக்கிறேன் ஏனென்றால் நான் இருக்கிறேன்.”*

*தேவனுடைய பெயருக்கான இவ்விதமான ஒரு விளக்கம் பெறும் சிலாக்கியத்தை தேவனோடு நெருங்கியிருந்த முற்பிதாக்கள் கூடப் பெற்றதில்லை. அவர்களுக்கு ’El-Shaddai, “சர்வ வல்லமையுள்ள தேவன்” என்ற சொற்றொடர் நன்கு பழக்கப்பட்டிருந்தது; ஆனால் தேவன், “... யேகோவா* [*கர்த்தர்*] *என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு*

அறியப்படவில்லை” (யாத். 6:3) என்று உரைத்தார். இருப்பினும் இந்த வேளையில், இஸ்ரவேலில் விசுவாசத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற மோசேயின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காக, முதல் முறையாக தேவன் தமது பெயரின் அர்த்தத்தை முழுமையாக வெளிப்படுத்தினார்.

மோசேக்கும் இஸ்ரவேலருக்கும் “Yahweh” என்ற பெயரின் விளக்க மானது தெளிவாகக் கொடுக்கப்பட்டிருப்பினும், அது தேவனுடைய ஆழமான விஷயங்களுக்குரியதாக இருந்தது - இன்னும் அவ்வாறே இருக்கின்றது. உண்டாக்கியவர் ஒருவரைப் பெற்றிராதவரின் இயல்பை எந்த மனிதரினாலும் முற்றிலும் புரிந்து கொள்ள முடியாது. தொடக்கமே இல்லாமல் ஒருவர் இருப்பது எவ்விதம் என்பதையும், ஒருவர் தாம் இருப்ப தற்குத் தாமே காரணராய் இருப்பது எவ்விதம் என்பதையும் மனிதர் எவரும் விளக்கிக் கூற முடியாது. மற்ற ஒவ்வொன்றிற்கும் வினை முதல்/காரணம் ஒன்றிருக்க வேண்டும், ஒவ்வொன்றிற்கும் முடிவான காரணமாக இருக்கின்றவர் தேவனே ஆவார்; ஆனால் தேவனுக்கு வினைமுதல்/ காரணம் ஒன்றும் இருந்ததில்லை. அவர் காரணமற்ற காரணராக இருக்கின்றார்.

ஒரு குழந்தை தன் தந்தையிடம், தேவன் எப்படி இருக்கத் தொடங் கினார் என்று கேட்கின்ற பொழுது, அது தனது தந்தையால் பதில் அளிக்க முடியாத கேள்வியைக் கேட்கின்றது. அதனுடைய தந்தை, “ஏனென்றால் அவர் தேவனாக இருக்கின்றார்” என்று பதில் அளிக்கும் பொழுது, மோசே தேவனிடத்தில் சென்ற அளவு போலவே தன்னால் இயன்ற அளவு பின் செல்லுகின்றார். “நான் இருப்பதினால் இருக்கின்றேன்; நான் இருக்கிற வராக இருப்பதினால் நான் இருக்கின்றேன்” என்பது ஒரு பொழிப்புரையாக இருக்கலாம். தெய்வீகத்தின் அடிப்படை இயல்பே சுயஞ்ஜீவியர் (சுயமாய் இருப்பவர்) என்பதேயாகும். இது விளக்கப்படுத்தப்பட முடியாது; இது விசுவாசத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தேவனிடத்தில் வருகின்றவர், அவர் (தேவன்) இருக்கின்றார் என்று விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6), ஆனால் தேவன் எவ்விதம் அல்லது ஏன் இருக்கிறார் என்பதை அவர் (தேவனிடத்தில் சேருகிறவர்) அறிய முடியாது.

தேவன் எவ்விதம் இருக்கத் தொடங்கினார் என்பதை இஸ்ரவேலர்கள் அறிய முடியாதிருந்தது, ஆனால் அவர்கள் மோசேக்குச் செவி கொடுத்து, அவரது அற்புதச் செயல்களைக் கண்டு, தேவன் இருக்கிறவராகையால் இருக்கிறார் என்று விசுவாசித்தனர். பின்பு அவர்கள், தலை குனிந்துத் தொழுது கொண்டார்கள் (யாத். 4:31). அது போலவே, தேவன் எப்படி இருக்கத் தொடங்கினார் என்பதை நாமும் அறிய முடியாது; ஆனால் வாழ்வின் கிருபையை நாம் மதித்தால், நாம் வாழ்ந்து, அசைந்து, இருக்கக் காரணரும், எல்லா ஆசீர்வாதங்களின் ஊற்றும் தொடக்கமுமான அவரை நாம் ஏற்றுக் கொண்டு, நன்றி செலுத்தி, ஆராதித்து, சேவிப்போம்.

**இயேசு யாவேயாக இருக்கின்றார்**

நாசரேத்தூர் இயேசுவானவர் மனிதப் பிறவிக்கும் மேலானவர் என்ற சிந்தனையானது மெய்சிலிர்க்கச் செய்கின்றது. சரீரப் பிரகாரமாக அவர் யூத

*சந்ததியில் தோன்றிய அழியக் கூடிய மனிதராக இருந்த போதிலும் அவர் - மற்ற மனிதர் எவரையும் போல் இன்றி - பெத்லகேமில் அவர் தோன்று முன்னரே இருந்தார். பெத்லகேமில் பிறப்பதற்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ஆபிராம் வாழ்வதற்கு முன்பே, அந்தக் காலத்தில் இயேசு வார்த்தை என்ற தேவனாக இருந்தார் (யோவா. 1:1-3). தேவன் மோசேயிடம் தம்மைப் பற்றி அடையாளப்படுத்தப் பயன்படுத்திய ''இருக்கிறவராக இருக்கின்றேன்'' (யோவா. 8:58) என்ற அதே மொழிநடையை எருசலேமில் இருந்த யூதர்களிடத்தில் இயேசு பயன்படுத்தி யிருக்க முடியும்.*

*ஆபிரகாமின் காலத்திற்கு நீண்ட நாட்கள் முன்னதாகவே "அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5:2) என்று இயேசுவை விவரித்தார். ஆகையால் யாவே (ஏசா. 40:3) இந்த உலகத்திற்கு வருவார் என்ற வேதாகமப் போதனையானது புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இதோ, அவர் இயேசுவாக இருந்தார் (மத். 3:3ஐக் காணவும்)! எனவே, இயேசு தம்முடைய பிதாவின் இயல்புடையவராகவே இருந்தார். அவர் தேவனைக் காட்டிலும் சிறியவரல்ல, சுயமாய் இருப்பவரான யாவேயைக் காட்டிலும் குறைந்தவரல்ல, அவரில் தம் நம்பிக்கையை வைப்பவர்கள், யாவேயைத் தமது நம்பிக்கையாகப் பெற்றிருப்பவர்கள் களி கூருகின்றனர்! (சங். 146:5ஐக் காணவும்).*

## *'ADONAI YAHWEH:*

## *"கர்த்தராகிய ஆண்டவர்"* (LORD GOD)

*தெய்வீகத்துவமானவர் ''கர்த்தர்'' அல்லது ''ஆண்டவர்'' என்று விவரிக்கப்பட்ட முதல் பதிவானது ஆதி. 15:2ல் உள்ளது. ஆபிராம் தேவனை "கர்த்தராகிய ஆண்டவர்" என்று அர்த்தப்படும் 'Adonai Yahweh என்று அழைத்தார்.*

*'Elohim என்ற பன்மைப் பதமானது பல தேவர்களையல்ல ஆனால் கனத்தையும் அதிகாரத்தையும் பிரதிபலிக்கப் பயன்படுத்தப்பட்டது என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது போலவே, ஆதி. 15ல் ஆபிராம், "கர்த்தர்" என்ற வார்த்தையை மேன்மை, மகத்துவம் மற்றும் மரியாதை ஆகியவற்றிற்கு உரியவரான எல்லாவற்றிற்கும் கர்த்தர் மற்றும் ஆண்டவராய் இருப்பவருக்குப் பயன்படுத்தினார். "என்னுடைய"* ("My") *[இது தமிழில் இல்லை] என்ற உரிமைச் சிறப்புப் பெயர்ச் சொல்லை எபிரெய மொழியில் ஆபிராம் பயன்படுத்தியதானது அவர் யாவேயைத் தனது கர்த்தராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டு தம்மை முழுமையாக அவருக்குக் கீழ்ப்படுத்தி அறிக்கையிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றது.*

*ஆபிரகாமுக்கு வெகுமதியளிப்பவர் என்ற தேவனின் வாக்குத்தத்தம் என்ற சந்தர்ப்பப் பொருளில், கர்த்தராகிய ஆண்டவரே முழுப் பொறுப் பாளராக இருந்ததை ஆபிராம் புரிந்து கொள்ள தொடங்கினார். 85 வயதான மனிதருக்கும் 75 வயதான மலடியாயிருந்த மனைவிக்கும் தேவன் எவ்விதத்தில் வெகுமதியளிப்பார் என்று ஆபிராம் கேட்டார். ஆபிராம்*

*விசுவாசித்தார், ஒரு இரவு நடையில் தேவன் ஆபிராமை வானத்து நட்சத்திரங்கள் போல் எண்ணற்ற சந்ததியினால் வெகுமதியளிப்பார் என்ற தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டார் என்ற வகையில் இது ஆபிராமின் வாழ்விலும், வேதாகம வரலாற்றிலும் உச்சபட்சக் கருத்தாக இருந்தது.*

*ஆபிராம் விசுவாசம் கொண்டிருந்த கர்த்தராகிய ஆண்டவரையே ஆவிக்குரிய வகையில் ஆபிராமின் பிள்ளைகளாய் இருப்பவர்கள் இந்நாட்களில் ஆழமான விசுவாசம் கொண்டுள்ள அதே கர்த்தராகிய ஆண்டவர் ஆவார். அவரே, "நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். ... அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (ரோமர் 4:24, 25).*

## *யேகோவா யீரே:*
## *"கர்த்தர் பார்த்துக்கொள்வார்"*

*பின்னாளில், ஆதி. 22:14ல் தெய்வீகத்துவத்திற்கு ஆபிரகாம் இன்னொரு பெயரைப் பயன்படுத்தினார்: Yahweh Yir'eh, "கர்த்தர் பார்த்துக்கொள்வார்." தேவையானவற்றை தேவன் அருளிச் செய்வார் என்று ஆபிரகாம் தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருந்தார்.*

*விசுவாசத்தின் மனிதரான ஆபிரகாம், ஈசாக்கினிடத்தில் தேவன் தகனபலிக்கு ஒரு ஆட்டுக் குட்டியைத் தருவார் என்று கூறினார் (ஆதி. 22:8). அந்த வேளையில், ஈசாக்கே அந்த ஆட்டுக்குட்டி என்று ஆபிரகாம் நினைத்தார். தேவன் ஒரு ஆட்டுக்கடாவைக் கொடுத்து ஈசாக்கைத் தப்புவிப்பார் என்று அவர் அறிந்திருக்கவில்லை. தேவன் அருளிச் செய்ததை - தேவனுடைய அருளிரக்கத்தை அவர் அனுபவித்த பொழுது - ஆபிரகாமின் இருதயத்தில் ஏற்பட்ட சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. எனவே மலையுச்சியில் இருந்த அந்த மறக்க முடியாத இடத்திற்கு ஆபிரகாம் "கர்த்தர் பார்த்துக் கொள்வார்" என்று பெயரிட்டார் என்ற உண்மையானது புரிந்து கொள்ளப்படக் கூடியதாகும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு, ஆபிரகாமின் சந்ததியார் தேவன் தங்களது மாபெரும் முற்பிதாவுக்கு காண்பித்த அருளிரக்கத்தில் களிகூர்ந்தார்கள். அவர்கள் ஒரு பழமொழியை வளரச் செய்தனர் என்பது உறுதி: "யாவேயின் பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும்." ஆபிரகாமின் வாழ்வில் நடந்த நினைவுகூரத் தக்க இந்த நிகழ்ச்சியானது தேவனுடைய அருளிரக்கத்தில் ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசத்தை ஆதரித்ததோடு, இன்றும் கூட மற்ற பலரின் உறுதியான நம்பிக்கையைப் பலப்படுத்துகின்றது.*

### *பொதுவான அருளிரக்கம்*

*தேவன் தமது படைப்புகள் யாவற்றிற்கும் பொதுவான அருளிரக்கம் செய்து, வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய*

*இருதயங்களை நிரப்புகின்றார் என்பது நன்கறியப்பட்டதாகும் (அப். 14:17). பறவைகளுக்கு ஆகாரத்தையும், காட்டு மலர்களுக்கு அழகிய (வண்ண) உடுப்பையும் அருளுபவர் தேவனே (மத். 6:25-32). அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கின்றார் (லூக். 6:35). கிறிஸ்தவர்களுக்கும் கிறிஸ்தவரல்லாதவர்களுக்கும் சூரியனை ஒளிரச் செய்கின்றார். பரிசுத்தவானுடைய நிலத்திற்கு அவர் செய்வது போலவே, பாவியின் நிலத்திற்கும் மழையைப் பொழியச் செய்கின்றார் (மத். 5:45). இந்தப் பொதுவான அருளிரக்கத்தில் அவர் எல்லா மனிதர் களுக்கும் இரட்சகராய் இருக்கின்றார் (1 தீமோ. 4:10).*

**விசேஷித்த அருளிரக்கம்**

*Yahweh Yir'eh எல்லா மனிதர்களுக்கும் இரட்சகராய் இருப்பதுடன், "விசேஷமாக விசுவாசிகளுக்கு" இரட்சகராய் இருக்கின்றார் (1 தீமோ. 4:10). நீதிக்கு ஒப்புக்கொடுத்தவர்களுடைய தேவைகளைத் தேவன் முன்னோக்கு கின்றார், மற்றும் அவர்களுக்கு அவர் விசேஷித்த வழிமுறையில் அருளிரக்கம் செய்கின்றார்.*

*வேதாகமத்தில் தேவன் நமது பிதா என்று குறிக்கப்படுவதால், அவரது விசேஷித்த அருளிரக்கமானது புரிந்து கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டும். பாத்திரவானான எந்த ஒரு தகப்பனும், வங்கிக் கணக்கு ஒன்றைத் தன் பிள்ளைக்கு வைத்து விட்டு பின்பு மறைந்து விடுவது போன்ற பொதுவான வழிமுறையில் தனது பிள்ளைகளிடத்தில் அருளிரக்கம் காட்டுவதில்லை. பூமிக்குரிய நல்ல தகப்பனார்களாய் இருப்பவர்கள் பரலோகத்தின் தகப்பன் போல அவ்வளவு நல்லவர்கள் அல்ல, ஆனால் அவர்களும் கூட தங்கள் பிள்ளைகள் ஒவ்வொருவர் மீதும் தனிப்பட்ட கவனம் செலுத்துவதில் மகிழ்வடைகின்றனர்.*

*சிலவேளைகளில் வளமை அளிக்கப்படுகின்றது. கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த அருளிரக்கம் என்பது சில வேளைகளில் பெருமளவில் பணம் அளிக்கும் காசோலைகள் என்பதாக அர்த்தப்படுகின்றது. உத்தமமாய் நடக்கிறவர்களுக்குக் கர்த்தர் நன்மையை வழங்காதிரார் (சங். 84:11). கிறிஸ்தவர்கள் நீதியான வழிமுறையில் வளமையை ஏற்று, அதைத் தேவனு டைய மகிமைக்குப் பயன்படுத்துவார்களென்றால், Yahweh Yir'eh அவர்களுக்கு எல்லா கிருபையையும் ஏராளமாய் ஏற்படுத்தக் கூடியவராக இருக்கிறார் (2 கொரி. 9:8). "விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து அதைப் பெருகப் பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்" (2 கொரி. 9:10).*

*சில வேளைகளில் இன்னல் அளிக்கப்படுகின்றது. தேவனுடைய விசேஷித்த அருளிரக்கம் என்பது இன்னல் என்றும் அர்த்தப்படக் கூடும். எல்லா மனிதர்களின் தேவைகளையும் அறிகின்ற அவர் சில வேளைகளில் தமது ஞானம் மற்றும் அன்பினால், தமது பரிசுத்தவான்களின் நன்மைக் கல்லாதவற்றைக் கவர்ந்து கொள்கின்றார். தாவீது ஒருக்காலும் நீதிமானா யிருந்து இரந்து திரிகிறவரைக் கண்டதில்லை (சங். 37:25, 26), ஆனால்*

இயேசு அப்படிப்பட்டவரைக் கண்டார் (லூக். 16:19-31). சில வேளைகளில் சிறந்த மனிதர்களுக்குச் சிட்சித்தல் தேவைப்படுகின்றது (எபி. 12:2-6, 11). ஒரு தகப்பன் நேசிப்பது போல நேசிப்பவரிடமிருந்து சிட்சித்தலைத் தொண்டாற்றுதலாகப் பெறுகின்றவர் மகிழ்வடைகின்றார். பிதாவின் கவனிப்பில் எல்லையற்ற வகையில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள குழந்தையைப் போல, பவுல் தேவன் தமக்கு அளித்த எல்லாவற்றையும் தமது நன்மைக்காக ஏற்றுக் கொண்டார்:

> என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்; தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியா யிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவு படவும் போதிக்கப்பட்டேன் (பிலி. 4:11, 12).

பவுலின் சக்தியும் பிரசங்கிக்க ஆர்வமும் உள்ள ஒரு மனிதர் இரண்டு ஆண்டுகள் விலங்குகளால் கட்டப்பட்ட நிலையில் மனவேதனையுடன் கட்டுப்பட்டதை உணர்ந்திருக்க வேண்டும். இருப்பினும், அவரே, கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும் என்றும் எழுதினார் (ரோமர் 8:28), அவர் தமது சிறையிருப்பி லிருந்து சில நன்மை வருவதைக் காண்பதற்கு வாழ்ந்திருந்தார்.

> சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபல மாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன்; அரமனையெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி, சகோதரரில் அநேகர் என் கட்டுகளாலே கர்த்தருக்குள் திடன் கொண்டு பயமில்லாமல் திருவசனத்தைச் சொல்லும்படி அதிகமாய்த் துணிந்திருக்கிறார்கள் (பிலி. 1:12-14).

ஒருவருடைய வாழ்க்கைத் துணைவர்/துணைவி அபாயகரமான/ பயங்கரமான வியாதியைப் பெற்றிருக்கும் பொழுது, அல்லது வேறு ஏதாவது துன்பம் குடும்பத்தைத் தாக்கும் பொழுது, அதிலிருந்து ஏதாவது நன்மை விளையும் என்று நம்புவதற்கு மாபெரும் விசுவாசம் தேவைப் படுகின்றது. பவுல் சகித்திருந்த உபத்திரவங்களினூடாகவும், எந்த சூழ்நிலையிலும் தேவன் நன்மை வரும்படி செய்வார் என்று அவர் (பவுல்) நம்பினார். அவருடைய சொந்த வாழ்விலேயே அது உண்மையானதைக் காணும்படிக்கு அவர் போதுமான அளவு நீண்ட நாட்கள் வாழ்ந்திருந்தார். மற்ற சிலர் அவ்வளவு நீண்ட நாட்கள் வாழாது போகலாம், ஆனால் இயேசுவை உண்மையிலேயே நேசிப்பவர்களுக்கு எல்லாக் காரியங்களும் இணைந்து நன்மையைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையில் அவர்கள் மரிக்கலாம்!

சில வேளைகளில் சோதனைகள் நீக்கப்படுகின்றன. பிசாசானவனைப் பாதுகாப்பான அளவுக்குத் தூரத்தில் நிறுத்தி வைப்பதும் கிறிஸ்தவர்

களுக்குள்ள விசேஷித்த அருளிரக்கத்தில் உள்ளடங்குகின்றது. எப்பொழுதும் கவனித்துக் கொண்டிருக்கின்ற நமது தேவன், ஒவ்வொரு நபருக்கும் குறிப்பாகக் கவனம் அளிக்கக் கொண்டுள்ள வல்லமையில் நம்பத் தக்கவராய் இருக்கின்றார்: கிறிஸ்தவர் தம் திராணிக்கு மிஞ்சி சோதிக்கப் படுவதற்கு அவர் இடமளிக்க மாட்டார், மற்றும் அதிலிருந்து அவர் தப்பிக் கொள்ளும்படியான போக்கு ஒன்று எப்பொழுதும் திறந்திருக்கும்படி தேவன் பார்த்துக் கொள்ளுகின்றார் (1 கொரி. 10:13). அவர் (தேவன்) கிறிஸ்தவரை எதிர்த்து நிற்கும்படியோ அல்லது தப்பிக் கொள்ளும்படியோ நிர்ப்பந்திப்பதில்லை; அந்த செயல்பாடுகள் ஒவ்வொரு சீஷரையும் பொறுத்ததாக உள்ளது (யாக். 4:7); ஆனால் எதிர்த்து நிற்கவும் தப்பிப் போகவும் வல்லமை கிடைக்கும்படி தேவன் பார்த்துக் கொள்ளுகின்றார். இதை நாம் தொன்று தொட்டு ஏற்படுத்தப்பட்ட அருளிரக்கம் என்று அழைக்கலாம்: ஒவ்வொரு சோதனையும் ஒரு மனிதரின் தனிப்பட்ட அளவீடுகளுக்கு ஏற்றதாகவே இருக்கின்றது.

**விசேஷித்த அருளிரக்கம் என்பது அற்புத விதமானதாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல.**

தேவன் Yahweh Yir'eh என்ற வகையில் அடிக்கடி அற்புதமான விதத்தில் இடையிட்டிருப்பினும், அவரது அருளிரக்கத்தின் கரங்கள் அற்புதங் களுடன் வரையறுக்கப்படுவதில்லை. அவரது பரிசுத்தவான்கள் தேவை யானவற்றைப் பெறவும், அவர்களுக்குத் தேவையற்றவைகளை இழந்து போகவும் அவர் தமது இயற்கை விதிகளின் மூலம் இயங்க முடியும், அவ்வாறே இயங்குகின்றார்.

முட்புதரில் சிக்கியிருந்த ஒரு ஆட்டுக் கடாவைப் பிடிப்பதற்கு எந்த அற்புதமும் தேவைப்பட்டிருந்ததில்லை. எத்தியோப்பிய மந்திரி அறிந்திருந்தபடி, அவரது இரதத்தின் அருகே பிலிப்பு வந்து சேர்ந்து கொண்டது முற்றிலும் இயல்பான ஒரு நிகழ்ச்சியாகவே இருந்தது. பவுல் கொலை செய்யப்படுவதிலிருந்து காக்கப்பட அவரது மைத்துனரைக் கர்த்தர் பயன்படுத்தியது என்ற நிகழ்வில் அற்புதம் எதுவும் இல்லாதிருந்தது. பவுலின் மாம்சத்தில் இருந்த முள்ளைப் பொறுத்தமட்டில் அற்புதம் எதுவும் யூகிக்கப்படத் தேவையில்லை. மழைக்காக ஜெபித்த எலியாவின் ஜெபத்திற்கு பதில் அளிப்பதற்கு தேவன் அற்புத விதமாகச் செயல்பட வேண்டிய அவசியம் எதுவும் இருந்ததில்லை.

ஞானத்திற்காக சாலொமோனின் ஜெபமானது அற்புத விதமாகப் பதில் அளிக்கப்பட்டது, ஆனால் இன்றைய நாட்களில் இயற்கையின் விதிகள் மூலமாக ஜெபித்தலில் மட்டுமே ஞானம் அருளப்படுகின்றது (யாக். 1:5-7). பேதுரு சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டது அற்புத விதமானதாக இருந்த போதிலும், டொமீஷியனின் நாடு கடத்தலில் இருந்து கி.பி. 96ல் யோவான், பேரரசர் நெர்வாவின் அனுமதியினால் விடுவிக்கப்பட்டது அற்புத விதமானதாக இருந்ததில்லை. வேதாகம ரீதியான அற்புதங்கள் ஒழிந்து போயின என்ற உண்மையானது ஒரு கிறிஸ்தவரை தேவனுடைய அருளிரக்கத்தின் மீது நம்பிக்கையற்றுப் போகும்படி செய்யக் கூடாது.

***விசேஷித்த அருளிரக்கத்தின் முதன்மையான முன்மாதிரி***

*பாவம் சுமப்பவராக இயேசுவை தேவன் கொடுத்ததென்பது விசேஷித்த அருளிரக்கத்தின் முதன்மையான முன்மாதிரியாக உள்ளது. ஆபிரகாமுக்கு அத்தியாவசியான தேவை ஏற்பட்ட பொழுது Yahweh Yir'eh ஒரு ஆட்டுக்கடாவை அருளிச் செய்தது போலவே, மனித குலம் முழுமைக்கும் நம்பிக்கையிழந்த நிலையில் தேவை ஏற்பட்ட பொழுது அதே Yahweh Yir'eh ஒரு விசேஷித்த வழி வகையில் தேவ ஆட்டுக் குட்டியை அருளிச் செய்தார். ஆபிரகாம் அந்த ஆட்டுக் கடாவைத் தக்க வகையில் ஏற்று, அதைப் பயன்படுத்த வேண்டியதாக இருந்தது போலவே, தேவனுடைய சொல்லி முடியாத அருளிரக்கத்தின் ஈவும் கூட, பாவம் நிறைந்த ஆத்துமாக்களுக்கு மன்னிப்பும் சந்தோஷமும் வரும்முன் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.*

*எல்லா மனுஷகுலத்திற்குமான தேவனுடைய பொதுவான அருளிரக்கமானது அவர் தமது பிள்ளைகளுக்குக் காட்டுகின்ற விசேஷித்த பராமரிப்பைக் குறைத்து விடுவதில்லை. சந்தோஷமானதோ, கசப்பானதோ எதுவாயிருப்பினும், ஒவ்வொருவருக்கும் தேவையானதை அவர் கொடுக்கின்றார். அற்புதங்களின் காலம் கடந்து போயிற்று என்பது சர்வ வல்லமையும் இரக்கமும் நிறைந்த Yahweh Yir'eh தமது பிள்ளைகளின் தேவைகள் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றைக் கவனிப்பதைத் தடை செய்வதில்லை.*

## யேகோவா நிசி:
## "கர்த்தர் எனது கொடியாய் இருக்கின்றார்"

*எத்திரோவின் ஆடுகளை மேய்க்கையில் மோசே வைத்திருந்த கோல் அல்லது தடியானது மிகவும் புகழ் பெற்றதாயிற்று. மோசே அதைத் தரையில் எறிந்த பொழுது, தேவனுடைய வல்லமையானது அதை ஒரு சர்ப்பமாக மாற்றியது (யாத். 4:3). அவர் அதை கையில் எடுத்த பொழுது அது மறுபடியும் ஒரு தடியாயிற்று. இந்த அற்புத வல்லமையானது தேவன் உண்மையிலேயே மோசேக்குத் தரிசனமாயிருந்தார் என்று எபிரெயர்களை நம்பி ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கானதாகும். இந்த அற்புதம் நிகழ்த்தப்பட்ட பொழுது, மக்கள் விசுவாசித்து, தங்கள் தலைகளால் வணங்கி, தொழுதார்கள்.*

*அதே கோலானது, பார்வோன் தேவனுக்கு (தன்னை) ஒப்புக் கொடுக்க நம்பி ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காக அற்புத விதமாகப் பயன்படுத்தப்பட்ட பொழுது வெற்றியற்ற முயற்சியாயிற்று (யாத். 7:10). அது போலவே, அந்தக் கோலானது - மோசே மற்றும் ஆரோன் மூலமாக - தண்ணீரை இரத்தமாக்கவும், தவளைகளைத் திரளாய்ப் பெருகச் செய்யவும், தூசியைப் பேன்களாக்கவும் (அல்லது மணலை ஈக்களாக்கவும்), இடி மற்றும் கல்மழையை அனுப்பவும், மற்றும் பூமியில் அக்கினி ஓடச் செய்யவும் மற்றும் வெட்டுக் கிளி வாதையொன்றை உண்டாக்கவும் தேவனால் பயன் படுத்தப்பட்டது (யாத். 7:15-10:13). இது அநேகமாக, மூன்று நாட்கள்*

*காரிருளை அறிவிப்பதிலும் ஒரு பங்கு வகித்திருக்கலாம். மோசே தமது கோலை உயர்த்தி, செங்கடலுக்கு மேலாகத் தமது கையை நீட்டிய பொழுது, கடலானது பிரிந்து போயிற்று. இதே செயல்முறையானது செங்கடலை மறுபடி மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்டது என்பது உறுதியாகும். பிறகு, வனாந்தரத்தில், தாகமடைந்த மக்கள், மோசேயின் கோலினால் அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து பீறிட்டு வந்த தண்ணீரினால் திருப்தியடைந்தனர் (எண். 20:11).*

*இஸ்ரவேலர்கள் தாக்கப்பட்ட பொழுது, மோசே தமது கோலை உயர்த்திப் பிடித்திருந்த வரையிலும் தேவனுடைய மக்கள் யுத்தத்தில் ஜெயித்தனர். மோசேயின் கைகள் கனத்து போனதால் அவைகளை அவர் ஓய்வுக்காகத் தாழ்த்திய பொழுது, பகைவர்களின் படையானது மேற்கொண்டது. ஆரோன் மற்றும் ஊர் ஆகியோரின் மூலமாக தேவனுடைய மக்களுக்கு வெற்றி வந்தது. மோசே அமர்ந்திருக்க, அவரின் இரு புறத்திலும் ஆரோனும், ஊரும் நின்று கொண்டு சூரியன் மறையும் வரையிலும் அவர் தம் கைகளைத் தாங்கி நிறுத்தி உதவி செய்தனர். கர்த்தரால் இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்கப்பட்ட வெற்றியைக் கொண்டாடுவதற்காக, மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு Yahweh Nissi, "கர்த்தர் எனது கொடியாய் இருக்கிறார்" (யாத். 17:15) என்று பெயரிட்டார். மற்ற நோக்கங்களுக்காக மிகவும் உதவியாய் இருந்த அந்தக் கோலை இப்பொழுது மோசே ஒரு nes  ஒரு கொடியென்று அழைத்தார். இவ்விதமாக மோசே, இஸ்ரவேலர்கள் தங்கள் சுயபலத்தினால் யுத்தத்தில் வெற்றி கொள்ளவில்லை என்றும், தேவனே வெற்றியைக் கொடுத்திருந்தார் என்றும் அறிவித்தார்.*

*இது போலவே பாவத்தின் மீதான வெற்றியும் ஒரு nes, ஒரு கொடியின் விவரிப்பின் கீழ் அமைக்கப்படுகின்றது. தீர்க்கதரிசனத்தின்படியாக, "ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்கும் ..." (ஏசா. 11:10) காலம் வர வேண்டியதாய் இருந்தது. தேவன் கிறிஸ்துவை இனங்களும், இஸ்ரவேலரும் சுற்றிச் சூழ்ந்து நிற்கும்படியான ஒரு கொடியாக அமைப்பார் (ஏசா. 11:12). வனாந்தரத்திலே வெண்கலச் சர்ப்பத்தை உயர்த்தி வைக்கப் பயன்பட்டிருந்த ஒரு nes, ஒரு மரத்தடியானது கிறிஸ்து ஆணியடிக்கப்பட்ட சிலுவைக்கு முன்மாதிரியாய் இருந்தது (எண். 21:8, 9; யோவா. 3:14). நமது இரட்சகர், "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவா. 12:32) என்று கூறிய பொழுது, சிலுவையின் வடிவில் அவர் nes ("தூக்கப்படுதல், உயர்த்தப் படுதல், எழுப்பப்படுதல்" என்று அர்த்தம் தரும் nasas) அதாவது உயர்த்தப்படுதலைப் பற்றி அவர் கூறினார். அமலேக்கியரின் மேல் கொண்டிருந்த வெற்றியைப் பார்க்கிலும் பாவம் மற்றும் கல்லறை ஆகியவற்றின் மேல் இயேசுவின் வெற்றியானது மிகவும் தனிச் சிறப்புடையதாக இருந்தது. அவரும் கூட Yahweh Nissiயாக, "கர்த்தர் ... எனது கொடியாய் இருக்கிறார்" என்பதாக உள்ளார்.*

## யேகோவா ஷாலோம்:
## "கர்த்தர் சமாதானமாய் இருக்கின்றார்"

*தேவனுடைய தூதனை முகமுகமாய்த் தரிசித்ததைக் கிதியோன் உணர்ந்த பொழுது (நியா. 6:22) தாம் மரித்து விடுவோம் என்று அவர் (கிதியோன்) பயப்பட்டார். ''உனக்குச் சமாதானம்; பயப்படாதே, நீ சாவதில்லை" என்று கூறி கர்த்தர் அவரது ஜீவனைத் தப்புவித்த பொழுது, மதிப்புணர்வினால் கிதியோன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதை Yahweh Shalom, ''கர்த்தர் சமாதானமாய் இருக்கின்றார்'' என்று அழைத்தார் (நியா. 6:24).*

*நாம் பாவிகளாயிருக்கையில் நமது பாவங்களில் மரியாமல் இருக்கும்படியாக, சமாதானமாயிருக்கிற கர்த்தர், சமாதானப் பிரபுவானவர் தமது சிலுவையில் இரத்தத்தினால் சமாதானம் ஏற்படுத்தும்படி அவரை அனுப்பினார். அத்துடன், Yahweh Shalom சமாதானத்தின் தேவன் என்ற வகையில், அவரது சித்தத்தை நிறைவேற்ற நாம் ஒவ்வொருவரும் நன்மையான செயலைச் செய்யும்படி கர்த்தராகிய இயேசுவை மரித்தோரில் இருந்து எழுப்பினார்.*

## யேகோவா சீபாத்:
## "சேனைகளின் கர்த்தர்"

*Yahweh Tseba'oth, "சேனைகளின் கர்த்தர்" என்ற சொற்றொடரானது தேவனுடைய கட்டுப்பாட்டில் உள்ள இயற்கையின் திரளான விஷயங்கள், மனிதர்களின் சேனைகள் மற்றும் மிக ஏராளமான தூதர்கள் ஆகியோரைக் குறிக்கின்றது. தேவனிடத்திலிருந்து புறப்படுகின்ற எல்லையற்ற வல்லமை யானது அவரது ஆணையைச் செய்யத் தயாராக உள்ள திரளான எண்ணிக்கையிலானவர்களால் சித்தரிக்கப்படுகின்றது. தாவீது கோலி யாத்தை அழைக்கையில் கூறிய சொற்களினால் விவரிக்கப்பட்ட உருவகமும் இதுவேயாகும்: ''நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும், என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" (1 சாமு. 17:45). இதே தேவன் தாம் - ''வானத்தின் சர்வ சேனைகளான'' - சூரியனையும், சந்திரனையும் மற்றும் நட்சத்திரங்களையும் ஆளுகை செய்கின்றார் (உபா. 4:19; சங். 33:6). இவர் கணக்கற்ற தூதர்களால் துதிக்கப்பட்டு சேவிக்கப்படுகின்றார் (ஆதி. 32:1, 2; சங். 103:20, 21; 148:2; வெளி. 5:11).*

*புதிய ஏற்பாட்டில் இருமுறை வருகின்ற Tseba'oth என்ற வார்த்தை யானது, முதலாவது ரோமர் 9:29ல் உள்ளது, அவ்விடத்தில் அது* "Sabaoth" *(சேனைகள்) என்று எழுதப்பட்டுள்ளது. பவுல், ஏசா. 1:9ல் இருந்து மேற்கோள் காட்டுகையில்,* "the Lord of hosts" *என்றிருப்பதை* "the Lord of Sabaoth" *என்று கூறினார். இந்தச் சொற்றொடரானது, எல்லையற்ற ஆதார மூலங்களின் கர்த்தரான தேவனுடைய சேனைகளின் விவரிப்பாகும்.*

*சந்தர்ப்பப்பொருளின்படி, அவர் இஸ்ரவேலில் எஞ்சியிருந்தவர்களை விடுவிக்கவும், புறஜாதியாரைத் தம் மக்களாக்கவும் வல்லவராய் இருந்தார். கர்த்தரின் மீது எந்தக் கட்டுப்பாடும் வைக்கப்பட்டிருந்ததில்லை மற்றும் இப்பொழுதும் வைக்கப்படுவதில்லை.*

*பழைய ஏற்பாட்டின் சொற்றொடராகிய Yahweh Tseba'oth என்பது புதிய ஏற்பாட்டில் இரண்டாம் முறை காணப்படுவது யாக். 5:4ல் ஆகும், இங்கு மறுபடியும்* "the Lord of Sabaoth" *என்றே தரவழைக்கப்பட்டுள்ளது. அங்கு நாம், கணக்கற்ற ஆதார மூலங்களின் சேனைகளுடைய தேவன், நியாயமற்ற வகையில் கொடுக்கப்பட்ட கூலியைச் சரிப்படுத்துவார் என்பதைக் காண்கின்றோம்.*

## *YAHWEH TSIDQENU:*
## *"நமது நீதியாயிருக்கிற கர்த்தர்"*

*நீதியுள்ளவராகிய இயேசுவின்மேல் ஒருவர் முற்றிலும் சார்ந்திருக்கத் தயாராயிருக்கும் பொழுது, அவர் முன்னுரைக்கப்பட்ட Yahweh Tsidqenu "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" என்ற மொழிதலின்படி தேவனைத் துதிக்கத் தயாராய் இருக்கின்றார். இந்த மொழிதல் எரே. 23:6ல் உள்ளது: "அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம் பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே." இதைச் செய்வதற்கு, ஒருவர் தமது சுயநீதியானது அழுக்கான கந்தை என்பதை அறிந்து (ஏசா. 64:6) அதை நம்புவதை விட்டொழிக்க வேண்டும் (தீத்து 3:5ஐக் காணவும்). இரட்சிக்கப்பட்ட நபருக்கு, மேன்மை பாராட்டுகிறவர் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத் தக்கதாக இயேசு "தேவனால் ஞானமும் நீதியும், பரிசுத்தமும் மீட்பும்" (1 கொரி. 1:30) ஆக உள்ளார். இயேசு நமது பாவங்களைச் சுமந்தவரானார்; அவர் சிலுவையில் இருக்கையில், தேவன், அவர் (இயேசு) பாவமற்றவர் என்று அறிந்திருந்தும், நாம் நீதியாகும்படிக்கு அவரை (இயேசுவை) பாவம் என்பதாகவே நோக்கினார் (2 கொரி. 5:21). அவர் கல்வாரியில் "குற்ற நிவாரண பலியாக" (ஏசா. 53:10) ஆன பொழுது, தேவன், "நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும்" இயேசுவின் மேல் விழப்பண்ணினார் (ஏசா. 53:6). இயேசுவை "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" என்ற எரேமியாவின் முன்னுரைத்தலானது ஒப்பிட முடியாத கிறிஸ்துவின் நீதியைப் பவுல் புரிந்து கொள்ளுதலில் தெளிவாய் நிறைவேற்றம் பெற்றுக் காணப்படுகின்றது:*

> *... என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினாலே வருகிற சுய நீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும் (பிலி. 3:8, 9).*

குறிப்பு

[1]மனித உதடுகளில் "Yahweh" என்ற பெயர் முதன்முதல் உச்சரிக்கப்பட்டது ஏவாளினால் (ஆதி. 4:1) என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சேத்தின் நாட்களில் மனிதர்களால் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது (ஆதி. 4:26). இந்தப் பெயரைப் பயன்படுத்தியவர்கள் என்று குறிப்பிடப்பட்ட மற்றவர்களில் ஆபிராம் (ஆதி. 15:2), அவரது ஊழியக்காரன் (ஆதி. 24:12), லாபான் மற்றும் பெத்துவேல் (ஆதி. 24:50) அபிமெலேக் (ஆதி. 26:28), யாக்கோபு (ஆதி. 28:16) மற்றும் ராகேல் (ஆதி. 30:24) ஆகியோர் இருந்தனர்.

## *MALAK YAHWEH: "கர்த்தருடைய தூதன்"*

*தேவனைப் பற்றி வழக்கத்திற்கு மாறான குறிப்பொன்று ஆதி. 16:7ல் உள்ளது: Malak Yahweh "கர்த்தருடைய தூதன்." இதே தூதன் Malak 'Elohim (நியா. 6:20, 21) என்று அழைக்கப்பட்டது உறுதி.*

*தெய்வீகத்துவமானவரல்ல.* சிலர் கர்த்தருடைய தூதனை தேவனுக்கும் இயேசுவுக்கும் சமானப்படுத்துகின்றனர். இந்தத் தூதன் "தேவன்" என்றும் கூட அழைக்கப்பட்டார் (ஆதி. 16:7, 13); ஆனால் தூதர்கள் தேவனல்ல, தேவனுடைய ஊழியக்காரர்களே (வெளி. 22:8, 9) என்பதால், அவர்களைத் தேவன் என்று பெயரிட்டது ஒரு விசேஷித்த கருத்துள்ளதாயிருக்க வேண்டும். தூதனைக் குறித்து தேவன், "என் நாமம் அவர் உள்ளத்தில் இருக்கும்" (யாத். 23:20, 21) என்று கூறியதால், உதவும் போக்குடைய ஒரு கருத்தில் அவர் தேவன் என்று கூறப்படலாம், ஏனென்றால் அவர் தேவனுடைய தனிப்பட்ட பிரதிநிதியாய் இருந்தார். தேவனுடைய தனிப்பட்ட பிரதிநிதி என்ற வகையில், அவரைக் காண்பது என்பது தேவனையே கண்டதாகக் கருதப்பட்டது (ஆதி. 32:24, 30; ஓசி. 12:4; நியா. 6:22, 23). எந்த வித தப்பெண்ணமுமின்றி இந்தத் தூதன் தேவனாக இருந்ததாகவே கருதப்பட்டார் (ஆதி. 16:10; 22:12). இருப்பினும், அவர் தேவனைப் பிரதிநிதித்துவப் படுத்துபவராகவே இருந்தார்; உண்மையில் அவர் தேவனாக இருந்ததில்லை. தேவனாக இருப்பதற்கு மாறாக, அவர் தேவனுடைய உரிமைப் பொருளாக, செய்தியாளராக இருந்து, தேவன் தமக்கும் கர்த்தருடைய தூதனுக்கும் உள்ள வித்தியாசத்தை உறுதிப் படுத்தி, தாம் இஸ்ரவேலரோடு கூடச் செல்லாமல் தம் தூதரைக் கூட அனுப்புவதை உறுதிப்படுத்தினதினால் இது அறியப்படுகின்றது! (யாத். 33:2, 3; நியா. 2:1ஐக் காணவும்). அத்துடன், கர்த்தருடைய தூதன் தாம் ஆராதிக்கப்படுவதை மறுத்தார் (நியா. 13:16), அவர் தேவனாக இருந்திருந்தால் அல்லது மாம்ச வடிவில் வருமுன் இருந்த இயேசுவாக இருந்திருந்தால் இப்படிச் செய்திருக்க மாட்டாரே.

*ஒரு விசேஷித்த தூதன்.* தேவனாயிராத, கர்த்தருடைய தூதனானவர் ஒரு விசேஷித்த தூதனாக இருக்க வேண்டும். அவர் தம்மில் தேவனுடைய பெயரைப் பெற்றவராகவும், தேவனுடைய விசேஷித்த பிரதிநிதியாகவும் இருந்தார் (யாத். 23:21). அவர் தேவனுடைய சமூகத்தில் இருக்கின்றவரும்

*(லூக். 1:19), மரியாள் இயேசுவின் தாயாவாள் என்ற செய்தியைக் கொண்டு செல்லும் கனம் பெற்றவருமான காபிரியேல் தூதனாக இருக்க முடியும். இதற்கு மறுபுறத்தில், அவர் மகாப் பிரதான தூதன் (தானி. 10:13; 12:1) என்றும் பிரதான தூதன் (யூதா 9) என்றும் பெயர் பெற்ற மிகாவேல் என்ற தேவதூதனாகவும் இருக்க முடியும். கிறிஸ்து வானத்தில் தோன்றும் பொழுது (1 தெச. 4:16) இவரது குரல் கேட்கப்படலாம்.*

*தெய்வீகத்துவத்தின் விவரிப்பு.* "கர்த்தருடைய தூதன்" என்ற சொற்றொடரானது தேவனுடைய நாமத்தினாலே அதிகாரத்துடன் பேசுவதற்கு தேவன் அனுப்பிய ஒரு விசேஷித்த பிரதிநிதி என்று காட்டுவதனால் விளக்கப்படுகின்றது. ஆகையால் தெய்வீகத்துவத்தின் இந்த விவரிப்பானது மனிதர் மேல் தேவன் கொண்டுள்ள விசேஷித்த ஆர்வத்தைப் பிரதிபலிக்கின்றது.

# தேவனை விவரிக்கும் பெயர்கள்

*எந்த ஒரு நபரும் ஒருபொழுதும் தேவனைக் கண்டிருக்கவில்லையென்றாலும், அவர் பண்புருவில் எப்படி இருக்கிறார் என்று நாம் அறிந்துள்ளோம். அவர் தமது மக்களில் செயல்படும் வழிமுறையில் நாம் அவருடைய இயல்பைக் காண்கின்றோம். தேவனால் தேர்ந்து கொள்ளப் பட்ட மக்கள் அவருடைய எல்லையற்ற வல்லமை மற்றும் பலத்தை அறிந்த பிறகு, அவரது மாபெரும் இயற்பண்புகளைப் பிரதிபலிக்கும் பெயர்களை அவருக்குச் சில வேளைகளில் அவர்கள் குறிப்பிட்டனர்.*

## *"பயபக்திக்குரியவர்"*

*ஆதி. 31:42ல் தேவன் Pahad, "பயபக்திக்குரியவர்" என்று விவரிக்கப் படுகின்றார். இவ்வசனப் பகுதியில் "பயபக்தி"யை விளக்கப்படுத்தும் வார்த்தையானது தேவபக்தி மற்றும் பயம் ஆகியவற்றைப் பொதுவாகக் குறிப்பிடும் வார்த்தை (Yir'ath) அல்ல, ஆனால் பயங்கரம் மற்றும் அச்சத்தைக் குறிப்பிடும் வார்த்தையாகும் (உபா. 11:25; 28:67; 1 சாமு. 11:7 ஆகியவற்றைக் காணவும்).*

*மூத்த மகனான ஏசாவுக்கல்ல, இளைய மகனான யாக்கோபுக்கே ஆசீர்வாதம் செல்ல வேண்டும் என்ற தேவனுடைய நோக்கத்தை ஈசாக்கு மதியாதிருக்க முயற்சி செய்தார் என்பது உறுதி. அந்த மகன்கள் பிறக்கும் முன்னமே, "மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" (ஆதி. 25:23) என்று தேவன் வெளிப்படுத்தியிருந்தார். அந்தத் தீர்க்கதரிசனம் இருப்பினும், தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதற்குப் பதிலாக, ஈசாக்கு முதல் மகனை ஆசீர்வதித்தல் என்ற வழக்கமான சம்பிரதாயத்தைப் பின்பற்றத் தீர்மானித்தார். யாக்கோபின் வஞ்சனையின் மூலம், ஈசாக்கு தாம் ஏசாவை ஆசீர்வதிப்பதாக எண்ணிய போது யாக்கோபை ஆசீர்வதித்தார். ஈசாக்கு, தாம் தேவனுடைய சித்தத்தைத் தடங்கல் செய்வதற்குப் பதில் தாம் தாமே தடங்கல் செய்து கொண்டதை உணர்ந்த பொழுது, அவர் நடுங்கினார் (ஆதி. 27:33). அவர் தேவனுக்குக் கொடுத்த - Pahad, "பயபக்திக்குரியவர்" என்ற பெயரில் இந்த நடுக்கமானது அநேகமாக பிரதிபலிக்கப்பட்டுள்ளது. மாறாத தேவனுடைய சித்தத்தைத் தாம் மாற்ற முயற்சித்திருந்ததை அவர் உணர்ந்த பொழுது பயங்கரம் மற்றும் அச்சம் ஆகியவை, அவரது இருதயத்தை நிரப்பின.*

*பின்னாளில் ஈசாக்கு தேவனுக்கு முழுமையாக இணங்கினாலும் அவர்*

*தமது நடுக்கத்தை ஒருக்காலும் மறக்கவில்லை என்பது உறுதி. அவர் தமது அனுபவத்தைப் பற்றி யாக்கோபிடம் கூறியதால்தான் யாக்கோபு Pahad, என்ற பெயரை அறியவும் அதன் விளக்கம் பெறவும் முடிந்தது. யாக்கோபு ஒரு பொருத்தனை செய்த பொழுது இந்தப் பெயரிலேயே ஆணையிட்டார்.*

## *"யாக்கோபுடைய வல்லவர்"*

*பழைய ஏற்பாட்டில் தெய்வீகத்துவத்தைப் பற்றிய இன்னொரு விவரிப்பானது ஆதி. 49:24ல் உள்ளது: 'Abir Ya'akob, "யாக்கோபுடைய வல்லவர்." 'Abir என்ற வார்த்தையானது "பலமுள்ள ஒருவர், வல்லமையுள்ள ஒருவர், வீரமுள்ள ஒருவர்" என்ற விதத்தில், 'El, "பலமுள்ள ஒருவர்" மற்றும் Shaddai "சர்வ வல்லவர்" என்ற தெய்வீகத்துவத்தின் முந்திய இரு விவரிப்புகளுக்கு அர்த்தத்தில் மிகவும் நெருங்கியதாக உள்ளது.*

### *'Abir என்ற வார்த்தையின் முதல் பயன்பாடு*

*'Abir "வல்லவர்" என்ற வார்த்தையின் முதல் பயன்பாடானது யோசேப்புக்கு அவரது தகப்பனாரால் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்தில் காணப்படுகின்றது. யோசேப்பு தமது சந்ததியார்களிடத்தில் 'Abir Ya'akob, "யாக்கோபுடைய வல்லவரால்" அவர்கள் பராமரிக்கப்படுவார்கள் என்று உறுதிப்பாட்டுடன் கூற முடிந்திருந்தது. 'Abir Ya'akob, ன் வல்லமையினால் யோசேப்பின் சந்ததியார்கள் தங்கள் வில்லுகளில் பலப்பட்டு தங்கள் புயங்களில் பலப்படுவார்கள். யோசேப்பின் சந்ததியாரான எப்பிராயீம் மற்றும் மனாசே கோத்திரத்தார்கள் வல்லமையுள்ள மக்கள் ஆனார்கள் என்பதும் உண்மையே. யாக்கோபின் முன்னுரைத்தலுக்குப் பல ஆண்டுகளுக்கு பிறகு, யோசுவா யோசேப்பு வம்சத்தாராகிய எப்பிராயீமரையும் மனாசேயரையும் நோக்கி, "நீங்கள் ஜனம் பெருத்தவர்கள், உங்களுக்கு மகா பராக்கிரமும் உண்டு, ஒரு பங்கு மாத்திரம் அல்ல, மலைத் தேசமும் உங்களுடையதாகும்" என்று கூறினார் (யோசு. 17:17). "யாக்கோபுடைய வல்லவர்" யோசேப்பின் பிள்ளைகளோடே இருந்தார் என்பதே இதற்குக் காரணமாய் இருந்தது.*

### *'Abir என்ற வார்த்தையின் மற்ற நான்கு சந்தர்ப்பப் பொருள்கள்*

*தெய்வீகத்தை விளக்கப்படுத்துவதற்கு பழைய ஏற்பாட்டில் மற்ற நான்கு சந்தர்ப்பப் பொருள்களில் Abir என்ற வார்த்தையானது பயன் படுத்தப்படுகின்றது:*

*1. 'Abir, மேசியாவைக் கொண்டு வருவதற்கு வல்லவர். தாவீது, தாம் தேவனுடைய கூடாரத்திற்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணும் வரைக்கும் இளைப்பாறப் போவதில்லை என்று யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனை செய்தார் (சங். 132:2-5). தாவீதின் பரிசுத்தமான மற்றும் சுயநலமற்ற தீர்மானத்திற்குப் பதில்செயலாகக் கர்த்தர் தாவீதுக்குப் பின்வரும் வாக்குறுதியை ஏற்படுத்தினார்: "உன் கர்ப்பத்தின் கனியை [ஒரு வாரிசாக] உன் சிங்காசனத்தின் மேல் வைப்பேன்" (சங். 132:11). கர்த்தர்*

*தம்முடைய தீர்மானத்திலிருந்து தாம் "பின் திரும்புவதில்லை" என்றும் ஆணையிட்டார் (சங். 132:11). தேவன், தாவீதின் ஒரு குமாரனாக இயேசுவை அனுப்பி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, பரலோகத்தில் தாவீதின் ஆவிக்குரிய அரியணையில் அமர்த்தியதே மகிழ்ச்சியான விளைவாய் இருந்தது. தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மெய்சிலிர்க்கும் இந்த உச்சக் காட்சியைப் பேதுரு, பெந்தெகொஸ்தே நாளன்று கேட்டுக் கொண்டிருந்த ஆயிரக்கணக்கானவர்களுக்கு: ''உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப் பண்ணுவேன் என்று தேவன் தனக்கு[தாவீதுக்கு]ச் சத்தியம் பண்ணினதை" (அப். 2:30) விவரித்தார். 'Abir Ya'akob, "யாக்கோபினுடைய வல்லவர்" தாம் தாவீதினுடைய வல்லவருமாயிருந்ததை இவ்விதமாகக் காண்பித்தார்.*

*2. 'Abir, எருசலேமைச் சுத்திகரிக்கவும் சீரமைக்கவும் வல்லவர். பூமிக்குரிய எருசலேம் நகரானது ஏசாயாவின் காலத்தில் "ஒரு வேசியாகவும்" மற்றும் ''கொலை பாதகர்கள்'' குடியிருக்கும் இடமாகவும் ஆயிற்று (ஏசா. 1:21). பிரபுக்கள் "முரடரும் திருடரின் தோழருமாய் இருந்து," "பரிதானத்தை விரும்பினார்கள்" (ஏசா. 1:23). இருப்பினும், "நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தையெல்லாம் நீக்குவேன்'' என்று யாக்கோபின் வல்லவர் அறிவித்தார் (ஏசா. 1:25). இஸ்ரவேலின் வல்லவர், நீதியுள்ள நியாயதிபதிகளை மறுபடி ஏற்படுத்தி, அதனால், அதன் பிறகு எருசலேம் நகரானது "நீதிபுரம் என்றும் சத்திய நகரம்" என்றும் அழைக்கப்படப் போவதாக வாக்குத்தத்தம் செய்தார் (ஏசா. 1:26). சீயோன் நியாயத்தினாலும் அதிலே திரும்பி வருகிறவர்கள் நீதியினாலும் மீட்கப் படுவார்கள்.*

*புதிய ஏற்பாட்டு சபையின் வருகையில் - ஆவிக்குரிய எருசலேமின் குடிகள் ஒவ்வொருவரும் புதிய இருதயத்துடனும் புதிய ஆவியுடனும் மறுபடியும் பிறந்த வகையில் - யாக்கோபின் வல்லவர் தமது வசனத்தை நிறைவேற்றினார். பூமிக்குரிய பழங்கால நகரான எருசலேமைக் காட்டிலும் மிக அதிகமான மகிமையுள்ள ஒன்று இருப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தது: இது ஒரு ஆவிக்குரிய நகரம், சபை, "மேலான எருசலேம்" (கலா. 4:26) மற்றும் "பரம எருசலேம்" (எபி. 12:22) என்று விவரிக்கப்படுகின்றது.*

*3. 'Abir, தவறுகளைச் சரியாக்க வல்லவர். தேவனுடைய மக்கள் மீது பழங்கால அடிமைப்படுத்துவோரின் அடக்கு முறையோ, அல்லது எந்தக் காலத்திலாவது செய்யப்படும் அநீதிகளோ, எதுவாயிருந்தாலும், யாக்கோபின் வல்லவர், அடக்குமுறையாளர்கள் ''தங்களுடைய இரத்தத்தையே குடிக்கும்படி" செய்வார் (ஏசா. 49:24-26; வெளி. 16:4-7). ஆகையால், "தேசத்தில் ... நியாயமும் நீதியும் புரட்டப் படுகிறதைப்" பற்றி ஒருவர் ஒருக்காலும் மனச்சோர்வு அடையத் தேவையில்லை (பிர. 5:8), ஏனெனில் யாக்கோபுடைய வல்லவர் ஒருக்காலும் மரிப்பதில்லை.*

*4. 'Abir, பரலோகத்தைக் கொண்டுவர வல்லவர். "எப்பொழுதும் திறந்திருக்கும்'' வாசல்களைக் கொண்ட நகரத்தை(ஏசா. 60:11)க் கட்டுவதற்கு 'Abir, வல்லமையுள்ள ஒருவர் வேண்டியதாயிருக்கும். "இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலும், சந்திரன் தன்*

*வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும், கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார்'' (ஏசா. 60:19, 20) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. பாவம் நிறைந்த ஆத்துமாக்களை ''நித்திய மாட்சிமையாகவும், தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும்'' விவரிக்கும்படியாக (ஏசா. 60:15) ஆச்சரியமான வழிமுறையில் மறுவுருவாக்கக் கூடிய ஒரே ஒருவர் சர்வ வல்லவரே ஆவார்.*

*ஆகவே, 'Abir, "சர்வ வல்லவர்" என்ற வார்த்தையானது, யோசேப்பை ஆசீர்வதித்தல், கிறிஸ்துவை ஒரு இராஜாவாக ஏற்படுத்துதல், எருசலேமைச் சுத்திகரித்து மற்றும் சீரமைத்தல், ஒவ்வொரு தவறையும் சரிப்படுத்துதல், பரலோகத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் தேவனுடைய பலத்தை விவரிப்பதற்குப் பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப்பட்டது என்று நாம் காண்கின்றோம்.*

## "இஸ்ரவேலின் கன்மலை"

*ஆதி. 49:24ல் பயன்படுத்தப்பட்ட தேவனைப் பற்றிய ஒரு விவரிப்பு 'Eben Yisra'el, "இஸ்ரவேலின் கன்மலை" என்றுள்ளது. தெய்வீகத்தை ஒரு கன்மலையாகக் கூறும் இந்தக் குறிப்பானது தேவனுடைய பலத்தை (யோபு. 6:12)யும், திடத்தையும் (யோபு. 38:30) வலியுறுத்துகின்றது.*

*பிலிஸ்தியர்களுக்கு எதிராகத் தேவன் இஸ்ரவேலர்களுக்கு உதவியதன் நினைவாக சாமுவேல் ஒரு கல்லைப் பயன்படுத்தினார். அவர் அதை எபெனேசர், "உதவியின் கல்" (1 சாமு. 7:12) என்று அழைத்தார். தாவீது, ''நான் எப்பொழுதும் வந்தடையத் தக்க கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்'' (சங். 71:3) என்று ஜெபித்த பொழுது அவரது சிந்தையில் பாதுகாப்புணர்வு இருந்திருக்கும் என்பது உறுதி. அன்னாள், ''கர்த்தரைப் போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை; எங்கள் தேவனைப் போல ஒரு கன்மலையும் இல்லை'' (1 சாமு. 2:2) என்று கூறிக் கர்த்தரைத் துதித்தாள். யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார் என்று ஏசாயா துதித்தார் (ஏசா. 26:4).*

*வனாந்தரத்தில் தேவன் கன்மலையிலிருந்து அற்புத விதமாய் உண்டாக்கின தண்ணீரை இஸ்ரவேலர்கள் குடித்தது போலவே (யாத். 17:6; சங். 78:15), அந்த நாட்களில் மோசேயின் மூலமாக ஆவிக்குரிய போதனை களைக் கொடுத்த கிறிஸ்து என்ற ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் (1 கொரி. 10:4, 5). அப்படியிருந்தும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை, ஏனெனில் அவர்கள் ஆவிக்குரிய போதனைகளைப் பருக மறுத்தார்கள். அவர்கள் தங்கள் இரட்சிப்பின் கன்மலையை அசட்டை பண்ணினார்கள் (உபா. 32:15).*

*கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் நாட்களில் ஞானக் கன்மலையாக இருந்தது மட்டுமின்றி, புதிய ஏற்பாட்டின் நாட்களில் அவர் ஒரு கல்லாயிருப்பார் என்பதும் முன்னுரைக்கப்பட்டது. மேசியா ஒரு கல்லாக*

*இருக்க வேண்டியிருந்ததென்று தீர்க்கதரிசியானவர் ஒரு இரட்டைக் கருத்தில் கூறினார். அவர், தவறான எண்ணப்போக்குடையவர்கள் தடுமாறி விழுகின்ற இடறுதலின் கல்லாகவும் (ஏசா. 8:14), யூதத்துவத்தைக் கட்டி யெழுப்பியவர்களால் புறக்கணிக்கப்பட்ட கல்லாகவும் இருப்பார். புறக்கணிக்கப்பட்ட கல்லே சுவர்களை ஒன்றாகப் பிடித்துப் பிணைக்கின்ற மூலைக்குத் தலைக்கல்லாகும்படி முடிவாயிற்று (சங். 118:22). இயேசு, கட்டிடத்தின் பிரதான கல்லாயிருப்பார் என்று முன்னுரைக்கப்பட்டது: "இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேற்றப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளது மான மூலைக்கல்லாயிருக்கும்" (ஏசா. 28:16).*

*முன்னுரைத்தல்கள் நிறைவேற்றப்பட்டன. கிறிஸ்தவமானது அஸ்தி பாரப்படுத்தப்பட்டது - கூழாங்கற்களின் மீதோ, ஒரு துண்டுக் கல்லின் மீதோ, ஒரு petros மீதோ அஸ்திபாரப் படுத்தப்படாமல், திடமான பாறை மீது, ஒரு பெரிய கல்லின் மீது, ஒரு petraவின் மீது அஸ்திபாரப் படுத்தப்பட்டது (மத். 16:16-18ஐக் காணவும்) - "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது" (1 கொரி. 3:11). அவிசுவாசிகள் வசனத்திற்குக் கீழ்ப்படியாமல் இருந்து கிறிஸ்துவின் செய்தியில் இடறி விழுகின்றனர் (1 பேது. 2:7, 8). "இந்தக் கல்லின் மேல்" விழுந்த யூதர்கள் "நொறுங்கிப் போய்'' (மத். 21:44) ''தூசிப் போலப்'' பறக்கடிக்கப்பட்டனர். இருப்பினும், இயேசுவை "ஜீவனுள்ள கல்லாக" ஏற்றுக் கொள்ளுகின்றவர் களுக்கு இயேசு மிகவும் விலையேறப் பெற்றவராகிய - காலம் மற்றும் நித்தியத்திற்கும் அவர்களின் திடமான ஆதாரமாகின்றார் (1 பேது. 2:4, 7).*

## *"எரிச்சலுள்ளவர்"*

*Qanna',"எரிச்சல்" என்ற வார்த்தையானது சாயம் போன்று "ஆழ்ந்த சிகப்பு நிறமாகுதல்'' என்ற வேறு அர்த்தத்திலிருந்து தரவழைக்கப் பட்டதாகும்; இது ஆழமான உணர்வின் விளைவாக ஒருவரின் முகத்தில் உண்டாகும் நிறத்தைக் குறிக்கின்றது. கிரேக்க வார்த்தையான Zelos, "எரிச்சல்" என்பது "கொதிக்க" என்ற வேர் அர்த்தத்திலிருந்து தரவழைக்கப் பட்டதாகும். ஆகையால், தேவன் Qanna', எரிச்சலுள்ளவர் என்று அழைக்கப் படுவதில் ஆழமான உணர்வு அடங்கியுள்ளது.*

*தேவன் பொறாமை உணர்வுள்ளவராக ஒருபோதும் கூறப்பட்ட தில்லை, ஆனால் அவர் எரிச்சலும் Qanna'வும் உள்ளவராகக் கூறப் பட்டுள்ளார், "எரிச்சலுள்ளவர்" என்பது அவரது பெயர்களில் ஒன்றாக உள்ளது (யாத். 34:14). பொறாமை என்பது இன்னொரு நபரை இடம் பெயர்த்து விடுவதற்கான பலத்த விருப்பமாக உள்ளது, இது முற்றிலும் சாத்தானிடத்திலிருந்து வந்ததாக, மாம்சத்தின் கிரியையாக உள்ளது (கலா. 5:21). பொறாமை என்பது இன்னொரு நபரை முற்றிலுமாக உரிதாக்கிக் கொள்வதற்கான பலத்த விருப்பமாக, பேய்த்தனத்திற்குரியதாக இருக்கக் கூடும் (அப். 13:45; ரோமர் 13:13; கலா. 5:20), அல்லது இது தேவ*

*பக்திக்கேதுவானதாயிருக்கக் கூடும் (2 கொரி. 11:2). "நல்ல விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது" (கலா. 4:18) நல்லதும் சரியானதுமாக உள்ளது, ஆனால் இது சுயநலமான வகையில் இருக்கலாகாது.*

*மனிதர்களைச் சிருஷ்டித்தவராகிய தேவன், மனிதரின் நேசம், நேர்மை ஆகியவற்றில் சட்டபூர்வமான உரிமைகோருதல் பெற்றுள்ளார். அவர் ஒரு நபரின் முழு இருதயம், ஆத்துமா, மனம் மற்றும் பலம் ஆகியவற்றைக் காட்டிலும் குறைந்ததை ஏற்றுக் கொள்ள மாட்டார் (உபா. 6:4-6; மாற். 12:30). அவர் வேறு எந்த கடவுளை விடவும் (யாத். 34:14; ஏசா. 42:8), பூமிக்குரிய எந்த அதிபதியை விடவும் (அப். 5:29), பூமிக்குரிய எந்த ஆர்வப் பற்றையும் விடவும் (லூக். 14:26) கீழான இரண்டாம் இடத்தை எடுக்கமாட்டார்.*

*எல்லா மனிதர்களையும் உடையவரான படைத்தவரின் இந்த இயல்பான உரிமையை மீறுதல் என்பது, எரிச்சலுள்ள தேவனிடத்தில் (நம்மை) அழிக்கும்படி கேட்டுக் கொள்வதாக உள்ளது (உபா. 6:15). "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (எபி. 12:29; உபா. 4:24ஐக் காணவும்). "எரிச்சலுள்ளவர்" என்று பெயர் கொண்ட "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபி. 10:31).*

## முடிவுரை

*இவ்விதமாக, தேவன் அவருடைய சில பெயர்களால் விவரிக்கப் படுகின்றார். அவர் பயப்படத்தக்க பலத்தில், சர்வ வல்லமையுள்ள, உறுதியான கன்மலையான தேவனாகவும், தாம் ஒருவருக்கே ஆராதனையை வேண்டிக் கேட்கின்ற தேவனாகவும் இருக்கின்றார். அவரை விவரிக்கின்ற இந்தப் பெயர்களை நாம் நன்கு புரிந்து கொள்கின்ற பொழுது, நாம் தேவனைப் பற்றிய தெளிவானதொரு சித்தரிப்பையும், அவருடைய மக்களுக்கு அவர் என்ன அர்த்தப்படுகிறார் என்பதையும், அவர் நம்மிடத்தில் எதிர்பார்ப்பது என்ன என்பதையும் பெறுகின்றோம்.*

# தேவனுடைய பணிப் பொறுப்புகளைப் பிரதிபலிக்கும் பெயர்கள்

*கர்த்தருடைய மக்களின் வாழ்வில் அவரது செயல்பாடானது பழைய ஏற்பாட்டில் அவருக்குப் பல இயற்கை பெயர்கள் தரப்படக் காரணமாய் இருந்துள்ளது. அந்தப் பெயர்களில் சிலவற்றை நாம், இந்தப் பாடத்தில் ஆராய்ந்து, இவ்விதமாக நாம் தேவனை எவ்விதம் கண்ணோக்க வேண்டும் என்பது பற்றி அதிகமாகக் கற்றுக் கொள்ளுவோம்.*

## *"நியாயாதிபதி"*

*ஆதி. 18:25ல் ஆபிரகாம் தேவனிடத்தில் தம்மைப் பற்றி வேண்டுகோள் விடுக்கையில், அவர் தேவனை Shophet, ''நியாயாதிபதி'' என்று குறிப்பிட்டார். ஆபிரகாம், சோதோம் கொமோரா பட்டணத்தில் இருந்த தீயவர்கள் பெறும் அதே தண்டனையை அங்கு நீதிமானான மக்கள் யாரேனும் இருந்தால் அவர்களும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்காதிருந்தார். ஆகையால், தேவன் Shophet, பூமி முழுவதற்கும் நியாயாதிபதி என்ற உண்மையின் அடிப்படையில் இணக்கம் காட்டி, சரியானதைச் செய்யும்படி அவர் தேவனிடத்தில் கெஞ்சிக் கேட்டார்.*

*இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியில், மனிதருக்கு சரியாகத் தோன்றுவது எதுவோ, அது தேவனுடைய கண்களுக்கும் சரியானதாகத் தோன்றியது. இருப்பினும் சில வேளைகளில் நியாயமற்றவைகளாய்க் காணப்படுகிறவை கள் நிகழ தேவன் அனுமதித்து விடுகின்றார் என்று மனிதர்கள் தேவனைக் குறித்து நியாயந்தீர்த்திருக்கின்றனர். அநீதியாய் இருத்தல் என்பது தேவனால் முடியாத செயலாகும், ஏனெனில் நீதியே அவருடைய அடிப் படை இயல்பாகும். அவர், ''தீமையைப் பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணனாக''வும் ''அநியாயத்தை நோக்கிக் கொண்டிராதவராகவும்'' இருக்கின்றார் (ஆப. 1:13); "அவர் நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்" (உபா. 32:4); "நீதியும் நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்" (சங். 89:14).*

*தேவனுடைய நியாயப்பிரமாணங்கள் பலவற்றைப் பற்றிய வெளிப்படுத்தப்பட்ட நீதியானது (லேவி. 19:18; உபா. 4:8; 23:24, 25; 24:10-22) அவர் தமது முடிவுகளுக்கு நல்ல காரணத்தைக் கொண்டுள்ளார்*

என்ற விசுவாசத்தை நமக்குக் கொடுக்க வேண்டும். தேவபக்தியில்லாத வர்களை அழித்ததில் (1 சாமு. 15), சவுலின் ஏழு மகன்களுடைய ஜீவனைக் கட்டாயமாய்ப் பறித்ததில் (2 சாமு. 21:3, 5, 6), வேசிப்பிள்ளையையும் மோவாபியர் மற்றும் அம்மோனியரைப் புறக்கணித்ததில் (உபா. 23:2-6), வியாதிகள் மற்றும் புயற்காற்றுகளை அனுமதித்ததில் தேவன் நீதியுள்ள வராக இருந்தார் என்று நாம் நம்பிக்கை கொள்ள முடியும். தேவனுடைய சித்தத்தில் உள்ள யாவற்றையும் புரிந்து கொள்வதற்கு மனித காரண அறிவுகள் போதுமானதல்ல; சில வேளைகளில், shophet பூமி முழுவதற்கும் நியாயாதிபதியான அவர்மேல் ஆபிரகாம் கொண்டிருந்தது போல விசுவாசம் கொண்டிருத்தலே ஒரே நடைமுறைத் தீர்வாய் இருந்து சரியானதைச் செய்யும்.

தேவன் ஒவ்வொரு அநீதியையும் திருத்துவார் என்று அவருடைய பண்பானது நமக்கு உறுதிப்படுத்துகின்றது. அவரது ஆழமான சுய ஞானத்தில் அவர் இந்தத் திருத்துதல்களை இவ்வாழ்வில் ஏற்படுத்துவது இல்லை, இதை ஆபேலும், நாபோத்தும் சாட்சியிட்டார்கள் (ஆதி. 4:8; 1 இரா. 21:1-16ஐக் காணவும்). சிலவேளைகளில், ஐசுவரியவானும் லாசருவும் உறுதிப்படுத்துவது போல, தவறுகளைத் திருத்துதல் என்பது இனிவரும் உலகத்தில் காத்திருக்கின்றது. இருப்பினும், ஒரு நாளிலே தேவன் எல்லாவற்றையும் சரியாக்குவார். இந்தக் காரணத்திற்காகவே பிர. 5:8ஐ நினைவில் வையுங்கள்: "ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நியாயமும் நீதியும் புரட்டப்படுகிறதையும் நீ காண்பாயானால், அதைக் குறித்து ஆச்சரியப்படாதே; உயர்ந்தவன்மேல் உயர்ந்தவன் காவலாளி யாயிருக்கிறான்; அவர்கள்மேல் உயர்ந்தவரும் ஒருவருண்டு."

## "மேய்ப்பர்"

தெய்வீகத்துவம் பற்றிய குறிப்பான மறு உறுதிப்பாடு ஒன்று ஆதி. 49:24ல் உள்ளது: Ro'eh, ''மேய்ப்பர்.'' தேவன், Ro'eh மேய்ப்பர் யோசேப்பைப் பராமரிப்பார் என்று யாக்கோபு உறுதிப்படுத்திய பொழுது, அவர் (யாக்கோபு), யோசேப்பின் சிந்தையில் மகிழ்வான ஒரு எண்ணத்தை ஏவுதல் செய்தார், தாவீதும் கூட கர்த்தரை Ro'eh Yisra'el, இஸ்ரவேலின் மேய்ப்பராகக் கண்டார், அவரே (கர்த்தரே) ''யோசேப்பை ஆட்டு மந்தையைப் போல நடத்தினார்'' (சங். 80:1). தேவனுடைய மக்கள் யாவரையும் அவர் (தாவீது) "அவரது (தேவனுடைய) மேய்ச்சலின் ஆடுகள்" (சங். 100:3) என்பதாகக் கண்டார், மற்றும் தம்மைத் தாமே அவர் (தாவீது) ஒரு ஆட்டுக்கு ஒப்பிட்டு, அவரில் Ro'eh, தமது மேய்ப்பர் தனிப்பட்ட ஆர்வம் கொண்டிருந்ததாகக் கூறினார் (சங். 23).

எசேக்கியேலின் நாட்களில் - இஸ்ரவேலில், கர்த்தரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மேய்ப்பர்களாய் இருக்க வேண்டிய - தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் மற்றும் இராஜாக்கள் ஆகியோர் தாங்கள் நம்பிக்கைக்குரியவர்கள் அல்ல என்பதை நிரூபித்திருந்தனர். "... தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு ஐயோ! மேய்ப்பர் மந்தையை அல்லவா மேய்க்க வேண்டும்?"

*(எசே. 34:2). மேய்ப்பனற்ற மந்தையானது "சிதறித் திரிகிறது," மற்றும் அதை ''விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை'' (எசே. 34:6). பின்பு, மாபெரும் Ro'eh என்ற பரலோக மேய்ப்பர், "இதோ, நான் நானே என் ஆடுகளை விசாரித்து, அவைகளைத் தேடிப் பார்ப்பேன்" (எசே. 34:11) என்று தீர்மானம் செய்தார்.*

*தேவன் தமது வார்த்தையை எவ்விதம் செயல்படுத்தினார் என்பது தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் காணப்படுகின்றது. தேவன், ''அவர்களை மேய்க்கும்படி என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பனை நான் அவர்கள் மேல் விசாரிப்பாயிருக்க ஏற்படுத்துவேன்; இவர் அவர்களை மேய்த்து, இவரே அவர்களுக்கு மேய்ப்பனாயிருப்பார்" (எசே. 34:23). தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்ட "தாவீது" என்னும் இயேசு, தேவனுடைய முந்திய மேய்ப்பர்களைப் போல கூலியாளாய் இருக்க மாட்டார். நல்ல மேய்ப்பர் என்ற வகையில், அவர் தமது ஆடுகளுக்காகத் தமது ஜீவனைக் கொடுப்பார் (யோவா. 10:11). அவர் அடிக்கப்படுவார் (சக. 13:7; மத். 26:31), ஆனால் தேவன், "நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுந்து வரப் பண்ணி"னவராய் உள்ளார் (எபி. 13:20). நாம் ''சிதறுண்ட ஆடுகளைப் போல இருந்தாலும்'' இப்பொழுது "[நமது] ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமான வரிடத்தில் திருப்பப்பட்டிருக்''கின்றோம் (1 பேது. 2:25). நாம் யூதராயினும், புறஜாதியாராயினும், பிரதான மேய்ப்பர் தம்மிடத்தில் வரும் யாவரையும் ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும் என்ற விளைவுடன் தயவுடன் பராமரித்து காக்கின்றார் (யோவா. 10:16).*

*பழைய ஏற்பாட்டில் தேவன், மனிதர்களை அடிநிலை மேய்ப்பர்கள் என்ற வகையில் தமது பிரதிநிதிகளாய் இருக்கும்படி தேர்ந்தெடுத்தார்; அது போலவே, இன்றைய நாட்களில் சபையின் மூப்பர்கள் மேய்ப்பர்களாய் இருக்கின்றனர் (1 பேது. 5:1, 2). மூப்பர்கள் தேவனுடைய மந்தையைப் பராமரிக்கும்படிக் கட்டளையிடப்பட்டுள்ளனர் (அப். 20:28; 1 பேது. 5:1-4). பழைய ஏற்பாட்டு அடிநிலை மேய்ப்பர்கள் பிரதான* Ro'eh*க்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதாக இருந்தது போலவே, கர்த்தருடைய ஆடுகளின் மேய்ப்பர்கள், பிரதான மேய்ப்பருக்குக் கணக்கு ஒப்புவிப்பார்கள் (1 பேது. 5:4).*

*ஒரு நாளிலே பிரதான மேய்ப்பர் நேரில் தோன்றுவார்:*

> *இதோ, கர்த்தராகிய ஆண்டவர் பராக்கிரமசாலியாக வருவார்;*
> *அவர் தமது புயத்தினால் அரசாளுவார்;*
> *இதோ, அவர் அளிக்கும் பலன் அவரோடேகூட வருகிறது;*
> *அவர் கொடுக்கும் பிரதிபலன் அவருடைய முகத்துக்கு முன்பாகச்*
> *செல்லுகிறது.*
> *மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை மேய்ப்பார்;*
> *ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து,*
> *தமது மடியிலே சுமந்து,*

*கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்*
*(ஏசா. 40:10, 11).*

## "இராஜா"

*ஏசாயா கர்த்தரை Melek, "இராஜா"வாக, உன்னதமானவராக மற்றும் உயர்த்தப்பட்டவராக, ஒரு அரியணையில் வீற்றிருப்பவராகக் கண்டார்; அவருடைய வஸ்திரத் தொங்கலால் தேவாலயம் நிறைந்திருந்தது. "கர்த்தர் சதா காலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார்'' (சங். 10:16அ). அவரது ராஜரிகமானது தொலைதூரங்களையும் சென்றடைகின்றது: "இதோ, ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலே படியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள்'' (ஏசா. 40:15அ). ''கர்த்தர் ஜலப்பிரவாகத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறார்" (சங். 29:10அ), அவரது முடிவானது முற்றிலும் நிச்சயமானதாக இருந்தது. அவர் வரம்பற்ற முடியாட்சியுடையவராய் இருக்கின்றார்.*

*கிறிஸ்துவின் யுகத்தின் போது வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் தமது குமாரனுக்குக் கொடுப்பது என்பது (மத். 28:18), "ஜாதிகளின் ராஜாவுக்கு" (வெளி. 15:3) பிரியமுள்ளதாயிற்று. "அப்படியானால் நீ ராஜாவோ?" (யோவா. 18:37அ) என்ற பிலாத்துவின் கேள்விக்கு இயேசுவின் பதிலானது பிழை காணப்பட முடியாததாக இருந்தது: "சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்" (யோவா. 18:37ஆ). ஆயினும், தமது இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்பதை அவர் தேசாதிபதிக்குத் தெளிவாக்கினார் (யோவா. 18:36). சாத்தான் இவ்வுலகத்தின் இராஜ்யங்களையும் அவற்றின் மகிமையையும் அளிக்க முன் வந்த பொழுது, அவர் (இயேசு) உலகப் பிரகாரமான அதிகாரத்தை மறுத்து விட்டார் (மத். 4:8, 9). அவர் தம்மைப் பின்பற்றியவர்கள் தம்மை ஒரு இராஜாவாக ஏற்படுத்துவதை அனுமதிக்க மறுத்து விட்டார் (யோவா. 6:15). அவர் ஒரு கழுதையின் மேல் ஏறி எருசலேமுக்குள் சென்று ராஜா என்று ஆரவாரிக்கப்பட்ட பொழுது, அவர் படை வீரர்கள் இல்லாதவராய் இருந்தார்; இராயனுக்குப் போட்டியாளர் ஒருவர் வந்ததாக யாருமே நினைக்கவில்லை (யோவா. 12:15). உண்மையில் அந்த வேளையில் இயேசு இன்னமும் இராஜாவாயிருந்ததில்லை; அவர் பரலோகத்திற்கு மறுபடியும் திரும்பும் வரைக்கும் அவ்வாறு ஆகவில்லை. இருந்த போதிலும், அவர் தம்மை நேசித்தவர்களின் இருதயங்களில் ஏற்கனவே ஆளுகை செய்து கொண்டிருந்தார், அவர்கள் தாங்களாகவே முன் வந்து கூறிய புகழுரைகளை அவர் ஏற்றுக் கொண்டார்.*

*இயேசு கீழ்ப்படியக் கற்றுக் கொண்டிருந்த பொழுது (எபி. 5:8) மற்றும் மரணத்தை வென்ற பொழுது (எபி. 2:14), அவர் உன்னதத்திற்கு ஏறிச் சென்றார். இயேசு பரலோக வாசல்களில் நெருங்கிச் சேர்ந்த வேளையில், பரலோகமானது மாபெரும் களிப்பினால் நிறைந்தது. வாசல்கள் மற்றும் கதவுகள் வரையிலும் ஆனந்த சத்தம் சென்று சேர்ந்தது:*

*வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்;*
*அநாதி கதவுகளே, உயருங்கள்;*
*மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்!*
*(சங். 24:7).*

*பரலோகத்தின் வாசல்களும் கதவுகளும் "யார் இந்த மகிமையின் ராஜா?" என்று கேட்ட பொழுது, "அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள கர்த்தர்; அவர் யுத்தத்தில் பராக்கிரமமுள்ள கர்த்தராமே" (சங். 24:8) என்பதும், "அவர் சேனைகளின் கர்த்தரானவர், அவரே மகிமையின் ராஜா" (சங். 24:10) என்பதுமே பதிலாய் இருந்தது.*

*உண்மையில் முடி சூட்டுதல் என்பது (இயேசு) பரத்துக்கேறிய பின் பத்து நாட்கள் கழித்தே ஏற்பாடு செய்யப்பட்டது; அது தேவனுடைய நியமப்படி பெந்தெகொஸ்தே நாளன்று ஏற்பட்டது. பிதாவாகிய தேவன், தமது குமாரனை அழைத்து, "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என்னுடைய வலது பாரிசத்தில் உட்காரும்" (சங். 110:1) என்று கூறினார். தேவனுடைய கட்டுப்பாட்டில் அவர் (இயேசு) கடைசிச் சத்துரு அழிக்கப்படும் வரையிலும் ஆளுகை செய்வார் (1 கொரி. 15:25, 26). உருவக நடையான பேச்சில், தேவன் பெந்தெகொஸ்தே ஞாயிறு அன்று தமது குமாரனுடைய தலையில் அபிஷேக தைலத்தை ஊற்றினார் (எபி. 1:8, 9), இது அநேகமாக கி.பி. 30, மே 26ம் தேதியில் நடந்திருக்கும். இயேசு, "நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவும்" ஆனார் (1 தீமோ. 6:15).*

*இயேசு தமது தகப்பனான தாவீதின் அரியணையில் அமர்ந்திருந்தாலும், அவரது (இயேசுவின்) ஆளுகையானது உலகப்படியானதாகவோ மற்றும் மாம்சப் பிரகாரமானதாகவோ இருக்காது. அவரது அரியணையானது "அன்பிரக்கத்தினால்" நிலைநாட்டப்படும், அதன் குடிகள் நீதியையும், "துரிதமாய் நீதி செய்கிற ஒருவரையும்" தேடுவார்கள் (ஏசா. 16:5). அவருடைய இராஜ்யமானது "நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமும்" உள்ள இராஜ்யமாய் இருக்கும் (ரோமர் 14:17).*

*மரித்தோரிலிருந்து எல்லா மனிதர்களையும் அவர் (எழுப்பி) கொண்டு வரும் பொழுது, மரணமானது பரிகரிக்கப்படும் (1 கொரி. 15:26). அந்த வேளையில் அவர் இராஜ்யத்தைத் தமது பிதாவுக்கு ஒப்புக்கொடுப்பார் (1 கொரி. 15:24). பின்பு அவர் தாமே, மற்ற மனிதர்கள் தூதர்கள் ஆகிய அனைவருடனும், தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் அவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார் (1 கொரி. 15:28).*

## *"மீட்பர்"*

*மனித இனத்துடன் செயல்படுவதில் தேவனுடைய பணிப் பொறுப்பைப் பிரதிபலிக்கும் இன்னொரு வார்த்தை Go'el என்பதாகும், இது பழி வாங்குபவர், மெய்ப்பிக்கின்றவர், அல்லது மீட்பர் என்பவரைக் குறிப்பிடுகின்றது. இந்தப் பெயரானது சாலொமோனால் நீதி. 23:10, 11லும்*

*மற்றும் யோபுவினால், யோபு 19:25-27லும் பயன்படுத்தப்பட்டது.*

***மெய்ப்பிக்கின்றவர்***

*Go'el என்ற வகையில் தேவன் இஸ்ரவேலரின் பழி வாங்குபவராக அல்லது மெய்ப்பிக்கின்றவராக இருந்தார். எல்லைக் கோட்டை நகர்த்தி நிலத்தைத் திருடுவது என்பது அவரைப் பொறுத்தமட்டில் மிக மோசமான செயலாக இருந்தது. திக்கற்ற பிள்ளைகளுடைய உரிமைகளில் அத்து மீறி நுழைவதும் கூட அவரது கண்களுக்கு மிக மோசமான செயலாக இருந்தது (நீதி. 23:10). பாதிக்கப்பட்டவருக்கு ஒரு go'el ஒரு மீட்பர் தேவைப்பட்டார். இதை தேவனுடைய பணிப் பொறுப்புகளில் ஒன்றாக சாலொமோன் கண்ணோக்கினார். தேவனை அவர் "வல்லவர்" என்று விவரித்தார், மற்றும் அவர் (தேவன்) "அவர்களுக்காக வழக்காடுவார்" என்றும் கூறினார் (நீதி. 23:11).*

*யோபு துன்பப்பட்ட போது - தமது ஒழுக்கத்தை மெய்ப்பித்துக் காட்ட ஒருவருமின்றி, தமது மனைவி கூடத் தன் சார்பாக இல்லாத நிலையில் - தாம் ஒரு நண்பரைப் பெற்றிருந்ததை அவர் அறிந்தார்:*

> *என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப் போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நியக் கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும்; ... (யோபு. 19:25-27).*

*அவர் தாம் மரிப்பதற்கு முன்பே தமது ஒழுக்கத்தைத் தேவன் மெய்ப்பிப்பார் என்பதை அறியாதிருந்தார். இவ்வாழ்க்கையில் மெய்ப்பித்தலுக்காக அவர் பெரிதும் வருத்தமுற்றார். அவர் தமது பெரும் துன்பத்தில் இருந்து நீக்கப்படுவதற்காக மரிக்க மட்டுமே விரும்பினார். இருப்பினும் களங்கமற்ற கண்களுடன் தேவனாகவே இருப்பவரே தூசியிலிருந்து தம்மை எழுப்பக் கூடியவர் என்று ஜீவனுள்ள மீட்பரின்மேல் அவர் (யோபு) பலமான விசுவாசம் கொண்டிருந்தார்.*

***மீட்டுக் கொள்ளுபவர்***

*சில வேளைகளில் go'el என்ற வார்த்தையானது மீட்டுக் கொள்ளுபவர் ஒருவரைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றது. இஸ்ரவேலரில் ஒருவர் தமது நிலத்தை விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், மோசேயின் பிரமாணத்தின்படி, அந்த மனிதரின் நெருங்கிய உறவினருக்கு அந்த நிலத்தைத் திரும்ப வாங்கும் சிலாக்கியம் தரப்பட்டிருந்தது (லேவி. 25:23-25). இப்படிப்பட்ட ஒரு நெருங்கிய உறவினர் ஒரு மீட்டுக் கொள்ளுபவர் என்று அழைக்கப்பட்டார். ரூத்தின் புத்தகமானது உற்சாகம் நிறைந்த உதாரணம் ஒன்றை அளிக்கின்றது. நகோமியின் நெருங்கிய உறவினர், மீட்டுக் கொள்ளும் உரிமையை மறுத்து விட்ட பொழுது, போவாஸ் அவளுடைய go'elஆக, மீட்டுக் கொள்ளுபவராக முன் வந்தார். அவர் அந்த நிலத்தை வாங்கியதோடு மட்டுமின்றி அந்தக் கிரய மாற்றினால்*

ஒரு மணப் பெண்ணையும் பெற்றுக் கொண்டார்.

பாபிலோனிய அடிமைத்தனத்தில் இருந்தவர்களுக்கும் தேவன் Go'el ஆக, மீட்பராக, மீட்டுக் கொள்ளுபவராக இருந்தார். அவர்களை செருபாபேல், எஸ்றா, நெகேமியா ஆகியோரின் கீழ் புதிய இருதயத்துடனும், புதிய ஆவியுடனும் அவர்களின் நாட்டிற்கு அவர் திரும்பவும் கொண்டு வந்தார் (எசே. 36:26). இஸ்ரவேலின் Go'el வல்லவராய் இருந்தார்; மக்களின் வழக்குகளை அவர் தீவிரமாய் நடத்துவார் (எரே. 50:34). அவர்களின் பாதையானது பரிசுத்தத்தின் வழி என்று அழைக்கப்படும். தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை; அது மீட்டுக் கொள்ளப்பட்டவர்களுக்கானதாகும். அவர்கள் புதிய இருதயமும் புதிய ஆவியும் கொண்டிருந்தால், பரிசுத்த வழியானது தெளிவானதாக இருக்கும். பேதையரான மனிதர்கள் கூட நீதியின் நெடுஞ்சாலையைப் பின்பற்றுவது எப்படி என்பதைப் புரிந்து கொள்ளுவார்கள். தேவனால் மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள் ஆனந்தக் களிப்புடன் பாடிக் கொண்டு சீயோனுக்கு வருவார்கள். நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம் (ஏசா. 35:8-10). இஸ்ரவேலரை உண்டாக்கிய தேவன் இப்பொழுது அவர்களின் Go'el என்ற வகையில் இன்னொரு தனிச் சிறப்பை உரிமை கூர முடிந்தது: "உன்னை மீட்டுக் கொண்டேன்" (ஏசா. 43:1).

அந்நிய சக்திகளிடமிருந்து விடுதலையைக் கொடுக்கும் மீட்பைக் காட்டிலும் மேலான அம்சம் ஒன்று, பாவத்திலிருந்து விடுதலை கொடுப்பதில் உள்ளது (கொலோ. 1:14). தம்மையே மீட்கும் பொருளாக ஒப்புக் கொடுத்த இயேசுவின் மூலமாகத் தேவன் இந்த மீட்பை அருளியிருக்கின்றார் (மத். 20:28). அவர் தமது "விலையேறப் பெற்ற இரத்தத்தை" (1 பேது. 1:19), "முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு" (எபி. 9:15) ஒப்புக் கொடுத்தது மட்டுமின்றி, "சர்வலோகத்தின்" (1 யோவா. 2:2) பாவங்களை நிவிர்த்தி செய்கிறதற்காகவும் ஒப்புக் கொடுத்தார். Go'el, மீட்பர் என்ற வகையில் இயேசு இவ்விதமாக, அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் "நித்திய சுதந்திரத்தின் வாக்குத்தத்ததைப் பெறும்படி நித்திய மீட்பை" அருளினார் (எபி. 9:12, 15).

## "பிதாவானவர்"

தேவன் உலகப் பிரகாரமான தகப்பனல்ல என்பது ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் நமது பிதா என்ற வகையில் அவருடைய பணிப் பொறுப்பானது பழைய ஏற்பாட்டில் மிகவும் மதிப்பிற்குரியதாகவும் இருதயத்திற்கு இதமானதாகவும் உள்ளது.[1]

### தேவனுடைய சேஷ்ட புத்திரர்கள் என்ற வகையில் இஸ்ரவேலர்கள்

பிதா என்ற வகையில் தேவனை உருவகித்த சித்தரிப்பானது இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களை ஒரு அலகாக - அதாவது ஒரு

குமாரனாக - மொத்தமாகக் கருதிக் குறிப்பிட்டதில் முதலாவதாகப் பயன்படுத்தப்பட்டது. "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்ட புத்திரன்'' (யாத். 4:22). தேவனுடைய சேஷ்ட புத்திரன் என்று விவரிக்கப்பட்ட இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டுச் செல்லப் பார்வோன் அனுமதிக்க மறுத்து விட்டதால், அவரிடத்தில் கர்த்தர், "நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்ட புத்திரனைச் சங்கரிப்பேன்" (யாத். 4:23) என்று கூறினார்.தேவனுடைய குமாரனாகிய இஸ்ரவேல் கொடிய அடிமைத்தனத்தில் துன்புற்றுக் கொண்டிருந்த பொழுது, அந்த இனத்தார் மேல் தேவனுடைய பிரிவுணர்வானது பெற்றோருக்குரிய வழிமுறையில் விளக்கப்பட்டது: "இஸ்ரவேல் இளைஞனாயிருந்த போது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" (ஓசி. 11:1). ஆர்வமும் அன்பும் கொண்டுள்ள தகப்பன் என்ற வகையில், கர்த்தர் இஸ்ரவேலைக் கைப்பிடித்து நடக்கப் பழக்கினார் (ஓசி. 11:3).

**தேவனுடைய சேஷ்ட புத்திரர்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள்**

இஸ்ரவேல் அன்றி, மற்ற இனங்களும் தேவனுடைய பிள்ளைகளாகவே இருந்தன. எல்லா இனத்தாருமே "தேவனுடைய சந்ததியார்/பிள்ளைகள்" தான் (அப். 17:29). இருந்தாலும் ஆபிரகாமின் வழக்கத்திற்கு மாறான விசுவாசத்தின் காரணமாக அவரிலிருந்து பின் தோன்றிய எபிரெய இனமானது கர்த்தரால் அவருடைய எல்லாப் பிள்ளைகளிலும் (இனங்களிலும்) அவரது சேஷ்ட புத்திரனாக கருதப்பட்டது.

ஒரு குடும்பத்தில் சேஷ்ட புத்திரனாக இருத்தல் என்பது ஒரு விசேஷித்த வாழ்த்தாக இருந்தது. முதல் பிறந்தவர் தமது தகப்பனின் சொத்துக்களில் (மற்ற பிள்ளைகளுக்குக் கொடுப்பதைக் காட்டிலும்) இரு மடங்கு பெற்றுக் கொண்டது (உபா. 21:17) மட்டுமின்றி, அவர் முதல் பிறந்தவர் என்ற வகையில் தமது தகப்பனுடைய சத்துவத்தின் தொடக்கம் என்று கருதப்பட்டார். முதல் பிறந்தவர் தமது தகப்பனின் "வல்லமை" என்று கனப்படுத்தப்பட்டார் மற்றும் மேன்மையிலும் வல்லமையிலும் அவருக்கு ஒப்புயர்வற்ற நிலை கொடுக்கப்பட்டது (ஆதி. 49:3ஐக் காணவும்). ஆகையால் முதல் பிறந்த மகனானவர் குடும்பத்தின் மகிமையாக நோக்கப் பட்டார்.

தமது பிள்ளைகளைக் கனப்படுத்த விரும்பிய தேவன் இஸ்ரவேலரை இனங்களின் மத்தியில் முதன்மையானவர்களாக வைத்தார். அதே வழிமுறையில், கிறிஸ்தவர்களைக் கனப்படுத்தவும் சபையை முதற்பேறான மக்கள் என்று குறிப்பிடவும் (எபி. 12:23) கர்த்தர் பிரியமாயிருந்தார், இவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த விவரிப்பில், படைப்பின் அடிப்படையில் எல்லா மக்களும் தேவனுடைய பிள்ளைகள் என்று கருதப்படுகின்றனர் - ஆனால் புது சிருஷ்டியாவதினால் (2 கொரி. 5:17) கிறிஸ்தவர்கள் தேவன் தங்களில் பிரியப்படுகின்ற அவருடைய சேஷ்ட புத்திரர்களாகக் கருதப்படுகின்றனர்.

**தேவனுடைய பிள்ளைகளாகுதல்**

*எந்த ஒரு விவரிப்பும் முழு நிறைவானதாக இருப்பதில்லை. தகப்பன்/ பிள்ளை என்பது மிகவும் ஏற்புடையதாக இருந்தாலும், தேர்ந்தெடுத்தல் விஷயத்தில் குறைபாடுள்ளதாக இருக்கின்றது. ஒரு குழந்தை தான் பிறக்கலாமா வேண்டாமா என்பதில் எவ்விதத் தேர்வும் செய்ய முடியாது, ஆனால் பிதாவினுடைய குடும்பத்தில் ஆவிக்குரிய வகையில் மறுபடி பிறக்கலாமா என்பதை ஒருவர் தேர்வு செய்தாக வேண்டும் (யோவா. 3:3-8).*

*இயல்பான பிறப்பு என்பது ஒரு குடும்பத்தின் உறுப்பினராவதற்குரிய சாதாரணமான வழிமுறையாக உள்ளது, ஆனால் தத்து எடுத்தல் என்பது இன்னொரு வழிமுறையாக உள்ளது. தேவனுடைய குடும்பத்தில் தத்து எடுக்கப்படக் கூடிய மக்களின் விளக்கத்தையும் வேத வசனம் பயன்படுத்தி யிருக்கின்றது (கலா. 4:4-7).*

**தனிப்பட்ட கவனிப்பு**

*பிள்ளைகளின் தேவைகளை அளித்து ஆனால் அவர்கள் மேல் தனிப்பட்ட ஆர்வம் இல்லாதிருக்கும் தகப்பனை ஒருவர் கற்பனை செய்ய முடியாது.[2] நல்லதொரு தகப்பன் விசேஷித்த கவனிப்பைச் செலுத்து கின்றார். தேவனை வேத வசனங்கள் ஒரு தகப்பனுக்கு ஒப்பிடுகையில், விசேஷித்த அருளிரக்கம் உள்ளடக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. தாழ்நிலையில் உள்ள உலகப் பிரகாரமான தகப்பனே கற்களையும் பாம்பு களையுமல்ல, அப்பத்தையும் மீனையும் கொடுப்பதில் கருத்துள்ளவராய் இருக்கின்றார். இருப்பினும் இது பரலோக பிதாவின் எளிமையான ஒரு பிரதியாகவே உள்ளது, அவருடைய இருதயமானது தமது பிள்ளைகளின் தேவைகளினால் தொடப்படுகின்றது. அவர்களுடைய எல்லா நெருக்கத் திலும், அவர் நெருக்கப்படுகிறார் (ஏசா. 63:9). "தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்" (சங். 103:13,14).*

**மூத்த சகோதரர்**

*இயேசுவை எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் ஒரு பெரிய சகோதரராக, ஒரு மூத்த சகோதரராக வேத வசனங்கள் விவரித்து அமைக்கின்றன. அவர் தம்முடைய சகோதரர்களில் வெட்கப்படுவதில்லை (எபி. 2:11). அநேக சகோதரருக்குள்ளே முதற் பேறானவர் என்ற வகையில் (ரோமர் 8:29), அவர் தம்முடைய இளைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்காகப் பேசப் பிரியமாய் இருக்கின்றார். அவர்களுக்காக அவர் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (1 யோவா. 2:1).*

**பிள்ளைகளின் நடக்கை**

*ஒரு பிள்ளை தனது தகப்பனைப் போலவே இருக்கின்றது. அது போலவே, தேவனுடைய பிள்ளைகள் தங்கள் செயல்பாடுகளில் தங்கள் பிதாவைப் போலவே முழு நிறைவாக மற்றும் பக்குவம் உள்ளவர்களாக*

*இருப்பதற்குக் கடின முயற்சி செய்கின்றனர். பிரியமான பிள்ளைகள் என்ற வகையில், (எபே. 5:1; மத். 5:48) அவர்கள் தேவனைப் போலச் செய்ய முயற்சிக்கின்றனர். சர்வ வல்லமையுள்ள கர்த்தரின் மகன்கள் மற்றும் மகள்களாக இருப்பதில் அவர்கள் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியிலுமிருந்து சுத்திகரிக்கப்பட்டவர்களாயிருக்க விரும்பு கின்றனர் (2 கொரி. 7:1). தகுதியான குமாரன் ''தனது பிதாவைக் கனப்படுத்துகின்றார்'' (மல். 1:6), மற்றும் தன்னுடைய பிதாவைத் துக்கப்படுத்தினால், சரியான எண்ணமுள்ள மகன் மிகவும் மனம் வருந்துகிறார் (எபே. 4:30).*

**மற்ற பிள்ளைகள்**

*பெற்றோர் என்ற விவரிப்பானது பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையில் உள்ள நேரடியானதொரு உறவை ஆலோசிப்பதுடன் மட்டுமின்றி, பிள்ளைகளுக்கு இடையில் உள்ள நேரடியானதொரு உறவையும் ஆலோசிக்கின்றது. "ஒரே பிதாவை"ப் பெற்றுக் கொண்டுள்ள பிள்ளைகளின் மத்தியில் (மல். 2:10) ஒருவருக்கொருவர் நம்பிக்கைத் துரோகமான செயல் என்பது எண்ணிப் பார்க்க முடியாததாக உள்ளது. தேவனை அன்புகூருகிறேன் என்று சொல்லியும் தேவனுடைய பிள்ளைகளின்மேல் அன்புகூராதவர் பொய்யர் (1 யோவா. 4:20). பிதாவினிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால், அவர் பிதாவினால் பிறந்த மற்றவர்களிடத்திலும் அன்புகூருவார் (1 யோவா. 5:1).*

## "கணவர்"

*தேவன் தாம் மனிதர்களுடன் கொண்டுள்ள உறவுமுறை பற்றிக் கூறப் பயன்படுத்தியவைகளில் மிகவும் நெருக்கமான மற்றும் மிகவும் தனிப்பட்ட விவரிப்பாக இருப்பது* 'Ish, *"கணவர்" என்பதாகும்.* 'Ish-'ishshah - *கணவன்/ மனைவி என்ற விளக்கத்தை எல்லாவற்றிலும் அதிகமான நேசமுடைய தாக்க, கணவன், மற்றும் மனைவி இடையில் உள்ள ஒன்றாகும் தன்மை, மற்றும் துணையிருக்கும் இணைவு ஆகியவை அவ்வளவு அவசியமுள்ள வைகளாகவும், பிரயோஜனமுள்ளவைகளாகவும், மகிழ்வை அநுபவிக்கச் செய்பவைகளாகவும் உள்ளன.*

**இஸ்ரவேல்**

*திருமண உறுதி செய்யப்பட்ட பெண் என்ற வகையில் இஸ்ரவேல். இஸ்ரவேல் "தன் இளவயதின் நாட்களில்" (ஓசி. 2:15) கர்த்தரை நேசித்து அவரது முன் மொழிதலை ஏற்றுக் கொண்டு (எரே. 2:2) உள்ள ஒரு பெண்ணுக்கு ஒப்பிடப்பட்டது. அவள் விதைக்கப்படாத தேசமாகிய வனாந்தரமான ஒரு பகுதிக்கு அவரைப் பின்பற்றிச் செல்லச் சித்தமாய் இருந்தாள் (எரே. 2:2).*

*ஒரு வேசி என்ற வகையில் இஸ்ரவேல். ஆழமான மற்றும் நம்பிக்கையுள்ள அன்புடன் தொடங்கிய திருமணமானது பரிதாபகரமான*

தாயிற்று. மனைவியானவள் ''ஒரு வேசியை''(எரே. 3:1)ப் போலச் செயல்பட்டாள் - ஒரு முறையல்ல, பலமுறை பல நேசரோடே. "ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வது போல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம் செய்தது மெய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 3:20). இஸ்ரவேலின் விக்கிரகாராதனை, அதன் இழிவான ஒழுக்கம், மற்றும் அதன் உண்மையற்ற தன்மை இவை யாவும் தேவனுக்கு - அதன் 'Ish, அதன் கணவருக்கு - எதிரான வேசித்தனம் என்று கருதப்பட்டது. ''நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 31:32). மக்கள் தேவனை விட்டு விலகியதில் "சோரம் போனார்கள்" (ஓசி. 1:2).

இஸ்ரவேல், "தன் நெற்றிப்பட்டங்களினாலும் தன் ஆபரணங்களி னாலும் தன்னைச் சிங்காரித்துக் கொண்டு, தன் நேசரைப் பின் தொடர்ந்து, என்னை மறந்து போன ... என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஓசி. 2:13). அவள் "வெட்கங்கெட்ட வேசியின் கிரியைகளாகிய இவையெல்லாம் செய்தாள்" (எசே. 16:30), அவள் விபசாரம் செய்து, "தன் புருஷனுக்குப் பதிலாக அந்நியரைச் சேர்த்துக் கொண்டு" (எசே. 16:32) இருந்தாள். "இஸ்ரவேலே நீ வித்தியாசமானவள்" (எசே. 16:34). பணயம் வாங்குவதற்குப் பதிலாக, ''உன் நேசர்களுக்கெல்லாம் நீயே பணயம் கொடுத்து, அவர்களுக்கு வெகுமதிகளைத் தருகிறாய்" (எசே. 16:33). இஸ்ரவேல் "தன் புருஷனையும் தன் பிள்ளைகளையும் அருவருத்தாள்" (எசே. 16:45) மற்றும் வேசித்தனம் பண்ணினாள் (எசே. 16:36).

*இஸ்ரவேல் மீட்டுக்கொள்ளப்பட்டது.* இன்னொருவனின் மனைவி யாகி விட்டதினால், உண்மையற்றுப்போன பெண்ணை அவளது (முதல்) கணவர் மீண்டும் சேர்த்துக் கொள்வதை நியாயப்பிரமாணம் தடை செய்தாலும் (உபா. 24:1-4), இஸ்ரவேலின் கணவர் ''... என்னிடத்தில் திரும்பி வா'' (எரே. 3:1; KJV) என்று வேண்டுகோள் விடுத்தார். ''... திரும்புங்கள் ... நான் உங்கள் நாயகர்'' (எரே. 3:14) என்று கர்த்தர் வேண்டினார். இஸ்ரவேலின் கணவரான தேவன் தமது உண்மையற்ற மனைவியை இன்னமும் நேசித்தார். அவர் அவளுடைய இருதயத்தோடே பேசினார் (ஓசி. 2:14) மற்றும் "தன் இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும்'' (ஓசி. 2:15) இருந்தது போலப் புதிய முன்மொழிதலை ஏற்படுத்தினார். புதிய முன்மொழிதலானது பலமான அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது.

நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக்
  கொள்ளுவேன்;
நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை
  எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்.
உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்;
நீ கர்த்தரை அறிந்து கொள்ளுவாய்
  (ஓசி. 2:19, 20).

“ ‘அக்காலத்தில் நீ என்னை ... ஈஷி - என் கணவர் - என்று சொல்லுவாய்’ என்று கர்த்தர் உரைக்கின்றார்” (ஓசி. 2:16).

இருதயத்தைத் தொடும் ஒரு விளக்கம். (ஓசியாவாகப் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட) தேவன் தகுதியற்ற மனைவி (கோமேராகப் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டவள்)யைப் பெற்றுக் கொண்டு அவமானம் அடைந்து மீண்டும் அவளைத் தம் இருதயத்தில் ஏற்றுக் கொண்ட கணவர் என்பதே ஓசியா புத்தகத்தின் மிகவும் ஏற்புடைய விளக்கமாய் உள்ளது. இந்த விளக்கமானது சரியானதாக இருந்தால், தேவன் இஸ்ரவேலைத் திருமணம் செய்திருந்தது போல ஓசியாவும் தொடக்கத்தில் தூய்மையாய் இருந்த ஒரு பெண்ணையே திருமணம் செய்திருந்தார். தொடர்ந்து, இஸ்ரவேலைப் போலவே கோமேரும் உண்மையற்றவளாகி, வேசித்தனத்தில் பிள்ளை களைக் கூடப் பெற்றாள். எண்ணிப் பார்க்க முடியாத இப்படிப்பட்ட நடக்கையைச் சகிக்கக் கூடாதிருந்தும், ஓசியா இன்னமும் தனது நேசத்திற்குரிய கோமேரைத் தமது மனைவியாய் இருக்கும்படி திரும்புமாறு வேண்டுகோள் விடுத்தார். பெரும்பாலான கணவர்கள் ஓசியாவைப் போல அவ்வளவு ஆழமாக அன்பு செய்வதில்லை. சட்டப்படி அவர் அவளை விவாகரத்துச் செய்திருக்கலாம் அல்லது கல்லெறியப்படச் செய்திருக்கலாம் (உபா. 22:22; 24:1ஐக் காணவும்). அதற்குப் பதிலாக, அவர் அவளிடத்தில் பிரியமான வார்த்தைகளைப் பேசினார்.

ஓசியாவிடத்தில் திரும்பி வர வேண்டும் என்ற அவருடைய வேண்டுகோளுக்கு கோமேர் பதில்செயல் செய்தாள்; ஆனால் இரண்டாம் முறையாக அவள் வேறு நேசர்களைத் தேடி அலைந்தாள். ஓசியா 3:2ல், நேசர்களைக் கவருவதற்கான கோமேரின் திறமையானது மங்கியது என்பது மறைவாகக் குறிப்பிடப்படுவதைக் காண்கின்றோம்; நம்பிக்கையிழந்த நிலையில் அவள் உணவும் இருப்பிடமும் பெற்றுக் கொள்வதற்காகத் தன்னை ஒரு அடிமையாக விற்றுப் போட்டாள். உண்மையற்ற கோமேரின் மேல் இன்னமும் ஈடுபாட்டுடன் இருந்த ஓசியா அவளை அடிமைத் தனத்தில் இருந்து விடுதலையாக்கும்படிக்கு வாங்க விரும்பினார். அவரிடத்தில் அதற்கான கிரயத்தில் பாதித் தொகை அதாவது பதினைந்து வெள்ளி சேக்கல்கள் (யாத். 21:32ஐக் காணவும்) தான் இருந்தது; ஆனாலும் அவரிடத்தில் ஒன்றரைக்கலம் வாற்கோதுமை இருந்தது, அது அந்த வெள்ளிக் காசுகளுடன் சேர்க்கப்பட்ட பொழுது கோமேரின் விடுதலையை வாங்கப் போதுமானதாக இருந்தது. நம்பிக்கைத் துரோகம் செய்த கோமேரின் மீது ஓசியா காண்பித்த ஆழமான மற்றும் உறுதியான அன்பானது, உண்மையற்ற இஸ்ரவேல் மீது தேவன் கொண்ட ஆழமான மற்றும் உறுதியான அன்பை முன் வைக்கின்றது.

**சபை**

பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலானது கர்த்தருக்கு மணம் முடிக்கப் பட்டிருந்ததாகச் சித்தரிக்கப்படுவது போலவே, புதிய ஏற்பாட்டில் சபையானது முன் வைக்கப்படுகின்றது. கிறிஸ்து தமது மணவாட்டியாகிய மகிமையுள்ள சபையை கறைதிரைகள் எதுவுமின்றிப் பெற்றுக்

கொள்வதற்கு எதை வேண்டுமானாலும் கொடுக்குமளவுக்கு போதுமான ஆழமும் போதுமான பலமும் கொண்ட நேசத்துடன் இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றார்.

கணவர் என்ற வகையில் கிறிஸ்துவின் இரண்டு அம்சங்கள் புதிய ஏற்பாட்டில் தோற்றம் பெறுகின்றன. ஒன்றில், பாவி ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்பொழுது தமது முன்மொழிதல் ஏற்கப்பட்ட வேண்டுகோள் விடுக்கும் நேசராக அவர் இருக்கின்றார் (வெளி. 19:7-9). இந்த விளக்கத்தின்படியாக ஞானஸ்நானம் என்பது இயேசுவின் முன்மொழிதலாகவும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்படுதலுக்கான ஒரு அடையாளமாகவும் உள்ளது. கிறிஸ்தவ வாழ்வு முழுவதுமே, ஆட்டுக் குட்டியானவர் தமக்கு நியமிக்கப்பட்ட மணவாட்டியாகிய அக்கிறிஸ்த வரைத் திருமணம் (ஆவிக்குரிய வகையில்) செய்து கொள்ளும் திருமண நாளுக்காக (நீதியின் உடைகளால் உடுத்துவிக்கப்படும்) மணப் பெண்ணின் அலங்காரச் செயலாகவே உள்ளது. திருமணத்தைத் தொடர்ந்து அவர்கள் பரலோகத்தில் என்றென்றைக்கும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.

ஒரு கணவர் என்ற வகையில் கிறிஸ்துவைப் பற்றிய இன்னொரு விளக்கத்தில், பாவியொருவர் தமது ஞானஸ்நானத்தின் பொழுது இயேசுவுக்கு மணம் முடிக்கப்படுகின்றார் (எபே. 5:22-32; ரோமர் 7:4). பின்பு தகுதியான மனைவியாகும்படி கறைதிறையற்ற வழிமுறையில் வாழ்க்கை நடத்துவதே கிறிஸ்தவரின் பணியாகின்றது.

'Ish, ''கணவர்'' என்ற வகையில் தெய்வீகத்துவத்தைப் பற்றிய விளக்கமானது நிச்சயமாகவே வேதாகமத்தில் மிகவும் நேசத்திற்குரிய தாகவும், பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகியவற்றில் பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப் பட்டதாகவும் உள்ளது.

## "இரட்சகர்"

நாடு கடத்தப்பட்டும், பாபிலோனில் கவலையுடனும் சோர்வுடனும் இருந்த யூதர்களுக்கு, தேவன் அவர்களுடைய Moshia' அவர்களுடைய இரட்சகராக இருப்பார் என்று ஏசாயாவின் புத்தகச் சுருளில் இருந்து வாசித்த பொழுது அது எவ்வளவு மெய்சிலிர்க்கச் செய்வதாக இருந்திருக்க வேண்டும்! அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களுடைய சொந்த நாட்டிற்குக் கொண்டு சேர்ப்பதாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்திருந்தார். ஏசா. 43:3-7 பின்வருமாறு கூறுகின்றது:

> நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும்,
> உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்;
> ------------------------------------------------
> தூரத்திலிருந்து என் குமாரரையும்
> பூமியின் கடையாந்தரத்திலிருந்து என் குமாரத்திகளையும்,
> நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப் படைத்து,
> என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும் கொண்டு வா என்பேன்.

*பரலோகத்தின் எல்லாத் திட்டங்களிலும் இயேசுவுடன் ஒன்றா யிருக்கும் பிதாவாகிய தேவன் பாபிலோனில் இருந்த யூதர்களிடம் இயேசுவின் மூலமாக Moshia' என்ற வகையில் தம்முடைய ஊழியத்தைச் செயல் விளைவாக்கினார். அவர் இயேசு என்று அழைக்கப்படுவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே அவர் "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும்" (ஏசா. 49:6) வருவார் என்பது முன்னுரைக்கப்பட்டது. இந்த இயேசு, "பெர்சியா ராஜாவாகிய கோரேசின் ஆவியை ... தன் ராஜ்யமெங்கும் எழுதியனுப்பி விளம்பரம்" (எஸ்றா 1:1-4) பண்ணுவிக்க ஏவின பொழுது யூதர்களைத் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்ப அனுப்பும் ஊழியத்தை நிறைவேற்றினார்.*

*Moshia' என்ற வகையில் இயேசுவின் மூலமாக தேவன் யூதர்களை அந்நிய அடிமைத்தனத்திலிருந்து இரட்சித்தது மட்டும் இன்றி, இன்னும் அதிகமாக, ஆவிக்குரிய வழிமுறையில் இதை அடைந்தது பற்றியும் முன்னு ரைக்கப்பட்டது: அவர் புறஜாதியாரைப் பாவத்தின் இருளில் இருந்து இரட்சிப்பார். தேவன் இயேசுவினிடம், "நீர் பூமியின் கடைசி பரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்" (ஏசா. 49:6) என்று கூறினார். இந்த மகிமையுள்ள திட்டத்தின் நிறைவேறுதலாக, தேவன் அவரை (இயேசுவை) மரியாளிடத்தில் பிறக்கும்படியாக மாம்சத்தை உடுத்துவித்தார். முன்னுரைக்கப்பட்ட அவரது ஊழியத் திட்டத்தின்படி, அவர் இயேசு, இரட்சகர் என்று பெயர் சூட்டப்பட்டார், ஏனெனில் அவர் மக்களின் பாவங்களில் இருந்து அவர்களை இரட்சிப்பதற்காக வந்திருந்தார்.*

*மாம்சத்தில் தெய்வீகத்துவமாக, கிறிஸ்துவில் தேவன் தாம் முன்பு பாபிலோனில் நிறைவு செய்ததைக் காட்டிலும் மிக அதிகமான முக்கியத்துவமுள்ள ஊழியத் திட்டத்திற்காக பெத்லகேமுக்கு வந்தார். Moshia' வாக தேவன் - ஆம் இயேசுவாக - பாவம் நிறைந்த குற்றத்தின் அடிமைத்தனத்திலிருந்து ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக வந்திருந்தார். தெய்வீகத் திட்டம் மற்றும் தீர்க்கதரிசனம் ஆகியவற்றின்படியாக, இரட்சகர் என்ற வகையில் தேவனுடைய ஊழியமானது யூதர்களுக்கு அப்பாலும் சென்றடைவதாகும். கட்டுப்படுத்தப்பட்ட ஊழியம் என்பது அவருக்கு "அற்ப காரியமாகும்" (ஏசா. 49:6), மற்றும் அது தேவனுடைய அன்பின் நீளம் மற்றும் அகலம் மற்றும் ஆழம் மற்றும் உயரம் ஆகியவற்றைக் குறைவாகப் புரிந்து கொண்டதாகும். கொர்நேலியு வீட்டாரிடத்தில் தொடங்கி, ஜாதிகள் அவருடைய "நீதியையும், சகல ராஜாக்களும் [அவருடைய] மகிமையையும்" (ஏசா. 62:2) கண்டு, இரட்சிப்பின் சந்தோஷத்தில் களிகூருவார்கள்.*

*Moshia', இயேசு - இரட்சகர் மற்றும் தெய்வீகத்துவமானவர் - என்ற பெயரானது முகட்டையும் உச்சபட்சக் காட்சியையும் அடைந்துள்ளது என்பதே விளைவாக இருக்கின்றது. இயேசுவின் நாமத்தில் எல்லாருடைய முழங்காலும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்*

*படிக்கும் ஆகும் (பிலி. 2:10, 11ஐக் காணவும்).*

## *முடிவுரை*

*தேவன் தம்முடைய மக்களுக்காகச் செயலாற்றுகின்றார். அவர் தம்முடைய மக்களின் நியாயாதிபதியாக, அவர்களுடைய மேய்ப்பராக, மற்றும் அவர்களுடைய இராஜாவாக இருக்கின்றார். அவருடைய பராமரிப்புக்கும் மற்றும் அக்கறைக்கும் மீட்பர் மற்றும் பிதா என்ற வகையில் அவரது பணிப் பொறுப்புக்கள் ஆதாரமாய் உள்ளன. அவருக்குக் கீழ்ப்படிபவர்களுடன் அவருடைய உறவுமுறையானது ஒரு மனிதருக்கும் அவரது மனைவிக்கும் உள்ள உறவுமுறை போலத் தனிப்பட்ட சொந்த மானதாக உள்ளது; இவ்விதமாக தேவன் தம்மைப் பின்பற்றுபவர்களுக்குக் கணவர் என்று விவரிக்கப் படுகின்றார். மற்றும் அவர், அவர்களுடைய கலக்கங்களில் இருந்து அவர்களை விடுதலையாக்குகின்ற அவர்களின் இரட்சகராய் இருக்கின்றார்.*

*தேவனுடனான நமது அன்றாட நடையில், அவர் ஒருவரே நம்மை வழி நடத்தி முன் செல்லுகின்றவர், நமக்காக அக்கறையாய் இருப்பவர், நம்மைப் பராமரிப்பவர் மற்றும் தொடர்ந்து நம்மைக் கவனித்துக் கொண்டிருப்பவர் என்ற வகையில் நாம் அவரை நோக்கிப் பார்க்க வேண்டும். மெய்யான ஒரே தேவன் நம்முடைய ஒவ்வொரு தேவையையும் சந்திக்க முடியும்.*

---

குறிப்புகள்

*[1]புதிய ஏற்பாட்டு பிதா/தேவன் என்பவர் பழைய ஏற்பாட்டு கர்த்தர்/தேவன் என்பவரைக் காட்டிலும் மிகவும் முன்னேற்றமடைந்தவர் என்ற ஆதாரமற்ற கூற்றானது சங். 68:5; 89:26; 103:13, 14; நீதி. 3:12; ஏசா. 43:6; 63:16; 64:8; எரே. 31:9; மற்றும் ஓசி. 1:10 உள்ளிட்ட பழைய ஏற்பாட்டு வேத வசனப் பகுதிகள் பலவற்றை காணாது விடுகின்றது. [2]நமக்கு அளிப்பதற்கு தேவனுடைய விருப்பத்தைப் பற்றி கூடுதலான பாடத்திற்கு இந்த இதழில் காணவும்.*

## *’EL RO’I: “காண்கின்ற தேவன்”*

*எகிப்திய அடிமைப் பெண்ணான ஆகார், தனது எஜமானியாகிய சாராளிடத்திலிருந்து தப்பி ஓடிய பொழுது தேவன் தன்னைப் பராமரிக்கின்றார் என்று காண்பதில் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். அவள் தான் தனிமையாய் இருக்கிறாள் என்று எண்ணியபோது, அவர் அவளுடைய இழிவான நிலையைக் கண்டார் (ஆதி. 16).*

*தேவன் (அல்லது தேவனைப் போலவே பேசக் கூடிய அவருடைய விசேஷித்த பிரதிநிதியானவர்) பேசிய பொழுது, அவளது திகைப்பும் மகிழ்ச்சியும் அவள் அவரை ’El Ro’i: “காண்கின்ற தேவன்” என்று அழைக்கக் காரணமாயிற்று (ஆதி. 16:13). ‘‘பலமுள்ள ஒருவர்’’ என்ற வகையில் தேவனை விவரிக்க வார்த்தையைப் பயன்படுத்தியதில் தெய்வீகத்தைப் பற்றிய மூன்று உண்மைகளை அவள் உறுதிப்படுத்தினாள்: அவர் பலம் உள்ளவர்; அவர் காண்கின்றார்; மற்றும் அவர் தனிப்பட்ட, அலங்கோலமான தனிநபரைக் கூடப் பராமரிக்கின்றார்.*

## *HAI RO’I: “என்னை காண்கின்ற ஜீவனுள்ளவர்”*

*ஆதி. 16:14ல் ஆகார் தேவனுக்குப் பயன்படுத்திய பெயரில் இலேசான ஒரு மாறுபாட்டைக் காண்கின்றோம்: Hai Ro’i,“என்னைக் காண்கின்ற ஜீவனுள்ளவர்.’’ தேவனுடைய தூதனானவர் ஆகாரிடத்தில் பேசிய பொழுது அவள் சூருக்குச் செல்லும் வழியில் இருந்த நீரூற்றை அடைந்திருந்தாள். இந்த நீரூற்றே ‘‘Hai Ro’iயின் கிணறு’’ என்று பெயரிடப்பட்டதாகத் தோன்றுகின்றது. தெய்வீகத்தைப் பற்றிய ஆகாரின் விவரிப்பில் மிகையான சிந்தனையொன்று கூட்டப்பட்டது: அவள் தன்னைக் கண்ட தேவன் பலம் உள்ளவராய் இருந்தார் என்று வலியுறுத்தி, அந்தக் கிணற்றுக்குப் பெயரிட்டாள், யாரோ ஒருவர், அவர் ஜீவனுள்ள ஒருவர் என்பதைக் கூட்டிக் கொண்டார்.*

# “எங்கள் பிதாவே”

*நம்முடைய தேவனைப் பற்றி வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரிப்புகள் எவ்வளவு தெளிவாக, எவ்வளவு மேன்மையாக மற்றும் மகத்துவமுள்ளவையாக இருக்கின்றன! நான் எனது தாயின் முழங்காலில் சாய்ந்து கொண்டிருக்கையில், தேவனைப் பற்றி எனது இருதயத்தில் ஏற்பட்ட முதல் மனப்பதிவு, அவர் மாபெரும் சிருஷ்டிகர் மற்றும் எல்லா வற்றையும் உண்டாக்கினவர் என்பதாகும், நீங்களும் கூட இது போன்ற மனப் பதிவைப் பெற்றிருக்கலாம். பின்னாட்களில் நான் கீழ்க்கண்டவாறு வாசித்தேன்:*

> *அவர் பர்வதங்களை உருவாக்கினவரும், காற்றைச் சிருஷ்டித்தவரும், மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப் படுத்துகிறவரும், விடியற்காலத்தை அந்தகாரமாக்குகிறவரும், பூமி யினுடைய உயர்ந்த ஸ்தானங்களின் மேல் உலாவுகிறவருமா யிருக்கிறார்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமம் (ஆமோஸ் 4:13).*

*அவருடைய மிக மேன்மையான வல்லமைகள்/திறன்கள் நம்மைக் கவருகின்றன: “எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக் கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும் ...” (ரோமர் 1:20). இப்படிப்பட்ட ஒரு தேவனுக்கு முன்னால் நாம் வியப்பில் மூழ்கி நிற்கின்றோம்.*

*தேவன் படைப்பவராயிருப்பதுடன் கூட, “யாவருக்கும் நியாயாதி பதி”(எபி. 12:23)யாகவும் இருக்கின்றார் என்பது எனது தாயும் பின்பு வேதாகமமும் எனக்குப் போதித்த இன்னொரு தொடக்க கால மனப் பதிவு ஆகும். ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார் (பிர. 12:14). ஆகையால், கர்த்தருக்குப் பயப்படுதலையும் (2 கொரி. 5:11) மற்றும் நியாயத்தீர்ப்பின் உறுதிப்பாட்டையும் நாம் கேள்விப் பட்டிருப்பதினால், மனிதர்களாகிய நாம் அவருக்கு முன்பாகப் பயபக்தியுடன் நிற்கின்றோம்.*

## நாம் அவருக்கு உறவினராய் இருக்கின்றோம்

*இருப்பினும், தேவன் எல்லையற்ற வகையில் வல்லமை பெற்றுள்ளார் என்பதோ, எல்லாருக்கும் நியாயாதிபதியாய் இருக்கின்றார் என்பதோ அல்ல, ஆனால் அவர் நமது பிதாவாய் இருக்கின்றார் என்பதே மிகவும்*

*பிரியமான மற்றும் விலையேறிய மனப்பதிவாக உள்ளது. அவர் நமது பிதாவாய் இருக்கிறாரென்றால், நாம் அவருக்கு உறவினராய் இருக்கின்றோம், மற்றும் அவர் நம்மீது அக்கறை கொண்டு பராமரிக்கின்றார். விலங்குகளல்ல, மனிதனே தேவ சாயலாகப் படைக்கப்பட்டான் (யாக். 3:9). தேவன் நம் மீது கொண்ட ஆர்வத்தினால், அவர் கிறிஸ்துவினிடத்தில், "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி. 1:26அ) என்று கூறினார். உணர்வைத் தூண்டும் இந்தச் சிந்தனையை, கீழான விலங்கினத்தின் சாயலில் மனிதன் உண்டாக்கப்பட்டான் என்று நினைக்கும் பரிணாமக் கொள்கையாளர்கள் மகிழ்வுடன் அனுபவிக்க முடியாது. வேதாகமத்தை நம்புபவர்கள், மனிதன் "தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக" (சங். 8:5; ASV) உண்டாக்கப்பட்டான் என்பதிலும் மற்றும் அவன் "ஆவிகளின் பிதாவுக்கு" (எபி. 12:9) மகனாய் இருக்கின்றான் என்பதிலும் பெரும் மகிழ்ச்சியடைகின்றனர். படைப்பினால் எல்லா மனிதர்களும் தேவனுடைய குமாரர்களாய் இருக்கின்றனர், மற்றும் மனித குலம் அனைத்திற்கும் ஒரே தகப்பனே இருக்கின்றார் (ஆதி. 6:2; லூக். 3:38; அப். 17:26).*

*எனவே, நமது முன்னோர் கீழிருந்து வந்தவரல்ல ஆனால் பரலோகத்தில் இருக்கிறவர் என்ற சிந்தனையானது மகிழ்ச்சியை உண்டாக்கக் கூடியதாக உள்ளது. இருந்த போதிலும், படைப்பினால் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறோம் என்பதில் மட்டும் மகிழ்ச்சி கொண்டு, சுவிசேஷத்தினால் ஒருபொழுதும் தேவனுடைய பிள்ளையாகாத ஒருவர் கீழான மிருகங்களைவிடவும் மிக மோசமான முடிவைப் பெறுகின்றார். கீழான விலங்குகள் மரிக்கின்றன மற்றும் இல்லாமல் போகின்றன; ஆனால் ஒருக்காலும் மரிக்கக் கூடாத ஒன்று மனிதனில் இருக்கிறது, அது நித்திய அக்கினியில் இருக்கக் கூடிய அபாயம் உள்ளது. தேவனுடைய சாயலைப் பெற்றுக் கொள்ளும் சிலாக்கியம் கொண்டிருந்தும் கூட, தமது பிதாவுக்குக் கீழ்ப்படிய மறுப்பவர் ஒருபொழுதும் பிறவாதிருந்தால் அவருக்கு நலமாய் இருக்கும். சரியாய்ச் சொல்வதென்றால், ஒரு மனிதர் இரண்டு கருத்தறிவில் தேவனுடைய பிள்ளையாய் இருக்க வேண்டும்: சிருஷ்டி மற்றும் புது சிருஷ்டி. பூமிக்குரிய பெற்றோருக்கு ஒரு குழந்தையாக அவர் பிறக்கின்றார், ஆனால் அவர் மறுபடியும் பிறக்க வேண்டும் (யோவா. 3:3). அவர் கர்த்தராகிய கிறிஸ்துவுக்குள் ஒரு "புது சிருஷ்டி"யாக வேண்டும் (2 கொரி. 5:17). நமது கர்த்தர், "... ஒருவன்[1] ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்" என்று "மெய்யாகவே மெய்யாகவே சொல்லுகிறேன்" என்று கூறினார் (யோவா. 3:5).*

## நாம் அவருக்கு விலையேறப் பெற்றவர்களாய் இருக்கின்றோம்

*நீங்கள் உங்கள் பிதாவைப் பற்றிச் சிந்திக்கின்ற பொழுது உங்கள் இருதயத்தில் எழும் உணர்வை இயேசு அறிகின்றார், மற்றும் அவர் தம்முடைய சீஷர்கள் தேவனை அந்த வகையிலேயே சிந்திக்க வேண்டும்*

*என்று விரும்பினார். பூமிக்குரிய ஒரு தகப்பன் தனது பிள்ளையின் வாய்க்கு உணவு கொடுக்க (எதையும்) தியாகம் செய்வாராகையால், "... பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" (மத். 7:11). அவர் எல்லையற்றவராயிருப்பதால் என்னை விட அதிகமாய் என்னைப் பற்றி அறிகின்றார், என்னுடைய தலையில் உள்ள ஒவ்வொரு முடியையும் எண்ணிக் கணக்கிட்டுள்ளார் (லூக். 12:7). ஒரு குருவியைக் கூட ஒருக்காலும் மறக்காதிருக்கிற அவர், "... பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்'' (லூக். 12:7) என்று தம்முடைய பிள்ளைகளுக்கு உறுதியளிக்கின்றார்.*

*ஏழு பிள்ளைகளைப் பெற்ற தாய் ஒருத்தி, "என்னுடைய ஒவ்வொரு பிள்ளையும் மற்ற எல்லாப் பிள்ளைகளையும் போலவே விலையேறப் பெற்றதேயாகும்" என்று கூறினாள். மனிதப் பெற்றோர் அன்புகூருகின்றவர்களாயிருக்கின்றனர், ஆனால் முடிவற்ற பிதா எவ்வளவு அதிகமாய் அன்புகூருகின்றவராய் இருக்கின்றார்! அவர் என்னை ஆவலுடன் கவனிக்கின்றார், அதே வேளையில் உலகத்தின் மறுபகுதியிலிருக்கின்ற ஒரு நபர் மீதும் அவர் அதே அளவுக்கு அக்கறையுள்ளவராய் இருக்கின்றார். அவர் இப்பொழுது வாழ்கின்ற எண்ணூறு கோடிக்கும் அதிகமான மக்களுடைய பெயர்களையும், மற்றும் ஆவிக்குரிய உலகத்திலுள்ள கோடிக் கணக்கான மக்களின் பெயர்களையும் அவர் அறிகின்றார். பலிபீடத்தின் கீழிருந்து (உபத்திரவத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள்[2]) தங்கள் மீட்பருக்காக (வெளி. 6:9, 10) ஆத்துமாக்கள் கதறுகின்றதை அவர் கேட்கின்றார். தேவனுடைய சாயலாக உள்ள, ஆனாலும் இன்னும் மாம்சத்தில் உள்ள எண்ணூறு கோடிக்கும் அதிகமானவர்கள் ஒரே வேளையில் அவரை நோக்கிக் கதற முடியும்; அவர்கள் யாவரையும் கவனித்துக் கேட்பது அவருக்குப் பாரமானதல்ல. இல்லை, ஒரே ஒரு நபர்தான் இருக்கின்றார் என்பது போன்ற வகையில் நம் ஒவ்வொருவரையும் அவர் பொறுமையுடனும், இருதயத்தில் ஆர்வத்துடனும் கேட்கின்றார்.*

## *நாம் அவருக்குப் பொறுப்புடையவர்களாய் இருக்கின்றோம்*

*உண்மையற்று ஜெபிக்கின்ற எவரொருவருடைய ஜெபத்தையும் பிதாவானவர் கேட்க மாட்டார். தேவனுடைய நியாயப்பிரமாணத்திலிருந்து திரும்புகின்ற ஒருவரால் ஏறெடுக்கப்படும் ஜெபமும் கூட வெறுப்பூட்டுவதாகவும், அவருவருக்கத்தக்கதாகவும் உள்ளது (நீதி. 28:9). கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது (1 பேது. 3:12). நீதியைச் செய்ய விரும்புகின்றவர்கள் இருதயம் சோர்ந்து போகாது (லூக். 18:1) தம்மிடத்தில் பேச வேண்டும் என்று அவர் பரிந்து கூறுகின்றார்.*

*பூமிக்குரிய தகப்பனும், பரலோக பிதாவும் ஆகிய இருவருமே, தங்கள் பிள்ளை "நன்றி" என்று கூறுவதற்காக நிற்கும் பொழுது பிரியப்படுகின்றனர். அவருடன் பேசாமல் நான் எனது அறையை விட்டுச் செல்லும்போது பிதாவினுடைய மாபெரும் இருதயம் வருத்தப்படுகின்றது, மற்றும் நான் உறுதியான நம்பிக்கையுடன் அவரைச் சேர்த்துக் கொள்ளாமலும், அவருடைய அருளிரக்கப் பராமரிப்பை மன்றாடாமலும் அன்றாட நடவடிக்கைகளை நாணமற்ற மற்றும் எண்ணமற்ற வகையில் செய்ய முயற்சிக்கும் பொழுது அவருடைய இருதயம் புண்படுகின்றது. உதவுகின்ற உங்கள் பிதாவுடன் தனிப்பட்ட முறையில் பேசாமல் நீங்கள் செய்ய வேண்டியவைகளைச் செய்து ஒரு நாள் முழுவதும் வாழ முடியாது என்று இயேசுவைப் போலவே (மாற். 1:35) நீங்களும் நினைத்தால், அவர் பிரியப்படுகின்றார். நீங்கள் பாலைவனமான ஓரிடத்திற்கோ அல்லது ஒரு தோட்டத்திற்கோ சென்றிருக்கும் பொழுது, ''ரோஜாக்களின் மீது இன்னமும் பனித்துளி இருக்கும் பொழுதே''[3] உங்கள் தேவனுடன் அந்தரங்கத்தில் பேசும் பொழுது நீங்கள் அன்றைய நாளுக்கான பலத்தைப் பெறுவீர்கள், நீங்கள் சாத்தானுடைய சுலபமான இலக்காக இருக்க மாட்டீர்கள். "... உன் நாட்களுக்குத் தக்கதாய் உன் பெலனும் இருக்கும்" (உபா. 33:25). தானியேலைப் போல நீங்களும் நாளின் மத்தியானப் பொழுதில் தெய்வீகத் துணைவருடன் உன்னதங்களில் அமருவதற்கு நேரம் எடுத்துக் கொண்டால், உங்கள் அன்றாட உழைப்புகள் தொடருகையில் நீங்கள் அசதியற்றும் அதிக பொறுமையாகவும் இருப்பீர்கள். மாலை/இரவு நேரத்தில் உங்கள் உணவு மற்றும் படுக்கைக்காக, உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுக்காக, இரக்கங்கள் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக, மன்னிப்பு மற்றும் சுத்திகரித்தல் ஆகியவற்றிற்காக, நன்றியை வெளிப் படுத்தத் தவறாதீர்கள்; இரட்சிப்பின் சந்தோஷமானது உங்களுக்கும் மறு சீரமைக்கப்படும், உங்கள் உறக்கமானது ஆழமானதாகவும், அதிக அமைதி நிறைந்ததாகவும் இருக்கும்.*

## நாம் கூறுவதை கேட்பவர்கள் அவருடன் இருக்கின்றார்கள்

*நீங்கள் ஒரு பிதாவை உடையவராய் இருக்கின்றீர்கள். அவர் உங்களுடைய பிதாவாயிருக்கின்றார். வானத்தையும் பூமியையும் உடையவரான, பரலோக பிதாவான அதி உன்னத தேவனுடன் நேரடியாகப் பேசும் சிலாக்கியத்தை மனிதர்களாகிய நாம் பெற்றுள்ளோம். வேறு யாரிடத்திலாவது ஜெபிக்கும்படி நாம் ஏன் சோதிக்கப்பட வேண்டும்? மரியாள் மற்றும் புனிதர்கள் எனப்படுபவர்கள் ஆகியோரிடத்தில் ஜெபிக்கும்படி ஒன்றுமறியாத பல லட்சக்கணக்கான பிள்ளைகள் போதிக்கப்படுகின்றனர் என்பது கவலைக்குரியதாக உள்ளது. தூதர்களுக் குக் கூட வரம்பு மீறிய மரியாதை கொடுக்கப்படலாகாது (மத். 4:10; கொலோ. 2:18; வெளி. 22:8, 9). சரீரத்திற்குள்ளோ சரீரத்திற்குப் புறம்போ இருக்கும் மனிதர்களுக்கும் அப்படியே (அப். 10:25, 26; 14:15). மரியாளிடம்*

ஜெபித்து, மரியாளை ஆராதித்து சேவிக்கின்றவர்கள் “சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவிக்கின்றார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்” (ரோமர் 1:25). ஒரு மனிதர் தம் நண்பருடன் பேசுவது போல நாம் பிதாவினிடத்தில் பேசலாம் என்பதற்காகவும், பரிசுத்த ஆவியானவர் (ரோமர் 8:26, 27) மற்றும் இயேசு (1 யோவா. 2:1) ஆகியோர் நமக்காகப் பரிந்து பேசும் நிலைக்காகவும் நாம் அகம் மகிழுவோமாக.

தேவனை “நீர்” (Thou) என்று அழைப்பதற்குப் பதில் “நீங்கள்” (You) என்று நாம் அழைக்கும் பொழுது, அவருடன் நாம் மிகவும் நெருங்கி யிருப்பதாகச் சிலர் கூறியுள்ளனர். “நீர்” (Thou) என்பது காலத்தினால் முதுமையடைந்துள்ளதால் மட்டுமே அதிகம் உயர்வானதாக உள்ளது; முறையான மொழியானது சாதாரண வார்த்தைகளை விட அதிகமான மதிப்பைக் காண்பிப்பதில்லை. இல்லை, பாவம் இவ்வுலகில் நுழைவதற்கு முன்பு ஏதேனின் மரங்களின் கிளைகளின் கீழாக ஆதாமுடன் தேவன் நடை பயின்ற வகையில் நீங்கள் பிதாவுடன் நெருங்கியிருக்க முடியாது (இது ஆதி. 3:8அ - வில் மறைவான கருத்தாய் உள்ளது). ஒரு மனிதர் தேவனிடத்தில் மிக அதிகம் மரியாதைக் குறைவுடன் இருக்க முடியும், மற்றும் அதற்காக அவர் ஆக்கினைத் தீர்ப்பு அடைய வேண்டும். இருப்பினும், நெருங்கியிருத்தல் என்ற கருத்தில், நாம் தேவனுடன் நெருக்கமாயிருக்க வேண்டும், ஏனெனில் நாம் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்டோம். நாம் நமது ஆழமான சிந்தனைகளுடன் அவரிடத்தில் செல்ல முடியும்; அவர் நம்மைப் பற்றிய ஒவ்வொன்றையும் அறிகின்றார். நமது வாழ்வானது அவரது இரக்கத்தைத் துதித்தல் மற்றும் மகிமைப் படுத்துதல் ஆகியவற்றிற்காகவே இருக்க வேண்டும்.

## அவருடைய பராமரிப்பும் அக்கறையும் நமக்கு உண்டு.

வாழ்வில் என்னுடைய பங்கிற்காக நான் முறுமுறுத்தால் அல்லது எதிர்ப்புகளைப் பற்றி முறையிட்டால், யோசேப்பு தவறாக நடத்தப்பட்ட வேளையில் யோசேப்பின் மதிப்புமிக்க நடக்கையானது என்னை வெட்கம் அடையும் உணர்வைப் பெறச் செய்ய வேண்டும். அவருக்கு நடந்த எல்லாவற்றிலும் பிதாவினுடைய கரமானது இருந்தது. யோசேப்புக்கும் எனக்கும் தகப்பனானவர் தாம் விசாரிக்கிறவராயிருக்கிறபடியால் என்னு டைய கவலைகள் எல்லாவற்றையும் தம்மீது வைத்து விடும்படி வேண்டுகின்றார் (1 பேது. 5:7). நான் குறைபாடு கூறும்படி சோதிக்கப் படுகின்ற பொழுது, அவர் ஒரு குமாரன் சில வேளைகளில் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் என்பதை “நீ மறந்து விட்டாய்” என்று மென்மை யாகக் கடிந்து கொள்ளுகின்றார் (எபி. 12:5ஐக் காணவும்). பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் இரண்டிலும் அவர் என்னிடத்தில், “என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும் போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில்

*அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" (எபி. 12:5, 6அ) என்று நான் புரிந்து கொள்ளும்படி வேண்டுகின்றார்.*

*எனது பூமிக்குரிய தகப்பனிடத்தில் நான் (சில வேளைகளில் கண்ணீரு டன்) கேட்டு அவர் அதை எனக்குத் தந்திராத வேளைகளும் இருந்தன. அவைகள் எனக்கு நல்லவையல்ல என்று அவர் அறிந்தார். சில வேளைகளில், பரலோகத்தின் பிதாவும் கூட என்னை அவர் நேசிப்பதால் நான் கெஞ்சு கின்ற சில விஷயங்களை எனக்குத் தர மறுக்கின்றார். எது நல்லது என்று அவருக்குத் தெரியும். நான் முதிர்ந்த வயதை அடையும் பொழுதும் கூட, அவருக்கு முன்பாக நான் இன்னமும் இளைஞனாக இருக்கின்றேன். நாம் அவருடைய கட்டளைகளைக் காத்து அவரது பார்வைக்குப் பிரிய மானதைச் செய்து வருகின்ற வரைக்கும் என்னுடைய மற்றும் உங்களுடைய ஜெபங்களுக்கு மிகச் சிறந்த வழிமுறையில் பதில் அளிக்க அவர் ஒருக்காலும் தவறுவதில்லை (1 யோவா. 3:22). ஒரு விஷயத்தைப் பற்றி நீங்கள் மீண்டும் மீண்டும் ஜெபம் செய்து ஆனால் அது மறுக்கப்பட்டிருந்தால், பவுல் தமது சரீரத்தில் இருந்த முள்ளை நீக்கும்படி மறுபடி மறுபடி ஜெபித்ததைச் சிந்தித்துப் பாருங்கள் (2 கொரி. 12:8, 9). விசுவாசத்தின் வசனமானது தேவன் எந்த நன்மையையும் வழங்காதிரார் (சங். 84:11) என்று உங்களுக்கு உறுதியளிக்கின்றது. உங்கள் வேண்டுகோளுக்கு அவருடைய மறுப்பானது ஏதாவதொரு விதத்தில் நன்மைக் கேதுவாகவே இருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.*

*நீங்கள் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்க் கிரியை செய்ய வல்லமையுள்ளவரிடத்தில் (எபே. 3:20) இயேசுவைப் போல "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி"(எபி. 5:7)னால், நீங்கள் விரும்பிய சில விஷயங்கள் மறுக்கப் படுவதால் நீங்கள் தேறுதலற்றவர்களாய் இருக்கும்படி அவர் விரும்பு வதில்லை. நீங்கள் கேட்கின்ற விஷயங்கள் மற்றவர்களின் நன்மைக்காக இல்லாதிருக்கலாம். கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது (2 நாளா. 16:9), மற்றும் அவைகள் நித்தியத்திற்குள்ளும் முன்னோக்குகின்றன. இயேசுவின் பிதா அவர் (இயேசு) துன்புறுவதைக் காண விரும்பவில்லை, ஆனால் அவருடைய (இயேசுவின்) ஜெபம் மறுக்கப்பட்டது. இயேசுவின் பிதா உங்களுக்கும் பிதாவாய் இருக்கின்றார், அவர் நீங்கள் பிறவாதிருக்கும் முன்பே உங்களைக் கண்டார். தேவன் உங்களையும் என்னையும் கண்டதால், நம் மீது அக்கறை கொண்டுள்ளதால், அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட் படுத்தினார் (ஏசா. 53:10ஐக் காணவும்). இவ்விதமாக, தம்முடைய பிதாவை எப்பொழுதுமே பிரியப்படுத்துகின்ற ஒருவருடைய (யோவா. 8:29) ஊக்கமான மற்றும் பரிதபிக்கப்படத்தக்க ஜெபமானது கவனிக்கபடாமலிருந்தது. நீங்கள் மீண்டும் மீண்டும் விடுத்த வேண்டுகோளைப் பிதாவானவர் ஏற்காதிருந்தால், நீங்கள் அவருடைய ஒரே குமாரனைக் காட்டிலும் சிறந்தவர் அல்ல என்பதை நினைவுகூருங்கள்.*

## அவரது உண்மைத்தன்மை நமக்குண்டு

*நீங்கள் பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக் கொள்ள வல்லவராய் உள்ள (2 தீமோ. 1:12) ஒரு சர்வ வல்லமை நிறைந்த பிதாவை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள். இப்படிப் பட்டதொரு நித்திய ஆசீர்வாதத்தை உறுதிப்படுத்துவதற்காக, நீங்கள் அவரில் அன்புகூருகின்ற வரைக்கும் சகலத்தையும் நன்மைக்கேதுவாகவே அவர் நடத்துகின்றார் (ரோமர் 8:28). அவர் எப்படி உங்களுடைய வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளையும் கண்காணித்து சகலத்தையும் எவ்விதத்திலும் நன்மைக்கேதுவாக நடத்துகின்றார்? இந்தக் கேள்விக்கான பதிலானது உங்கள் அக்கறைக்குரியதல்ல. விசுவாசித்து, சந்தேகப்படாதிருப்பதே உங்கள் அக்கறைக்குரியதாகும். அவர் தாம் கூறியதைச் செய்வார். தேவன் உண்மையுள்ளவராய் இருக்கின்றார். அவிசுவாசத்தின் மூலம் தேவனுடைய வாக்குத்தத்தம் குறித்து உறுதியற்று இருக்காதீர்கள், ஆனால் விசுவாசத்தில் பலப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கு மகிமையைச் செலுத்துங்கள் (ரோமர் 4:20).*

*இடர்ப்பாடுகளில் உங்களின் பங்கை விட அதிகமாய் நீங்கள் பெற்றிருப்பதாய்க் காணும் பொழுதும், எதிர்ப்புக்களின் ஆண்டுகள் குவிந்து இருந்தாலும், மரண பரியந்தம் உண்மையாயிருக்கும்படி முடிவு வரை விசுவாசத்தில் நம்பிக்கையாயிருங்கள்.*

## அவரது இரட்சிப்பு நமக்குண்டு

*சகலமும் நன்மைக்கேதுவாக நடத்துவதில் அவர் உங்களுக்குத் தனிப்பட்ட விதத்தில் (சொந்தமான மற்றும் விசேஷித்த அருளிரக்கத்தை) அருளுவதுடன் கூட, சாத்தான் மிகவும் நெருங்க முயற்சிக்கின்ற பொழுது அவர் உங்கள் கரத்தைப் பற்றிக் கொள்ளுகின்றார். உங்கள் திராணிக்கு மிஞ்சி நீங்கள் சோதிக்கப்படுவதை அவர் அனுமதிக்க மாட்டார், ஆனால் உங்கள் பாதையில் உள்ள சோதனைகளுக்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கை அவர் உறுதிப்படுத்துவார் (1 கொரி. 10:13).*

*உங்கள் பிதா எல்லாரைக் காட்டிலும் மகா பெரியவராயிருக்கின்றார், மனிதரோ அல்லது பிசாசோ யாராயிருப்பினும் உங்களை அவரது கரத்திலிருந்து பறித்துக் கொள்ள முடியாது (யோவா. 10:28, 29). நல்ல பிதாவானவர் உங்களை என்றென்றைக்கும் கைவிடும்படியாக நீங்கள் செயல்படக் கூடும் (1 நாளா. 28:9), ஆனால் அது உங்களுடைய சொந்தத் தவறாகவே இருக்கும். நீங்கள் பரலோகம் செல்ல விரும்பினால் அவர் உங்களை விழுந்து போவதில் இருந்து காக்க வல்லவராகவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவராய் இருக்கின்றார் (யூதா 24). இடது புறம் நிறுத்தப்பட்டு என்றென்றும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டவர்கள் தேவனை நோக்கித் தங்கள் விரல்களை நீட்டி "நீரே குற்றம் சாட்டப்பட வேண்டியவர்" என்று கூற முடியாதவர்களாய் இருப்பார்கள். இல்லை, நாம் தவறு செய்கின்ற போது அது அவரைப்*

*புண்படுத்துகின்றது, அவர் ஒரு நல்ல மற்றும் நீதியுள்ள தேவன் என்ற வகையில் நம்மை மீட்கவும் அவருடன் இருப்பதற்கு அனுமதிக்கவும் வேண்டிய யாவற்றையும் செய்திருக்கின்றார்.*

> *கர்த்தராகிய ஆண்டவர் ... நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாக வேண்டும்? என்கிறார் (எசே. 33:11).*

*எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றுதான் தேவன் சித்தம் கொண்டுள்ளார் (1 தீமோ. 2:4). ஒருவரும் கெட்டுப் போவது அவருடைய சித்தமல்ல (2 பேது. 3:9). பூமியில் உள்ள தகப்பன் தன் பிள்ளைகளின் மேல் பரிவிரக்கம் உள்ளவராய் இருப்பது போல், பரலோகத்தின் பிதாவும் தமக்குப் பயப்படுகின்றவர்கள் மேல் பரிவிரக்கம் உள்ளவராய் இருக்கின்றார், ஏனெனில் அவர் நமது பலவீனங்களை அறிகின்றார், மற்றும் நாம் மண்ணென்று அவர் நினைவுகூருகின்றார் (சங். 103:13-14). அவர் ''மிகுந்த உருக்கமும் இரக்கமும்'' (யாக். 5:11) உள்ளவராகவும் "கிருபையுள்ளவராக, கோபம் கொள்ளத் தாமதிப்பவராக மற்றும் அன்பிரக்கத்தில் தாராளமானவராக''(சங். 103:8-9)வும் இருக்கின்றார்.*

## *முடிவுரை*

*அவருடைய கிருபையினால் நாம் அவருடைய குடும்பத்திற்குள் வரவும், அவருடைய ஆவியானவரைப் பெறவும் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்கள் செய்ய முடியாத வழிமுறையில் ''எங்கள் பிதாவே'' என்று ஜெபிக்கவும் முடியும். கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுள்ளவர்கள் மட்டுமே "அப்பா! பிதாவே!" என்று உண்மையாய்க் கூற முடியும் (கலா. 4:6). நீங்கள் உண்மையாய் ''அப்பா! பிதாவே!'' என்று கூற முடியுமென்றால், இனி நீங்கள் பிசாசின் பிள்ளையாகவோ மற்றும் பாவத்தின் அடிமையாகவோ இருப்பதில்லை, " புத்திரனாயிருக்கிறாய்; புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரருமாய்'' (கலா. 4:7) இருக்கிறாய். இளவரசர் ஒருவர் எழுச்சி மிக்க அடிவைப்புடனும் இருதயத்தின் மகிழ்ச்சியுடனும் நடக்க முடியும், ஆனால் இராஜாவினுடைய பிள்ளை என்ற வகையில் நீங்கள் இன்னும் எவ்வளவு அதிகம் மகிழ்ச்சியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்! "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்!" (1 யோவா. 3:1).*

*நீங்கள் ஜெபிக்கும் பொழுது, "எங்கள் பிதாவே" என்று கூறுங்கள்.*

*குறிப்புகள்*

*[1]"ஒரு மனிதர்" இயல்பான பிறப்பினால் ஏற்கனவே தேவனுடைய பிள்ளை யாகவே இருக்கின்றார், ஆனால் அவ்வகையான உறவுமுறை போதுமானதாக இல்லாதிருக்கின்றது. [2]"பலிபீடத்தின் கீழ்" உள்ள ஆத்துமாக்களின் நிலைமையானது (வெளி. 6:9, 10), டேவிட் ரோப்பர் அவர்களின் "உங்களிடத்தில் கேள்விகள் உள்ளனவா? தேவனிடத்தில் (அவற்றிற்குப்) பதில்கள் உள்ளன!" என்ற கட்டுரையில்* (Truth for Today [May 1999 *ஆங்கில இதழில்*]: 11-17) *விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.*
[3]C. Austin Miles, "I Come to the Garden Alone," *Songs of Faith and Praise*, comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1996).

# ''பரமண்டலங்களிலிருக்கிற''

*"வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி" (ஏசா. 66:1) என்பது தேவனுடைய அறிவிப்பாக உள்ளது. இப்பொழுது நாம் பெற்றுள்ள வசிப்பிடமானது தேவனுடைய பாதபடியாக மட்டுமே உள்ளது, அவரது பார்வையில் நாம் வெட்டுக்கிளிகளைப் போலச் சிறியவர்களாய் இருக்கின்றோம் (ஏசா. 40:22). இயல்பான, சாதாரணமான மனிதர் தேவனுடைய ஆழமான விஷயங்களைப் பற்றி அறிய முடியாது (1 கொரி. 2:10, 14). "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" (மத். 6:9) என்று இயேசு கூறிய பொழுது அவர் அர்த்தப்படுத்திய எல்லாவற்றையும் நாம் அறிய இயலாது. அவைகளில் இருக்கின்ற மற்றும் இருக்கப் போகின்ற பெரும்பாலானவை நமக்கு அறியச் செய்யப்படாமல் உள்ளது (1 யோவா. 3:2).*

*இருந்த போதிலும், ஏவப்பட்ட மனிதர்களின் மூலமாகத் தேவனுடைய சில விஷயங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக, பரிசுத்த எழுத்துக்களின் (தேவன் ஏவியவை) போதனைகள் மூலமாக, நாம் இந்த அண்டம் பற்றி முற்றிலும் அறியாமையுள்ளவர்களாய் இருக்கத் தேவையில்லை. தேவன் இருக்கின்ற இடமான பரலோகத்தைப் பற்றிய அறிதல்கள் சிலவும் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் நாம், இனி வரப் போகும் உலகத்தின் வல்லமைகளைக் கூட (முன்) சுவைக்க முடியும் (எபி. 6:5).*

## பல்வேறு வானங்கள்

*வேதாகமம் பல்வேறு வானங்களைப் பற்றிப் பேசுகின்றது, ஆனால் ''ஏழு வானங்கள்'' என்ற விளக்கச் சொற்றொடரானது மனித இலக்கியத்திலேயே தொடங்கிற்று. வேதவசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள வானங்களில் ஒன்று, பறவைகள் பறக்கும் இடமாகும்: "... பூமியின்மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறக்கும் பறவைகளையும் ..." (ஆதி. 1:20). பறவைகள் மற்றும் மேகங்கள் மற்றும் காற்று ஆகியவற்றின் வானத்திற்குத் தொலைதூரத்திற்கும் அப்பால், எண்ணற்ற விண்மீன்கள், சூரியன் மற்றும் சந்திரன் ஆகியவை இருக்கின்ற இடம் உள்ளது. அந்தப் பகுதியும் கூட வேதவசனங்களில் வானம் என்றே அழைக்கப்படுகின்றது: "வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக் கடவது" (ஆதி. 1:14).*

*பறவைகளின் வானம் முதலாம் வானம் என்றும், விண்மீன்கள் உள்ள இடம் இரண்டாம் வானம் என்றும் அழைக்கப்பட முடியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. இருப்பினும், பரதீசு என்று அழைக்கப்படுகின்ற மூன்றாம் வானத்தைப் பற்றி நாம் அறியாதவர்களாயிருக்கும்படிக்கு தேவன் விட்டுவிட வில்லை. பவுல் சென்றது போலவே (2 கொரி. 12:2, 4) இயேசுவும்*

*சிலுவையில் தொங்கின கள்ளனும் அந்த இடத்திற்கே சென்றனர் (லூக். 23:43) மற்றும் பவுலும் இயேசுவும் மூன்றாம் வானத்திலிருந்து இந்த பூமிக்கு மீண்டும் திரும்பி வந்தனர். அவர்கள் பரதீசிற்குச் சென்றிருந்த பொழுதிலும் பிதாவானவரின் வாழ்விடத்திற்குச் சென்றிருந்ததில்லை; ஏனெனில் அதன் பிறகு இயேசு மூன்றாம் வானத்திற்குச் சென்று வந்த பிறகும் கூட, "நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை" (யோவா. 20:17) என்று கூறினார்.*

## தேவனுடைய பரமண்டலத்தின் இருப்பு நிலை

*மத நம்பிக்கையற்றவர்கள், தேவனுடைய அரியணையின் பரமண்டலத்தை வானவியல் அறிஞர்கள் கண்டறிய இயலாதவர்களாய் உள்ளனர் என்ற அற்ப மகிழ்வுடன் கூறி, இது (பரமண்டலம்) கற்பனைக் கதையாகவே இருக்கின்றது என்பதை நிரூபிக்கின்றது என்று கூறுகின்றனர். அவர்கள் அதே பொய்க் கோட்பாட்டைக் கொண்டு உயிர் இருப்பதில்லை என்று "நிரூபிக்க" முடியும், ஏனெனில் உயிர் என்பது எவ்விடத்தில் உள்ளது என்பதைத் திட்டவட்டமாக காண்பிக்கவோ அல்லது விளக்கப்படுத்தவோ கூட முடியாது. எல்லைக்குட்பட்ட தொலைநோக்கிகள் எல்லையற்ற வாழ்விடத்தைக் கண்டறிய முடியவில்லை என்பதற்காக பரலோகத்தின் இருப்பு நிலையானது சந்தேகிக்கப்பட வேண்டுமா? பொருளினால் ஆன உருப்பெருக்கிகள் பொருளினால் உண்டாகாத பரமண்டலத்தை, அது அந்த உருப்பெருக்கியின் நோக்கெல்லைக்குள் இருந்தாலும், அதைக் கண்ணோக்க முடியாது. "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவா. 4:24); "ஒரு ஆவிக்கு எலும்புகளும் மாம்சமும் உண்டாயிராதே'' (லூக். 24:39), ஆனால் "காணப்படாத" (கொலோ. 1:15)தாக இருக்கும்.*

*மேலும், பரந்துபட்ட இன்னும் பரந்துபட்ட அண்டத்தைப் பற்றி வானவியலறிஞர்களின் தொடர்ந்த கண்டுபிடிப்புகளில் மனிதர்கள் என்ற வகையில் நாம் திகைப்படைகையில், மத நம்பிக்கையற்றவர்கள், "நாங்கள் ஒன்றும் பேசாதிருப்போம், ஏனெனில் தொலைநோக்கிகளுக்கப்பால் இன்னமும் என்ன இருக்கிறதென்று நாம் அறியோம், நமது இயல்பான வான வெளிக்கு அப்பால் இருப்பவற்றில் மிகக் குறைவானதையே நாம் அறிகின்றோம்'' என்று கூறத் தாழ்மையாய் இருக்க வேண்டும். மத நம்பிக்கையற்றவர்கள் தங்களின் சுய இறுமாப்பினால் இழுத்துச் செல்லப்பட்டவர்களாகவோ அல்லது (தங்களைப் பற்றி) உயர்வான சிந்தை கொண்டவர்களாகவோ இல்லாதிருப்பார்களாக. அவர்களுடைய ஆவிகள் யோபுவின் ஆவியைப் போல நொறுங்கட்டும்; "ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன் ... ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப் படுகிறேன்" (யோபு 42:3ஆ-6).*

*பரமண்டலம் இருப்பதில்லை என்று உறுதிப்படுத்துதலானது நமது அண்டத்தைப் பற்றி முழு அறிவு நமக்கு உண்டு என்பதை மட்டுமின்றி நாம் வாழும் இக்கோளத்திற்கு அப்பால் உள்ளவற்றைப் பற்றிய முழு அறிவும்*

நமக்கு உண்டு என்பதையும் ஆராயாது ஏற்றுக் கொள்கின்றது. இருப்பினும், இப்படிப்பட்ட ஒரு உறுதிப்பாடும் கூட எல்லையற்ற அறிவு உண்டு என்பதையே ஆராயாது ஏற்றுக் கொள்கின்றது. பரமண்டலத்தின் இருப்பு நிலையை மறுக்க வேண்டுமென்றால் ஒருவர் எல்லாம் அறிந்தவராக இருக்க வேண்டும், ஏனெனில் ஒரு மனிதர் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் அறியாதிருப்பினும் அவர் அறியாத அவ்விஷயம் பரமண்டலம் இருக்கின்றது என்பதாயிருக்கலாம். மேலும், பரமண்டலத்தின் உண்மை நிலையை மறுப்பதற்கு ஒருவர் எங்கும் நிறைந்திருப்பவராய் இருக்க வேண்டும், ஏனெனில் ஒரு மனிதர் இருந்திருக்க முடியாத இடம் என்று ஒன்று இருக்குமேயானால், பரமண்டலம் அங்கிருக்க முடியும். மத நம்பிக்கையற்றவர்களின் உறுதித் தன்மைக்குப் பதிலாக, அதிகமாய்ப் பிரியப்படுத்துகின்ற, அதிகமாய் அறிவுக்கு ஏற்புடைய தாவீதின் எண்ணப்போக்கு பின்வருமாறு உள்ளது:

> *கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள்*
> *மேட்டிமையுள்ளவைகளுமல்ல;*
> *பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும்*
> *நான் தலையிடுகிறதுமில்லை.*
> *தாயின் பால்மறந்த குழந்தையைப் போல நான் என் ஆத்துமாவை*
> *அடக்கி அமரப் பண்ணினேன்; என் ஆத்துமா*
> *பால் மறந்த குழந்தையைப் போல் இருக்கிறது*
> *(சங். 131:1, 2).*

இயேசு பரமண்டலத்திற்கு "உயர" எடுத்துக் கொள்ளப்பட்டார் (அப். 1:9) என்று கூறுவது, பன்னிரெண்டு மணி நேரத்திற்குப் பின்பு (பூமியின் சுழற்சியின் காரணமாக) பரமண்டலம் "கீழே" இருக்கும் என்று அர்த்தப் படுத்துவதாக அவிசுவாசிகள் உறுதிப்படுத்துகின்றனர். இவ்விதமாக அவர்கள் இயேசுவைக் குறித்தும் வேதாகமத்தைக் குறித்தும் (பரிகசித்துச்) சிரிக்கின்றனர். தேவன் வாசம் பண்ணும் இடமானது சரீரப் பிரகாரமானதாக இருந்ததென்றால், அந்தப் பரமண்டலமானது ஒரே வேளையில் நமது அண்டத்தின் எல்லாப் பக்கங்களிலும் இருப்பதாக, நம்மை முழுமையாக மூடியிருப்பதாக இருக்கக் கூடும். மாபெரும் போதகருடைய பாதபடியில் அமர்ந்து, அவர் தமது நண்பர்களைப் பிதாவின் இல்லத்திற்கு அழைத்துச் செல்வதாக வாக்களித்த பொழுது எதைப்பற்றிப் பேசினார் என்பதை உண்மையில் நல்லவராகவும் உலகளாவிய வகையில் ஒப்புக் கொள்ளப்படும் மதிநுட்பம் உள்ளவராகவும் இருக்கின்ற மனிதர் மட்டுமே அறிகின்றார்.

## தேவனுடைய பரலோகம்

பிதாவானவர் இருக்கின்ற பரலோகம் ஒன்றுண்டு, அதில் "ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவா. 3:13) - பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவரும், பிதாவினுடைய வலது பாரிசத்தில் அமரும்படி மீண்டும் அங்கு திரும்பின

*வருமான இயேசுவைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. தேவன் வாசம் பண்ணுகின்ற இந்த இடத்தைச் சாலொமோன் "வானாதி வானங்கள்" (1 இரா. 8:27) என்று அழைத்தார். தீர்க்கதரிசியான ஏசாயாவும், அப்போஸ் தலரான யோவானும் இந்த மாபெரும் கம்பீரமான வாசஸ்தலத்தைக் கண்ணோக்கிப் பார்க்கும் சிலாக்கியத்தைப் பெற்றனர், மற்றும் நீங்களும் நானும் அவ்விடத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பதற்கு அனுமதிக்கப் படுவோம். உயரமும் உன்னதமுமான அரியணையில் கர்த்தர் வச்சிரக் கல்லைப் போன்றும் பதுமராகத்தைப் போன்றும் வீற்றிருக்கின்றார். அவரது சிரசின் மேலாக மரகதம் போன்ற ஒரு வானவில் இருக்கின்றது. பதினாயிரம் பதினாயிரம் தூதர்கள் அவரைத் துதிக்கின்றனர். சேராபீன்கள் - தங்கள் கண்களையும்/முகத்தையும் கால்களையும் மூடிக் கொண்டு - சிங்காசனத் தைச் சுற்றிலும் பறந்து கொண்டு ஒருவரையொருவர் நோக்கி, "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று கூப்பிட்டுச் சொன்னார்கள் (ஏசா. 6:3).*

*இயேசு இந்த பூமியில் இருக்கையில், தேவனுடைய பரலோகத்தில் தாம் வாழ்ந்திருந்ததை நினைவுகூர்ந்தவராய் அங்கு திரும்பிச் செல்ல வேண்டும் என்று ஏங்கினார்: "பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத் தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவா. 17:5).*

*வானாதி வானத்தில் மேன்மையான மகிமையுள்ள இப்படிப்பட்ட தொரு இடம் இருக்கிறதென்றால், மனிதர்கள் மற்றும் தூதர்களுக்கு மேலான சகல அதிகாரமும் அங்குதான் மையம் கொண்டிருக்க வேண்டும். தமது அரியணையில் மேன்மையுடன் அமர்ந்து இருப்பவரின் சத்தத்திற்குப் பூமியின் ஒவ்வொரு படைப்புயிரும் தனது செவியைச் சாய்த்தாக வேண்டும். "கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக் கடவது" (ஆப. 2:20).*

*ஆகையால் - விவாக ரத்து, மதுபானம், ஞானஸ்நானம், நடனமாடுதல் அல்லது வேறு எந்தக் கருத்தைப் பற்றியாவது மாநாடுகள் கூடி எது சரியானது என்று ஓட்டுப் போடுவதற்கு மனிதர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. "தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்ல" (எரே. 10:23ஆ), ஏனெனில் அவனுடைய வழி அவனுக்குள் இருப்பதில்லை, அவன் பாவம் செய்யும் அழிகிறவனாகவே இருக்கின்றான். ஆலோசனைக் கூட்டங்கள் என்பவை அவர்களின் சொந்த பலவீனங்கள் மற்றும் பாவங்கள் ஆகியவற்றை விட மேன்மையான எதையும் எழுப்ப முடியாதாகையால், ஒரு மனிதர் தேவனுடைய ஆலயத்தில் உட்கார்ந்து தேவனைப் போலப் பேச முடியாது. எந்த ஒரு மனிதரும், மற்றும் எந்த மனிதர்களின் அமைப்பும் நம்மில் எஞ்சியுள்ளவர்களுக்கு மதத்தை நெறிப்படுத்திக் கொடுப்பதற்கு எவ்வித உரிமையும் பெற்றிருப்பதில்லை.*

*பிரசங்கியார்கள் சில வேளைகளில், மனம் மாறியவர்களை "நீங்கள் தேர்ந்து கொள்ளுகின்ற ஒரு சபையில் சேர்ந்து கொள்ளுங்கள்" என்று*

*உற்சாகப்படுத்துகின்றனர். இப்படிச் செய்வதில் அவர்கள் மகா உன்னத மான பிதாவை அரியணையிலிருந்து அகற்றுகின்றனர் - இதைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் எண்ணம் கொள்ளாதிருப்பினும் உண்மையில் இப்படியே செய்கின்றனர். சீஷர்களின் ஜெபத்தில் உள்ள "பரமண்டலங் களிலிருக்கிற" என்று கூறும் பகுதியை அவர்கள் வீணாக வழங்குகின்றனர். மனம் மாறுகின்றவர் பிரவேசிக்கின்ற சபையைத் தேவன் தேர்ந்து கொண்டதில்லையா? இப்படிப்பட்ட பிரசங்கியார்கள் பாவம் நிறைந்த மனிதர்களை உயர்த்திப் பிடித்து, இரட்சிக்கக் கூடிய ஒரே ஒருவரை நீக்கிப் போடுதலை உள்நோக்கின்றியே செய்கின்றனர்.*

*மனம் மாறியவர்கள் ஞானஸ்நானம் பெறுவதை- தெளித்தல், ஊற்றுதல் அல்லது முழுக்காட்டுதல் என்பவைகளில் - "தங்கள் தேர்வுப்படியாக" ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம் என்று கூறப்படுகின்ற பொழுது, ஒன்றுக்கு மேற்பட்ட தவறு செய்யப்படுகின்றது. ஞானஸ்நானம் என்றால் என்ன என்று தவறாகப் புரிந்து கொள்ளுதலே மிகவும் அடிப்படையான தவறாக உள்ளது, ஒரு மனிதர் எவ்விதத்தில் ஞானஸ்நானம் பெறுகின்றார் என்பது எவ்வித வேறுபாட்டையும் ஏற்படுத்துவதில்லை என்ற எண்ணத்தில் இவ்வாறு செய்யப்படுகின்றது. மேனோனைட்டுகள் செய்கின்றபடி ஞானஸ்நானம் பெறுபவர் முற்றிலும் மூழ்கும் வரைக்கும் அவரை முன்னோக்கிச் சாய்ப்பதா அல்லது பெரும்பான்மையான மற்றவர்கள் செய்கின்றபடி அவரைப் பின்னோக்கிச் சாய்ப்பதா என்று ஒருவர் சிந்திக்காத வரையிலும் ஞானஸ்நானம் "எவ்விதம்" செய்விப்பது என்பது தவறான சொல் வழக்காகவே உள்ளது.*

*ராபர்ட் ரிச்சர்ட்ஸன் அவர்களின் கூற்றுப்படியாக, தாமஸ் கேம்ப்பெல் அவர்கள் முதன்முறையாக ஞானஸ்நானம் செய்வித்த பொழுது, "ஏரியின் முனையில் நீட்டிக் கொண்டிருந்த ஒரு வேரின் மீது நின்று கொண்டு அவர்களின் [ஞானஸ்நானம் பெறுபவர்களின்] தலைகளை தண்ணீர்க் கல்லறையில் அவர்கள் அடக்கமாகும் வரையிலும் வளைத்தார்." உண்மை யாக மனந்திரும்பிய ஒருவர்* N.B. Hardeman *அவர்களை நோக்கி அவ்விருவரும் குளம் ஒன்றின் கரையில் நின்று கொண்டிருந்த பொழுது, "நான் ஏன் குந்திக் கொள்ளக் கூடாது?" என்று கேட்டார். சிறையதிகாரி* "Straight away"*யாக (அப். 16:33;* KJV*)* [*தமிழில் இவ்விடத்தில் "உடனே" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது*] *ஞானஸ்நானம் பெற்றதால், ஞானஸ்நானம் பெறுபவரை நேராக (நீருக்குள்) தள்ளி விடுவதை வற்புறுத்திய ஒரு பிரசங்கியாரைப் பற்றி கஸ் நிக்கொல்ஸ் அவர்கள் கூறுகின்றார். இந்த நிகழ்ச்சிகள் யாவும் ஞானஸ்நானத்தின் "வழிமுறைகளை" குறிப்பவைகளாய் இல்லாதவரை இவைகள் ஒன்றுமற்ற வையாய் உள்ளன. தேவன் முழுக்காட்டுதல் என்ற ஞானஸ்நானத்தையே கட்டளையிட்டார்.*

*உங்கள் ஞானஸ்நானம் "எவ்விதமாய்" இருக்க வேண்டும் என்பது பற்றி தேவன் (நமக்கு) தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு எதுவும் தரவில்லை என்பது இங்கு அடிப்படையில் மறைமுகக் கருத்தாய் இருப்பதால் ''உங்கள் தெரிவின்படியான'' ஞானஸ்நானம் என்று மக்களுக்கு அறிக்கும்*

சுவரொட்டியில் உள்ள தவறானது நம்மைக் கவலைப்படுத்துகின்றது. உண்மையில் பாவம் நிறைந்த மனிதர் இருளில் இருப்பதால் தமது அடிவைப்புகளை இயக்குவது எவ்விதம் என்று அறியாதவராய் இருக்கின்றார். ஞானஸ்நானத்தைக் கட்டளையிட்டவர் பாவமின்றி வாழ்ந்தார் என்பதாலும், இப்பொழுது அவர் மனிதரில் எவரும் சேரக் கூடாத ஒளியில் வாசம் செய்கின்றார் என்பதாலும், ஞானஸ்நானத்தை "எவ்விதம்" செய்விப்பது என்பதை மனிதர் முடிவு செய்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆகையால், நான் "பரமண்டலங்களிலிருக்கிற" என்று ஜெபிக்கும் பொழுது தேவன் முழுமையான பொறுப்பாளியாய் இருக்கின்றார் என்றே நான் கூறுகின்றேன். இப்படிப்பட்ட எண்ணப்போக்குடன் ஜெபம் செய்வதால், நான் தேவனுடைய மிக மேன்மையான வல்லமையையும் அவர் ஒருவரே ஞானத்தில் மாண்புள்ளவர் என்பதையும் ஒப்புக் கொள்வதுடன், அவரை நான் அறிக்கையும் செய்கின்றேன்; மற்றும் நான் தேவனைத் துதிக்கின்றேன் ஏனென்றால் அவர் பரமண்டலத்தில் இருக்கின்றார். யோசோபாத் அரசரின் முகஸ்துதியான பேச்சில் அவரைக் கவனியுங்கள்:

> எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, பரலோகத்திலிருக்கிற நீர் அல்லவோ தேவன்; தேவரீர் ஜாதிகளுடைய ராஜ்யங்களையெல்லாம் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே வல்லமையும் பராக்கிரமமும் இருக்கிறது, ஒருவரும் உம்மோடு எதிர்த்து நிற்கக் கூடாது (2 நாளா. 20:6).

அழிகின்ற ஒரு மனிதர் எந்த ஒரு சொல்லிலும் ஜாக்கிரதையாய்க் கணக்கிட வேண்டும் என்று அம்மனிதருக்கு சாலொமோன் அறிவுரை கூறுவது ஏன் என்பதற்கான காரணங்களில் ஒன்று இதோ: "தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக" (பிர. 5:2).

"பரமண்டலங்களிலிருக்கிற" என்று நான் ஜெபிக்கும் பொழுது, பரலோகத்திலும், பூலோகத்திலும் மற்றும் பூமியின் கீழும், நேற்றும், இன்றும், நாளையும் அவருடைய ஆளுகையை உறுதிப்படுத்துவதுடன், உன்னதமானவருடைய இன்னொரு மகாப் பெரிய பண்பு நலனையும் நான் அறிவிக்கிறேன். அவர் இரவும் பகலும், அமெரிக்காவிலும் அல்லது இந்தியாவிலும் உள்ள எல்லாரையும் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று நான் கூறுகின்றேன்; அவருடைய கண்கள் மனுபுத்திரரைப் பார்க்கிறது; அவருடைய இமைகள் அவர்களைச் சோதித்தறிகிறது (சங். 11:4). இதை அவர் எப்படிச் செய்ய முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட அறிவானது எனக்கு மிகவும் ஆச்சரியமானதாக உள்ளது. இது மிக உன்னதமானதாக உள்ளது; நான் அதை அடைவதில் வெற்றி பெற முடியாது (சங். 139:1-16). நான் எப்பொழுது உட்காருகின்றேன், நான் எப்பொழுது படுத்துக் கொள்கிறேன், மற்றும் நான் எப்பொழுது வழியில் நடக்கிறேன் என்பவைகளைத் தேவன் அறிகின்றார்.

தூரத்தில் இருந்தே அவர் என் சிந்தனையைப் புரிந்து கொள்கின்றார். நான் பிறப்பதற்கு முன்பே எனக்கான அவரது திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன: “என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாத போதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது” (சங். 139:16).

வயலில் இருந்த பொழுது காயீன் எழும்பி குற்றமற்ற ஒருவரைக் கொலை செய்ததை, எல்லாவற்றையும் காண்கின்ற கண்ணானது அறிந்துள்ளது. ஆகான் என்பவன் நல்லதொரு பாபிலோனிய சால்வையை யும், வெள்ளிச் சேக்கலையும், ஒரு பொன் பாளத்தையும் திருடிக் கொண்டதை அவர் காண்கின்றார். எங்கும் இருப்பவரும், மற்றும் எல்லாவற்றையும் அறிகிறவருமான பரலோகத்தில் உள்ள ஒருவர், முதிர் வயதுள்ள, பார்வை மங்கிப் போன ஒரு தீர்க்கதரிசி, ஒரு வஞ்சகியை நோக்கி, “யெரொபெயாமின் மனைவியே, உள்ளே வா; உன்னை அந்நிய ஸ்திரீயாகக் காண்பிக்கிறதென்ன?” (1 இரா. 14:6) என்று வாழ்த்தும்படி செய்தார். திருட்டுத்தனம் நிறைந்த கேயாசி, துணிகளையும், வெள்ளித் தாலந்துகளையும் பெறுவதற்காக பொய்க் கதையொன்றைக் கூறிய பொழுது, பரலோகத்திலிருந்து பார்க்கின்ற ஒருவர், தீர்க்கதரிசியாகிய எலிசா, உண்மையற்ற அந்த வேலைக்காரனை அவ்வேளை முழுவதிலும் கவனிக்கும்படி வல்லமையளித்தார்: “என் மனம் உன்னுடன் கூடச் செல்லவில்லையா?” (2 இரா. 5:26).

எல்லாவற்றையும் பார்க்கின்ற கண்ணின் காரணத்தால் துன்மார்க் கரான மனிதர்கள் பயந்து நடுங்குகையில், நல்ல மனிதர்கள் ஆழமான ஆறுதல் அடைகின்றனர். துன்மார்க்கத்தைக் காண்கின்ற அதே கண்ணானது நற்செயல் ஒவ்வொன்றையும் காண்கின்றது. தேவன் நீதியுள்ளவராய் இருக்கின்றார்; நீங்கள் தேவையில் இருப்போருக்கு ஊழியம் செய்யும் பொழுது உங்கள் விசுவாசத்தின் கிரியையும் அன்பின் பிரயாசத்தையும் அவர் மறக்கின்றவரல்ல. ஒரு பிள்ளைக்கு எதிரான ஒவ்வொரு குற்றத்தை மட்டும் அவரது கண்கள் காண்பதுமின்றி, தம்முடைய சின்னஞ்சிறியவர் களுக்குச் செய்யப்படும் இரக்கமுள்ள செயல் ஒவ்வொன்றையும் அவர் காண்கின்றார்.

## பரலோகத்திலிருந்து தேவனுடைய கவனிப்பு

பரலோகத்தில் அரியணையுள்ள ஒருவரால் கவனிக்கப் படுவதற்கு நீங்கள் மாபெரும் செயல்களைச் செய்யக் கூடியவராய் இருக்க வேண்டு வதில்லை என்ற சிந்தனையானது விலையேறப் பெற்றதாகும். உங்களால் ஒரு கலசம் தண்ணீர் மாத்திரமே கொடுக்க முடிவதாய் இருந்தாலும், உங்கள் இருதயம் அதைக் கொடுக்கும்படி நாடிச் செல்லட்டும்; உங்கள் பிரதிபலனை நீங்கள் இழந்து போக மாட்டீர்கள். தேவையில் உள்ள ஒரு குடும்பத்தின் வீட்டு வாசலில் ஒரு மூட்டை மாவை நீங்கள் வைப்பதை பூமியில் உள்ள எந்தக் கண்களும் ஒருவேளை நோக்காதிருக்கலாம், ஆனால் அந்தரங்கத்தில் காண்கின்ற உங்கள் பிதாவானவர் உங்களுக்கு வட்டியுடன்

*திரும்பக் கொடுப்பார்.*

*உங்கள் அயலகத்தாரிடம் நீங்கள் பரலோகத்திலிருந்து வந்த சுவிசேஷத்தைப் பற்றிப் பேசி சுத்திகரிக்கும் இரத்தத்தின் ஊற்றண்டைக்கு நீங்கள் அவரை ஒருவேளையில் வழி நடத்தியிருக்கலாம். ஒருவேளை நீங்கள் (இந்த ஊழியத்திற்காக) பிரசங்கியாரிடமிருந்தோ அல்லது வேறு எவரொருவரிடமிருந்தோ பாராட்டுப் பெறாதிருக்கலாம், ஆனால் எவ்விதத்திலும் இப்படிப்பட்ட சரிக்கட்டுதலுக்காக நீங்கள் உங்களின் ஊழியத்தைச் செய்திருந்ததில்லை. நீங்கள் உங்களை நீதிமானாக்கி பாவங்களிலிருந்து விடுதலையைக் கட்டளையிட்டதற்காக இயேசுவில் மேன்மை பாராட்டி களிகூர்ந்தீர்கள், மற்றும் உங்கள் அயலகத்தாரும் இப்படிப்பட்ட மகிமையும் அழியாமையுமுள்ள அனுபவத்தைப் பெறும்படி நீங்கள் விரும்பினீர்கள். எல்லாவற்றையும் காண்கின்ற கண்ணானது, உங்கள் மென்மையான அணுகுமுறையையும் வசீகரிக்கும் விளக்கத் தோற்றத்தையும் கண்டது; நீங்கள் நன்றாய் ஊழியம் செய்து பாவி ஒருவரை மனம் மாற்றிய பொழுது அது (அந்தக் கண்) உங்கள் இருதயத்தில் ஊடுருவிக் கண்டது. நீங்கள் ஆகாய மண்டலத்திலுள்ள சுடர்களைப் போல் பிரகாசிப்பீர்கள் என்றே தேவன் நோக்கம் கொண்டார், ஏனென்றால் அவர், "அநேகரை நீதிக்குட்படுத்துகின்றவர்கள்" நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கின்றார் (தானி. 12:3).*

*தேவன் கவனிக்கின்றார் என்ற சிந்தனையானது எவ்வளவு ஆறுதலும் பெலப்படுத்துவதுமாய் இருக்கின்றது! உங்களுக்கு மனிதர் என்ன செய்தாலும், உங்களைப் பற்றி என்ன கூறினாலும் பரவாயில்லை, கவனித்துப் பார்க்கும் பிதாவினிடத்தில் கொண்டுள்ள மெய்யானதொரு பக்தியினால் நீங்கள் ஒரு மாபெரும் வாக்குத்தத்தத்தின் மீது உரிமை கோருதலை வைக்க முடியும்: "தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது" (2 நாளா. 16:9).*

## பரலோகம் சமீபமாய் இருக்கின்றது

*உயரமும் உன்னதமுமான இடத்திற்குக் கர்த்தர் உயர்த்தப்பட்டுள்ளார் என்ற உண்மையானது நமது தேவனைத் தொலை தூரத்தில் உள்ளவராக்குவதில்லை. அவர் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கின்றார் என்பது உண்மையே, ஆனாலும் அவர் எல்லார் மூலமாகவும் எல்லாருக்குள்ளும் இருக்கின்றார் (எபே. 4:6). அவர் பரலோகத்தில் ஆளுகை புரிவதுடன், கிறிஸ்துவினுடையவர்களின் இருதயங்களிலும் வாழ்கின்றார். நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் பொழுது மேலிருந்து உங்களிடத்தில் விருந்தினர் வருகின்றனர். நீங்கள் ஞானஸ்நானம் பெறுகின்ற பொழுது, உங்கள் நித்திய மீட்புக்கு எப்பொழுதும் இருக்கின்ற உத்தரவாதமாகத் தேவன் ஆவியானவரை ஒரு கொடையாக அனுப்புகின்றார் (அப். 2:38;*

*5:32; கலா. 4:6; எபே. 1:13, 14). பரிசுத்த ஆவியானவர் தவிர (1 கொரி. 6:19) விலையேறப்பற்ற வேறு இரு பார்வையாளர்களும் உள்ளனர்: "அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" (யோவா. 14:23).*

*பரலோகத்தின் தேவன் தமது ஆலயத்தில் அமர்ந்து கொண்டு (சங். 11:4) அதே வேளையில் உங்களிலும் அவர் எவ்விதம் வாழ முடியும் என்று நீங்கள் என்னிடத்தில் கேட்டால், ''அதை நான் அறியேன். அவர் அதைச் செய்கின்றார் என்று மட்டுமே அறிவேன்'' என்று மட்டுமே நான் கூற முடியும். தேவன் உண்மையுள்ளவராய் இருக்கின்றார் (2 தீமோ. 2:13), மற்றும் வேத வாக்கியங்கள் தவறாதவைகளாய் இருக்கின்றன (யோவா. 10:35). கிறிஸ்து பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கின்றார் (1 பேது. 3:22), ஆனால் ஒவ்வொரு கர்த்தருடைய நாள் ஒவ்வொன்றிலும் அவர் இப்பூமியில் தம்முடைய பரிசுத்தவான்களுடன் பந்தியில் பங்கேற்கின்றார் (மத். 26:29). ஒரே வேளையில் அவர் உன்னதங்களில் மகிமையின் மத்தியிலும், அவருடைய நாமத்திலே இருவர் அல்லது மூவர் கூடி ஜெபிக்கும் ஒரு சிறு குடிசையிலும் இருக்க முடியும் (மத். 18:20). பிதாவினுடைய உயர்த்தப்பட்ட கட்புலனாகாத் தன்மையிருப்பும் தேவபக்தியுள்ள மனிதர்களிடத்தில் அவரது அருகாமை இருப்பும் விவரிக்க முடியாதவைகளாய் உள்ளன, ஆனால் அவைகள் நீண்ட காலமாய் அறியப்பட்டு மேன்மை பாராட்டப்பட்டுள்ள உண்மைகள் மறுபடியும் உறுதிப்படுத்துகின்றன. ஏசாயா பின்வருமாறு எழுதினார்:*

> *நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான் பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக் கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில் வாசம் பண்ணுகிறேன் (ஏசா. 57:15).*

*நீங்கள் ஜெபம் பண்ணும் பொழுது, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவினிடத்திற்கு ஜெபியுங்கள்.*

# “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக”

“உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக” என்று தேவனிடத்தில் நாம் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு நமக்குக் கற்பித்தார் (மத். 6:9). ஒரு பெயருக்கு ஏதாவது விஷயம் உள்ளதா? மக்கள் பலர் “இல்லை” என்றே வலியுறுத்தலாகப் பதில் அளிக்கின்றனர். அவர்கள், சீஷர்களின் ஜெபத்தில் உள்ள முதல் வேண்டுகோளைத் தாங்கள் ஒன்றுமற்றதாக்குவதை உணராதிருக்கின்றனர். ஒரு பெயரானது பொருட்படுவதாய் இருக்கின்றது என்பதை நம்பாதவர்கள் ஆவியோடும் புரிந்து கொள்ளுதலோடும் “உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக” (மத். 6:9) என்று ஜெபிக்க முடியாது. ஒரு பெயர் முக்கியத்துவமற்றதாயிருந்தால், பிதாவினுடைய நாமம் பரிசுத்தப்படுவதோ அல்லது அவமதிக்கப்படுவதோ ஒரு பொருட்டல்ல.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் பின்வரும் கூற்றைப் பலர் மேற்கோள் காட்டுகின்றனர்: “ஒரு பெயரில் என்ன இருக்கின்றது? ரோஜா என்று அழைக்கப்படுவது வேறு எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் இனிய நறுமணம் கமழ்வதாகவே இருக்கும்.”[1] மதத்தில் என்ன நன்மை இருக்கின்றது என்று நிரூபிக்க வேதாகமத்தை விட்டு ஷேக்ஸ்பியரிடத்திற்கு ஒருவர் திரும்பும் பொழுது, அவர் தமது நிலைப்பாடானது வேதாகமத்தில் இல்லையென்று ஒத்துக் கொள்ளுகின்றார். ஒரு பெயர் மற்ற பெயரைப் போலவே நல்லதாயுள்ளது என்ற ஒட்டு மொத்தப் பொதுமைப்பாட்டை ஒரு ரோஜாவிலிருந்து ஏற்படுத்தினால், பெயல்செபூலின் பெயரும் கூடப் பிதாவினுடைய பெயரைப் போலவே தர்க்க ரீதியில் நல்லதாகவே இருக்கின்றது என்றாகின்றது. தாவரவியல் மற்றும் ஆங்கில இலக்கியம் ஆகியவற்றிலிருந்து நாம் விலகி, மத சத்தியங்களை நிலைநாட்டுவதற்காக வேதாகமத்திற்குச் செல்வோம். சீஷர்களின் ஜெபத்தில் உள்ள முதல் வேண்டுகோளை நாம் நிதானமாகக் காணுகையில், பெயரானது பொருட்படுவதாக உள்ளது என்பதை நாம் காணுவோம். இயேசு அவ்வாறே நினைத்தார், மற்றும் அவர் தம்முடைய சீஷர்களும் அவ்வாறே நினைக்க வேண்டுமென்று விரும்பினார். அவர்கள் ஜெபிக்கும் பொழுது தேவனுடைய பெயரின் தனிச் சிறப்பை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.

## பரிசுத்தமான ஒரு நாமம்

*சர்வ வல்லவருடைய நாமமானது இலேசாகப் பேசப்படக் கூடாது. தேவனுடைய நாமமானது மனிதர் மற்றும் தூதர்கள் ஆகியோரைக் காட்டிலும் மிக மேன்மையான மதிப்பில் வைக்கப்படுதலென்பதை உங்கள் ஆத்துமாவின் ஆழங்களில் இருந்து நீங்கள் விரும்ப வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார். அவருடைய நாமமானது பரிசுத்தப் படுத்தப்படும் பொழுது, அது அதனிலேயே உயர்ந்து மற்றும் உன்னதத்திற்கு உயர்த்தப் பட்டு, மற்றும் வேறு பொதுப் பயன்பாடு எதற்கும் வைக்கப்படாததாக உள்ளது. "பரிசுத்தப்படுவதாக" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது பின்வரும் இரு சிந்தனைகளால் ஏற்படுத்தப் பட்டுள்ளதென்று ஆதம் கிளார்க் அவர்கள் சுட்டிக்காட்டினார்: "பூமி" மற்றும் "இல்லை"; ஆகவே, பிதாவினுடைய நாமமானது "பூமிக்குரியது அல்ல" மற்றும் அந்த நாமமானது அவருடைய பாதபடிக்கு இழுத்து வரப்படக் கூடாது.*

## "அல்லேலூயா!"

*திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெரு வெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடி முழக்கம் போலவும் ஒரு ஆச்சரியமான வியப்பொலியானது யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டது. தூதர்கள் "அல்லேலூயா!" என்று பாடுவதைக் கேட்கும் சிலாக்கியத்தை அவர் பெற்றார் (வெளி. 19:1, 3, 4, 6).*

*நான் அதிக காலம் நினைத்திருந்தபடி, அந்த மேன்மையான வார்த்தை யானது வெறும் பரவச உணர்வுக் கூச்சல் அல்ல. நேரடியான அர்த்தத்தில் அது ஒரு கட்டளையாக உள்ளது: "கர்த்தரைத் துதியுங்கள்!" வெளி. 19ல் யோவான் அதைக் கேள்வியுற்ற நான்கு முறைகளில் இவ்வார்த்தையானது இதன் கிரேக்க வடிவில் (Hallelouia) நமக்கு வருகின்றது, ஆனால் இது எபிரெய மொழியில் தொடக்கம் பெற்றதாக உள்ளது. Halal மற்றும் Jah என்ற இரு வார்த்தைகளால் ஏற்படுத்தப்பட்ட இது, "யாவேயைத் துதியுங்கள்" என்று அர்த்தப்படுகின்றது. சங்கீதம் 111:1ஐக் கவனியுங்கள்: "கர்த்தரை துதிப்பேன்." என்னிடம் உள்ள* ASV *பைபிள் பிரதியில் உள்ள ஒரு அடிக்குறிப்பானது,* "Heb. *Hallelujah*" *என்று கூறுகின்றது. ஆகையால், இந்த மாபெரும் வார்த்தையை நீங்கள் புரிந்து கொள்ளுதலோடு பாடும் பொழுது தேவனுடைய நாமத்தை நீங்கள் அறிவிக்கையில் அவருடைய நாமத்திற்குப் பயபக்தியைச் செலுத்துகின்றீர்கள்.*

## நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குதல்

*தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவதற்கு எதிராக மோசே மீண்டும் மீண்டும் எச்சரித்தார் (லேவி. 18:21; 19:12; 20:3; 21:6; 22:2). அந்த நாமத்தை சபித்து, தவறாகப் பயன்படுத்தியதற்காக ஒரு மனிதன் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட அளவுக்கு அந்த நாமமானது மிக*

*மேலான பயபக்திக்குரியதாக வைக்கப்பட்டிருந்த காலம் இருந்தது. அவன் "பாளையத்திற்குப் புறம்பே" கொண்டு வரப்பட்ட பொழுது, அவன் தேவதூஷணம் கூறியதைக் கேட்ட ஒவ்வொருவரும் அங்கு இருக்க வேண்டியதாயிற்று (லேவி. 24:11-14), மற்றும் ஒவ்வொரு சாட்சியும், குற்றவாளி கூறியிருந்ததைத் தாம் கேட்டிருந்தார் என்பதற்குச் சாட்சியமாக அவனிடத்தில் நடந்து சென்று அவன் தலையின் மீது தன் கைகளை வைக்க வேண்டியதாய் இருந்தது. கல்லெறிதல் தொடர்ந்தது.*

## நாமத்தை உச்சரித்தல்

*தேவன் தம்முடைய நாமத்தை எவ்விதத்திலும் தூஷணமாய்ப் பயன்படுத்துவதைக் குறித்து கண்டிப்புடன் இருந்தாலும் - தம்முடைய நாமம் வீணிலே வழங்கப்படக் கூடாதென்று கற்பலகையில் எழுதினா ரென்றாலும் (யாத். 20:7) - அவர் தம்முடைய நாமமானது மனித உதடுகளால் உச்சரிக்கக் கூடாத அளவுக்கு மிக மிகப் பரிசுத்தமானதாகக் கருதப்பட வேண்டும் என்று அவர் நோக்கங் கொள்ளவில்லை. அப்படிப் பட்டதொரு மூடநம்பிக்கையானது யூதர்கள் மத்தியில் வளர்ச்சி பெற்று, இந்நாள் வரையிலும் நிலவி வருகின்றது.*

*தேவன் அவரது நாமத்தை ஒருவன் தவறாகப் பயன்படுத்தியதற்காக அவனைக் கல்லெறியும்படி கட்டளையிட்டதாலும் (லேவி. 24:16), மூன்றாவது கட்டளையைத் தவறாகப் புரிந்து கொண்டதாலும் ரபீக்கள், தேவனுடைய நாமமானது பேசப்படக் கூடாதது, சொல்லக் கூடாதது, பாவம் நிறைந்த உதடுகளினால் கூறக் கூடாத அளவு மிக மிகப் பரிசுத்த மானது என்றெல்லாம் நினைத்தனர். என்றாலும், தேவனுடைய எச்சரிப்பானது பெயரை தூஷணப்படுத்தக் கூடாது என்பதற்குத் தானே தவிர, உச்சரிக்கக் கூடாது என்பதற்கல்ல. அந்த நாமமானது பேசப்படவும் கூடாதிருந்ததென்றால், நல்ல மக்களின் திரளான கூட்டமானது வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் அதை நிச்சயமாக வெகுவாய்ப் பயன்படுத்தி யிருக்க மாட்டார்கள்: இது (தேவனுடைய நாமம்) பழைய ஏற்பாட்டில் 6,873 முறைகள்*[2] *உள்ளது.*

KJV*யில் சங்கீதம் 68:4ல் (இந்தப் பெயருக்கான) எபிரெய வார்த்தையின் சுருக்க வடிவம்* (JAH) *உள்ளடக்கப்பட்டுள்ளது "வனாந்தரங்களில் ஏறி வருகிறவருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்; அவருடைய நாமம் யேகோவா, அவருக்கு முன்பாகக் களி கூருங்கள்"* (JAH *என்பது தமிழில் யேகோவா என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) இந்த சுருக்க வடிவின் பயன்பாடானது, இந்த நாமத்தை உச்சரிக்கக் கூடாது என்று அர்த்தப் படுவதில்லை; மாறாக, இந்த நாமமானது அதிகமாய்ப் பயன்படுத்தப் பட்டது என்றே ஆலோசனை தெரிவிக்கின்றது. இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கு நெருங்கியிருந்ததாக உணர்ந்தனர், மற்றும் ஒருபொழுதும் மரியாதைக் குறைவாயில்லாத பொழுதிலும், அவருடைய நாமத்தைத் தாராளமாகவும் நெருங்கிய வகையிலும் பயன்படுத்த அவர்கள் தயங்கியதில்லை.*

## நாமம் “பயங்கரமானது”

வேதாகமம் முழுவதிலும் சங். 111:9ல் தான் "reverend" என்ற வார்த்தை உள்ளது, மற்றும் இது இவ்விடத்தில் தேவனைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்று கூறுபவர்களால் இவ்வசனமானது நோக்கம் எதுவுமின்றித் தவறாகப் பயன்படுத்தப் படுகின்றது.[3] இவ்விடத்தில் (எபி.: Yare’, NASBயில் “awesome” என்றும், தமிழில் “பயங்கர மானது” என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது உண்மையில் முந்நூறுக்கும் மேற்பட்ட முறைகள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றது. எபிரெய வார்த்தையான Yare’ என்பது ‘‘பயப்பட’’ அல்லது ‘‘பயங்கரத்திற்கான’’ என்று அர்த்தப்படுகின்றது. லோத்து ஒரு குறிப்பிட்ட நகரத்தில் இருப்பதற்கு/தங்கியிருப்பதற்கு லோத்து பயப்பட்டார் (Yare’; ஆதி. 19:30). மற்றும், மோசே, “உங்களில் அவனவன் தன்தன் தாய்க்கும் தன்தன் தகப்பனுக்கும் பயந்திருக்கக் (Yare’) கடவன் ...” (லேவி. 19:3) என்று கட்டளையிட்டார். இஸ்ரவேல் மக்கள் மோசே, யோசுவா மற்றும் தேவன் ஆகியோருக்குப் பயந்திருந்தனர் (Yare’) (யோசு. 4:14; லேவி. 19:14). சங். 111:9ல் இம்மாபெரும் வேதபாடப் பகுதியானது தேவனுடைய நாமத்தை உயர்த்துவதாக உள்ளது. இந்த நாமமானது மரியாதை, தேவபயம் மற்றும் பெரும்பயம் மற்றும் பயங்கரம் ஆகியவற்றிற்குத் தகுதியுடையதாக உள்ளது. இதே வார்த்தை (Yare’) உபாகமம் 28:58ல் இருமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது: “உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும் படிக்கு ...” என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சீனாய் மலை அதிர கர்த்தர் மேகத்தில் இறங்கிய பொழுது அந்தப் பெயருக்கு ஆழமான பயபக்தியும் பரிசுத்தமான பயங்கரத் தன்மையும் உறுதியாகச் செலுத்தப்பட்டு மோசேயினால் அந்த நாமம் “அறிவிக்கப் பட்டது”: “கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்” (யாத். 34:6).

பின்பு தேவன் அழகிய மற்றும் உலகப் புகழ் பெற்ற ஆசாரியத்துவ ஆசீர்வாதத்தைக் குறிப்பிட்டார்:

> கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்;
> கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி,
> உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர்.
> கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி,
> உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே
> (எண். 6:24-26).

அந்த ஆசீர்வாத வார்த்தைகளில் சர்வ வல்லவர் தமது நாமத்தைத் தற்செயலாக மும்முறை வைக்கவில்லை, ஏனென்றால் அவர் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்: “இவ்விதமாய் அவர்கள் என் நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் கூறக் கடவர்கள்; அப்பொழுது நான் அவர்களை ஆசீர்வதிப்பேன்” (எண். 6:27).

*மின்னுகின்ற கேருபீன்கள் மூடியின் இருபுறமும் நிற்கின்ற அழகிய பொன் பெட்டியொன்று தேவன் தம்முடைய மக்களைச் சந்திக்கின்ற இடமாக இருந்தது (யாத். 25:22). இந்தப் பெட்டியானது இடத்துக்கு இடம் கொண்டு செல்லப்பட்ட பொழுது (மற்றவர்களால்) காணப்படவோ அல்லது தொடப்படவோ கூடாதிருந்தது (எண். 4:5, 6). அனுமதி பெறாத நபர்கள் "ஒரு கணம் கூட" அதை உற்று நோக்கினால் மரிக்க வேண்டியதாய் இருந்தது (எண். 4:20). அது இந்தப் பூமியிலேயே மிகவும் பரிசுத்தப் படுத்தப்பட்ட - மகாபரிசுத்த - ஸ்தலத்தில் வைக்கப்பட்டது (யாத். 26:33; 40:21). இந்தப் பரிசுத்தமான பெட்டியானது கேருபீன்களின் நடுவிலே வாசமாயிருக்கிற "சேனைகளுடைய கர்த்தரின் நாமம் தொழுது கொள்ளப் படுகிற தேவனுடைய பெட்டி" (2 சாமு. 6:2) என்று தக்க விதத்திலேயே அழைக்கப்பட்டது.*

## நாமத்தின் வல்லமை

*தேவனுடைய நாமத்தின் வல்லமை பற்றிய உணர்வானது உண்மை யுள்ள ஒவ்வொரு யூதரின் இருதயத்திலும் இருந்தது. இளைஞனாயிருந்த தாவீது சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலே (1 சாமு. 17:45) கோலியாத்துக்கு முன்பாக நிற்கப் பயப்படாதிருந்தார். அதே இளைஞன் ''இஸ்ரவேலில் இனிமையாய்ப் பாடுகிறவ''ரான பிறகு ஒவ்வொரு யூதருக்கும் பின்வருமாறு புத்தி கூறும்படி ஏவப்பட்டார்:*

> *அல்லேலூயா!*
> *கர்த்தருடைய ஊழியக்காரரே, துதியுங்கள்;*
> *கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள்.*
> *இதுமுதல் என்றென்றைக்கும்*
> *கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது.*
> *சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசை மட்டும்*
> *கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக*
> *(சங். 113:1-3).*

## தேவனிடத்தில் ஜெபித்தல்

*தாவீதின் காலத்திலும் மற்றும் இயேசு சீஷர்களுக்கு எப்படி ஜெபிப்பது என்று கற்பித்த காலத்திலும் கூட தெய்வீகத்துவ நாமமானது ஆசீர்வதிக்கப் பட்டதாக மற்றும் எல்லாவற்றையும் வெற்றி கொள்வதாக இருக்கையில், இன்றைய நாட்களில் தேவனுடைய நாமத்தினால் மட்டும் ஏறெடுக்கப் படும் ஒரு ஜெபமானது வீட்டின் மேற்கூரையைக் காட்டிலும் அதிகமான உயரத்திற்கு எழும்புவதில்லை! நீங்கள் தேவனுடைய நாமத்தினாலே தேவனை அடைய முடியாது! பிதாவினுடைய சொந்த ஏற்பாட்டினால் தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஒரு மத்தியஸ்தர் இருக்கின்றார் (1 தீமோ. 2:5). சகல ஞானமும் உடைய பிதாவானவர் தம்முடைய சுய நல்*

விருப்பத்தின்படியாகவே எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் ஒன்றுகூட்டத் தீர்மானித்தார் (எபே. 1:10). திகைப்பூட்டும் பின்வரும் கூற்றை அவர் ஏற்படுத்தக் கூடுமளவுக்கு தேவன் - மனிதர் நிலைப்பாடானது அவ்வளவு முக்கியமானதாக உள்ளது: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6). தேவன், ஆராய்ந்து முடியாத அவருடைய சுய சித்தத்தின் ஆலோசனையின்படியே கிறிஸ்துவுக்குப் புறம்பே எவரொருவரையும் இரட்சிக்காதிருக்கின்றார். இயேசு, பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாகவும், தாவீதின் வேரும் சந்ததியாகவும், அல்பாவும் ஒமேகாவுமாகவும், முந்தினவரும் பிந்தினவருமாகவும் இருக்கின்றார் (வெளி. 22:13, 16). அவர் மூலைக்குத் தலையாய் இருக்கின்றார். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12).

இருப்பினும், கிறிஸ்து எப்பொழுதும் இப்படிப்பட்டதொரு இடத்தை சுயாதீனப் படுத்திக் கொண்டிருந்தவரல்ல. அவரது வெற்றியான மரணத்தைத் தொடர்ந்து வந்த பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்னதாக, இரட்சிப்பு என்பது அவருடைய நாமத்தினால் இருந்ததில்லை மற்றும் ஜெபமானது அவருடைய நாமத்தினால் ஏறெடுக்கப்பட்டிருந்ததில்லை. அவர், "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை" என்று கூறினார் (யோவா. 16:24). இவ்விதமாக, அவர் தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிப்பது எப்படி என்று போதித்த பொழுது, அவர் தம்முடைய சொந்த நாமத்தினாலே ஜெபிக்கும்படி அவர்களுக்குப் போதிக்கவில்லை. அந்த வேளையில் இப்படிப்பட்டதொரு அறிவுறுத்தலானது சரியற்றதாயிருந்திருக்கும். மத். 6:9-13 உள்ள சீஷர்களின் ஜெபமானது இப்பொழுது காலாவதியாகி விட்டதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றும் ஆகும். அந்த ஜெபம் கொடுக்கப்பட்டதால்/கொடுக்கப் பட்ட நாளிலிருந்து மனித குல வரலாற்றிலேயே மாபெரும் நிகழ்வானது நிகழ்த்தப்பட்டுள்ளது. பரலோகம் மற்றும் பூலோகம் ஆகியவற்றின் நிர்வாக முறைமையானது மாற்றப்பட்டுள்ளது. தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பித் தம்முடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தியதினால் அவரை மேன்மைப்படுத்தினார். அவர் எல்லா நாமத்திற்கும் மேலானதொரு நாமத்தை அவருக்குக் கொடுத்ததுடன், சகல அதிகாரத்தையும் மற்றும் பலத்தையும் மற்றும் வல்லமையையும் அவரது பாதங்களுக்குக் கீழ்ப் படுத்தினார். தூதர்களும் மற்றும் மனிதர்களும் அவரை ஆராதிக்கும்படிக் கட்டளையிடப்பட்டுள்ளனர் (எபே. 1:20-23; எபி. 1:6).

இன்றைய நாட்களில் நீங்களும் நானும் ஜெபிக்கும் பொழுது, நாம் "இருக்கிறவராக இருக்கிறேன்" (யாத். 3:14) என்பவருடைய நாமத்தை மட்டுமின்றி, அவருடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தையும் பரிசுத்தப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம். சகலமும் ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ள அவருடைய குமாரனைக் கனப்படுத்தாது நாம்

*பிதாவைக் கனப்படுத்த முடியாது (மத். 11:27; யோவா. 5:23). பரலோகத்தில் உள்ள தூதர்களும் கூட, ''அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" (வெளி. 5:12) என்று கூறுகின்றனர்.*

*மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று மகா தேவன் கட்டளையிட்டார் (லூக். 24:46, 47). ஜீவனுள்ள தேவனுடைய சபை பிறந்த நாளான பெந்தெகொஸ்தேயன்று, அது பிறந்த இடமான எருசலேமில், பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலிருந்து அப்போஸ்தலர்கள்மேல் வந்து இறங்கினார். அந்த நாளில், ஒவ்வொருவரும் மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று "இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி கட்டளையிடப்பட்டனர்,'' (அப். 2:38). அந்த நாள் தொடங்கி அதன் பிறகு, சீஷர்களின் ஜெபம் போன்ற எதுவும் இனி ஜெபிக்கக் கூடாததாயிருக்கின்றது. அந்த நாள் தொடங்கி, ஒவ்வொரு ஜெபமும் இயேசுவின் நாமத்தினாலேயே ஏறெடுக்க வேண்டியதாக உள்ளது (கொலோ. 3:17); வார்த்தையிலும் அல்லது செய்கையிலும் கிறிஸ்தவரின் வாழ்வுடன் தொடர்புடைய ஒவ்வொன்றும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலேயே செய்யப்பட வேண்டியதாக உள்ளது. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை ஒவ்வொரு நாவும் அறிக்கையிட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது (பிலி. 2:9). அது பிதாவின் நாமத்திற்குப் பின்னடைவாக இருப்பதில்லை; அதற்கு மாறாக, குமாரனைக் கனம் பண்ணாதவன் அவரை அனுப்பியவரையும் கனம் பண்ணாதிருக்கிறான் என்று தேவன் விதித்துள்ளார் (யோவா. 5:23). எனவே, நீங்கள் இயேசுவின் நாமத்தைப் பரிசுத்தப்படுத்தி, அவரைப் பின்பற்றும் பொழுது உண்மையில் நீங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தப் படுத்துகின்றீர்கள்.*

---

*குறிப்புகள்*

[1]Shakespeare, *Romeo and Juliet,* act 2, scene 2. [2]William Gesenius, *A Hebrew and English Lexicon of the Old Testament,* trans. Edward Robinson, ed. Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs (Oxford: Clarendon Press, 1957), 217. [3]*எந்த ஒரு மனிதரும் தம்மை "சங்கைக்குரிய"* ("reverend") *என்று அழைக்க அனுமதிக்கக் கூடாதென்பதற்கு நிரூபணம் என்பதாக இவ்வசனமானது அடிக்கடி தவறாகப் பயன்படுகின்றது. சங். 111:9ல் போதிக்கப்படவில்லையென்றாலும் கூட, பிரசங்கியார்கள் "சங்கைக்குரிய" அல்லது "அதி மிகவும் சங்கைக்குரிய" அல்லது "பிதா"* (Father) *அல்லது வேறு எந்த மதப் பட்டங்களாலும் அழைக்கப்படுவதை மறுத்து விட வேண்டும். சிலவேளைகளில் "சகோதரர்"* ("brother") *என்பது கூட ஒரு பட்டப் பெயராகப் பயன்படுத்தப்படுகின்றது, ஏனெனில் பிரசங்கியாரை "சகோதரர் ..." என்றும் சபையில் உள்ள மற்ற உறுப்பினர்களை "திருவாளர்" என்றும் குறிப்பிடுபவர்கள் உள்ளனர். நமது கர்த்தரோ மதத்தில் உள்ள எல்லாப் பட்டப் பெயர்களையும்*

*கண்டனம் செய்தார்: "நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்" (மத். 23:8, 9).*

# “இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் உம்முடையவைகளே”

ASV வேதாகமத்தில் மத். 6:9-13ல் உள்ள சீஷர்களின் ஜெபமானது “தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்” என்பதுடன் முடிவடைகின்றது. இருப்பினும் NASB வேதாகமமானது (தமிழ் மொழிபெயர்ப்பும் கூட) பின்வரும் அழகிய முடிவுரையை உள்ளடக்குகின்றது: “... ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென்” (மத். 6:13).

இந்த வார்த்தைகள் ஏவப்பட்டிராத சேர்க்கை என்று J.W. மெக்கார்வி அவர்கள் முற்றிலும் நம்பினார். அவர், ‘‘இந்தக் கோட்பாடானது/மதஉபதேசமானது நல்லதொரு அடிப்படையில் இடைச் செருகல் என்ற வகையில் புறக்கணிக்கப்படுகின்றது’’ என்று அவர் கூறினார்.[1] ASV மொழிபெயர்ப்பாளர்கள், இந்தக் கடைசி வார்த்தைகளை உள்ளடக்கியதற்குச் சில ஆதாரங்கள் உள்ளன என்று நாம் அறியும்படிக்கு விரும்பினார்கள், ஏனெனில் (இவ்விடத்தில்) அவர்கள் கொடுத்துள்ள அடிக்குறிப்பில், “சில பழங் காலத்தவை உட்படப் அதிகாரமுடையவர்கள் பலர்/அங்கீகரிக்கப்பட்ட பிரதிகள் பல சற்று மாறுபாட்டுடன், இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென் என்று சேர்த்துள்ளனர்” என்று வாசிக்கின்றோம்.

நன்கு பழக்கமான இம்முடிவுரையைக் கொண்டுள்ள அந்தப் பழங்காலத்திய அங்கீகரிக்கப்பட்ட பிரதிகளில் சில மிகவும் மதிக்கக் கூடியவைகளாகும். புதிய ஏற்பாட்டின் கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளில் காணப்படும் வார்த்தைகள் (அது வாஷிங்டன் D.C.யில் காக்கப்பட்டதால்) “W” அல்லது “Washington” என்று அழைக்கப்படுகின்றன. ஆல்பர்ட் ஹக்[2] அவர்கள் “W” கையெழுத்துப் பிரதியின் காலம் 5ம் நூற்றாண்டென்று கூறுகையில், *International Standard Bible Encyclopedia*[3] என்ற புத்தகமானது இது “பெரும்பாலும் 4ம் நூற்றாண்டாயிருக்கச் சாத்தியமுண்டு” என்று கூறுகின்றது. இந்த நீண்ட முடிவு *Theta*[4] (ஏழு மற்றும் ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தியது) என்ற கிரேக்கக் கையெழுத்துப் பிரதியிலும் உள்ளது. சமீபத்திய கல்வித்துவமானது *Theta*வுக்கு அதிகப்படியான பலத்தைக் கொடுக்கின்றது. பழைய இலத்தீன் கையெழுத்துப் பிரதியான *f* என்பதிலும் புகழ் பெற்ற/நன்கு பழக்கப்பட்ட

*இந்த முடிவுரை காணப்படுகின்றது, இந்தப் பிரதி ஆறாம் நூற்றாண்டின் காலத்தியது ஆகும். மேலும், இது Peshitta Syriac என்ற பிரதியிலும் தோற்றம் அளிக்கின்றது, இதைப் பற்றி மெக்கார்வி அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்:*

> *நமது யுகத்தின் இரண்டாம் நூற்றாண்டில் இது ஏற்படுத்தப் பட்டதென்று நிரூபிக்கப் பல ஆதாரங்கள் இணைந்துள்ளன, மற்றும் இது தொடக்க கால எழுத்தாளர்களினுடையவைகளில் இருந்து ஒரு நூற்றாண்டு கூட முழுமையடையாத கிரேக்க வசனப் பகுதியில் இருந்து, அதாவது புதிய ஏற்பாட்டிலிருந்து அதன்படி மறுவுருவாக்கப் பட்டுள்ளது. இதன் காலத்திலிருந்து, இன்றைய காலம் வரைக்கும் இதுவே சீரியா கிறிஸ்தவர்களின் பொது வேதாகமமாக இருந்துள்ளது, மற்றும் அவர்கள் இதைத் தங்களின் தனிப்பட்ட ஆராதனைக்கு மட்டும் பயன்படுத்தியுள்ளனர் ... வேதாகமத் திறனாய்வு நோக்கங் களுக்கு இதுவே எல்லா பதிப்புக்களிலும் அதிகம் மதிப்புடையதாக உள்ளது.*[5]

*இந்த அழகிய வேத உபதேசமானது பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் இருப்பினும், மிக முக்கியமான பிரதிகள் இதை விட்டு விடுகின்றன. இருப்பினும், ஆராய்வில் உள்ள வார்த்தைகளினால் விளக்கப் படும் சிந்தனைகள் வசன ரீதியானவைகளாய் உள்ளன (1 நாளா. 29:11; 2 தீமோ. 4:18; யூதா 25 ஆகியவற்றைக் காணவும்). இந்தப் பதமானது ஒரு சேர்க்கை என்று எவரும் நிச்சயப்படுத்த முடியாதாகையால், இதற்கென்று ஒப்புவிக்கப்படும் ஒரு பாடமானது நிச்சயமாகவே வீணாய்ச் செலவானதாக இருக்காது.*

*''இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்'' என்று நீங்கள் கூறும் பொழுது, வியப்புணர்வு, துதி மற்றும் பயபக்தி ஆகியவை உங்கள் இருதயங்களில் நிறைய வேண்டும். நீங்கள் சுயாதீனத்தின் உணர்வு ஒவ்வொன்றையும் துறந்து விட்டு, உங்களை முழுமையாகத் தேவனுடைய பாதங்களில் கிடத்து கின்றீர்கள். உங்கள் நாவானது முகமனான கூற்றினைப் பெருக்கெடுக்கச் செய்கின்றது. இது மனப்பாடம் செய்யப்பட்ட ஒரு ஜெபமாக ஒரு கூட்டத்திலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ மறுபடி மறுபடி கூறப்படும் பொழுது வார்த்தைகள் ஏளனம் செய்பவைகளாகவும் வீணானவைகளாகவும் இருக்கின்றன - ஆனால் இவைகள் தாழ்மையான மற்றும் நன்றி நிறைந்த ஒரு இருதயத்தின் ஆழங்களில் இருந்து வரும் பொழுது கனப்படுத்துதலுக்கு இதைக் காட்டிலும் மேன்மையான குறிப்பு வேறெதுவும் இருப்பதில்லை.*

## *"இராஜ்யத்தின்" அர்த்தம்*

*"இராஜ்யம் உம்முடையதே" என்று நீங்கள் கூறும் பொழுது, நீங்கள் எதனை அர்த்தப்படுத்துகின்றீர்கள்? இயேசு தம்முடைய சீஷர்களுக்கு*

ஜெபிக்கக் கற்றுத் தந்த பொழுது இராஜ்யம் இருந்ததில்லை என்று நாம் அறிகின்றோம். இராஜ்யம் வருவதாக என்று அவர்கள் ஜெபிக்க வேண்டு மென்று அவர் விரும்பினார். அப்படியானால், ஏற்கனவே இராஜ்யமானது இருந்துள்ளதாகவும், அது தேவனுக்குரியதாகவும் இயேசு பேசிய இந்த நிறைவு வேண்டுகோளானது எதனை அர்த்தப்படுத்துகின்றது? ஜோசப் ஹென்றி தாயெர்[6] அவர்கள், "இராஜ்யம்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்க வார்த்தையான basileia என்பது "ஒரு இராஜ்யம்" என்பதை மட்டும் அர்த்தப்படுத்துவதாயிராமல், "ராஜரீக வல்லமை, அரசத்துவம், ஆளுகை, அதிகாரம்" ஆகியவற்றையும் அர்த்தப் படுத்துவதாய் உள்ளது என்று கூறினார். அப்பொழுது basileia இருந்ததில்லை, ஆனால் அது (வருமென்று) வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்தது ("உம்முடைய ராஜ்யம் வருவதாக"; மத். 6:10). இயேசுவானவர் தம்முடைய இராஜ்யமானது ஜெபத்தின் ஒரு முக்கிய கருத்து மூலமாய் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தம்முடைய சீஷர்களிடம் கூறினார். ஏற்கனவே இருந்துள்ள ராஜ்யமும் உண்டு ("ராஜ்யமும் ... உம்முடையவைகளே"). அது என்ன? நிச்சயமாக இது தேவன் (பின்னாளில்) ஏற்படுத்துவார் என்று தானியேல் கூறிய ராஜ்யம் அல்ல (தானி. 2:44); ஏனெனில் கி.பி. 30 பெந்தெகொஸ்தே நாளுக்கு நீண்ட நாட்கள் முன்னதாகவே தேவனுடையதாயிருந்த ஒரு இராஜ்யமானது ஏற்கனவே இருந்துள்ளது. ஒரு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக, தாவீது தேவனைத் துதிக்கையில், "கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது" (1 நாளா. 29:11) என்று கூறியிருந்தார். சீஷர்களுடைய ஜெபத்தின் கடைசி வேண்டுகோளானது தாவீதின் சிந்தையில் இருந்த அதே விஷயத்தைப் பற்றியதாகவே இருக்க வேண்டும்; அந்த சங்கீதக்காரருடைய அர்த்தப்படுத்துதலானது, தாயெர் அவர்களால் தரப்பட்ட பின்வரும் அர்த்தம் போன்றதாகவே இருந்திருக்க வேண்டும்: "ராஜரீக வல்லமை, அரசத்துவம், ஆளுகை, அதிகாரம்."[7]

பின்னாளைய இந்த அர்த்தப்படுத்துதலானது (நமக்குக்) கொடுக்கின்ற சிந்தனை என்ன? இது, தேவனுடைய அரசாட்சியின் கீழேயே ஒவ்வொன்றும் இருக்கின்றன என்று அர்த்தப்படுத்துகின்றது: "மாட்சிமை யும், வல்லமையும், மகிமையும் ஜெயமும், மகத்துவமும் உம்முடையவை கள்." இது தேவனுடைய அகிலமாய் உள்ளது, இங்குள்ள ஒவ்வொன்றும் அவருடைய கட்டளையினால் அல்லது அனுமதியினால் மட்டுமே உள்ளன. அவர் எல்லையற்ற ராஜரீகம் உடையவராய் இருக்கின்றார். வேதாகமத்தின் தேவனுக்கு நாம் இவ்வகையான அதிகாரத்தைக் குறிப்பிடும் பொழுது, நாம் பரலோகம் மற்றும் பூலோகம் ஆகியவற்றின் ஒரே தேவனைக் கனப்படுத்து கின்றோம். "சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே" (சங். 96:5) என்று நாம் சத்தமிடுகின்றோம். அவைகளால் காணவோ, கேட்கவோ அல்லது உணரவோ முடியாது (தானி. 5:23). மேட்டிமை மற்றும் புத்திக் கூர்மை (சுய தெய்வமாக்கிக் கொள்ளுதல் மற்றும் சிந்தையை ஆராதித்தல்) ஆகியவற்றின் தேவர்கள் வீணாகவும் பெலவீனமாகவும் உள்ளன. நாம் எதில் நிலைநிற்கின்றோம் என்று தேவன் அறிவதற்கு நாம் அனுமதிக்கின்றோம்:

*வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு; இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தர்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு; அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம் (1 கொரி. 8:56).*

*கர்த்தர் இராஜரிகம் பண்ணுகிறார் (சங். 93:1).*

*நீர் ஒருவரே தேவன் (சங். 86:10).*

*பாபிலோனியப் பாரம்பரியத்தின் பெருவெள்ளச் சண்டைகள் மற்றும் தங்களுக்குள் கோபம் கொண்டிருத்தல்[8] ஆகியவற்றுடன் அவர்களின் தேவர்கள்[9] தொடர்பு கொண்டிருக்க, வேதாகமத்தின் தேவன், நோவா துன்மார்க்கர் மற்றும் இந்த முழு உலகிற்கும் பொறுப்பாளராயிருந்தார். பாபிலோனிலிருந்து வந்த கதைகள் அதன் தேவர்களை எஜமானர்களாக உயர்த்துவதில்லை; அவர்கள் தண்ணீர்களண்டையில் பயமடைந்தனர், "நாய்களைப் போலக் கோழைத்தனம்" கொண்டார்கள். "இராஜ்யம் உம்முடையதே" என்று நீங்கள் கூறும் பொழுது, சட்டப்படி நீங்கள், "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா. 6:4) என்று கூறுகின்றீர்கள். காற்றும் கடலும் அவரது ஆணைப்படி செய்கின்றதை நீங்கள் ஒப்புக் கொண்டு, எல்லா மனிதர்களும் "அவர் மேய்ச்சலின் ஆடுகள்" (சங். 100:3) என்று இருப்பதாகக் கூறுகின்றீர்கள்.*

*பெர்ஸியாவின் பழங்கால மதமான ஜொராஸ்ட்ரியனிஸம் என்ற மதத்தில் இரு நேரெதிர்த் தெய்வங்கள் இருந்தன:* Ormazd *(நன்மை மற்றும் ஒளிக்குரியது) மற்றும்* Ahriman *(தீமை மற்றும் இருளுக்குரியது).[10] இதற்கு முரணாக, வேதாகமமானது ஒரே ஒரு தேவனை மட்டுமே அறிந்துள்ளது, அவர் தம் ஆளுகையானது காலம் மற்றும் வெளி, மனம் மற்றும் பொருள் மற்றும் ஆத்துமா ஆகியவற்றில் நீக்கமற நிறைந்துள்ளது. இது அவரை, உலகத்தில் உள்ள தீமைக்குப் பொறுப்பாளராக்குகின்றதா? இல்லை, அவர் நியாயக் கேடில்லாத சத்தியமுள்ள தேவன் (உபா. 32:4); அவர் நியாயமும் நேர்மையும் உள்ளவராயிருக்கின்றார். தீமை ஏற்படுவதை அவர் அனுமதிக்கையில், "ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன், சமாதானத்தைப் படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்" (ஏசா. 45:7) என்று அவர் கூறுமளவுக்கு இராஜ்யமும், உலகத்தின் மீது ஆட்சியதிகாரமும் அவருக்கே முழுமையாக உரிமையுடையதாக உள்ளது.*

*பெர்சிய மதத்தைப் பற்றி அறிந்திருந்த கோரேஸ் அரசரிடத்திலும் தேவன் அந்த வார்த்தைகளைப் பேசினார் என்பதை நினைவில் வையுங்கள். ஆட்சியுரிமை தேவனுக்கு மட்டுமே உரியது என்பதை அந்த அரசரும் நாமும் அறியும்படி தேவன் அனுமதித்தார்: "நானே கர்த்தர், வேறொருவர்*

இல்லை; என்னைத் தவிரத் தேவன் இல்லை" (ஏசா. 45:5).

தேவனுடைய ஆளுகைக்கு எதிராக ஒரு தூதனே கலகம் செய்தாலும், அவனும் கூட அப்பொழுதும் தேவனுடைய கரத்தின் கீழ்தான் இருக்கின்றான் (யூதா 6). அவன் பரலோகத்தை விட்டு வெளியே தள்ளப் பட்டு மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளான். இப்படிப்பட்டதொரு கலகக்காரனும், இராஜ்யம் தேவனுடையதே என்று அறிகின்றான்; நடுக்கத்தில் அவன் தன்னை நெருங்குகின்ற சித்திரவதையைப் பற்றிக் கவலைப்படுகின்றான். ஆதாமையும் ஏவாளையும் தோட்டத்திலே சோதித்தது போல் மக்களைச் சோதிப்பதற்கு அவன் அனுமதிக்கப்படலாம். யோபுவைப் போல ஒருவரைச் சோதிப்பதற்குக் கூட அவன் அனுமதிக்கப் படலாம், ஆனால் அப்படிப்பட்டதொரு சோதனையானது கட்டுப்பாட்டு களின் கீழ் காக்கப்பட்டுள்ளது. பரலோகத்தின் தேவன் முழுமையான பொறுப்பில் உள்ளார், மற்றும் மனமில்லாத சாத்தானும் கூட அவருக்குக் கீழ்ப்படிந்தாக வேண்டும். தேவன் எவற்றையெல்லாம் அனுமதிக்கின் றாரோ, அவைகளையெல்லாம் செய்வதற்குச் சாத்தான் துள்ளிக் குதிக்கின்றான்; ஆனாலும், தேவன் கட்டுப்படுத்துதலைக் காத்துக் கொண்டு, தமது மேலான திட்டத்தில் அவையெல்லாவற்றையும் செயல்படும்படி செய்கின்றார். இதை அவர் எவ்விதம் செய்ய முடியும்? இராஜ்யமும், ஆட்சி யுரிமையும் அவருடையவைகளாதலால் அவர் இதை செய்ய முடியும். அவராலே, அவர் மூலமாக மற்றும் அவருக்கென்றே சகலமும் இருக்கின்றன. அவருடைய அனுமதியின் பேரிலேயே அரசர்கள் ஆளுகின்றனர், ஏனெனில் அவர் இராஜாதி இராஜாவாக எல்லாருக்கும் மேலாக உயர்த்தப் பட்டிருக்கின்றார்.

கி.பி. 30ல் பெந்தெகொஸ்தே நாளில் இருந்து, தேவன் பரலோகத்திலும், பூலோகத்திலும், பூமியின் கீழும் உள்ள (தம்முடைய) சகல அதிகாரத்தையும் தமது ஒரே பேறான குமாரனிடத்தில் மனமுவந்து கையளித்தார் (மத். 28:18; பிலி. 2:10). அந்த குமாரனானவர் தமது சொந்த இராஜ்யத்தில் (இராஜ்யத்தின் புத்திரர்களாக வெளியே அழைக்கப்பட்டவர்களிடத்தில்) மட்டுமின்றி, பூமியின் இராஜாக்களுக்கும் அதிபதியாய் இருக்கின்றார் (வெளி. 1:5). இது போன்று காலத்தின் முடிவுரை அவர் இராஜ்யத்தைத் தம்முடைய பிதாவினிடத்தில் ஒப்படைக்கும் வரைக்கும் தொடர்ந்து ஆளுகை செய்வார் (1 கொரி. 15:24).

இயேசுவுக்குச் சகல அதிகாரத்தையும் கொடுத்தவர் (தேவன்) நிச்சயமாகவே தம்மைத் தம்முடைய குமாரனுக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளவில்லை. குமாரன் இராஜ்யத்தை மகா தேவனுக்கு ஒப்புக் கொடுக்கும்பொழுது, அவர் (குமாரன்) தம்மையும், நம்மையும் கூட அவருக்கு ஒப்புக் கொடுப்பார், மற்றும் தேவனே "சகலத்திலும் சகலமுமாய்" இருக்கும்படி (1 கொரி. 15:28) எல்லாரும் மீண்டுமாய் மகா தேவனுக்குக் கீழ்ப்பட்டிருப்போம். சொல்லி முடியாத அவரது வரங்களுக்காகவும் கிருபைக்காகவும் நன்றிகள்! நமது தேவனுடைய ஞானத்திற்காகவும் நல் ஆலோசனைக்காகவும் அவருக்கு ஸ்தோத்திரம்!

*கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை*
*ஸ்தாபித்திருக்கிறார்;*
*அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.*
*கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய*
*வசனத்தின்படி செய்கிற*
*பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே,*
*அவரை ஸ்தோத்தரியுங்கள்.*
*கர்த்தருக்குப் பிரியமானதைச் செய்து,*
*அவர் பணிவிடைக்காரராயிருக்கிற அவருடைய சர்வ*
*சேனைகளே,*
*அவரை ஸ்தோத்தரியுங்கள்.*
*கர்த்தர் ஆளுகிற எவ்விடங்களிலுமுள்ள அவருடைய சகல*
*கிரியைகளே,*
*என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி!*
*(சங். 103:19-22).*

## "வல்லமையும்"

**இயல்பான வல்லமை**

*தேவனுடைய இராஜ்யத்தின் அர்த்தத்தை நாம் தியானித்திருக்கையில், நாம் சீஷர்களின் ஜெபத்தில் கடைசி வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டு உள்ள இரண்டாவது விஷயத்தைப் பற்றியும் சற்றுக் கற்றுக் கொண்டிருந்திருக்கிறோம்: "வல்லமை." சர்வ வல்லவரின் வல்லமையைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது, நாம் திகைப்படைந்து நிற்கின்றோம்! அவர் ஆச்சரியமான நமது பூமியைப் படைத்து, சிந்தை மற்றும் பொருள் ஆகியவற்றால் அதை நிரப்பியதோடு, அதை அந்தரத்திலே தொங்க வைத்தார் (யோபு. 26:7). மனிதர்களின் மிக வலிவார்ந்த தொலைநோக்கிக் கருவிகளாலும் கூட அளவிட முடியாத அளவுகள் கொண்ட அவருடைய இயல்பான அண்டத்தில் இது ஒரு மிகச் சிறிய அம்சமாகவே உள்ளது. மணிக்கு ஆயிரம் மைல்கள் வேகத்தில் நமது உலகம் அதன் அச்சில் சுழலும்படி செய்து, இரவையும் பகலையும் ஏற்படுத்திய தோடு மட்டுமின்றி, அதே வேளையில் நமது உலகமானது கோடிக்கணக் கான மைல்கள் நீளமுள்ள கண் காணாப் பாதையில் சூரியனைச் சுற்றி வினாடிக்குப் பதினெட்டு மைல்கள் வேகத்தில் பயணம் செய்யும்படியும் அவர் இதைக் காக்கின்றார். புளூட்டோ என்ற கிரகத்திற்கு அவர் நியமித்துள்ள பாதையானது 3.5 லட்சம் கோடி மைல்கள் தூரமுள்ளதாகும் - இது சூரியனை ஒருமுறை சுற்றி வருவதற்கு 248 ஆண்டுகள் ஆகுமளவுக்கு அவ்வளவு தொலைவுடையதாகும். ஒரு வானொலிச் செய்தியானது ஒரு வினாடியில் இந்தப் பூமியை ஏழு முறை சுற்றி வருகின்றது, ஆனால் இதே செய்தியானது மிக அருகாமையில் உள்ள நட்சத்திரத்திலிருந்து அனுப் பப்படுமானால், அச்செய்தி பூமியை வந்தடைய நான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் தேவைப்படும்படியான அவ்வளவு தொலைவில் அந்த நட்சத்திரம் உள்ளது. ஏசாயா 40:26 வசனமானது, "உங்கள் கண்களை*

ஏறெடுத்துப் பாருங்கள்; அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவை களின் சேனையை இலக்கத் திட்டமாகப் புறப்படப் பண்ணி அவைகளை யெல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தி னாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது'' என்று கூறுகின்றது. இது மாசசூசட் மாநிலத்தில் உள்ள வில்லியம்ஸ் டவுனின் வில்லியம்ஸ் கல்லூரியில் உள்ள ஹாப்கின்ஸ் வானவியல் ஆய்வுக் கூடத்தின் சுவரில் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த அண்டத்தின் ஆச்சரியப்படத் தக்க அளவைக் குறித்து தாவீதுடன் சேர்ந்து ஆச்சரியத்தில் மூழ்குவதற்கு ஒருவர் ஆவியினால் ஏவுதல் பெறத் தேவையில்லை, ஆனால் இயற்கையான கண்ணோக்கைப் பெற்றிருந்தாலே போதுமானதாகும். அவர் (தாவீது) பின்வருமாறு கூறினார்:

*உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய*
*வானங்களையும்,*
*நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான்*
*பார்க்கும் பொழுது,*
*மனுஷனை நீர் நினைக்கிறதற்கும்,*
*மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன்*
*எம்மாத்திரம் என்கிறேன்*
*(சங். 8:3, 4; 33:6-9ஐயும் காணவும்).*

**ஆவிக்குரிய வல்லமை**

தேவனுடைய இயல்பான படைப்பை உண்டாக்கிய வல்லமையானது ஆழ்ந்த பயபக்திக்குரிய ஏவுதலாய் இருக்கையில், பாவிகளைப் பரிசுத்தவான் களாக்கும் அவரது வல்லமையானது தாழ்மையானதாகவும் மெய்சிலிர்க்கச் செய்வதாகவும் இருக்கின்றது. ஒரு அணுவினுள் தேவன் வைத்த சக்தி யாவும் - இரட்சிப்புக்கான தேவ பலனாயுள்ள - சுவிசேஷத்தின் ஒரு எளிய பிரசங்கத்தின் வல்லமையை ஏற்படுத்த முடியாது. குண்டுகள் பயமுறுத்த லாம், ஆனால் அவைகள் மனமாற்றமடையச் செய்ய முடியாது. ஒரு பாவியினிடத்தில் தேவனுடைய அன்பைப் பற்றி அவருடைய தாழ்மை யான பிள்ளையொருவர் அமைதியாகப் பேசுவதினால் சாதிப்பதை பூமிக் குரிய எந்த வல்லமையினாலும் செய்ய முடியாது. தேவனுடைய அந்தத் தாழ்மையான ஊழியர் தேவனுடன் இணைந்து ஊழியம் செய்பவராய் இருக்கின்றார்; ஒரு மனிதரின் ஆத்துமாவைத் தாங்குவதற்காக தேவனு டைய வல்லமையினால் கொண்டு வரப்பட்ட கருவியாக அவர் விளங்குகின்றார். இயேசு சிலுவையில் உயர்த்தப்பட்டதைப் பற்றியதும், அவர் (இயேசு) கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டது பற்றியதுமான நற்செய்தியை அவர் (ஊழியக்காரர்) முன் வைக்கின்றார். இளகிய மனமுடையவர் ஒருவர்மேல் அந்த சுவிசேஷமானது முழு வலிவுடன், செயலாக்கமாய்க் கிரியை செய்கின்ற பொழுது, அவர் ஞானஸ்நானத்தில் தம்மையே இயேசுவுக்கு ஒப்புக்கொடுப்பதிலிருந்து உறவினரோ மற்றும் ஏளனம் செய்பவரோ அவரைத் தடுத்து நிறுத்த முடியாது. தேவனுடைய வல்லமையானது - இது வடகாற்றில் அல்லது சூரியனின் கதிர்களில் அவர்

*கொண்டுள்ள வல்லமையிலிருந்து மாறுபட்டது, ஆனாலும் தேவனுடைய வல்லமை மிகவும் வலிவானதாக இருந்து - (தேவ சாயலாகப் படைக்கப் பட்டும்) - சுயநலமுள்ள பாவத்திருக்குள்ள மனிதரை ஒரு புதிய சிருஷ்டி யாக்க முடிகின்றது! தேவன் ஆச்சரியப்படத் தக்கதாக கிரியைகள் செய்கின்றார் (சங். 86:10ஐக் காணவும்). ஒரு செயலற்ற மனிதர், பரலோகத்தின் வல்லமையினால் நீதியிலும், உண்மையான பரிசுத்தத்திலும் மாற்றப்பட முடியும்.*

***நித்தியமான வல்லமை***

*நாம் மீண்டுமாக மாம்சத்திற்குப் புறம்பான வாழ்க்கை வாழ்வதால், நாம் களிகூருகின்றபடியினால், நாம் மறுபடியும் பிறந்துள்ளதால் அளவற்ற நன்றி செலுத்துதலில் பெரு மகிழ்வடைகின்றோம். ஏனென்றால், ''விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மேன்மையான மகத்துவத்தினால்'' (எபே. 1:19) இது உண்மையாய் உள்ளது. நமது சுதந்தரமானது, ''தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே ...'' (எபே. 1:19அ) தேவனுடன் என்றென்றும் ஜீவிப்பதாக உள்ளது. "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று" நாம் அறிந்திருக்கிறோம் (2 கொரி. 4:14) மற்றும் எல்லாம் நம்முடையவைகளே என்றும் நாம் அறிகின்றோம் (1 கொரி. 3:21).*

*பாவத்தினால் சபிக்கப்பட்டு மற்றும் அழியும் நிலையில் உள்ள இந்த இழிந்த சரீரங்களை அவர் எவ்விதத்தில் தமது மகிமையுள்ள சாயலுக் கொப்பாக்குவார்? அது எப்படியென்று நாம் அறியோம், ஆனால் "நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய" (எபே. 3:20) அவருடைய வல்லமையில் நாம் விசுவாசம் கொண்டுள்ளோம். எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத் தக்க அவருடைய வல்லமையான செயலின்படியே (பிலி. 3:21), நாம் அவிசுவாசத்தினால் அலைக்கழிக்கப்படாது, விசுவாசத்தில் பலமாய் வளர்ந்து, தேவனுக்கு மகிமை செலுத்துகின்றோம் (ரோமர் 4:20). நமது சரீரங்களை உயிப்பிக்கும் வல்லமையை அவர் பெற்றிருப்பது மட்டுமே நாம் ஆதங்கப்படும் விஷயமாய் இருப்பதில்லை, ஆனால் விசுவாசமற்ற ஆத்துமாக்களை அவர் எரி நரகத்தில் தள்ள வல்லமையுள்ளவராய் இருக்கின்றார் என்பதும் நாம் ஆதங்கப்படும் விஷயமாய் இருக்கின்றது (லூக். 12:5). அவர் அவ்வாறு செய்ய விரும்புகிறவரல்ல, ஆனால் அவர் அந்த வல்லமையுடையவராய் இருக்கிறார்.*

## "என்றென்றும் மகிமை"

*தேவனுடைய ஆட்சித்துவமானது கேள்வி கேட்கப்பட முடியாததாக*

உள்ளது, மற்றும் அவரது வல்லமையானது மகா மேன்மையானதாக உள்ளது. அவரது மகிமையானது பிரகாசமுள்ளதாக, எந்த ஒரு சலவைத் தொழிலாளியும் உண்டாக்க முடிகின்றதைக் காட்டிலும் அதிகம் வெண்மையானதாக உள்ளது. மனிதர் அல்லது தூதர் எவரும் உண்டாக்கக் கூடிய ஒவ்வொரு கனமும், நம்மைப் படைத்து தமது கிருபையினாலே மீட்ட அவருக்கே வளமாக உரித்தாகுகின்றது. எல்லா மகிமையும் பிதாவுக்கே உரித்தானது ஏன் என்பதற்கான பல காரணங்களில், அவர் சபையை வடிவமைத்தார் என்பது பிரதானமானதாக உள்ளது.

நேர்த்தியாகத் தைக்கப்பட்டு, அழகான வடிவம் அமைக்கப்பட்ட மெத்தை விரிப்பொன்றை நான் கண்ணோக்குகையில், அதைச் செய்தவர் யாரென்று நான் காணாதிருப்பினும், தானாகவே நான், "இந்த மெத்தை விரிப்பின் புகழ்ச்சி யாவும் அந்தப் பெண்மணிக்கே உரித்தாவதாக" என்று நினைக்கின்றேன். காலத்தின் நிறைவேற்றத்தையும், சபையையும் - மீட்கப்பட்டு, மறுபடி பிறந்து, அழைக்கப்பட்டவர்களின் கூட்டத்தையும் - தூதர்களும் பிரதான தூதனும் பரலோகத்திலிருந்து கீழே நோக்கிப் பார்க்கின்றனர். வான மண்டலங்களில் உள்ள துரைத்தனங்களும் அதிகாரங்களும் தேவனுடைய சபையில் உள்ள பரிசுத்தமாக்கப்பட்ட மக்களைக் காணும் பொழுது, அவர்கள் தேவனுடைய ஞானம் வளம் நிறைந்த காட்சி வகையில் முன் வைக்கப்பட்டதைக் கண்டனர். உலகத் தோற்றத்திற்கு முன்பே தேவன் தம்முடைய சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பதைப் பற்றி வியந்திருந்த அவர்கள், அவருடைய ஞானம் தெளிவாகக் காட்டப்பட்டதையாவது காண முடிந்தது, ஏனெனில் பாவிகள் பரிசுத்தவான்களாகக் கூடிய வழி ஒன்றினைத் தேவன் கண்டு பிடித்திருந்தார். மனிதரோ அல்லது தூதரோ சபையின் மகா மேன்மையைக் கருதும் பொழுதெல்லாம், அவர் (மனிதர் அல்லது தூதர்) வெள்ளைச் சிங்காசனத்தின் பக்கமாய்த் திரும்பி, தமது முக்காட்டை நீக்கி விட்டு, "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (எபே. 3:21) என்று கூறுவாராக.

## "ஆமென்"

சீஷர்களின் ஜெபத்தில் உள்ள நிறைவு வேண்டுகோளின் கடைசி வார்த்தையானது "உறுதிப்படுத்த, ஆதரவு கொடுக்க" என்று அர்த்தப்படும் எபிரெய வார்த்தையொன்றில் (ஆமென்) இருந்து வருகின்றது. வேதாகமம் முழுவதிலும் இது பின்வரும் அர்த்தம் கொண்டுள்ளது: "அது அப்படியே ஆகட்டும்"; "ஆகட்டும் அப்படியே " (உபா. 27:15-26; 1 நாளா. 16:36; நெக. 8:6; ரோமர் 1:25; எபி. 13:21). நீங்கள் சீஷர்களின் ஜெபத்தை ஆழ்ந்து சிந்திக்கையில் இது உங்களுக்கு புதிய, உற்சாகமான அர்த்தம் தருவதாக.

> கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவை களெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடை

*யது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர் (1 நாளா. 29:11; மற்றும் யூதா. 24, 25ஐயும் காணவும்).*

---

*குறிப்புகள்*

[1]J. W. McGarvey, *The New Testament Commentary,* vol. 1, *Matthew and Mark* (Lexington, Ky.: N.p., 1875; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 64. [2]Albert Huck, *Synopsis of the First Three Gospels,* 9th ed., ed. Hans Lietzmann, trans. Frank Leslie Cross (New York: American Bible Society, 1936), XI. [3]*கிரேக்கக் கையெழுத்துப் பிரதியின் பெயரானது கிரேக்க அகர வரிசையின் எட்டாவது எழுத்தில் இருந்து வருகின்றது.* [4]Charles Fremont Sitterly, "Text and Manuscripts of the New Testament" in *International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 5:2953. [5]J. W. McGarvey, *Evidences of Christianity* (Cincinnati: Standard Publishing Co., 1886), 34. [6]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901: reprint ed., Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 96-97. [7]Ibid. [8]George Frederick Wright, "The Deluge of Noah" in *International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids. Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 2:823. [9]*நவீனத் தத்துவவாதியான* S. R. Driver *அவர்கள் வேதாகமத்திற்குப் பின்வரும் புகழுரை அளித்தார்: "(படைப்பு மற்றும் வெள்ளப் பெருக்கு பற்றிய) பாபிலோனிய எடுத்துரைப்புகள் பல தெய்வ வணக்கம் கொண்டவைகளாயிருக்கையில், அவைகளைப் பற்றிய வேதாகம எடுத்துரைப்புகள் (ஆதி. 1 மற்றும் 6-9) தூய மற்றும் மேன்மைப் படுத்தப்பட்ட ஒரு தெய்வ வணக்கத்தின் வாகனமாக ஏற்படுத்தப் பட்டன; ..."* (Quoted in J. McKee Adams, *Ancient Records and the Bible* [Nashville: Broadman Press, 1946], 143). [10]A. H. Newman, *A Manual of Church History,* vol. 1, *Ancient and Mediaeval Church History (To A.D. 1517),* rev. and enl. (Philadelphia: American Baptist Publication Society, 1899), 36.

# தேவனுடைய ஆவி

*பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது, ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் (ஆதி. 1:2).*

ஆதி. 1:2 வசனமானது, Ruach 'Elohim அதாவது "தேவ ஆவியானவர்" படைப்பின் போது தண்ணீரின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார் என்று கூறுகின்றது. தேவத்துவத்தின் இந்த உறுப்பினரைக் குறிப்பிடும் வகையில் உள்ள Ruach 'Elohim என்ற வார்த்தைகளின் அர்த்தத்தை நாம் படிப்போம்.

## Ruach என்ற வார்த்தையின் அர்த்தம்

Ruach என்ற வார்த்தை அதன் சந்தர்ப்பப் பொருளைப் பொறுத்து மாறுபட்ட அர்த்தங்களைப் பெற்றிருக்க முடியும். ஆதி. 1:2ன் ruachஐப் பல மொழிபெயர்ப்பாளர்கள் "ஆவியானவர்" என்பதாகத் தரவழைத்துள்ளனர். இந்த வார்த்தையானது "சுவாசிக்க" என்று அர்த்தப்படும் ஒரு வினைச் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பெயர்ச் சொல் வடிவமானது சில வேளைகளில் "சுவாசம்" என்றும் (ஆதி. 6:17; சங். 146:4[1]), சில வேளைகளில் "காற்று" என்றும் (யோபு. 41:16), மற்றும் சில வேளைகளில் வீசும் "காற்று" என்றும் (ஆதி. 8:1) மற்றும் சில வேளைகளில் "ஆவி" என்றும் (சங். 31:5) அர்த்தப்படுகின்றது.

யூதர்களின் புதிய பதிப்பானது மோசேயின் சொற்றொடரான Ruach 'Elohim என்பதை "தேவனிடமிருந்து வந்த காற்று" என்பதாகத் தரவழைக்கின்றது. "ஆவி" என்பது மிகச் சரியற்றதான மொழிபெயர்ப்பாக உள்ளதால் அல்ல, ஆனால் மொழிபெயர்ப்புக் குழுவின் தலைவரான Harry M. Orlinsky, என்பவரின் கூற்றுப்படி, யூதர்களும் மற்றவர்களும் "தேவத் துவத்தின் ஒருமைப்பாட்டைப் பிதா மற்றும் குமாரனுடன்" பரிசுத்த ஆவியானவர் பகிர்ந்து கொள்ளுகின்றார் என்பதை நம்பாதிருந்ததால் இவ்வாறு செய்யலாயிற்று என்றாகின்றது. "ஆவியென்ற வார்த்தையானது ஒரு கிறிஸ்தவ விளக்கவுரை" என்ற வகையில் புறக்கணிக்கப்பட்டது என்று பதிப்பாசிரியர் கூறினார்; அது, "படைப்பின் தொடக்கம் பற்றிய பழங்கால அருகாமை கிழக்கு நாடுகளின் வேதாகம ரீதியான பின்னணியின்" காரணமாகப் புறக்கணிக்கப்பட்டது, அது "காற்று" என்ற வார்த்தையின் பயன்பாட்டிற்கு ஆதரவாகப் பொருள் கொண்டிருந்தது. இருப்பினும், அருகாமைக் கிழக்கின் கற்பனைக் கதைகளுக்கு ஆதரவாக இருந்து கொண்டு, Ruach 'Elohim என்ற சொற்றொடரின் வேதாகமப் பயன் பாடுகளைக் கண்டு கொள்ளாது விடுதல் என்பது சரியான மொழி பெயர்ப்பைக் கண்டறிவதற்கான மிகுந்த கல்வித்திறனுள்ள அணுகு

முறையாகக் காணப்படுவதில்லை.

ஆதி. 1:2ல் ruach என்ற வார்த்தையின் சந்தர்ப்பப் பொருளை ஒருவர் ஆய்வு செய்யும் பொழுது, ruach என்ற வார்த்தையானது "தேவனுடைய ruach" என்ற சரியான உறவை ஏற்படுத்தும்படியாக 'elohim என்ற வார்த்தையுடன் பிணைக்கப்பட்டிருப்பதை அவர் காண்கின்றார். "காற்று" என்று மட்டுமே அர்த்தப்பட்டிருந்தால், "தேவனுடைய" என்ற சொற்றொடர் இணைக்கப்பட்டிருந்தது ஏன்? பழைய ஏற்பாட்டில் Ruach 'Elohim என்ற சொற்றொடர் உள்ள தொண்ணூற்று நான்கு இடங்களை ஆய்வு செய்கையில், ஆதி. 1:2 வசனப் பகுதி ஒன்றில் மட்டுமே "தேவனுடைய காற்று" என்ற மொழிபெயர்ப்பு சரியானதாக இருக்கக் கூடிய ஒரே இடமாக உள்ளது என்பதை ஒருவர் காண்கின்றார்.[2]

"தேவனுடைய ஆவியானவர்" என்பதைச் சரியான மொழிபெயர்ப்பாகச் சுட்டிக்காட்டுகின்ற வகையில், தேவனுடைய ஆவியானவர் படைப்புப் பணியில் சிலவற்றைச் செய்திருந்தார் என்பதைப் பழைய ஏற்பாட்டின் மற்ற வசனங்கள் (யோபு. 26:13 KJV; சங். 104:30) சுட்டிக் காட்டுகின்றன. அத்துடன், Ruach 'Elohim என்ற சொற்றொடரின் உடனடியான சந்தர்ப்பப் பொருளில், படைப்புப் பணியில் தேவன் ஒரு கூட்டாளியை அல்லது கூட்டாளிகளைக் கொண்டிருந்தார் என்பதை ஆதி. 1:26 சுட்டிக்காட்டுகின்றது: "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக."

Ruach என்பது ஆதி. 1:2ல் "காற்று" என்று மொழிபெயர்ப்பதற்கு வேதாகமச் சந்தர்ப்பப் பொருள் இருப்பதற்கான காரணம் எதுவும் தோன்றாததாலும், வேதவசனத்தின் உடனடியான மற்றும் பொதுவான சந்தர்ப்பப் பொருள்கள் "ஆவி" என்ற அர்த்தத்திற்கு ஆதரவாக இருப்பதாலும், ஆதி. 1:2ல் உள்ள Ruach 'Elohim என்பது "தேவனுடைய ஆவியானவர்" என்றே தரவழைக்கப்பட வேண்டியதாகின்றது. இதன்படி, Ruach 'Elohim என்ற சொற்றொடரானது தெய்வீகத்தின் ஒரு விவரிப்பாகக் கருதப்படலாம்.

## "தேவனுடைய ஆவியானவர்" என்ற சொற்றொடரின் தனிச் சிறப்பு

தெய்வீகத்தை விவரிக்கும் சொற்றொடர் என்ற வகையில் "தேவனுடைய ஆவியானவர்" என்ற சொற்றொடரானது குறைந்தபட்சம் ஆறு தனிச் சிறப்புள்ள அர்த்தங்கள் உடையதாக இருக்கின்றது.

1. தேவத்துவம். ஆதி. 1:2ல் உள்ள "தேவனுடைய ஆவியானவர்" என்ற சொற்றொடரானது தேவத்துவத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இருப்பதற்கான முதலாவது சுட்டிக்காட்டுதல் ஆகும். உண்மையில், தேவன் மூன்று "நபர்களாய்" இருந்தும் ஒரே தேவனாக இருப்பது எவ்விதம் முடிகின்றது என்பதை எவரொருவரும் முழுமையாக விளக்கப்படுத்த முடிவதில்லை. அவருடைய பண்புகள் ஆராயப்பட முடியாதவைகளாய் உள்ளன; தெய்வீகத்துவத்தின் ஆழமான சிந்தைகளைத் தேவ ஆவியானவர்

மட்டுமே அறிகின்றார் (1 கொரி. 2:10, 11). அவரைப் பற்றி மனிதர்கள் கேட்கும் ஒரு வார்த்தை எவ்வளவு தெளிவற்றதாக உள்ளது (யோபு 26:14)!

தேவனுடைய ஆவியானவரைப் பற்றி மனிதர்கள் அறிந்துள்ளது மதிப்புமிக்கதாக உள்ளது. அவர் எல்லா இடங்களிலும் இருந்தாலும், அவர் ஒரு நபராக இருக்கின்றார். அவருக்கு ஒரு சிந்தை உண்டு (ரோமர் 8:27); அவர் கேட்கின்றார் மற்றும் பேசுகின்றார் (யோவா. 16:13) மற்றும் ஆழமான உணர்வடைகின்றார் (எபே. 4:30). ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்குள் வாழ்கின்றார் (கலா. 4:6), மற்றும் அவர்களுக்காகப் பரலோகத்தில் வேண்டுதல் செய்கின்றார் (ரோமர் 8:26, 27). பாவிகளைத் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர் அழைக்கின்றார் (வெளி. 22:17).

2. தெய்வீகத்தின் இயல்பு. "தேவனுடைய ஆவியானவர்" என்ற சொற்றொடரானது தெய்வீகத்தின் இயல்பையே சித்தரிக்கின்றது: அவர் ஆவிக்குரிய ஜீவியாய் இருக்கின்றார் (யோவா. 4:24), மாம்சமும் எலும்புகளும் உடையவரல்ல (லூக். 24:39), மாம்சமும் இரத்தமும் உடையவரல்ல (1 கொரி. 15:50). ஆவியென்ற வகையில் அவர் மனிதக் கண்களுக்குக் காணப்படாதவராக இருக்கின்றார் (கொலோ. 1:15).

ஆவிக்கு மாம்சம் மற்றும் எலும்புகள் ஆகியவை இராததினால், தெய்வீகத்திற்கு நாசிகளையும், ஒரு முகத்தையும், ஒரு பின்புறத்தையும், கால்களையும், புயங்களையும், கைகளையும், காதுகளையும், கண்களையும், கண் இமைகளையும் மற்றும் இறகுகளையும் மொழிநடையிலிருந்தே பண்பாக உருவப்படுத்தப்படுகின்றன என்பது தெளிவாகும் (யாத். 15:8; 33:23; 24:10; உபா. 33:27; ஏசா. 59:1, 2; சங். 11:4; 91:4). இவைகள் உருவகமான வழிமுறையிலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டும். தேவனுடைய இயல்பானது "தொட்டு அறியக் கூடிய மனிதனைப் போலவே மாம்சமும் எலும்புகளும்" கொண்டதாகும் என்று எழுதுமளவுக்கு மதப் போதகர்கள் தவறு செய்யக் கூடியதென்பது கவலைக்குரியதாகும்.[3]

3. கண்டதும் காணாததும். "தேவனுடைய ஆவியானவர்" என்ற சொற்றொடரின் பயன்பாடானது மனிதன் ஏன் எக்காலத்திலும் தேவனைக் கண்டதில்லை மற்றும் மனிதன் ஏன் தேவனைக் காண முடிவதில்லை என்பவற்றை விளக்கப்படுத்துகின்றது (யாத். 33:20; யோவா. 1:18; 1 தீமோ. 6:16). ஆவியென்பது காண முடியாததாக உள்ளது (கொலோ. 1:15); ஆகையால், மனிதரின் கண்கள் தெய்வீகத்தின் சாராம்சத்தை ஒருக்காலும் கண்டதில்லை.

இருப்பினும் தேவனால் எல்லாம் கூடும். அவர் தம்மை சரீரப் பிரகாரமாகக் காண்பிப்பது என்பது அவருக்கு மிகச் சிறிய விஷயம் ஆகும்: ஆபிராமின் கூடார வாசலில் ஒரு மனிதனாக (ஆதி. 18:1), மோசேக்கு அக்கினியாக (யாத். 3:2), இஸ்ரவேலுக்கு கனத்த ஒரு மேகமாக (யாத். 19:9), எலியாவுக்கு ஒரு குரலொலியாக (1 இரா. 19:13), மற்றும் "இம்மானுவேல்" என்று அழைக்கப்பட்டவர் மூலம் ஒரு மனிதப் பிறவியாக (மத். 1:23; யோவா. 14:9). மனிதக் கண்கள் தேவனை இந்த இயல்பான வடிவங்களில் கண்டுள்ளன, ஆனால் தெய்வீகத்தின் சாராம்சமானது - ruach ஆவி என்பது - மனிதர்களால் காண முடியாதது ஆகும்.

*4. இறக்கக் கூடியவரல்ல. "தேவனுடைய ஆவியானவர்" என்ற சொற்றொடரானது, தெய்வீகத்துவம் என்பது இறக்கக் கூடியதல்ல என்ற இன்னொரு தனிச் சிறப்பான அர்த்தத்தைக் கொண்டதாகவும் உள்ளது. சாராம்சத்தில் தேவன் மாம்சமும் எலும்புகளும் உடையவராய் இருந்தால், அவர் இறக்கக் கூடியவராய் இருப்பார்; ஆகவே, அவரால் இறக்க முடிந்திருக்கும். ஆனால், ஆவியாய் இருத்தல் என்பதே அவரது இயல்பாக இருப்பதால், அவர் அழியக் கூடாதவராக இருக்கின்றார் (1 கொரி. 15:50). அவர் மட்டுமே சாவாமை உடையவராய் இருக்கின்றார் (1 தீமோ. 6:16).[4]*

*5. எல்லைக்குட்பட்டவரல்ல. தேவனுடைய ஆவியை எல்லைக்குட் படச் செய்ய முடியாது. அவரைப் பற்றிய வெளிப்படுத்துதலானது வானவெளியில் எல்லைப்படுத்தப்பட முடியும் மற்றும் அவ்வாறே எல்லைப் படுத்தப்பட்டுள்ளது (ஆதி. 18:33); ஆனால் தேவனுடைய சாராம்சமான, ஆவியாய் இருத்தல் என்பது ஒரு இடத்திற்குள் எல்லைக்குட்படுத்தப்பட முடியாது. மலையோ அல்லது தேவாலயமோ - வானாதி வானமோ கூட - அவரைக் கொள்ள முடியாது (1 இரா. 8:27). தேவன் இல்லாத இடம் என்று ஒன்று இருப்பதாக எந்த இடத்தையும் கூற முடியாது (சங். 139:7-12).*

*6. மனித இயல்பின் விளக்கம். "தேவனுடைய ஆவியானவர்" என்ற வார்த்தைகள் தேவ சாயலாக மனிதன் படைக்கப்பட்டது எவ்விதம் என்பதை விளக்கப்படுத்த உதவக் கூடும். தேவன் ஆவியாய் இருக்கின்றார் என்றால், மனிதரில் அவரது சாயலும் ஆவியாகவே உள்ளது. நமது சரீரங்கள் நமது பெற்றோரிடமிருந்து, நிறைவாக பூமியிலிருந்தே வந்தவைகளாய் இருக்கின்றன; ஆனால் தேவனே நம் ஒவ்வொருவருக்குள்ளாகவும் ruach, அதாவது ஆவியை உண்டாக்குகின்றார் (சக. 12:1). அவரே நமது ஆவிகளின் தகப்பனாக இருக்கின்றார்; அவரிடமிருந்தே நமது ஆவிகள் வருகின்றன, அவைகள் அவரிடத்திற்கே செல்லுகின்றன (பிர. 12:7; எபி. 12:9). மனிதர் தமது சரீரத்தைப் பெற்றிருக்கும் வரையிலும் அவரது சரீரம் முக்கிய மானதாகவும், பரிசுத்தமானதாகவும் இருந்தாலும் (1 கொரி. 6:19, 20), அது தேவசாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரின் உண்மையான இயல்பு அல்ல.*

*மாம்சமானது ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது; ஆவியே ஜீவனைக் கொடுப்பதாக உள்ளது (யோவா. 6:63). "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப் பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்" (1 கொரி. 6:13). தேவனுடைய ஆவியின் சாயலாக உருவாக்கப்பட்ட மனித ஆவியே அதில் தங்கியுள்ளது.*

*தெய்வீகத்தின் இன்றியமையாத இயல்பைச் சித்தரிப்பதனால் "தேவனு டைய ஆவியானவர்" என்ற சொற்றொடரானது தேவத்துவத்தை விளங்கச் செய்ய உதவுகின்றது. இது, தேவன் காணப்பட்டவராயிருந்தும் இன்னும் காணப்படாதவராய் இருப்பதை வேதாகமம் எவ்விதம் கூறுகின்றதென்று விளக்குகின்றது. தேவன் "ஆவியாய்" இருக்கிறார் என்ற உண்மையானது அவர் ஏன் மரிக்க முடியாது மற்றும் அவர் ஏன் எல்லைக்குட்படுத்தப்பட முடியாது என்று நமக்குக் கூறுகின்றது, மற்றும் இது தேவனுடைய சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதப் பகுதி எது என்றும் நமக்குக் காண்பிக்கின்றது.*

*தேவனுடைய ஆவியானது சிருஷ்டிப்பின் பகுதி என்ற வகையில் உலகளாவியதாகவும் (ஆதி. 1:2; யோபு 26:13; சங். 104:30ஐயும் காணவும்) மற்றும் மனிதருடையதாகவும் (ஆதி. 1:2, 26; யோபு 33:4) காணப்படுகின்றது.*

---

*குறிப்புகள்*

[1]KJV*யில் சங். 146:4ல்* "breath" *என்றுள்ளது.* [2]*உதாரணமாக, யாத். 31:3; எண். 24:2; 1 சாமு. 10:10; 2 நாளா. 15:1 ஆகியவற்றைக் காணவும். "எனது ஆவி" (ஆதி. 6:3) என்பது "தேவனுடைய சுவாசம்" (யோபு 27:3) என்றிருக்க முடியும்.* [3]Joseph Smith Jr., *Doctrine and Convenants* (Salt Lake City: The Church of Jesus Christ of Latter-day Saints, 1974), 130:22. [4]*ஒரு கருத்தில் மிருகங்கள் ஒரு ruachஐ (பிர. 3:21) பெற்றுள்ளன, அநேகமாக இது "சுவாசம்" அல்லது "உயிர்" என்று அர்த்தப்படலாம், ஆனால் இவை அழியாமையைக் கொண்டிருப்பதில்லை.*

# ஒரு அறிமுகம்

*தேவனுடைய இயல்பைப் பற்றி கலந்துரையாடுவதில் எச்சரிக்கை தேவைப்படுகின்றது. இயல்பான எல்லாவற்றிற்கும் மேலானவரான ஒருவருக்கு "இயல்பு" என்ற வார்த்தை பயன்படுத்தப் படுவதே ஏற்றுக் கொள்ளத் தகாததாக இருக்கலாம். தேவனின் புலன் கடந்த நிலையானது[1] ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், விசேஷமாக வேத வசனங்களில் விளக்கியுரைக்கப்படுகின்றது (உதாரணம். யோசுவா 2:11). ஆகையால், தேவன் "இயல்பானவர்" அல்லவே அல்ல என்று கூறப்பட முடியும்; அவர் இயல்புக்கு மேலானவராக இருக்கின்றார். அவர் மேலான இயல்புடைய வராயிருக்கின்றார்.*

*இரண்டாவதாக, புலன் கடந்த நிலையில் (உலகிற்கு மேலானவராக) இருக்கும் ஒரு தேவன் உலகம் முழுவதிலும் பரவியும் (உலகத்திலும்) இருக்கின்றார் என்பது எப்படி என்று விளக்குவதற்கு முயற்சி செய்வதில் எச்சரிக்கை தேவைப்படுகின்றது. "இங்கும்" மற்றும் "அங்கும்" ஒருவர் இருக்கின்றார் என்ற நினைவு கூட/சிந்தனையே கூட நிலைநிறுத்தக் கடினமானதாக உள்ளது, இருந்தாலும் இந்த சத்தியமானது அப். 17:27ல் விளக்கப்படுகின்றது. ஒருவேளை இப்படிப்பட்டது போன்ற ஒரு சிந்தனையை J. B. பிலிப்ஸ் அவர்களைப் பல வருடங்களுக்கு முன்பு உங்கள் தேவன் மிகவும் சிறியவர்[2] என்ற உட்கண்ணோட்டம் நிறைந்த ஒரு புத்தகத்தை எழுதத் தூண்டியிருக்கலாம். உதவியில்லாமல் தேவனைப் புரிந்து கொள்ளப் போதுமான அளவு பெரிதாகச் சிந்திப்பது என்பது நம்மைப் பொறுத்த வரையில் சாத்தியமற்றதாக இருக்கின்றது. தேவனுடைய இயல்பைப் பற்றி வினயமாக ஆழ்ந்து சிந்திக்க மனித குலத்திற்குத் தாழ்மை தேவையாய் உள்ளது. நமது உயர்ந்த உணர்வுகளும் கூட அவரது மகிமையின் நிறைவில் தேவனுடைய உயர்வின் தன்மையை மிகவும் அரிதாகவே பகுத்துணர முடியும் (1 தீமோ. 6:16; 1 யோவா. 4:12).*

*மூன்றாவதாக, தேவனைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வது என்பது நமது வாழ்க்கையின் மாபெரும் அறை கூவலாக உள்ளது. தேவனைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒவ்வொரு நபரும் அவரைப் பற்றி ஒரு வரையறைக்குட்பட்ட வழி முறையில்தான் சிந்திக்கின்றனர். நாம் தனிமையாக இடர்ப்பட்டுக் கொண்டிருந்தால், நம்மால் வெல்ல முடியாதவைகளினால் நாம் இடர்ப்பாடு அடைகின்றோம் என்று நாம் இயற்கையாகவே உணருகின்றோம். இது வேதாகமத்தின் உறுதிப்பாடு என்பதை வேதாகம வாசகர் ஒவ்வொருவரும் அறிகின்றார் (ஏசா. 55:8, 9ஐக் காணவும்).*

*பிறகு நாம் என்னதான் செய்ய வேண்டும்? நமது சொந்த வரையறைகள் மற்றும் போதுமற்ற தன்மைகள் ஆகியவற்றை நாம் அறிக்கை செய்கையில் நாம் தாழ்மையை அடைகின்றோம். நமது சொந்த ஆதார மூலங்கள் தவிர, மற்றவற்றையும், நாம் பயன்படுத்தி, வாதாடுவோம் வாருங்கள் என்ற*

*தேவனுடைய அழைப்பையும் ஆவலுடன் ஏற்றுக் கொள்ளுகின்றோம் (ஏசா. 1:18). இந்தத் தொடரின் முதல் பாகத்தில் அவர் நம்முடன் எவ்விதம் தொடர்பு கொள்கின்றார். நாம் அவருடன் எவ்விதம் தொடர்பு கொள்கிறோம் என்ற வகையில் நாம் தேவனுடைய இயல்பைப் பற்றிக் கற்போம். இது, நமது இணைவான முயற்சிகளுக்குத் தகுதியான மெய் சிலிர்க்கும் ஒரு சாதனையாக இருக்க வேண்டும்.*

---

*குறிப்புகள்*

[1]*தேவன் இயற்கையின் எல்லைப் பகுதிகளைக் "கடந்து செல்கின்றார்" அல்லது "அப்பால் செல்லுகின்றார்."* [2]J. B. Phillips, *Your God Is Too Small* (New York: Macmillan Co., 1961).

# பிரிவு I:
# தேவனுடைய வரையறையற்ற தன்மை

நாம் சிந்திக்கும் பொழுது, உருவங்களிலோ அல்லது வார்த்தைகளிலோ நாம் சிந்திக்கின்றோம். உருவங்கள் மற்றும் வார்த்தைகள் என்பவை நாம் எதைச் சொல்ல அல்லது உணர்ந்தறிய முயற்சி செய்கின்றோமோ அவைகளின் அடையாளங்களாக மட்டுமே இருப்பதால் எது மனதிற்கு வருகின்றது என்பது ஒரு பொருட்டல்ல. இது ஒவ்வொரு நாளின் வாழ்க்கை ஓட்டத்தின்பொழுதும் நன்றாகவே செயல்படுகின்றது. இருப்பினும் பொதுவாக வழங்கப்படுவதல்லாத ஒன்றைப் பற்றி நாம் விளக்கம் தர முயற்சி செய்கின்ற பொழுது நாம் அடிக்கடி அதில் சிரமம் அடைகின்றோம். எவ்வளவு அடிக்கடி நாம், "அதை நான் அறிந்துள்ளேன், ஆனால் அதை என்னால் 'கூற' முடியவில்லை'' என்று சொல்லியிருக்கின்றோம்? சாதாரணமற்றதாகவும், நம்மை முற்றிலும் திகைப்படையச் செய்யப் பயமுறுத்துமளவுக்கு விரிவானதாகவும் இருக்கின்ற விஷயத்தை நாம் கையாளுகின்ற பொழுது, சூழ்நிலையானது இன்னும் அதிக சிக்கலாகின்றது.

எனவேதான் தேவனைப் பற்றிப் பேசுவதென்பது கடினமானதாகும். சாதாரண உரையாடல் அன்றாட அனுபவங்கள் மற்றும் பழக்கப்பட்ட வார்த்தைகள் ஆகியவற்றை விடுவதற்கு முன் நாம் வெகு தொலைவு சென்று விட முடியாது. நமது சிந்தைகள் விரிவடைகையில், பெரிய மற்றும் அதிக புரிந்து கொள்ளுதலுடைய வார்த்தைகளைப் பயன்படுத்துவதன் அவசியத்தை நாம் காண்கின்றோம். இது, தேவன் மிகவும் உயர்த்தப் பட்டவர் மற்றும் "இறையியல் ரீதியானவர்" என்பது பற்றிய விவாதத்தை ஏற்படுத்தும்படி ஈடுபாடு கொள்ளச் செய்கின்றது. நம்மை நாம், அறிந்திராத புது இடத்தில் இருப்பவர்களாகக் காண்கின்றோம். இது ஒரு கசப்பும் இனிப்புமான இருதலை நிலையை உண்டாக்கலாம்: அதிகம் அதிகமான பேச்சும் குறைவு மற்றும் குறைவான புரிந்து கொள்ளுதலும் ஏற்படலாம்.

தேவனுடைய பிரசன்னம், அறிவு மற்றும் வல்லமை ஆகியவற்றைப் பொருத்து அவர் (தேவன்) வரையறையற்றவராக இருக்கின்றார் என்ற வேதாகமத்தின் திட நம்பிக்கையானது இக்கணம் நமது அக்கறைக் குரியதாயுள்ளது. இது, தேவன் இருக்கின்றார் என்று அனுமானம் செய்து கொள்கின்றது. ஆதியாகமத்தில் உள்ள சிருஷ்டிப்பின் விபரங்கள் தேவன் இருக்கின்றார் அல்லது அவரது உண்மைத் தன்மை ஆகிய விஷயங்களை விவாதிப்பதில் நேரத்தைச் செலவிடுவதில்லை: "ஆதியிலே தேவன் ..."

*(ஆதி. 1:1). வேதாகமமானது தேவனைப் பற்றி அடிப்படையில் ஒரு உறுதிப்பாடுதானே தவிர, அவருக்காக ஒரு வேண்டுகோளோ அல்லது பரிந்து பேசுதலோ அல்ல என்று இந்த வசனப் பகுதியானது அர்த்தப் படுத்துகின்றது. தேவனுடைய இருத்தல் என்பது தொடக்கக் கருத்தாக உள்ளது என்ற உண்மையுடன், வேதாகம எழுத்தாளர்கள் அவருடைய இயல்பைக் குறித்து விவாதிக்கச் சுதந்திரமாய் இருந்தனர்.*

*அவரது இருப்பு என்பது அவரது இயல்புக்கு அடிப்படையானதாக உள்ளது. எரியும் முட்புதரில் தேவன் மோசேயினிடம் "இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார்" (யாத். 3:14ஆ) என்று இஸ்ரவேலருக்குக் கூறும்படி அறிவுறுத்திய பொழுது மோசே இதைக் கண்டறிந்தார். இந்த அடையாளப்படுத்துதலானது அதற்குமுன் அறியப் பட்டிருந்ததில்லை (யாத். 6:2, 3). தொடர்ந்து சுயஞ் ஜீவியராய் இருக்கும் தேவன் தமது பிரசன்னம், அறிவு மற்றும் வல்லமை ஆகியவற்றில் வரையறையற்றவராக வேதாகம எழுத்தாளர்களுக்கு வெளிப்படுத்தப் பட்டார் (சங். 139:1-12; எரே. 32:17; மாற். 10:27). ஆகையால், இப்பொழுது நாம் இந்த மூன்று பண்புகளையும் கவனிப்போம்.*

# தேவனுடைய எங்கும் நிறைந்த தன்மை:

## நமது தேவன் அடிப்படைச் சாரத்தில் "அங்கு" இருப்பவரல்ல

*தேவன் "எல்லா இடத்திலும் இருப்பவர்" என்று கூறப்படுகின்றார். இது, அவர் ஒரே வேளையில் ஒவ்வொரு இடத்திலும் இருக்கின்றார் அல்லது இருந்திருக்கின்றார் என்று அர்த்தப்படுகின்றது. இது வேதவசனங்களின் சாட்சியமாகவும் உள்ளது (எரே. 23:23, 24). இது எப்படியாக முடியும்? இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்ன? தேவன் எங்கும் இருக்கின்றார் என்று நாம் கூறும் பொழுது, நாம் இந்த அண்டம் முழுவதிலும் எங்கு வேண்டுமானாலும் பயணம் செல்ல முடிந்தால், தேவனைப் பொறுத்தமட்டில் அவர் "இல்லாத இடம்" என்று ஒன்றை நாம் ஒருபொழுதும் காண்பதில்லை என்று அர்த்தப்படுகின்றது.*

### இதன் உண்மை நிலை

*அண்டம் என்பது மிகவும் பரந்ததாக உள்ளது. அதன் எல்லைகளை அடையப் போதுமான அளவுக்கு நாம் நமது மனங்களை நீட்சி செய்யக் கூடியது சாத்தியம் அல்ல. நமது சிறிய சூரிய மண்டலமானது போதுமான அளவு விரிவானதாகக் காணப்படுகின்றது. நாமும் மற்றும் சுமார் ஐந்நூறு கோடி எண்ணிக்கையிலான மற்ற மக்களும் பூமியில் இருந்து கொண்டு, விண்வெளி வீரர்களான நீல் ஆம்ஸ்ட்ராங்கும் மற்றும் "Buzz" ஆல்ட்ரினும் நிலாவில் உலாவியதை எப்படி களிப்போடும் வியப்போடும் கவனித்தோம்? என்பதை நினைவுகூருங்கள். மனிதனின் காலடிச் சுவடுகள் இப்பொழுது நிலாவில் இருக்கின்றன. நிலாவானது பூமியில் இருந்து 250,000 மைல்கள் தொலைவில் இருந்தாலும், வானவியல் ரீதியாகப் பேசும் பொழுது அது (நிலா) இன்னமும் நமது பின்முற்றத்தில் தான் உள்ளது.*

*இப்பொழுது பின்முற்றத்திலிருந்து திரும்பி, முன்னிடத்திற்கு வந்து சுற்றிப் பார்ப்போம். நாம் மேலே சூரியனைக் காண்கின்றோம். அது சுமார் 9.3 கோடி மைல்கள் தூரத்தில் இருக்கின்றது. மற்ற எட்டு கிரகங்கள் அதைச் சுற்றி வருகின்றன. சூரியனுக்கு மிக அருகாமையில் உள்ள மெர்க்குரி கிரகமானது சூரியனில் இருந்து 3.6 கோடி மைல் தூரத்தில்தான்*

*இருக்கின்றது; தொலைவில் உள்ள புளூட்டோவானது 370 கோடி மைல்கள் தூரத்தில் உள்ளது. புளூட்டோவானது சூரியனை ஒரு முறை சுற்றி வருவதற்கு 247 (பூமி) ஆண்டுகள் ஆகின்றது. இதை எழுதிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் புளூட்டோவுக்கு அப்பால் இன்னொரு கிரகம் இருப்பதாக ஏற்றுக் கொண்டுள்ளனர். நமது பின்முற்றத்திற்கு இவ்வளவு அதிகம் உள்ளது.*

*நாம் வேலியினிடத்திற்குச் சென்று வெளியே மற்றும் மேலே உற்றுப் பார்ப்போம். தெளிவான ஒரு இரவில், நமது சூரியனையும் மற்றும் நமது எல்லாக் கிரகங்களையும் கொண்டுள்ள பால் வீதி மண்டலத்தை நாம் காண முடியும். மில்ட்டன் ஹியூமன்சன் மற்றும் எட்வின் ஹப்புள் ஆகியோரால் வானவியலில் செய்யப்பட்ட ஆராய்ச்சியானது, நமது (பால் வீதி) மண்டலமானது 100,000 ஒளி ஆண்டுகள் குறுக்களவு உடையது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் ஹப்புள் அவர்கள், "அருகாமையில்" உள்ள பல மண்டலங்கள் பத்து லட்சம் முதல் எழுபது லட்சம் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருப்பதாகவும் கவனித்துள்ளார்.[1] அத்துடன், இந்த மண்டலங்கள் (சுருள்கள்) என்பவை உண்மையில் ''தீவான'' மண்டலங்களாக இப்போதுள்ள கவனிப்பினால் தீர்மானிக்கக் கூடிய அளவுக்கு அண்டம் முழுவதிலும் பரவியிருக்கின்றன.[2]*

*ஒருவேளை நாம் போதிய அளவு தூரம் சென்றுள்ளோம். வானவியல் உண்மைத் தன்மையின் சித்தரிப்பானது மனதைத் திகைக்கச் செய்வதாக உள்ளது. இது நம்ப இயலாத அளவுக்கு விரிவானதாக உள்ளது. அண்டத்தின் அளவற்ற தன்மைக்கு அது எவ்விதம் அளக்கப்படுகின்றது என்பதே ஒரு சுட்டிக் காட்டுதலாய் உள்ளது. மைல் கணக்கில் தூரத்தை அளப்பது என்பது வருத்தமிக்க போதுமற்ற வேலையாகின்றது. ஒளி ஆண்டு அளவைகளே தராதரம் ஆகின்றன.*

*தேவனுடைய இயல்பைப் பற்றிய நமது படிப்பில் இவை யாவும் மாபெரும் தனிச் சிறப்புடையவகளாயிருக்கின்றன. "ஒளி ஆண்டு" என்ற சொற்றொடரானது காலத்தின் சொல் விளக்கமாய் உள்ளது. ஆகையால், காலத்தைப் பற்றிய சிந்தனைகள் தேவனைப் பற்றிய நமது அறிவுணர்வுக்கு இன்றியமையாதவைகளாய் உள்ளன. காலம் என்பது அதன் இயல்பிலேயே ஒரு தொடக்கமும் ஒரு முடிவும் கொண்டதாகும். அப்படியில்லை யென்றால், அது காலமாக இருக்கவே இருக்காது; அது நித்தியமாக இருக்கும். "எல்லா இடத்திலும் இருத்தல்" ("Ubiquity") மற்றும் அதன் ஒரு பொருள் பிற சொல்லான ''எங்கும் நிறைந்திருத்தல்'' (Omnipresence) ஆகியவை தேவன் ''எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும்'' இருக்கின்றார் என்பதைக் குறிக்கின்றன. சாராம்சத்தில் "தேவன் ஆவியா யிருப்பதால்" (யோவா. 4:24அ) இது தேவனுக்குச் சாத்தியமாக உள்ளது. ஆகையால் சாராம்சத்தில் (அடிப்படைப் பண்பில்) தேவன் எல்லா இடங்களிலும் எல்லா வேளைகளிலும் இருக்கின்றார். அவர் தாம் இல்லாத இடத்திற்குச் செல்ல ''முடிவு செய்வதில்லை'' ஏனென்றால் அவர் ஏற்கனவே அங்கு இருக்கின்றார்! இது வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளிலும் மீண்டும் மீண்டும் விளக்கப்படுத்தப்படுகின்றது (சங். 2:4;*

*3:4; அப். 7:49; 17:28).*

## இதற்கு சம்பந்தமான கருத்துக்கள்

*தேவனுடைய எங்கும் நிறைந்திருக்கும் தன்மையின் கருத்தானது மிகப் பெரிய மறைவான அர்த்தம் உடையதாக இருக்கின்றது. "எங்கும்"* ("Omni") *என்றால் எவ்விதத் தடையுமின்றி இந்த அண்டத்தை முழுமையும் என்று அர்த்தப்படுகின்றது. "எங்கும் இருத்தல்"* ("Omni presence") *என்பது "எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் இருத்தல்'' என்று விளக்கப் படுகின்றது. தேவன் எங்கும் இருப்பவராதலால் எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் இருப்பவராதலால் காலமோ அல்லது இடமோ இவரது பிரசன்னத்திலிருந்து தப்புவதில்லை என்று இது அர்த்தம் தருவதாக நாம் எடுத்துக் கொள்ளுகின்றோம். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தேவன் காலம் அல்லது இடத்தால் கட்டப்படுபவரோ அல்லது தடை செய்யப்படுபவரோ அல்ல (2 பேது. 3:8; சங். 139:7-10). ஒருவேளை, வரலாறு என்று நாம் அழைக்கின்ற விஷயமானது காலத்தின் மாபெரும் உதாரணமாக இருக்கலாம். வரலாற்றில் ''காலம் அணி வகுத்துச் செல்லுகின்றது.'' நாம் அடிக்கடி, ''இது வெறுமனே ஒன்றின் பின் மற்றொன்றாகவே உள்ளது" என்று கூறுகின்றோம். நிகழ்ச்சிகளின் வரிசை முறைமை நமக்கு அதிக அர்த்தமுடையதாக உள்ளது, ஏனென்றால் இந்தப் பூமியின் மீது காலத்தால் கட்டப்பட்ட (கட்டுப்படுத்தப்பட்ட) உயிரினங் களாக நாம் வாழ்கின்றோம்.*

*இடமும் நமக்குத் தனிச் சிறப்புள்ளதாக இருக்கின்றது, ஏனென்றால் நாம் எல்லையற்றவர்களாய் இராமல், எல்லையுடையவர்களாய் இருக்கின்றோம். நாம் இங்கு வாழ்கையில், காலமும், இடமும் என்ற எல்லைகளுக்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் புவியியல் பக்கத்தில் ஒவ்வொரு புள்ளியாக உள்ளோம். நாம் எப்பொழுதுமே "இங்கு" இருக்கின்றோம் "அங்கு" இருப்பதில்லை. எந்த ஒரு துல்லியமான வேளையிலும் நாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கின்றோம். அந்த வினாடியில், அந்த இடமானது ''இங்கு'' நம்முடையதாக உள்ளது அது ஒருபொழுதும் "அங்கு" நம்முடையதாக இருப்பதில்லை. நாம் "அங்கு" இருப்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருந்திருக்கலாம். இருப்பினும் ''இங்கு'' நம்முடையது என்பது ஒரு குறிப்பிட்ட வேளையில் குறிப்பிட்ட ஏதாவது ஓரிடத்தில் நாம் இருப்பதைக் குறிக்கும்.*

*இந்த விவாதமானது தேவனுடைய எங்கும் நிறைந்திருக்கும் தன்மையை விவரித்து, அதை நம்முடைய வரையறுத்தலுக்குட்பட்ட தன்மையுடன் வேறுபடுத்திக் காட்ட எடுக்கப்படும் ஒரு முயற்சியாக உள்ளது; அவர் காலத்தாலும் இடத்தாலும் கட்டுப்படுத்தப்பட்டவரல்ல. நாம் இங்கு காலம், இடம் என்ற எல்லைகளுக்கு உட்பட்டவர்களாய் வாழ்கின்றோம். தேவன், காலம் இடம் என்ற எல்லைகளுக்கு உட்பட்ட வரல்ல, ஏனென்றால் அவர் நித்திய வாசியாய் இருக்கின்றார் (ஏசா. 57:15).*

அவர் காலத்தையும் மற்றும் இடத்தையும் தம்முடைய எங்கும் நிறைந்துள்ள தன்மையில் சூழ்ந்து கொண்டுள்ளார். இருப்பினும், அவர் தம்முடைய நித்திய இயல்பில் காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கின்றார். இதுவே அவர் தம்மைப் பற்றி இருக்கிறவராக இருக்கிறேன் என்று உரைப்பதன் தனிச் சிறப்பு ஆகும். Yahweh என்பது உண்மையில், "இருக்க" இருத்தல் என்ற வினைச் சொல்லின் ஒரு வடிவமாக உள்ளது.

நித்திய தேவன் என்ற வகையில் அவருக்கு முந்தினதும் பிந்தினதும் ஒன்றுமில்லை. "முந்தினதும்" மற்றும் "பிந்தினதும்" என்பவை காலத் தோற்றத்தினால் மூடப்பட்ட கருத்துக்களாய் இருக்கின்றன. காலமும் நித்தியமும் ஒரே விஷயமல்ல. நித்தியம் என்பது ஒரு "நீண்ட காலம்" அல்ல. நித்தியம் என்பது என்றென்றும் உள்ளதாகும். அதற்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை. தேவன் "அல்பாவும் ஒமேகாவுமாக" (வெளி. 1:8) இருக்கின்றார். அதாவது, அவர் நம்மைக் காலத்திலும் வரலாற்றிலும் நடத்திச் சென்று நமக்கு உலகம் சார்ந்த உண்மைத்துவத்தில் தற்காலிக உணர்வொன்றைக் கொடுத்தார். நிறைவாக அவர் காலம் மற்றும் வரலாற்றை எடுத்துப் போட்டு, நித்தியத்தின் பூரணமான மற்றும் மெய்யான உணர்வைத் தருவார். காலத்தையும் வரலாற்றையும் இருக்கும்படி கொண்டு வந்த அவரே காலத்தையும் வரலாற்றையும் கடந்தவராய் இருக்கின்றார் என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

## தொகுப்புரை

தேவனுடைய சாராம்சம் ஆவியாக உள்ளது. தேவன் (உலகப்படியான) காலத்தில் எப்பொழுதும் இருப்பது மட்டுமின்றி (இடம் சார்ந்த) அண்டத்திலும் எங்கும் இருக்கின்றார். அவர் நித்தியத்திற்கும் இருப்பதாக வேதாகமம் உறுதிப் படுத்துகின்றது, அதாவது, காலம் (வரலாறு) மற்றும் இடம் (படைத்தல்) உட்பட அப்படிப்பட்ட எல்லைகள் எதற்கும் அப்பால் அவர் இருக்கின்றார்.

காலம் மற்றும் இடம் பற்றிய வரையறுத்தலுக்குட்பட்ட நமது கருத்துக்களில், தேவன் "இங்கு" அல்லது "அங்கு" இருப்பதாக நாம் அடிக்கடி பேசுகின்றோம். நாம் பார்த்தபடியே வேதாகம எழுத்தாளர்களும் அப்படியே செய்திருக்கின்றார்கள். காலம் மற்றும் இடம் என்ற எல்லைகளுக்குட்பட்ட படைப்புயிர்கள் தேவனைப் பற்றி இவ்வழி முறையில் பேசுவது அவசியமாகவே உள்ளது. இருப்பினும், அவர் நித்தியமானவர் என்றும் நாம் பேசுகின்றோம். ஏனென்றால் காலம் மற்றும் இடத்தில் இருக்கின்ற தேவன், சாராம்சத்தில் காலம் மற்றும் இடத்திற்கு அப்பாலும் இருக்கின்றார். அவருடைய நோக்கில், அவர் எப்பொழுதும் "இங்கே" இப்பொழுது இருக்கின்றார். "அவர் 'அங்கு' இருக்கின்றாரா?" என்ற நம் விசாரிப்புக்கு "ஆம் நான் 'இங்கு' இருக்கின்றேன்" என்பதே அவருடைய பதிலாக, இருக்கின்றது. இது, நாம் அண்டத்திற்கு அப்பால் (ஏதேனும் இருந்தால்) உள்ள இடத்தையோ, அண்டத்தை மட்டுமோ, நமது சொந்த உலகத்தையோ அல்லது நமது வாழ்க்கையையோ இவைகளில்

*எதைப் பற்றிச் சிந்தித்தாலும் உண்மையாக உள்ளது. "நாம் பிழைப்பதும் அசைவதும் இருப்பதும்" (அப். 17:28) இந்த தேவனுக்குள்தான். நமது தேவன் மிகச் சிறியவராக இருக்கின்றாரா? இல்லை, ஆனால் அவரை முழுமையாகக் காணக் கூடிய நமது திறமையானது குறைந்தபட்சம் இப்பொழுது மட்டுமாவது குறைவுபடுகின்றது.*

*சங்கீதக்காரர், மனிதரின் வரையறைகளை உணர்ந்து, தேவனுடைய வரையறையற்ற தன்மையை அடையாளம் கண்டார், இந்தக் கருத்துக்களை அவர் சங். 139:7-12ல் விளக்கப்படுத்தினார்:*

> *உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமூகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக் கொள்ளுமென்றால், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப் படுத்தாது; இரவும் பகலைப்போல் வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.*

---

*குறிப்புகள்*

[1]*ஒளியானது வினாடிக்கு 186000 மைல்கள் வேகத்தில் ஒரு ஆண்டின் பயணம் செய்யும் தூரமே ஒளி ஆண்டு எனப்படுகின்றது. இது 5.9 லட்சம் கோடி மைல்கள் ஆகும்.* [2]Robert Jastrow, *God and the Astronomers* (New York: W. W. Norton, 1978), 41ff.

# தேவனுடைய எல்லையற்ற அறிவு:

## நமது தேவன் "கற்பது" இல்லை

கி.பி. மூன்றாம் ஆயிரமாண்டின் உதயத்தை நெருங்குகின்ற தொழில் மயமாக்கப்பட்ட உலக கலாச்சாரங்கள் பலவற்றில் கல்விக்கான வலியுறுத்தலே செல்வாக்குப் பெற்ற அம்சங்களில் ஒன்றாக உள்ளது. நவீன நாகரீகத்தை எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சமாளிப்பதற்கு ஒருவர் தகவல் அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது வளர்கின்ற புரிந்து கொள்ளுதலாய் இருக்கின்றது. தகவல் அறிவின் வளர்ச்சி என்ற மேன்மை மிக்க நெடுஞ்சாலை மீது மனக் கிளர்ச்சி கொள்ள இதுவே காரண மாகின்றது.[1] தொடர் கல்வித் திட்டங்களின் விரிவாக்கமானது மக்கள் தங்களின் வருங்கால ஆண்டுகளில் புத்திக் கூர்மையில் வளர வேண்டும் என்ற அவர்களின் விருப்பத்திற்குச் சாட்சியம் அளிக்கின்றது.

அறிவதில் விருப்பம் என்ற தன்மையினால் மனித இயல்பு பண்புப் படுத்தப்படுவதாகக் காணப்படுகின்றது. இரண்டு வயதான ஒரு குழந்தை யின் செய்கைகள் செயல்பாட்டில் ஆர்வத்திற்கு நம்பக் கூடிய செயல் விளக்கமாய் இருக்கின்றன. ஐந்து வயதுக் குழந்தையின் அசைவில்லா ஊக்கமுடைய கேள்விகள் பல பெற்றோர்களைத் திகைக்கவும் சலிப்படைய வும் செய்கின்றன. அதிகம் கற்றுக் கொள்ளவும், செயல் வலிவுடன் செயலாற்றவும் தொழில் திறனுள்ளவர்கள் இருபது அல்லது முப்பது வருடங்களாக தங்களைக் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்வது பொதுவாகக் காணக் கூடியதாகும். அறிதலுக்கான தேவையில் இருந்தே கற்றுக் கொள்ளுதலின் இந்த வலியுறுத்தம் வளருகின்றது. இது, நாம் அறியத் தேவையானதை மற்றும் அறிய விரும்புவதை இன்னமும் அறியவில்லை என்ற நமது உணர்வறிவால் பெரிதும் தூண்டப்படுகின்றது. நாம் கற்றுக் கொள்ள முடியும் என்று நாம் நம்புவதால் முயற்சி தொடர்கின்றது. இவையெல்லாம் நமக்கு நன்கு பழக்கமானவை களேயாகும். உண்மையில், ஆராய்ந்தறியும், கண்டு பிடிக்கும் மற்றும் சாதனை புரியும் விருப்பங்கள் மனிதரின் உள்ளார்ந்த இயல்புகளாகக் காணப்படுகின்றன. இது மனித இனத்திற்கு இயல்பானதாகும்.

இருப்பினும், நமது அறிவின் திரட்சியினால் நாம் அதிகம் மயங்கி விடக் கூடும். அறிவின் உயர்தர விசேஷித்தப் பயன்பாட்டுடன் உள்ள தொழில் நுட்ப யுகமானது பல பயன்களைக் கொண்டு வந்துள்ளது. தெரிவிக்கப் பட்ட சாதனைகளின் புதுப்புனைவுத் திறனுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம்/

வணக்கம் செலுத்துகின்றோம். மனித வளர்ச்சியின் இந்தத் திடீர்த் தாக்குதலுக்கு ஒரு ''கீழ்ப்'' பக்கம் ஏதாவது இருக்கின்றதா? ஆம்! "போலித்தனமான புத்திக் கூர்மை" என்ற மிக அதிகமாய் தொற்றுக் குணம் உடைய நோய் ஒன்று பரவிக் கொண்டுள்ளது. சகிக்க முடியாத முரட்டு குணம், தவறான சுய உறுதிப்பாடு, மற்றும் போலியான (தன்) நம்பிக்கை ஆகியவற்றுடன் ''எல்லாவற்றிற்குமான தர அளவை மனிதனே'' என்ற கடுமைகுன்றாத உறுதிப்பாடும் இணைந்துள்ளது. இந்த நிலைப்பாடானது "மனித மைய தெய்வீகத்துவம்" (anthropocentric divinity[2]) என்று அழைக்கப் படக் கூடும். இது மனித மனப்பான்மையில் உள்ள வலிவுமிக்க மாபெரும் குறைவை மறைக்கின்றது. நமது எல்லா உள்கண்ணோட்டங்களுடனும் கூட நம்மில் பலர், நமக்கு மேலே தொலைதூரத்தில் தெளிவற்றுத் தெரியும் தேவனுக்கு முன்பாக நமது புத்திக் கூர்மை என்பது பிறந்த குழந்தையின் நிலையில்தான் உள்ளது என்பதை ஒப்புக் கொள்ளுமளவுக்கு இன்னும் கற்றுக் கொள்ளவில்லை (1 கொரி. 1:18-25).

தேவனுடைய எங்கும் இருக்கும் தன்மையின் நெருங்கிய பின் விளைவாக இருப்பது தேவனுடைய எல்லையற்ற அறிவாகும்: தேவன் வரையறையற்ற, உலகளாவிய, முழுமையான அறிவைப் பெற்றுள்ளார்.[3] இது வேத வசனங்களில் வலியுறுத்தப்படுகின்றது. யோபு தமது "நண்பர்களிடத்தில்" தேவனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது, ''அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து, வானங்களின் கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார்'' (யோபு 28:24) என்று கூறினார். நீதிமொழிகளின் ஞானமுள்ள மனிதர், "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலு மிருந்து, நல்லோரையும், தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது" (நீதி. 15:3) என்று கூறினார். தேவனுடைய எல்லையற்ற அறிவின் இளைத்தல்கள் பலவாக உள்ளன. பல கேள்விகள் எழுப்பப்படலாம். விளக்கத்தின் மூலமாக அந்தக் கேள்விகளில் சிலவற்றை கவனிப்போம்.

## இது எழுப்புகின்ற கேள்விகள்

"தேவன் எவ்விதம் அறிகிறார்?" என்பது அடிக்கடி எழுப்பப்படுகின்ற கேள்வியாகும். எல்லையற்ற அறிவும் எங்கும் இருத்தலும் நெருங்கிய பின்விளைவு கொண்டவை என்று நாம் கூறியுள்ளோம். கதை சொல்பவர் ஒருவரை நோக்கி யாரேனும் ஒருவர், "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்பதை நீங்கள் எப்பொழுதாவது கேட்டிருக்கின்றீர்களா? "நான் அங்கிருந்தேன்'' என்பதே பெரும்பாலும் எதிர்க்குரலான பதிலாய் இருக்கின்றது. தேவனிடத்திலும் எல்லையற்ற அளவுக்கு இதுபோன்றுதான் உள்ளது. அவர் எல்லா இடத்திலும்/ஒவ்வொரு இடத்திலும் இருப்பதால் அவர் அறிகின்றார். இருப்பினும், ஒரு நிருபரைப் போல உண்மைகளைச் சேகரிப்பதால் எல்லாவற்றையும் தேவன் அறிகின்றார் என்று ஒருவர் முடிவு செய்யக் கூடாது. நாம் மனிதத்துவத்தை அல்ல, ஆனால் தேவனுடைய இயல்பைப் பற்றிக் கற்கின்றோம் என்பதை நினைவில் வையுங்கள். தேவன் இருத்தல் என்பதை எப்படித் தம் இயல்பாகக் கொண்டுள்ளாரோ,

அப்படியே, அறிதல் என்பதையும் தம் இயல்பாகக் கொண்டுள்ளார். தேவன் இருக்கத் தொடங்குவதில்லை; அவர் ஏற்கனவே இருக்கின்றார். தேவன் கற்பதில்லை; அவர் ஏற்கனவே அறிந்துள்ளார். தேவன் எவ்விதம் அறிகிறார் என்பதை நாம் காண்பதற்கு அவருடைய எங்கும் நிறைந்திருக்கும் தன்மையானது தர்க்கரீதியாக நமக்கு உதவுகின்றது.

"எவ்வித விதிவிலக்குமின்றி எல்லாவற்றையுமே தேவன் உண்மை யிலேயே அறிந்திருக்கின்றாரா?" என்பது சில வேளைகளில் கேட்கப்படும் இன்னொரு கேள்வியாக உள்ளது. "அவ்விதமாகவே நான் நம்புகின்றேன், ஏனென்றால் அவர் ஒவ்வொன்றையும் அறிந்திராதிருந்தால், அவர் அறியாத ஒரு விஷயம் அவரது முடிவுக்கு ஏதுவாகிவிடும், இவ்விதமாக அவரை தேவனாயிருப்பதிலிருந்து நீக்கிப் போடும்" என்று கூறுவதே உடனடியான மனத் தூண்டுதலாக உள்ளது. இந்தக் கேள்விக்கு மிகவும் அதிக எச்சரிக்கையுள்ள பதில் தேவைப் படுகின்றது. "அறிதல்" என்ற சொற்றொடர் எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றது என்பது பற்றிய கவனமும் இதில் உள்ளடங்குகின்றது.[4]

தேவன் தம்மைப் பற்றி உள்ளாக அறிகின்றார் அவர் தம்மைப் பற்றிய முழுமையான அறிவுடையவராக இருக்கின்றார் (1 யோவா. 1:5). மேலும் அவர் தமக்குப் புறம்பேயுள்ள அனைத்தையும் அதாவது மனிதர்கள் உட்படத் தமது படைப்புகள் யாவற்றையும் (யோபு 34:21) அறிகின்றார். இந்த எல்லையற்ற அறிவானது நமது உள்ளான இயல்புகளுக்குள் ஊடுருவிப் பாய்கின்றது. நம்முடைய நினைவுகளைக் கூட தேவன் அறிந்திருக்கிறார் என்று சங்கீதக்காரர் கதறினார் (சங். 139:2). ஆம், தேவன் எவ்வித விதிவிலக்குமின்றி ஒவ்வொன்றையும் அறிகின்றார்.

இதுவரையிலும் கேள்விகள் தேவன் எப்படி அறிகின்றார், எந்த அளவுக்கு அறிகின்றார் என்பவை பற்றி கவனம் செலுத்தின. வேறு வகையான கேள்வியொன்றும் அடிக்கடி எழும்புகின்றது: "ஒருவேளை ... ஆகியிருந்தால் தேவன் என்ன நடக்கும் என்று அறிந்துள்ளாரா?" இந்தக் கேள்வியானது எதிர்காலத்தைப் பற்றியது என்பதை நினைவுகூருதலே இதற்குப் பதில் அளிப்பதற்கான திறவுகோலாகும். நிகழ்வின் ஓட்டத்தை மாற்றக்கூடிய, இன்னமும் நடந்திராத சில சார்பு நிகழ்ச்சிகளை இது குறிப்பிடுகின்றது. இது, எதிர்பாராமல் அதாவது வியப்படையக் கூடிய வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்று நினைக்கும் மனிதர்களால் கேட்கப்படுகின்றது. இருப்பினும், தேவன் ஒருக்காலும் வியப்படைவ தில்லை. சார்பு நிகழ்வுகள் கடந்த காலம், நிகழ் காலம் அல்லது எதிர்காலம் இதில் எப்பொழுது நடந்தாலும் தேவன் அதன் விளைவுகளை அறிந்துள்ளார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "ஒருவேளை ... ஆகியிருந்தால் என்ன நடந்திருக்கும்?" என்பதைத் தேவன் அறிந்திருந் துள்ளார், மற்றும் "ஒருவேளை ... ஆகியிருந்தால் என்ன நடக்கும்?" என்பதையும் அவர் அறிந்துள்ளார். கோட்பாட்டளவிலானது உண்மை யானால் எப்படி ஆகியிருந்திருக்கும் என்பதைக் கூட அவர் அறிந்துள்ளார் (மத். 11:21, 22). இது அவரது எல்லையற்ற அறிவின் தவிர்க்க முடியாத விளைவாக இருக்கின்றது.

*தேவனுடைய எங்கும் நிறைந்திருக்கும் தன்மை என்பது நித்தியம் முழுவதிலும் ஒரே வேளையில் அவர் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறார் என்பதாக உள்ளது; அவரது எல்லையற்ற அறிவு என்பது நித்தியம் முழுவதிலும் ஒவ்வொரு இடத்திலும் நடப்பது பற்றிய அவரது ஒரே வேளையில் அறியும் அறிவாக உள்ளது. மனிதர்களின் இந்தக் கண்ணோட்டக் கருத்திலிருந்து தேவன் ஒவ்வொன்றையும் அறிந்தார், அவர் ஒவ்வொன்றையும் அறிகின்றார், மற்றும் அவர் ஒவ்வொன்றையும் அறிவார் என்று நாம் கூறுகின்றோம். இதுவே நமக்கு வேதாகமத்தின் மொழி நடையிலும் கூறப்படுகின்றது. தேவனுடைய கண்ணோட்டத்தின் கருத்தானது காலமற்றதாகவும், அண்டம் தழுவியதாகவும் உள்ளது. அவருக்கு, கடந்த மற்றும் எதிர்காலங்கள் ஆகியவை நிகழ்காலமாக மட்டுமே உள்ளன. அவரது இருத்தல், அவரது பிரசன்னம், அவரது அறிவு ஆகியவை ஒரே வேளையில் நமது காலத்திலும் நித்தியத்திலும் இருக்கின்றன. "ஒருவேளை" என்ற வினாக்கள் யாவும் தவறான தர்க்க அடிப்படையிலேயே எழுகின்றன என்பதையே இவை யாவும் அர்த்தப் படுத்துகின்றன. புரிந்து கொள்ளுதலில் நமக்குள்ள குறைப்பாட்டினாலேயே இவைகள் வளர்ந்தேறுகின்றன.*

## இது எழுப்புகின்ற போராட்டங்கள்

*தேவனுடைய இயல்பின் எல்லாம் அறிந்த முகப்புடன் நமது போராட்டமானது பல காரணங்களினால் கடினமானதாகின்றது. (1) தேவனும் நாமும் புத்தி கூர்மையில் மாறுபட்ட அளவீடுகளில் இருக்கின்றோம் (ஏசா. 55:8, 9). (2) தேவன் தம்மைத் தாமே வெளிப்படுத் தினாலன்றி, அறியப்படாதவராகவே இருக்கின்றார், மற்றும் அவரது வெளிப்படுத்துதல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், வரையறைக்குட் பட்டதாகவும் இருக்கின்றது (உபா. 29:29). (3) தேவன் கொடுத்துள்ள வெளிப்பாடுகள் கூட, போதுமானவைகளாய் இருந்தாலும் (2 பேது. 1:3), புரிந்து கொள்ள அடிக்கடி கடினமானதாக உள்ளது (2 பேது. 3:15, 16). (4) இந்த பூமியில் நாம் காலத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றோம், எனவே உடனடியானவைகளை நாம் நிறைவானவைகளாய்க் காணும்படி நோக்கிக் கொள்கின்றோம் (யாக். 4:13-16). (5) மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், நாம் நமது புரிந்து கொள்வதில் எல்லைக்குட்பட்டவர்களாக மட்டும் இருப்பதில்லை; மேலும் நாம் நமது வாழ்வில் பாவம் என்பதின் குறைபாடு உள்ளவர்களாகவும் இருக்கின்றோம் (ரோமர் 3:23).*

*இந்தத் தடைகள் நம்மை நம்பிக்கையின்மைக்கு வழி நடத்தலாம். நாம் மேற்கொள்ளப்பட்டவர்களாக மற்றும் மனவலிமை இழந்தவர்களாக உணரலாம். நமக்கு முன் முதலாவதாகத் தோற்றம் அளிக்கின்ற தடையானது வெற்றி கொள்வதற்கு மிக உயரமானதாகக் காணப்படலாம். "தேவன் 'முற்றிலுமாக மற்றவர்' என்றால் நான் எப்படி அவருடன் தொடர்பு கொள்ளத் தொடங்குவது?" இரண்டாவது இடர்ப்பாடானது "நான் தேவனைத் தேடுவதைத் தேர்ந்து கொண்டால், அவரது வெளிப்*

*படுத்துதல் தேர்ந்தெடுத்ததாகவும் வரையறைக்குட்பட்டதாகவும் இருக்கையில் நான் எங்கு திரும்புவது?" என்ற கேள்வியை எழுப்புகின்றது. மூன்றாவது இடர்ப்பாடானது இன்னொரு பெரும் வருத்தம் உடையதாய் இருக்கின்றது: "வெளிப்படுத்துதலைப் புரிந்து கொள்வதே கடினம் என்று நிரூபிக்கப்பட்டிருந்தால், அவரது வெளிப்பாட்டில் நான் அவரைத்தான் கண்டறிந்தேன் என்பதை நான் எப்படி நிச்சயப்படுத்திக் கொள்வேன்." நான்காவது தடையானது, "உடனடியானது இப்போதுள்ளது நிறைவான தல்ல என்றால், நாளுக்கு நாள் நான் எனது வாழ்வை எவ்விதத்தில் மதிப்பிடவும், இயக்கவும் முடியும்?" என்ற நடைமுறைக் கேள்வியை எழுப்புகின்றது. கடைசியான தடையானது ஒரு தீவிரமான பிரச்சனையை முன்னிறுத்துகின்றது: "நான் பாவம் நிறைந்தவனாயிருப்பதால், எந்த அடிப்படையில் நான் ஏதேனும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடியும்? இனி வருவதைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கின்றி, எப்பொழுதும் இருக்கிறவரும், என்னைப் பற்றி உள்ளும் புறம்பும் அறிந்தவராயிருக் கிறவருமான தேவனுக்கு முன்பாக இப்பொழுது பிழைத்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளதா?" இவைகள் தீவிரமான கேள்விகளாய் இருக்கின்றன. குறிப்பிடத் தக்க பெரும்பாலான கேள்விகளைப் போலவே, இவைகளுக் கும் தொடர்பற்ற விதத்தில் பதில் அளிக்கப்பட முடியாது. இருப்பினும், இவைகளுக்குப் பதில் அளிக்கப்பட முடியும். மேற்கண்டவை போன்ற வாழ்வின் முக்கியமான கேள்விகளுக்குத் தீர்வு காண நாம் கடும் முயற்சி செய்கின்றோம்.*

*நாம் தேவனுடைய எல்லையற்ற அறிவு பற்றிக் கற்றுக் கொள்கையில், அவருடைய எல்லையற்ற அறிவானது அவருடைய சித்தத்திற்குச் சமானமானதாயிருப்பதில்லை என்பதை நினைவுகூருவதே நமக்கு முன்பாக உள்ள ஒரு அறைகூவல் ஆகும். இந்த மாறுபாடு இப்பொழுது எழுப்பப் பட்ட வினாக்கள் சிலவற்றால் எழுந்த இறுக்கத்தை ஒழித்துப் போடுகின்றது. தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றார் என்ற உண்மையானது அவை யாவும் நடக்க வேண்டும் என்று அவர் சித்தம் கொண்டுள்ளார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. தெய்வீகத்துடனான மனித ஒப்பீடுகள் வரையறைக்குட்பட்டவைகளாக உள்ளன, ஆனால் நாம் புரிந்து கொள்ள உதவியாக இந்த நடைமுறையைப் போக்கிடமாகக் கொண்டுள்ளோம்.*

*முடிவற்ற, மற்றும் உலகளாவிய அடிப்படையில் தேவன், மக்கள் யாவரும் சரீர வியாதிகள் தங்களுக்கு ஏற்படுத்துவதைக் காட்டிலும் மிக அதிகமாகக் கேட்டுக்குள்ளாக்கும் வழியில் இயலாதவர்களாய் இருப்பதை அறிகின்றார் (ஏசா. 64:6); ஆனால், "ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி" (2 பேது. 3:9) என வாசிக்கிறோம். எனவே, அவர் கல்வி புகட்டி (யோவான் 6:45), எச்சரித்து (லூக். 12:4, 5), அழிவிலிருந்து மீட்பதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் அளிக்கின்றார் (யோவா. 3:16).*

## இது அளிக்கின்ற விளக்கம்

இப்பொழுது நாம் வேதவசனத்தில் உள்ள தீர்க்கதரிசனங்களைக் கவனிக்கத் திரும்புவோம். முதலாவதாக, தீர்க்கதரிசனமானது வேதாகமத்திலிருந்து நீக்கப்பட்டால் அது (வேதாகமம்) நேர்ப்பொருளில் ஒழிந்து போகுமளவுக்குத் தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்தில் ஊடுருவியுள்ளன. வேதாகமத்தின் பெரும் பகுதியானது அதன் பிறகு அறிவிற்கு ஏற்புடையதாகவோ, இசைவானதாகவோ அல்லது படிக்கக் கூடியதாகவோ கூட இருக்காது. பெரிய மற்றும் சிறிய தீர்க்கதரிசனங்கள், வரலாற்றுப் புத்தகங்களில் விரிவாகப் பரவியுள்ள தீர்க்கதரிசனங்கள், இயேசுவால் கூறப்பட்ட மற்றும் போதிக்கப்பட்ட ஏராளமான தீர்க்கதரிசனங்கள், மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவை இல்லாத ஒரு வேதாகமத்தைக் கற்பனை செய்து பாருங்கள். வேத வசனத்தின் குறைவுபடாத இந்தப் பகுதிகள் இன்றி, வேதாகமம் வேதாகமமாக இருக்காது. இதிலிருந்து நாம் எதை உய்த்துணர முடிகின்றது? வேதாகமமானது அதன் பரந்துள்ள தீர்க்கதரிசன அளவீட்டில், தேவனுடைய எல்லையற்ற அறிவின் ஒரு கண்ணாடியாக உள்ளது. தீர்க்கதரிசனமானது முன்னுரைத்தலுக்கு உட்படாதிருந்தாலும் இது உண்மையாய் இருக்கின்றது. ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் அதன் நிறைவேற்றம் வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் இது உண்மையாய் இருக்காது. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமானது தீர்க்கதரிசியின் நம்பகத் தன்மையை நிலைநாட்டுகின்றது என்று நமக்குத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளதே (உபா. 18:22).

வேதாகமத்தின் பல தீர்க்கதரிசனங்கள் இன்னமும் நிறைவேறவில்லை. அவைகளில் சில இன்னமும் வரலாற்றில் நிறைவேற வேண்டியுள்ளன; அவைகளில் பல, காலத்தின் முடிவைச் சுட்டிக்காட்டுகின்றன. அப்படியானால், வேதாகம தீர்க்கதரிசனமானது தேவனுடைய எல்லையற்ற அறிவை எவ்விதம் விளக்கப்படுத்துகின்றது? வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் கூறப்பட்ட பல தீர்க்கதரிசனங்கள் பெரும்பாலும் உடனடியாக நிறைவேறின; மற்றவை ஒரு குறுகிய காலத்தில் நடந்தேறின; மற்றும் இன்னும் மற்ற சில தீர்க்கதரிசனங்கள் சில நூற்றாண்டுகள் காத்திருப்புக்குப் பின்பு நடந்தேறின.[5]

வேதாகமத்தில் உள்ள நிறைவேறிய தீர்க்கதரிசனமானது வரலாற்றின் எல்லையைச் சார்ந்துள்ள மனிதர்களால் அழைக்கப்படுகின்றபடி, தேவனுடைய முன்னறிவிற்கு உன்னதமான உதாரணமாக உள்ளது. "முன்னறிவு" என்றால் "முன்பாகவே அல்லது முன் கூட்டியே அறிதல்; முன்னதாகவே அறிவை பெற்றிருத்தல்" என்று அர்த்தப்படுகின்றது. இந்த முன்னறிவானது நிகழ்ச்சிகளின் ''சாதாரண'' ஒழுங்கமைவை உண்மையில் திருப்பி விடுகின்றது. ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய நமது அறிவானது அந்த நிகழ்ச்சி நடந்த பின்பு தான் வருகின்றது. நாம் அதை முன்னதாகவே அறிந்திருப்பதாக நாம் நினைக்கலாம். சில நிகழ்ச்சி நடக்கும் என்பதில் நாம் நிச்சயமாய் இருக்கலாம். தவறாகி விடுதல் என்பது சங்கடப்படுத்துவதாக இருப்பதில்லையா? சில வேளைகளில் நாம் அப்படியாகிவிடுகின்றோம், நீங்கள்

*அறிவீர்களா!*

*தேவன் தவறுகிறவராய் இருப்பதில்லை. வரலாற்றில் (காலத்தில்) என்ன நடந்துள்ளது, நடக்கின்றது, மற்றும் நடக்கும் என்பவைகளை அவர் நித்தியத்தில் அறிந்துள்ளார். நாமும் வேதாகம எழுத்தாளர்களும் தேவனுடைய முன்னறிவு என்று அழைக்கும் விஷயமானது, வரையறுத்தலுக்குட் பட்ட வழியிலான அவரது வரையறையற்ற மனம் ஆகும் (அப். 2:23; ரோமர் 11:2அ). இது வேறு வழியில் இருக்க முடிந்திராது. தேவனை நாம் அவரது முழுமைத் தன்மையிலும், அவரது நோக்கிலும் “காண” வேண்டும் என்று தேவன் விரும்பியிருந்தால், அவர் உறுதியாகவே நமக்கு அந்தக் கண்ணோட்டத்தை அளித்திருப்பார்; ஆனால் நாம் இப்பொழுது பாவம் நிறைந்த மனிதர்களாய் இருப்பது போல் இருக்க மாட்டோம்.*

*தேவனுடைய எல்லையற்ற அறிவைக் காண்பதற்குப் பின்வரும் திட்ட வரைவானது நமக்கு உதவி செய்யக் கூடும்:*




*இவ்வரைபடத்தின் வெளிப்புற எல்லைக் கோடானது நித்தியம் வரையறைக்குட்பட்டது என்று மறைவாக உணர்த்துவதில்லை. உட்புறம் உள்ள செவ்வகமானது ஒவ்வொன்றும் அழியக் கூடியதே, அதாவது காலத்தினால் கட்டப்பட்டுள்ளதே என்பதைப் பிரதிநிதித்துவப் படுத்து கின்றது. தேவனுடைய பிரசன்னம் தவிர, உட்புறச் செவ்வகத்தினுள் அட்டவணையிடப்பட்டுள்ள ஒவ்வொன்றும் முடிவுக்கு வரும். அவர், காலத்திலும் நித்தியத்திலும் ஒரே வேளையில் இருக்கின்றார். காலங்கள் முடிகின்ற பொழுது, இரட்சிக்கப்பட்டவர்களும் தேவனும் நித்தியத்தில் நித்திய காலமாக இருப்பார்கள். தேவன் தமது எங்கும் நிறைந்துள்ள தன்மை மற்றும் எல்லையற்ற அறிவு ஆகியவற்றினால் எல்லாவற்றையும் ‘‘காண்கின்றார்.’’ எல்லாவற்றையும் ‘‘காண்பது’’ என்பது நமக்குக் கடினமானதாக, உண்மையில் நம்மால் இயலாததாக உள்ளது. இம்மா*

பெரும் வெளித்தோற்றமானது நாம் பவுலின் பின்வரும் ஆச்சரியக் கூற்றை பாராட்டும்படி செய்கின்றது:

> ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவை கள்! … சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமென் (ரோமர் 11:33-36).

---

குறிப்புகள்

[1]Philip Elmer-DeWitt, "Battle for the Soul of the Internet," *Time* 144 (July 1994): 50-55. [2]*Anthropos என்பது ஆண்பாலுக்குரிய கிரேக்கச் சொல்லாகும்.* "Anthropocentric" *என்றால் ''மனிதனை மையமாய்க் கொண்ட'' என்று அர்த்தப்படுகின்றது. "தெய்வீகத்துவம்" என்பது தெய்வீகம் அல்லது தேவத்துவம் சார்ந்தது. மனிதன் எல்லாவற்றிற்கும் மையமாக ஆனதினால் தன் சுய கண்களுக்கே அவன் தேவனாக பாவிக்கின்றான்.* [3]E. H. Ijams, *The Reality of God* (Nashville: Williams, 1978), 12, 120. [4]*இந்த விசாரிப்பில் நாம் எப்படி அறிகிறோம் என்பது பற்றி நாம் கவனம் செலுத்துவதில்லை. நாம் பெறுகின்ற அறிவில் சில நமது அனுபவத்துடன் தொடர்புடையதாக உள்ளது.* [5]*1 இரா. 11:29-32/12:15, 20; 1 இரா. 21:23; 2 இரா. 9:31-37/2 இரா. 19:20-37; ஏசா. 40:3/மத். 3:3; ஏசா. 42:1-4/மத். 12:18-21; யோவே. 2:28-32/அப். 2:16-21; முதலியன.*

# தேவனுடைய சர்வ வல்லமை:

## நமது தேவன் "பலம் குறைந்தவராய்" ஆவதில்லை

*தேவனைப் பற்றிய எந்த ஒரு கலந்துரையாடலும் பல காரணங்களினால் தடங்கல் செய்யப்படுகின்றது. ஒருவேளை மிகக் குறிப்பிடத் தக்க ஒன்று (காரணமானது) புரிந்து கொள்ளுதலில் நமக்குள்ள குறைப்பாட்டைச் சார்ந்திருக்கலாம். யோபுவைப்போல் தேவனுடைய இருத்தல் பற்றிய உண்மையை நாம் எதிர்கொள்ளும்போது, நாம் அவர் செய்தது போலவே பின்வருமாறு பதில் கொடுக்கும்படி அடிக்கடி அசைக்கப்படுகின்றோம்: "நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும், நான் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன்" (யோபு 42:3ஆ).*

*தேவனைப் பற்றி கலந்துரையாடுவதில் உள்ள இன்னொரு சிரமம் என்னவென்றால், நாம் அடுத்தடுத்து கலந்துரையாட வேண்டியவைகளில் அவர் ஒரே வேளையில் இருக்கின்றார் என்பதேயாகும். தேவன் ஒரே வேளையில் எங்கும் இருப்பவராகவும், எல்லையற்ற அறிவுள்ளவராகவும், மற்றும் சர்வ வல்லவராகவும் இருக்கின்றார்; ஆனால் இந்த அம்சங்கள் பற்றி நாம் ஒவ்வொன்றாகத்தான் கலந்துரையாட வேண்டும். இதை நாம் செய்கையில், தேவன் தொடர்ந்து, அதே வேளையில் அறிகின்றார் மற்றும் செயல்படுகின்றார் என்பதை நமது சிந்தனைகளில் தேக்கி வைக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். அவரது இருத்தலானது ஒருபோதும் முடிவதில்லை, அவரது அறிவானது ஒருபோதும் குறைவு படுவதில்லை மற்றும் அவரது வல்லமையானது ஒருபோதும் குறைவதில்லை.*

*தேவனைப் புரிந்து கொள்ளுதல் பற்றிய நம் நம்பிக்கையானது அவரைத் துரத்தி வெளியேற்றும் தந்திரமுள்ள நம் திறமையின் மீது அமையாமல், அவர் நமக்கு வெளிப்படுத்தினவைகளில் சிலவற்றையாவது பெற்றிருப்பதில் அவருடைய சித்தத்தின் மீது அமைந்ததாய் உள்ளது. அவர் இதை இயற்கையில் (அவரது படைப்பில்), கிறிஸ்துவில் (அவரது குமாரனில்), மற்றும் வேத வசனங்களில் (அவரது வார்த்தையில்) செய்திருக்கின்றார் என்பதில் நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்க வேண்டும். இப்பொழுது நாம், சர்வ வல்லமை நிறைந்த தேவனைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைப் பற்றி நாம் காணக்கூடிய இடமான அவரது வசனத்திற்கு திரும்புவோம்.*

## பழைய ஏற்பாட்டில் அவரது வல்லமை சித்தரிக்கப்பட்டது

*தேவனுடைய பலத்த செய்கைகளில் காணப்படுகின்றபடியான அவரது சர்வ வல்லமையைப் பழைய ஏற்பாடு வலியுறுத்துகின்றது. இது தேவனைப் பற்றிய புலன் கடந்த அல்லது புலன்களால் உணர முடியாத கருத்துக்களை நீக்கிப் போடுவதில்லை. இருப்பினும், இப்படிப்பட்ட கருத்துக்கள் பழைய ஏற்பாட்டில் அரிதாகவே இருக்கின்றன. மாறாக, வல்லமையினால் வரலாற்றை மாற்றிய ஒரு தேவனை நாம் பழைய ஏற்பாட்டில் காண்கின்றோம். எகிப்திய இராஜ்யமானது கொள்ளை நோய்களால் பேரழிவுக்கு உட்பட்டுப் பாதிக்கப்பட்டது (யாத். 7-11). இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து தப்பிச் செல்லும்படியாகப் பிரிந்து நின்ற அதே செங்கடல் எகிப்தியப் படைகளை அழித்து ஒழித்தது (யாத். 14; 15). சீனாய் மலை அதிர்ந்து புகைந்தது, தேவனுடைய வெளிப்பாடுகளினால் மக்கள் பயந்து நடுங்கினர். ஆசாரியர்கள் உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு செல்ல, அவர்களை இஸ்ரவேலர்கள் பின்பற்றிச் செல்லும்படியாக யோர்தான் நதியின் தண்ணீர் நின்று போனது (யோசுவா 3; 4). "ஜனங்களை நோக்கி: ஆர்ப்பரியுங்கள், பட்டணத்தைக் கர்த்தர் உங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்" (யோசு. 6:16ஆ) என்ற யோசுவாவின் கட்டளையை உறுதிப்படுத்தும் வகையில் எரிகோ நகரின் மதில் சுவர்கள் இஸ்ரவேலர் களுக்கு முன்பாக இடிந்து வீழ்ந்தன. இன்னும் பல உதாரணங்களைக் கூட்டித்தர முடியும், ஆனால் தெய்வீக வல்லமையை விளக்கப்படுத்த இந்த ஒரு சில உதாரணங்களே போதுமானவைகளாய் இருக்கின்றன.*

*தேவனுடைய வல்லமையானது அவரது அருளிரக்கத்தின் கீழ் அமைந்திருந்ததை தேவனுடைய மக்கள் கண்டனர். தேவன் அவர்களை நடத்திய வகையின் செயல்படுத்துதலே அவர்களின் வரலாறாயிருந்தது. தேவன் தங்களைப் பாதுகாத்ததில் அவர்களுக்கிருந்த விசுவாசமானது அவ்வாறு அவர் செய்வதில் அவருக்குள்ள பலத்தின் மீதும் அவர்கள் கொண்டிருந்த விசுவாசமாய் இருந்தது. அருளிரக்கத்தினால் வெளிப் படுத்தப்பட்ட தேவனுடைய வல்லமையின் இந்த உறுதிப்பாடானது சங்கீதங்கள் பலவற்றின் மூலைக் கல்லாகவும் உள்ளது. உதாரணமாக நாம், "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: 'நீர் என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர்' என்று சொல்லுவேன்'' (சங். 91:1,2) என்று வாசிக்கின்றோம்.*

*தேவனுடைய மக்கள், தாங்கள் தேவன்மேல் நம்பிக்கை வைத்திருந் தால் அவர் தங்களுடைய மாபெரும் அளிப்பவராகவும் அடைக்கலமாகவும் இருப்பார் என்பதில் நிச்சயமாய் இருந்தனர். இந்த உறுதிப்பாடானது தேவன் அவர்களைப் போஷிக்கவும், தீங்கிலிருந்து விடுவிக்கவும் சித்த மாயிருந்தார் என்ற அவர்களின் நம்பிக்கையின்மீது மட்டுமின்றி, அவர் அவ்வாறு செய்ய வல்லவராய் இருக்கின்றார் என்ற அவர்களின் விசுவாசத்தின்மீது நிலை கொண்டிருந்தது.*

## அவரது வல்லமை அவரது நாமத்தில் குறிப்பிடப்பட்டது

தேவனுக்கு இஸ்ரவேலர்களால் குறிப்பிடப்பட்ட பல நாமங்கள் அவரது வல்லமையின் மீது அவர்களுக்கிருந்த விசுவாசத்திற்குச் சாட்சி யளித்தன. சங். 91ல் நாம் மூன்று முன்மாதிரிகளைக் காண்கின்றோம். முதலாவது, ''உன்னதமானவர்'' என்பது elyon என்பதின் மொழி பெயர்ப்பாகும். இரண்டாம் வார்த்தையான El என்பது கானானியரின் பிரதான தெய்வத்திற்கு வழங்கிய ஆதி கானானியப் பெயராகும். இது "பலமான, வல்லமை நிறைந்த ஒருவர்" என்று அர்த்தப்பட்டது.[1] புறதெய்வ வழிபாடு நீக்கித் துப்புரவான போது, "El" என்ற வார்த்தை எபிரெயர்களின் ஜீவனுள்ள மெய்யான தேவனுக்குப் பயன்படுத்தப்பட்டது. சங். 91ல் இந்தப் பெயர் மிக உயர்ந்த நிலையில் உள்ளது: Elyon என்பது மிக உயர்ந்த அளவில் வல்லமையுள்ள "உன்னதமானவர்" ஒருவருக்குச் சமமாகின்றது. இஸ்ரவேலர்கள் தேவனுடைய வல்லமை மற்றும் அருளிரக்கம் நிறைந்த கவனிப்பு ஆகியவற்றைப் பற்றிய அறிவில் நெருக்கமாய் நினைவூட்டப் பட்டனர், இது இஸ்ரவேல் பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு இட்டபெயர்களினால் சுட்டிக்காட்டப்பட்டது. ஏலி, சாமுவேல், எலியா என்பவை முன்மாதிரிகள் ஆகும். சங். 91ல் உள்ள மூன்றாம் முன் மாதிரியானது தேவனுடைய வல்லமையில் இஸ்ரவேலர்களுக்கிருந்த நம்பிக்கையைக் காட்டுகின்றது, இது ''சர்வ வல்லவர்'' என்று மொழி பெயர்க்கப்பட்ட Shaddai என்ற பெயராக உள்ளது.

## புதிய ஏற்பாட்டில் அவரது வல்லமை பிரதிபலிக்கப்படுகின்றது

தம்முடைய சித்தத்தின்படி செய்ய சர்வ வல்லமையும் பெற்ற ஒரு தேவனைப் புதிய ஏற்பாடும் கூடச் சித்தரிக்கின்றது. இது பின்வருவன போன்ற கூற்றுக்களால் நேரடியாக முன்னணிக்குக் கொண்டு வரப் படுகின்றது: "... மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்" (லூக். 18:27). பழைய ஏற்பாட்டில் உள்ளது போலவே, புதிய ஏற்பாடும் கூட, தேவனு டைய வல்லமையானது அவர் தம் மக்களின் நன்மைக்காகத் தம் வல்லமையைப் பயன்படுத்துகின்றார் என்ற நம்பிக்கையுடன் இணைந்துள்ள இந்த உறுதிப்பாட்டைக் காண்பிக்கின்றது: "... தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?'' (ரோமர் 8:31). தேவன் தம் மக்களைப் பாதுகாக்க, போஷிக்க மற்றும் விடுவிக்கக் கொண்டுள்ள அவரது வல்லமையின் இந்த உறுதிப்பாடானது/ நிச்சயத் தன்மையானது அவரது அருகாமையில் அவர்களுக்குள்ள நம்பிக்கையுடன் மற்றும் அவர்களின் வாழ்வு பற்றிய ஒவ்வொரு விபரத்தைப் பற்றிய அவரது அறிவுடன் (மத். 10:29-31) தொடர்பு கொண்டதாய் உள்ளது (அப். 17:27ஆ).

வேதாகமத்தில் நமக்கு வெளிப்படுத்தப்பட்டபடி தேவன் தூரத்திலோ,

அறியாதவராகவோ அல்லது பலமற்றவராகவோ இருப்பதில்லை. உண்மையில் "தேவனுடைய எல்லையற்ற தன்மை" என்ற இந்த முழுப் பகுதியும் (பகுதி I) அவர் எங்கும் நிறைந்திருப்பவர், எல்லையற்ற அறிவுள்ளவர் மற்றும் சர்வ வல்லவர் என்றே வலியுறுத்துகின்றது. இது, தேவன் இயற்கை மதக் கோட்பாட்டில் (Deism) விவரிக்கப்படும் கடவுள் அல்ல என்று அர்த்தப்படுத்துகின்றது: உலகத்தின் செயல்பாட்டில் இருந்து விலகியிருப்பதற்காகவும், சொந்தமற்ற வழியில் அதைக் கவனித்துக் கொண்டிருப்பதற்காகவும் மட்டும் அவர் சிருஷ்டிப்பில் தம்முடைய மாபெரும் வல்லமையைச் செயல் படுத்தியிருக்கவில்லை. அல்லது அவர் இயற்கையே தெய்வம் என்ற கோட்பாட்டின் தெய்வமும் அல்ல: அவர் இந்த அண்டத்தின் மற்றும் இதன் எந்த ஒரு பகுதியின் மனம் அல்லது ஆத்துமாவாக இருப்பவர் தேவன் என்ற பரிந்துரையில் பொருந்துவதில்லை. திட்டவட்டமாகவே அவர் தத்துவம் இறையியல் செயல்முறையின் தேவன் அல்ல: அவர் இந்த உலகத்தின் செயல்முறைகளால் தமது படைப்பில் பணிபுரிகையில் இந்த உலகத்தின் செயல்முறைகளால் மாற்றப்படுமளவுக்கு அவைகளில் ஈடுபடுவதில்லை.[2] தேவன் புலன் கடந்தவராகவும், உள்ளார்ந்தவராகவும் இருந்து, நமது சொந்த தனிப்பட்ட முடிவு உட்பட எல்லாவற்றிற்கும் பொறுப்பாளராய் இருக்கின்றார்.

நாம் தேவன்மீது முற்றிலுமாகச் சார்ந்திருக்க முடியும். இது, ஒளியூட்டப்பட்ட விசுவாசத்தின் மூலம் அவருடைய மிகுந்த வல்லமை நிறைந்ததும் வாழ்க்கையை எல்லாம் மாற்றுவதுமான செயல்பாட்டினால் - இரட்சிப்பை நமக்குச் சாத்தியமாக்குகின்றது. சிலுவை மரணமே வரலாறு எல்லாவற்றின் திருப்பு முனையாக அமைந்தது. இந்த வரலாற்றுப் பூர்வமான கணத்தில், திரையொன்று நீக்கப்பட்டு மனித இனத்திற்குத் தேவனுடனான ஒரு புதிய உறவு சாத்தியமாக்கப்பட்டது. வரலாற்றைச் சுழற்றித் திருப்பவும், தேவனுடனான நித்தியத்திற்கும் மகிழ்ச்சியான ஒரு உறவை நாம் பெறுவதற்குச் சாத்தியமாக்கவுமான வல்லமையானது கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய இரண்டினாலும் செயல் விளக்கப்படுத்தப்பட்டது. இதுவே கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ற நற்செய்தியாக உள்ளது. இதன் நிறைவான கனி தரும் தன்மையானது தேவன் தம் பணியை நிறைவாக்க அவரிடம் உள்ள வல்லமையைச் சார்ந்துள்ளது என்பதும் உண்மையே ஆகும்.

## பயன்பாடுகள்

தேவனால் எல்லாம் கூடும் என்ற கருத்தைப் பற்றிக் கொண்டுள்ள நமது விசுவாசமே நமது மதத்தையும் நமது வாழ்க்கையையும் உருவமைக்கின்றது. இருப்பினும், நமது விசுவாசம் "பார்வையற்ற" விசுவாசம் அல்ல. தேவனுடைய வல்லமையைப் பற்றிய கடினமான கேள்விகளுக்கு நாம் பதில் சொல்லாமல் விட்டு விடுவதில்லை. நாம் அவைகளை எதிர்கொள்ள வேண்டும். அவைகளில் சில கேள்விகளை நாம் கவனிப்போம்:

"தேவனுடைய எல்லையற்ற வல்லமையானது அசையாப் பொருள்

*ஒன்றை எதிர்கொள்ளும்போது என்ன நடக்கின்றது?" சுய முரண்பாடுள்ள வைகளுக்கு தேவனுடைய வல்லமை பயன்படுவதில்லை, "அசையாத பொருள்" என்று ஒன்று இருப்பதில்லை. இந்தக் கேள்வி கோட்பாட்டு ரீதியானது. இது உண்மைத்தன்மையை மழுப்புவதாய் இருக்கின்றது.*

*"தேவன் கடந்த காலத்தை மாற்ற முடியுமா?" என்பதும் இதே போன்ற கேள்வியாகவே இருக்கின்றது, இந்தக் கருதுகோள் வினாவானது கடந்த காலத்தைக் குறிப்பிடுகின்றது, எனவே கடந்த காலம் என்பதைப் பொறுத்தமட்டில் நித்தியத்தில் அப்படிப்பட்ட ஒன்றும் இருப்பதில்லை. இந்தக் கேள்விக்கான பதிலானது துன்மார்க்கனாய் இருந்து மரித்த ஒருவருக்காக ஜெபிப்பதில் இருந்து நம்மைத் தடை செய்து காக்கின்றது.*

*மற்ற கேள்விகள் சில வேளைகளில் கேட்கப்படுகின்றன: "தேவன் பொய் கூற முடியுமா?"; "அவர் பாவம் செய்ய முடியுமா?"; "அவர் மரிக்க முடியுமா?" இவை ஒவ்வொன்றிற்கும் இடி முழக்கம் போன்ற "இல்லை" என்ற பதிலே கூறப்படுகின்றது. இந்தச் செயல்பாடுகள் அவரது இயல்புக்கு நேர்மாறானவைகளாய் இருக்கின்றன. அவர் முற்றிலும் மெய்யானவராய் இருப்பதால் அவர் பொய் கூற முடியாது (எரே. 10:10). அவர் முற்றிலும் சுத்தமுள்ளவராய் இருப்பதால் அவர் பாவம் செய்ய முடியாது (1 யோவா. 3:2, 3). அவரே ஜீவனாய் இருப்பதால் அவர் மரிக்க முடியாது (சங். 36:9; 133:3ஆ). தேவன் தமது இயல்புக்கு மாறான எதையும் செய்ய முடியாது. சலனப்படும் வகையில் செயல்படுமளவுக்குத் தேவன் பலவீனமானவரல்ல என்று அறிவதில் நாம் நன்றி செலுத்தத் தேவையான காரணத்தைப் பெற்றுள்ளோம். அவர் உண்மையுள்ள தேவனாக இருக்கின்றார் (உபா. 7:9; 1 கொரி. 10:13). அவர் தமது சொந்த இயல்பிலிருந்து அசையாதவராகக் காணப்படுகின்றார் (யாக். 1:17, 18).*

*கடைசியாக, "தேவன் தம் வல்லமையை எப்பொழுதாவது வரையறைக்குட்படுத்துகின்றாரா?" இந்தக் கேள்விக்கு எச்சரிக்கையாகப் பதில் அளிக்க வேண்டும். சர்வ வல்லமையுள்ளவராய் இருப்பது தேவனுடைய இயல்பு என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். ஆகையால், அவர் தமது வல்லமையை வரையறைக்குட்படுத்துவது என்பது அவரது இயல்புக்கு, அவரது எல்லையற்ற சர்வ வல்லமைக்குக் கூட நேர்மாறானதாக உள்ளது. இருப்பினும், அவர் தம் அநந்த ஞானத்தில், தமது எல்லையற்ற சித்தத்தை நிறைவேற்றப் பூரணமாக வடிவமைக்கப்பட்ட வழிகளில் செயல்படுத்துவதைத் தமது வரையறையற்ற வல்லமையைத் தெரிந்து கொள்ளலாம். வேத வசனங்கள் எல்லாவற்றிலும் இருதயத்தை அசையப் பண்ணுகின்ற மற்றும் மிக மேன்மையான வசனப் பகுதிகளில் ஒன்றில் இது காணக் கிடக்கின்றது. நாம் யாவரும் ஒளியூட்டப்படி நாடுகின்ற வேளையில், ஒருவேளை, பவுலின் இந்த ஜெபமானது நம் எல்லாருடைய ஜெபமாகவும் இருக்க வேண்டும்.*

> *தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; தாம்*

*கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர் களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக் கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன். எல்லாத் துரைத் தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து (எபே. 1:18-21) என்று வாசிக்கிறோம்.*

---

*குறிப்புகள்*

[1]W. F. Albright, *Archaeology and the Religion of Israel* (Baltimore: Johns Hopkins, 1956), 72. [2]Carl F. H. Henry, *God, Revelation and Authority,* vol. 1, *God Who Speaks and Shows* (Waco, Tex.: Word Publishing Co., 1976). "Deism," "Pantheism," *மற்றும்* "Process Philosophy-Theology," *ஆகியவற்றிற்கு இந்தத் தொகுதியின் பாடக் கருத்துப் பொருளட்டவனையில் காணவும் அல்லது தரமான இறையியல் குறிப்புப் புத்தகம் ஏதொன்றிலாவது காணவும்.*

# பிரிவு II:
# நமக்காக தேவனுடைய சந்தர்ப்பப் பொருள்

"உண்மைத் தன்மை" என்று நாம் அழைக்கின்ற பெரிய சித்தரிப்பில் இருந்து சொற்பொருள்/கருத்தறிவு எதையேனும் நாம் ஏற்படுத்துவதாயிருந்தால், ஒவ்வொன்றும் இருக்கின்றபடி ஏன் இருக்கின்றது என்ற சிந்தனைக்கு நாம் இடம் கொடுக்க வேண்டும். நாம் முதல் பிரிவில் விட்டு வந்த இடத்திலிருந்து தொடங்கலாம். அங்கு நாம், எப்பொழுதும் இருக்கின்ற, எல்லாம் அறிந்த, மற்றும் எல்லா வல்லமையும்/அதிகாரமும் நிறைந்த தேவனுடைய தனிச் சிறப்புக்களைக் கூர்ந்து ஆராய்ந்தோம். இவைகள் தேவனின் சாராம்சமாகிய ஆவிக்குள் இருக்கும் அடிப்படைக் கூறுகளாகும்.

தேவனுடைய இயல்பினால் எழக்கூடிய சில விளைவுகளைப் பற்றி நாம் சுருக்கமாகக் கூறினோம். இப்பொழுது நாம் இந்த ஆய்வுப் பொருளை எடுத்துக் கொண்டு இதை முழுமையாக வளரச் செய்வோம். இதைச் செய்ய வேண்டியது அவசியமாகின்றது; இல்லையென்றால் தேவன் என்பவர் உபகாரம் செய்கின்ற, தூரத்தில் உள்ள, புலன்களால் உணரப்படாத/கற்புலனாகாத "சக்தி" என்று நாம் எண்ணத் தலைப்படுவோம். எல்லா ஞானமும் கொண்ட தேவன் இந்தப் பிரச்சனையைப் பற்றி அறிந்தவராயிருந்து, அவரைப் பற்றி அதிகம் குறிப்பிடத் தக்க வழியில் நம்மைப் பழக்கப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதும் உண்மையே. அவர் எடுத்த அந்த நடவடிக்கையே இந்தப் பிரிவின் தலைப்பான "நமக்காக தேவனுடைய சந்தர்ப்பப் பொருள்" என்பதைச் சூழ்ந்துள்ளது.

நமக்காக தேவனுடைய சந்தர்ப்பப் பொருள் என்பதைப் பற்றி நாம் பேசும் பொழுது, அவர் எப்படி இருக்க வந்தார் என்ற கருத்துடன் நாம் போராடிக் கொண்டிருக்கப் போவதில்லை. அவரது இருத்தல் என்பது கொடுக்கப்பட்ட ஒன்றாகும். மாறாக, நாம் உட்பட மற்ற ஒவ்வொன்றும் எப்படி மற்றும் ஏன் இருக்க வந்தது. நாம் இருக்கின்ற வழி முறையில் இருப்பது ஏன்? நமது உலகம் ஏன் இப்படி உள்ளது? என்பவற்றுடன் நாம் போராடப் போகின்றோம்.

இந்த கேள்விகளுக்கான பதில்கள் நமக்கு எவ்விதம் உதவுகின்றன? இன்றைய நாளுக்கு அப்பால் உள்ளதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்? இவை எல்லாவற்றிலும் தேவனுடைய "ஆர்வம்" என்ன? நமக்கு முன் உள்ள அறைகூவலானது அச்சுறுத்துவதாக இருக்கின்றது.

*இருப்பினும், இப்படிப்பட்ட விஷயங்கள் பற்றி நாம் அக்கறை செலுத்த மறுத்தோமென்றால், நம்மை நாமே எதிர்மாறான கொள்கைகள் கொண்ட பின்பற்றுவதற்கு எந்தப் பாதையைத் தேர்ந்து கொள்வது மற்றும் இது எல்லாம் எங்கு "முடிகின்றது" என்பது பற்றி நிச்சயமற்ற ஒரு நிலைக்கு தாழ்த்திக் கொள்கின்றோம்:*

> *ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது, ... தேவ ஆவியானவர் ஜலத்தின் மீது அசைவாடிக் கொண்டிருந்தார் (ஆதி. 1:1, 2).*

> *பூர்வ காலங்களில் ... தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன் ... குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார், இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் (எபி. 1:1, 2).*

> *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது, அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; ... அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியா யிருந்தது (யோவா. 1:1-4).*

# நமது தேவன் சிருஷ்டிக்கும் வல்லமையுள்ளவர்

*வல்லமையைப் பற்றி, அதிலும் விசேஷமாய் வரையறையற்ற வல்லமையைப்பற்றி, சில வழிமுறையில் அதன் விளக்கம் பற்றிக் கவனியாமல் நாம் மிக அரிதாகவே சிந்தித்துப் பார்க்க முடியும். வல்லமையின் செயல் விளைவுகளில் நாம் அதை அடிப்படையாகப் புரிந்து கொள்ளுகின்றோம். செயல்படுத்தப்பட்ட வல்லமை என்பது விளக்கப் படுத்தப்பட்ட வல்லமையாய் இருக்கின்றது. மனிதர்கள் வல்லமையில் வரையறைக்குட்பட்டிருந்தாலும், மறைந்துள்ள வல்லமையைச் செயலில் ஈடுபடுத்தவும் அதைப் பல வழிகளில் பயன்படுத்தவும் கூடியவர்களாய் இருந்துள்ளனர். மின்னல், இடியில் காணப்பட்ட வல்லமையானது வீடுகள் மற்றும் நகரங்களுக்கு ஒளியூட்டப் பயன்படுத்தப்படுகின்றது. அணுவில் அடங்கியுள்ள வல்லமையானது சக்தியின் ஏராளமான ஆதார மூலமாக நெறிப்படுத்தப்படுகின்றது. பெட்ரோலியத்தின் வல்லமையானது, உள் எரி என்ஜினுக்குள் பயன்படுத்தப் போடும் வகையில், பயணமாக மாற்றுரு வாகியுள்ளது. இந்த உதாரணங்கள் மனதில் ஆழ்ந்து பதிகின்றவைகளாய் உள்ளன. நமது உலகத்தில் வல்லமையின் இந்தப் பயன்கள் நம் மீது செல்வாக்கு கொண்டுள்ளன.*

*வல்லமையின் இந்த உதாரணங்கள் யாவும் உண்மையில், ஏற்கனவே இருக்கின்ற வல்லமையைப் பயன்படுத்துவதின் உதாரணங்களாகவே உள்ளன. இவ்வுலகில் ஏற்கனவே மறைந்திருக்கின்ற வல்லமையை மக்கள் கண்டறிந்து, தகவமைத்து, கட்டுப்படுத்தி மற்றும் பயன்படுத்துகின்றனர். இது இயற்கையைப் பற்றியும் நமது உலகத்தின் ஆதார மூலம் பற்றியும் சிலவற்றைச் சுட்டிக்காட்டுகின்றது. இது முறையானதொரு வழி வகையில் கட்டுப்படுத்தப்பட்ட நம்புவதற்கரிய வல்லமையினால் உடுத்துவிக்கப் பட்டுள்ளது. நமது இயல்பான உலகத்தில் (உலகப் பொருட்களில்) உள்ள அணுக்கள் சக்தியுடன் சுழன்று கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட பிளவு அல்லது பிணைப்புச் செயல்முறையினால் அவை ஒழுங்கற்ற நிலையில் அமைக்கப்பட்டால், ஏறக்குறைய கற்பனை செய்து பார்க்க முடியாத வலிமையின் வடிவத்தில் பெரும் குழப்பம் வெடிக்கின்றது.*

*இவை யாவும் தேவனைப் பற்றி என்ன செய்வதாய் உள்ளது? "தேவனு டைய வரையறையற்ற தன்மை" என்ற நமது முதல் பிரிவில், நாம் தேவனு டைய எங்கும் நிறைந்துள்ள தன்மை, எல்லையற்ற அறிவு மற்றும் சர்வ வல்லமை ஆகியவற்றை கலந்துரையாடினோம். தேவன் சர்வ வல்லமை யுள்ளவராகையால், அவர் சிருஷ்டிக்கும் வல்லமையுள்ளவராய்*

இருக்கின்றார். வல்லமையானது செயல்பாட்டில் விளக்கப் படுத்தப் படுகின்றது. தேவன் எல்லாம் அறிந்தவராகையால், அவரது படைப்பானது "அவர் அதைக் கண்ணோக்கியபடியே" இருக்கின்றது. அது அவரது சித்தத்தின்படியானதாய் இருக்கின்றது. தேவன் எப்பொழுதும் இருக்கின்ற வராகையால் அவர் எங்கும் பரவியிருப்பவராய் உள்ளார். அவர் உலகமாகிய தமது சிருஷ்டிப்பில் தம்மை விளக்கப்படுத்தினார். இவ்விதமாக, சிருஷ்டிப்பில் நாம் தேவனுடைய இயல்பின் சில விஷயங்களைக் காண்கின்றோம். இதுவே வேத வசனத்தின் நிலைப்பாடாக உள்ளது: "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1).[1] இதனால்தான் சங்கீதக்காரர், "எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ள தாயிருக்கிறது! ..." (சங். 8:1; வ.9ஐயும் காணவும்) என்று உரத்துக் கூறுகின்றார். இந்தப் பூமியானது தேவனுடைய சிருஷ்டிப்பின் கை வேலைக்கு ஒரு மேன்மையான காட்சிப் பொருளாக உள்ளது ஏன்? சிருஷ்டிப்பு என்பதே தேவனுடைய சிருஷ்டிக்கும் இயல்பு மற்றும் வல்லமை ஆகியவற்றின் வானவியல் விளக்கமாகவே இருக்கின்றது. அவரது சிருஷ்டிப்புப் பணியின் பரப்புத்தன்மை பற்றி நாம் முதல் பிரிவில் சுருக்கமாய் ஆலோசித்தோம். இங்கு நாம், தேவனுடைய பிரபஞ்சத்தில் பூமி மற்றும் மனிதனின் இடம் மற்றும் பணி ஆகியவை பற்றி வலியுறுத்துவோம்.

## மண்ணினாலே உருவாக்கப்பட்டவன்

"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதி. 2:7) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. நமது "வடிவம்" நமது சரீர அமைப்பு என்பது மண்ணினால் ஆனதாக உள்ளது, எனவே நமக்கும் மண்ணுக்கும் பொதுவானவைகள் நிறைய இருக்கின்றன. சரீரப் பொருள் என்ற வகையில், நாம் பொதுவான ஆதார மூலம் ஒன்றிலிருந்து வந்தவர்களாக, பொதுவான தனிமங்களால் உண்டானவர் களாய் இருக்கின்றோம். சரீர ஜீவிகள் என்ற வகையில், நாம் பூமியிலிருந்து வந்தவர்களாக, பூமியினால் நிலை நிறுத்தப்படுபவர்களாக, பூமிக்குத் திரும்புபவர்களாக இருக்கின்றோம் (ஆதி. 1:29; 2:9, 16; 3:17-19). ஆகையால் தேவன் தமது சிருஷ்டிப்பின் நுண்ணறிவில், தம்முடைய இயல்பான மனித சிருஷ்டியைத் தம்முடைய இயல்பான சிருஷ்டிப்பான பூமியுடன் இணைத்தார்.[2] ஆகையால், இந்த பூமியானது நாம் வாழ்கின்ற சந்தர்ப்பப் பொருளாக ஆயிற்று.

பூமியின் மீதான இந்த வாழ்வானது குறைந்தபட்சம் நான்கு குறிப்பிட்ட வழிமுறைகளில் உயர்த்தப்பட்டது. முதலாவது, மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று தேவன் அறிந்தார். அவர், அவனுக்கு ஏற்ற துணை ஒன்றை உண்டாக்கினார், மனிதனுக்கும் பெண்ணுக்கும் இடையில் நெருக்கமான ஐக்கியமானது நிலைநாட்டப் பட்டது. இரண்டாவது, அவர்கள் ஒன்றும் செய்யாது வேலையற்று

இருப்பது நல்லதல்ல என்று தேவன் அறிந்தார். செய்வதற்கு வேலையை அவர்களுக்கு அவர் கொடுத்தார். மூன்றாவது, மற்ற உயிர் ஜீவன்களின்மேல் ஆளுகையை அவர்களுக்குக் கொடுத்ததின் மூலம் தேவன் அவர்களின் வாழ்வை வளப்படுத்தினார். நான்காவது, மற்றும் மிகக் குறிப்பிடத் தக்கது என்னவெனில், தேவன் அவர்களைத் தம்முடன் ஐக்கியம் கொண்டிருக்க அனுமதித்தார்.[3]

என்ன ஒரு சிலாக்கியம்! என்ன ஒரு சந்தோஷம்! என்ன ஒரு கருத்து! இது எப்படி சாத்தியமாயிற்று? இது ஏன் நடந்தது? இந்தப் பாடக் கருத்தானது மூன்றாம் பிரிவாகிய "நம்முடன் தேவனுடைய உறவு" என்ற பகுதியில் மிக விபரமாக எடுத்தாளப்படும். இருப்பினும், இப்பொழுது நமக்கு அறைகூவல் விடுவதற்குப் போதுமானவற்றைக் காட்டிலும் அதிகமானவற்றை நாம் பெற்றுள்ளோம்.

## அவரது சாயலில் உருவாக்கப்பட்டவன்

வேதாகமப் பதிவேடானது, "தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:27) என்று எடுத்துரைக்க மிக்க கவனமாய் இருக்கின்றது. தேவன், "ஜீவ சுவாசத்தை [nishmath chayyim] அவன் நாசியிலே ஊதினார்; மனுஷன் ஜீவாத்துமா [nephesh]வானான்" (ஆதி. 2:7ஆ). Nephesh என்பது சிறு வேறுபாடுள்ள அர்த்தங்கள் பலவற்றைக் கொண்ட ஒரு எபிரெய வார்த்தையாகும். இவ்விடத்தில் மனிதனைத் தேவன் படைத்தது என்பதே சந்தர்ப்பப் பொருளாய் இருப்பதால், இதன் அர்த்தம் பெரும்பாலும், "இருத்தல், முழுமையான நபர்" என்று இருக்கக் கூடும்.[4]

ஆகையால், நாம் வெறுமனே "பூமிக்கு" மட்டுமே உரியவர்களாய் இருப்பதில்லை என்று நாம் காண்கின்றோம். நாம் "முழுமையான ஜீவிகளாக" தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்டவர்களாக இருக்கின்றோம். தேவனுடைய சாராம்சமானது ஆவியாய் உள்ளது, எனவே நாம் தேவனைப் போல் இருக்கும் தன்மை என்பது நிச்சயமாக நமது சரீர வடிவமாய் இருப்பதில்லை. நாம் தேவனைப் போல் இருக்கும் தன்மை என்பது மாம்சத்தில் அல்ல ஆவியிலேயே அமைந்துள்ளது. தேவன் ஜீவ சுவாசத்தை (nishmath chayyim) மனிதனுக்குள் ஊதிய பொழுது, அவனுக்குத் தேவனுடைய சொந்த சாராம்சத்தின் சில விஷயங்கள் - அதாவது அவரது ஆவி - இயற்கைப் பண்பாய் அருளப்பட்டது.

ஆதி. 1:30ல் எல்லா மிருகங்கள், பறவைகள் முதலிய யாவும் "ஜீவசுவாசமுள்ளவைகள்" என்றுதான் அழைக்கப்பட்டன. புரிந்து கொள்ளும் தன்மையில் அல்லது தரத்திலேயே வித்தியாசம் கூறப்பட முடியும். வேதாகமமானது, "மனுஷனுடைய ஆவி [nishmath adam] கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது" (நீதி. 20:27) என்று கூறுகின்றது. மனித உயிர்கள் யாவரும் ஒளியூட்டப்படுதல், திறந்த தன்மை, மனச்சாட்சி ஆகியவைகளைக் கொண்டிருக்கக் கூடியவர்களாய் இருக்கின்றனர். ஆதாமும்,

ஏவாளும் பகுத்தறிவுள்ளவர்களாய், சிந்தனை நிறைந்தவர்களாய், தங்களைப் பற்றியும் தங்கள் சூழ்நிலைகள் பற்றியும் மற்றும் தேவனைப் பற்றியும் உணர்வுடையவர்களாய் இருந்தனர். பூமிக்குரிய தனிமங்களால் உண்டாக்கப்பட்டிருந்தாலும், அவர்கள் தேவனிடமிருந்து வந்த கிருபையுள்ள ஈவான ஆவியினால் ஜடப் பொருளாய் இருப்பதைக் காட்டிலும் உயர்த்தப்பட்டிருந்தனர்.[5] இது அவர்கள் தேவனுடன் அர்த்தம் நிறைந்த உறவைக் கொண்டிருப்பதை அவர்களுக்குச் சாத்தியமாக்கியது.

சிருஷ்டிகர் மற்றும் மனித உயிர்கள் ஆகியோருக்கிடையில் உள்ள இந்த ஐக்கியமானது உண்மையிலேயே அமைதியானதாக இருந்தது. தொடர்ந்து நடைபெறும், ஆசீர்வாதம் நிறைந்த, தடைக்கட்டற்ற இந்த நட்புறவுக்கு ஏதேன் தோட்டமானது நன்கு தயாரிக்கப்பட்ட ஒரு இடமாக இருந்தது (ஆதி. 2:7, 8). இந்த உறவானது முடிவில்லாத சந்தோஷத்திற்கு முழுமையான சாத்தியக் கூற்றைப் பெற்றிருந்தது. நித்திய சந்தோஷத்திற்கு நாம் “சாத்தியக்கூறு” என்று கூறுகின்றோம், ஏனென்றால் வேதாகமப் பாடசாலைக்கு முறையாய்ச் சென்றிருக்கும் குழந்தை ஒவ்வொன்றும் பெரும் அச்சமூட்டும் சில விஷயங்கள் நடந்துள்ளது என்று அறிகின்றது. ஆதாமும் ஏவாளும் தோட்டத்தை விட்டுத் துரத்தப்பட்டனர். அவர்கள்மீது மரண தண்டனை வைக்கப் பெற்றிருந்தனர். அவர்கள் உழைப்பு மற்றும் வருத்தம் ஆகியவற்றினால் சபிக்கப்பட்டனர். அவர்கள் இனியும் தேவனுடைய பிரசன்னத்தின் மகிமையை அனுபவிக்க முடியாதிருந்தது.

ஏன்? தோட்டத்தில், “... ஜீவ விருட்சமும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சமும்” (ஆதி. 2:9ஆ) இருந்தன. தேவன், “... நன்மை தீமை அறியத் தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்” (ஆதி. 2:17) என்று கூறினார். அந்த மரத்தைத் தேவன் ஏன் தோட்டத்தில் வைத்தார்? ஆணுக்கும் பெண்ணுக்கும் “ஜீவ விருட்சத்தை” (ஆதி. 2:9) மட்டும் அளித்து அவர்களுடன் இரு தரப்பிலும் திருப்தியான ஒரு உறவைத் தொடர்ந்து கொண்டிராமல் போனது ஏன்?

இந்தக் கேள்விகள் கலக்கம் உண்டு பண்ணுபவைகளாகக் காணப் படலாம். இருப்பினும், ஜாக்கிரதையான ஒரு பகுத்தாய்வானது நமக்கு திருப்திகரமான பதில்களை அளிக்கும். அண்டத்தை அதன் பிரபஞ்ச விரிவில் நாம் கண்டிருக்கின்றோம். இந்த உலகத்தின் அதிசயங்களை நாம் கவனித் திருக்கின்றோம். “தேவன் தமது சாயலாகவே மனுஷனைச் சிருஷ்டித்தார்” என்று ஒரு சிருஷ்டியைப் பற்றி மட்டுமே கூறப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். மனிதர்களுக்குத் தேவன் அளித்துள்ள அவர்கள் தேவனைப் போன்ற தன்மையில் இருப்பது, மற்றும் அவருடன் அவர்கள் தொடர்பு கொள்ள முடிந்தது ஆகிய அன்பார்ந்த சந்தர்ப்பப் பொருளானது அவர்கள் படைக்கப்பட்டதானது தேவனுக்கு விசேஷித்த அர்த்தத்தை வைத்திருந்தது என்று சுட்டிக்காட்டுகின்றது. இவ்விடத்தில் சிருஷ்டிக்கப்பட்டவை (மனிதர்) சிருஷ்டிகருடன், சுய உணர்வுள்ள, பதில் தரும் செய்தித் தொடர்பில் பங்கேற்க வல்லமை கொண்டிருந்தன(ர்)! தேவனோடுள்ள, தடை செய்யப்படாத, நேரிடையான ஐக்கியத்தை கற்பனை செய்து பாருங்கள்!

## தேர்ந்துகொள்ள உருவாக்கப்பட்டவன்

இந்த உறவானது நிறைவான மற்றும் நீடித்திருக்கக்கூடிய தனிச் சிறப்பைப் பெறுவதற்கு ஒரே ஒரு பொருட்கூறு மட்டுமே அவசியமாய் இருந்தது. மனிதராலும் தேவனாலும் சுயாதீனமாய்த் தேர்ந்து கொள்ளப் பட்டதாக இந்த உறவு முறைக்குள் அவர்கள் பிரவேசிக்க வேண்டும். அது ஒரு சுய சித்தமான முடிவாக இருக்க வேண்டும். சுய சித்தத்திற்கு முழுமையான விளக்கம் பெறுவதற்கு, ஏற்றுக்கொள்ள அல்லது புறக்கணிக்கத் திறமை மற்றும் வாய்ப்பு ஆகியவை இருக்க வேண்டும். தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் திறமையையும் (புத்தி கூர்மை) மற்றும் வாய்ப்பையும் (மரம்) அளித்திருந்தார். தேவன் தம் சித்தத்திற்கு கீழ்ப்படிதல் அல்லது அதை மீறுதல் ஆகியவற்றில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள சுயசித்தத்தை அவர்களுக்குக் கொடுத்திருந்தார். தேவனுக்கும் அவரது மனித சிருஷ்டிக்கும் பரஸ்பரம் மாற்றிக்கொள்ளக்கூடிய தன்மையானது வேறு வழியில் இருக்கக் கூடாதிருந்தது.

ஆதாமும் ஏவாளும் தவறான தேர்ந்தெடுத்தலை மேற்கொண்ட பொழுது, தேவனுடைய சிருஷ்டியானது பாவம், பிரிவு, சாபங்கள், வேதனை, முள்ளுகள், அழகின்மை மற்றும் மரணம் ஆகியவற்றினால் பாழானது. தேவனுடைய பெரும் சிறப்பு வாய்ந்த சிருஷ்டிப்புப் பணி தவறி விட்டதா? இல்லை. தேவனுடைய பணி தொடருகின்றது. அவர், வீழ்ச்சியைத் தூண்டி விட்ட சர்ப்பத்தை (சாத்தானைச்) சபித்தார், மற்றும் விழுந்து போன மனித இனத்திற்கு வரப்போகிற ஒரு வெற்றியாளர் மூலம் மறுசீர்த்திருத்தலை வாக்குத்தத்தம் செய்தார்:

> அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து, நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் திண்பாய். உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார் (ஆதி. 3:14, 15).

குறிப்புகள்

[1]ஏறக்குறைய எல்லாத் தெளிவுரை வேதாகமங்களும் இந்த வசனத்தில் உள்ள முதல் சுட்டுச் சொல்லின் ''பிரச்சனை''யைக் குறிப்பிடுகின்றன. [2]இது மனிதன் என்பதற்கான எபிரெய வார்த்தையான adam என்பதிலும் மண் என்பதற்கான எபிரெய வார்த்தையான damah என்பதிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [3]ஆதி. 1:2ல் காணப்பட்டுள்ளபடி படைப்பின் விபரம் பற்றிப் பல தொகுதிகள் எழுதப்பட்டுள்ளன. ஆதி. 1-3ஐப் பற்றி எழுதப்பட்டவைகளிலிருந்து, இந்த அதிகாரங்கள் மிகவும் தாழ்ந்த தரமுடைய கற்பனைக் கதையென்றே பலரும் நம்புவது தெளிவாக உள்ளது. ஆதியாகம விபரங்களை மதிப்பற்றுப் போகச் செய்ய நாட்டமுள்ள Akkadian *Enuma Elish* என்பது போன்ற படைப்பு பற்றி மற்ற

கதைகளுடன் இதற்குள்ள ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி இதற்கு "ஆதாரம்" அளிக்கப்படுகின்றது. முற்காலத்தில், சில வேளைகளில் பிள்ளைகள் தங்கள் வகுப்பறைக் கரும்பலகைகளில் தேவன் ஏதேன் தோட்டத்திலிருந்து ஆதாமையும் ஏவாளையும் நீளமான பொறி வண்டியொன்றில் வைத்து ஓட்டித் துரத்தி விட்டது போலப் படம் வரைவதுண்டு. இந்தக் கேலிச் சித்திரமானது இந்த அதிகாரங்கள் பற்றி பெற்றோரிடமிருந்து பிள்ளைக்கு வந்த அளவிலான கன்னத்தினுள் நாவு எண்ணப் போக்கு என்பதை பிரதிபலிக்கலாம். நமது காலத்தின் அறிவியல் ரீதியான மனநிலையே பரிசுத்த வசனத்தில் இவ்விதமான போலி வேலை செய்வதற்கான ஒரு காரணமாய் உள்ளது. சத்தியமானது அறிவியல் ரீதியானதாக, நேரடியானதாக மற்றும் புறநோக்குடையதாக இருக்க வேண்டும் இல்லையென்றால் அது உண்மையல்ல என்று நாம் நினைக்கத் தலைப்படுகின்றோம். தேவன் தம்மைப் பற்றியும், இந்த அண்டத்தைப் பற்றியும், நம்முடன் அவரது உறவுமுறை பற்றியும் ஒவ்வொரு விஷயத்தையும் அறிவியல், இலக்கிய மற்றும் புறநோக்குடைய மொழிநடையில் கூறியிருந்தால் அதில் மிகச் சிறிதளவே நாம் புரிந்து கொண்டிருப்போம் என்பதை எல்லாக் கல்விமான்களும் மற்றும் வேதாகமத்தைத் தினமும் வாசிப்பவர்களும் நினைவுகூருவார்கள். ஆழ்ந்தறிவுள்ள சத்தியங்கள் பெரும்பாலும் எளிய சொற்றொடர்களில் எடுத்துரைக்கப்பட்டன. மனித இனத்தின் படைப்பு மற்றும் வீழ்ச்சி பற்றி வேறு வகையில் கூறியிருந்தால் மனதைக் குழப்பியிருக்கக் கூடிய விஷயங்கள் ஆதியாகம விபரத்தில் வெளிச்சத்திற்கு வருகின்றன. நமது சொந்த ஒளியூட்டுதலுக்காகவும் நன்மைக்காகவும் அந்த உண்மைகளை நாம் ஏற்றுக் கொண்டு, மற்றவற்றிற்குச் செல்வோம். [4]விரிவான ஒரு ஆய்வுக்கு Brown, Driver, and Briggs, *A Hebrew and English Lexicon*, 659-61ல் காணவும். [5]*Hmhsn (mhsnல் இருந்து), சுவாசம், ஆவி, ஆவியின் சுவாசம், மனிதரின் சுவாசம், ஆவியின் ஜீவன், என்பது hur என்பதை விட அதிகம் குறிப்பிடத் தக்கதாகவும், Shon என்பதை விட அதிகம் உலகளாவியதாகவும் உள்ளது, ஆனால் இவைகளின் இடையில் ஏதோ நிற்கின்ற வகையில் இரண்டும் ஒன்றிற்குப் பதில் ஒன்றாக மாற்றிப் பயன்படுத்தப்படலாம்; இருப்பினும் மனிதர் தொடர்பாக மட்டுமே அப்படிச் செய்யப்படக் கூடும். இவ்விடத்தில் மனிதனுக்கும் தேவனுக்கும் பொதுவான ஒன்றிருப்பது ஆதாரத்துடன் குறிப்பிடப்படுகின்றது, அது தேவனிடத்திலிருந்து புறப்பட்டு மனிதனுக்குள் பிரவேசிக்கின்றது - தேவனுடைய "ஜீவசுவாசம்," அதாவது, சுய இயக்கத்தில் உள்ள தேவனுடைய ஆவி, மனிதனுக்குள் ஆவிக்குரிய கொள்கை, அவனுடைய வாழ்வின் ஆவி ஆகியவற்றை வெளியே அழைக்கின்றது, ஆனால் ஆவியானவர் தமது உண்மையான ஆளுமைத் தன்மையில் இருப்பதற்கு இது எவ்விதத்திலும் குறைந்தது அல்ல.*

# நமது தேவன் வரலாற்றுப் பூர்வமானவர்

*சிருஷ்டிகர் என்ற வகையில் தேவன், நாம் வாழுகின்ற சந்தர்ப்பப் பொருளை அளித்தார். நாம் பூமிக்குரியவர்கள். நாம் தேவனுடனும், ஒருவர் மற்றவருடனும் மற்றும் இயற்கையுடனும் இசைவாக வாழக்கூடிய மிகச் சிறந்த இடத்தை தேவன் நமக்காக ஏற்பாடு செய்தார். பாவம் உலகத்தில் பிரவேசித்த போது, "பூமியின் மீதிருந்த பரலோகம்" மறைந்து போயிற்று. முதல் மனித இணையானவர்கள் பாவத்தினால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டனர். அவர்களுக்கு வாழ்க்கையைக் கடினமாக்கிய வெறுப்புக் குரிய சில அம்சங்கள் பூமியில் தோன்றத் தொடங்கின. சாத்தான் தடையேது மின்றி திரிந்தான். தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான பெரும் யுத்தமானது பெரும் சீற்றமடைந்தது.*

*தேவனுடனான முழு ஐக்கியத்திற்கான பாதையை மனிதன் தேர்ந்து கொள்வதற்கு தேவன் ஒரு வழிமுறையை அளித்திருந்தார். இடர்ப் பாடானது உண்மையானதாக இருந்தது. உறவானது அதிகாரப்பூர்வ மானதாய் இருக்க முடிவதற்கு அது மட்டுமே ஒரே வழியாய் இருந்தது; இல்லையென்றால், தேர்ந்து கொள்வதற்கான அவர்களுடைய திறமை யானது ஒன்றுமற்றதாகவும் வீணானதாகவும் ஆகிவிடுவதாயிருந்தது. உறவானது இயந்திரத்தனமானதாகவும், இயந்திர மனிதன் போன்ற தாகவும், வெறுப்பூட்டும் அடிமைத்தனமாகவும் இருந்திருக்கும். ஆதாமும் ஏவாளும் பயங்கரமான ஒரு தவறைச் செய்தனர். அவர்கள் தவறான தேர்ந்து கொள்ளுதலைச் சுயாதீனமாக மேற்கொண்டனர். விளைவுகள் தள்ளாட வைப்பவைகளாகவும், அவைகளில் பல உடனடியானவை களாகவும் இருந்தன. தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த ஜீவன் தரும் ஆவியானவர் தடை பண்ணப்பட்டார். அவர்கள் பாவம் செய்த நாள் முதற் கொண்டு அவரிடமிருந்து பிரிக்கப்பட்டனர். மரணம் என்பது பிரிவு என்று அர்த்தப்படுகிறது. ஆதாமும் ஏவாளும் ஜீவ விருட்சத்தில் இருந்து துண்டிக்கப்பட்டனர்; ஆகையால், அவர்கள் சரீரத்திற்குரிய மரணம் அடைய விதிக்கப்பட்டனர்.*

*"அது மிகவும் பயங்கரமானதாக உள்ளது!" என்று நாம் கூறுகின்றோம். நாம் அவர்கள் மீது எவ்வளவாய்ப் பரிதாபப் படுகின்றோம்! இருப்பினும், இது வரலாற்றின் முடிவல்ல என்பதை நாம் உணர வேண்டும். அவர்களுடைய பாவத்தின் விளைவானது அவர்களுக்கு மட்டுமே சொந்தமானதாக இருக்கவில்லை. அவைகள் மிகப் பரவலான செயல் விளைவைக் கொண்டிருந்தன. அமைதியான ஒரு ஏரியில் கல் ஒன்று*

*போடப்படுகையில் வட்டலைகள் பரவி கரையை அடைவது போல, அவர்களுடைய பாவத்தின் விளைவுகள் நம் வாழ்வை வந்து அடைந்தன. பாவம், ஆக்கினைத் தீர்ப்பு மற்றும் மரணம் ஆகியவை எல்லாருக்கும் பரவியது. ''எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி'' (ரோமர் 3:23). "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும், எல்லா மனுஷரும் பாவஞ் செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று" (ரோமர் 5:12). "ஆகையால், ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது போல,'' (ரோமர் 5:18). கணக்கொப்புவிக்கக் கூடியவர்கள் என்ற வகையில் நாமும் கூட "தோட்டத் திற்குப் புறம்பே" நிற்கின்றோம். அவர்களுடைய வீழ்ச்சியானது நம்முடைய வீழ்ச்சிக்கு வழி நடத்திற்று. தேவனிடத்திலிருந்து அவர்களுடைய பிரிவானது தேவனிடத்திலிருந்து நம்முடைய பிரிவுக்கு வழி நடத்திற்று. பழங்கால ஏசாயாவுடன் நாமும் தேவனுக்கு முன்பாக நின்று, "ஐயோ! அதமானேன்!" (ஏசா. 6:5அ) என்று கதறுகின்றோம்.*

*நாம் நம்பிக்கையற்றவர்களாய் இருக்கின்றோமா? சாத்தானுடைய பயங்கரங்களின் புகழற்ற கண்காட்சியில் அவனுடைய காட்சிப் பொருளாகும்படி நாம் வீழ்த்தப் பட்டிருக்கின்றோமா? தேவன் தம்முடன் என்றென்றைக்கும் ஐக்கியம் கொண்டிருக்கக் கூடிய வகையில் உள்ளவர் களைச் சிருஷ்டிப்பதில் அவருடைய தோல்விக்கான நித்தியத்தின் ஆதாரமாக நாம் இருக்க வேண்டுமா? இவை யாவும் ஆழ்ந்த எண்ணங் கொண்ட கேள்விகளாய் இருக்கையில், நாம் ஒரே குரலில் பின்வரும் வலிவான பதிலைக் கொடுக்க முடியும்: "இல்லை!" நாம் நம்பிக்கையை இழக்கத் தேவையில்லை, ஏனென்றால் தேவன் நம் மீது நம்பிக்கையிழந்து விடவில்லை. நாம் உண்மையாகவே தேவனுடைய வெற்றியை நிலை நாட்ட முடியும்-மற்றும் தோல்வியின் சிந்தனை எதையும் நீக்கிப் போட முடியும். இவைகள் உற்சாக மூட்டும் வார்த்தைகளாய் இருக்கின்றன, ஆனால் இவைகள் கருத்துப் பொருள் கொண்டுள்ளனவா? இவைகளுக்கு ஏதேனும் அடிப்படை உள்ளதா? இது விருப்பம் நிறைந்த சிந்தனை மட்டுமல்ல என்பதற்கு நாம் கொண்டுள்ள உறுதிப்பாடு என்ன? இவைகளுக்கான பதில் தர, கவனம் செலுத்துவதில் மாற்றம் தேவைப் படுகின்றது. இவைகளுக்குப் பதிலானது நம்மிடத்தில் இருந்தல்ல தேவனிடத்தில் இருந்தே வரவேண்டியதாக உள்ளது.*

*முந்திய பாடத்தில் நாம் தேவனுடைய சிருஷ்டிப்புப் பணியை நோக்கினோம். நாம், அவரது மதிநுட்பம், பிரசன்னம் மற்றும் வல்லமை ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டதைக் கண்டோம். மனிதர்கள் எப்பொழுதும் அவருடன் முழுமையான ஐக்கியத்தில் இருக்க வேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் நாம் கண்டோம். அவருடைய சிருஷ்டிப்புப் பணியில் நாம் இவை எல்லாவற்றையும் கண்டோம். அத்துடன் கூடுதலாக, ''பூமியின் மீது பரலோகமானது'' இந்த ஐக்கியத்திற்கான சந்தர்ப்பப் பொருளாய் இருந்ததையும் நாம் கண்டோம். எல்லாமே தோல்வியில் முடிந்தது என்று முடிவு செய்வது துயரமான தவறாகும். நாம் மிக*

முக்கியமான உண்மையைக் கவனிக்கத் தவறி விடுவோம்: தேவன் படைப்பவராக இருப்பது மட்டுமின்றி வரலாற்றுப் பூர்வமானவராகவும் இருக்கின்றார். வரலாற்றில் அவரது பணியானது, நமக்கு சிருஷ்டிப்பில் அவரது பணியைப் போலவே குறிப்பிடத் தக்கதாக உள்ளது. இவை இரண்டுமே அவருடனான நமது நித்திய வாழ்வுக்கு இன்றியமையாதவை களாக உள்ளன. முதலாவதாக, அவர் நம்மைப் படைக்காதிருந்தால் நாம் இருக்கவே மாட்டோம். இரண்டாவதாக, அவரது படைப்பின் வரலாற்றில் அவர் செயல்பாடுள்ளவராக இல்லாதிருந்தால், நாம் அழிந்திருப்போம்.

வரலாற்றில் தேவன் செயல்படுகின்றார் என்பதை நாம் எவ்விதம் அறிகின்றோம்? படைப்பில் அவரது பணியை நாம் அறிகிற வண்ணமாகவே இதையும் நாம் அறிகின்றோம். படைப்பானது அவருடைய கை வேலையை வெளிப்படுத்துகின்றது; வரலாறானது அவரது ஈடுபாட்டை வெளிப்படுத்து கின்றது. தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியையும், மற்றும் அவரது வரலாற்றின் கிரியையும் வேதாகமத்தில் நமக்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன.

## வரலாற்றுக்குப் புறம்பே தேவன்

தேவனைப் பற்றிய வரலாற்று ரீதியான கண்ணோட்டத்தைக் காட்டிலும் வேதாகமத்திற்கு அதிகம் அடிப்படையானது எதுவும் இல்லை. தேவன் நித்தியத்திலும், காலத்திலும் வாசம் பண்ணுகின்றார். நித்தியம் என்ற கடலில், காலம் என்பதை ஒரு நீர் மூழ்கிக் கப்பல் என்பதாக நாம் சிந்தையில் கண்ணோக்குவோம். நாம் அந்த நீர் மூழ்க்கிக் கப்பலில் வாழ்கின்றோம். இப்பொழுது நாம் அந்தக் கப்பலுக்குள்ளாக இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டிருக்கிறோம். வரலாறானது அந்தக் கப்பலுக்குள்ளாகவே செயல்பட வேண்டியதாக உள்ளது. இருப்பினும், தேவன் இந்த நீர் மூழ்கிக் கப்பலுக்குள் (காலத்தில்) மட்டுமின்றி, அவர் கடலிலும் (நித்தியத்தில்) இருக்கின்றார். நீர் மூழ்கிக்கப்பலுக்குள் அவருடைய செயல்பாடுகள், கடலுக்குள் அவரது நோக்கில் இருந்து எடுக்கப்படுகின்றன. இது நமக்கு மாபெரும் மறைவான கருத்தைக் கொண்டுள்ளது.

முதலாவது, நாம் அவரது நோக்குடையவர்களாய் இல்லாதிருப்பதால், நாம் எப்பொழுதுமே அவருடைய செயல்பாடுகளைப் புரிந்து கொள்ளவோ அல்லது காணவோ கூட முடியாது. இரண்டாவது, அவர் செய்து முடித்த உற்பத்தியின் மூலம் படைப்பில் அவரது கிரியையைக் காண முடிவது போலவே (சங். 19:1) வரலாற்றில் அவருடைய பிரசன்னமானது, அவர் இந்தக் கப்பலைச் செலுத்துகின்ற வழிமுறையில் காணப்படலாம். மூன்றாவது, பொதுவான வெளிப்படுத்துதலிலும் (இயற்கை) மற்றும் குறிப்பிட்ட வெளிப்படுத்துதலிலும் (வேதாகமம்) நாம் தேவனுடைய படைப்பின் பணியைக் காண்பது போலவே, நாம் அவரது வரலாற்றுப் பூர்வமான பணியையும் காண்கின்றோம். பொதுவான வரலாற்றில் அவரது பணியைப் புரிந்து கொள்ளுவது நமக்குக் கடினமானதாக இருக்கலாம், ஆனால் அவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களுடன் அவர் செயல்படும் விதம் பற்றி வேதாகமத்தின் விபரங்களில் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்

பட்டுள்ளது. ஆகையால், தேவன் சரித்திரபூர்வமாக செயலாற்றுகிறார் என்பதை யோசிக்கும்படி வேதாகமத்திற்குத் திரும்புவோம்.

## வரலாற்றிற்குள் தேவன்

வேதாகமத்தில் நாம் வியப்புக்குரிய சிலவற்றைக் கண்டறிகின்றோம். வரலாறு என்பது தொடர் நிகழ்ச்சிகளின் பதிவைக் காட்டிலும் அதிக மானதாக உள்ளது என்பதை நாம் காண்கின்றோம். நோக்கத்தின் அறிவுப் பூர்வமான கருத்து ஒன்று உள்ளது. நமக்கான தேவனுடைய சந்தர்ப்பப் பொருளானது முதலில் படைப்பின் சந்தர்ப்பப் பொருளாய் உள்ளது. இப்பொழுது இது வரலாற்றுச் சந்தர்ப்பப் பொருளாக உள்ளது. முதலாவது சந்தர்ப்பப் பொருளானது பாவத்தினால் பாழாக்கப்பட்ட பொழுதும், தேவன் நம்மை விட்டு விடவில்லை. இரண்டாவது சந்தர்ப்பப் பொருளா னது பாவத்திலிருந்து தப்புவதற்கான வாய்ப்பை நமக்குத் தருகின்றது. ஆகையால், வரலாறானது அடிக்கடி "இரட்சிப்பின் வரலாறு"[1] என்று அழைக்கப்படுகின்றது. இது, வரலாற்றில் உள்ள ஒவ்வொன்றும் இரட்சிக் கின்றது என்று அர்த்தப்படுவதில்லை, ஆனால் வரலாற்றிற்குள் தேவன் இரட்சிக்கும் நோக்கம் ஒன்றைக் கொண்டுள்ளார் என்று அர்த்தப் படுகின்றது.

வரலாற்றில் இந்த இரட்சிப்பின் நோக்கமானது சில வேளைகளில், தேவன் தம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த வடிவமைப்பின் நிறைவேற்றத்திற்கு மக்களை அவர் இயக்குகின்ற வழிமுறையில் கவனிக்கப்படுகின்றது. நோவா தம்மையும், தம் குடும்பத்தையும் மற்றும் உயிரினங்கள் அனைத்தின் வகைகளையும் காத்துக் கொள்வதற்கு ஒரு பேழையைக் கட்டும்படி தேவன் அறிவுறுத்தினார். நோவாவுக்கும் அவரது குடும்பத்திற்கும் இது நிச்சயமாகவே ஒரு நல்ல செய்தியாகவே இருந்தது, ஆனால் மனித இனத்திற்கு இது அதை விட மிகவும் நல்ல செய்தியாக இருந்தது. பொல்லாங்கு நீக்கிப் போடப்பட்டு, உயிர் வாழ்வானது காத்துக் கொள்ளப்பட்டது (ஆதி. 6:1-9:17). தேவன் நோவாவை இரட்சித்தார், ஆனால் அவர் இன்னும் மேன்மையான திட்டங்களை வைத்திருந்தார்.

ஆபிராம் தம் வீட்டாரையும், ஊரையும்/இனத்தாரையும் விட்டு அவர் அறிந்திராத நாட்டுக்குச் செல்லும்படி தேவன் அவருக்கு அறிவுறுத்தினார். அசாதாரணமான ஒன்றைச் செய்யும்படி தேவன் இந்த மனிதரை நெறிப்படுத்தியது ஏன்? "மேன்மையான மூதாதை" என்று அர்த்தப்படும் ஆபிராம் என்ற பெயரானது, "திரளான கூட்டத்தின் மூதாதை" எனப்படும் ஆபிரகாம் என்ற பெயராவதும், அவர் மூலமாக பூமியில் உள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதும் தேவனுடைய திட்டமாய் இருந்தது. ஆபிரகாம் எபிரெயனாக, எபிரெய மக்களின் தகப்பனாக (ஆதி. 12:1-4; 14:13; ஏசா. 41:8) ஆனார், மற்றும் மேசியாவாகிய இயேசுவுக்கு (*Yeshua ham mashiach*) தம்மை ஒப்புக் கொடுக்கும் யாவரும் உறுதியாகவே ஆபிரகாமின் சந்ததியாகின்றனர் (கலா. 3:26-29). வரலாற்றின் ஓட்டமானது தேவனுடைய கரங்களில் இருந்தது.

ஆபிரகாமின் கொள்ளுப் பேரனான யோசேப்பு, நிகழ்வு நிறைந்த மற்றும் முன்னுரைக்க வியலாத வாழ்க்கையை நடத்தினார். கானானில் இருந்த நாடோடிக் கூட்டத்தின் தலைவருடைய மகன், பார்வோனின் படைத்தலைவனுடைய வீட்டில் ஒரு அடிமையாவான் என்று யார் நினைத்திருக்க முடியும்? இந்த எபிரெய அடிமை கனவீனப்படுத்தப்பட்டு, சிறையிடப்பட்டு, கடைசியில் பார்வோன் தவிர எகிப்து தேசம் முழுவதற்கும் மிகவும் அதிகாரம் கொண்ட பதவிக்கு உயர்த்தப்படுவார் என்பதை எவர் முன் கண்டிருக்கக் கூடும்? கடைசியாக, தேவனுடைய மக்களாகிய எபிரெயர்களை யோசேப்பு மீட்க வருவார் என்பதை எவராவது முன்னுரைக்க முடிந்ததா?

வரலாற்றில் தேவனுடைய செயலானது காண்பதற்கு வழக்கமாக இயலாததாகவே உள்ளது. இருப்பினும், நாம் அவரது அருளிரக்கத்தைக் காணாதிருப்பதால் அது கிரியை செய்வதில்லை என்று அர்த்தப்பட்டு விடாது. யோசேப்பின் வாழ்க்கையைத் தேவன் இயக்கிய விதமானது யோசேப்பை இரட்சிப்பது என்பதைக் காட்டிலும் மேலான நோக்கத்திற் கானதாக இருந்தது (ஆதி. 45:4-15). இது அவரது மக்களைப் பாதுகாக்கவும், நிலைத்திருக்கச் செய்யவுமானதாக இருந்தது.

எகிப்தின் வல்லமையுள்ள அதிகாரமானது நம்புதற்கரிய நிகழ்ச்சிகளின் தொடரினால் ஒன்றுமற்றதாக்கப்பட்டது. எபிரெயச் சிறு குழந்தையான மோசே, புதிதாய்ப் பிறந்த மற்ற எபிரெய ஆண் குழந்தைகள் எல்லாரையும் போலவே தம் பிறப்பின் போதே கொலை செய்யப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டவராய் இருந்தார். பார்வோனின் மகளால் நைல் நதியில் கண்டுபிடிக்கப்பட்ட வினோதமான நிகழ்வின் மூலம் அவர் மரணத்திற்குத் தப்பினார். எபிரெய அடிமைகளின் இந்த மகன் அரசருடைய அரண்மனையில் வளர்க்கப்பட்டார். யூத வரலாற்றாளரான யோசிப்பஸும், கிறிஸ்தவ எழுத்தாளரான தெர்த்துல்லியனும்[2] மோசேயைப் பற்றி எழுதினர். எகிப்தியப் படையில் மோசே ஒரு மாபெரும் படைத்தலைவனாக இருந்தார் என்று அவர்கள் உறுதிப்படுத்துவதுடன், எத்தியோப்பியர்கள் மீது அவரது படையணியின் வெற்றி பற்றியும் அவர்கள் விவரித்தனர்.[3] பின்னாளில் மோசே சீனாய் தீபகற்பப் பகுதிக்குத் தப்பி ஓடி, தமக்கு எண்பது வயதாகும் வரையிலும் உலக விஷயங்களில் இருந்து தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் இருந்தார்.

தேவனுடைய மக்களை எகிப்திலிருந்து விடுதலையாக்கிக் கொண்டு வரும்படியான ஒரு கட்டளையை அவர் தேவனிடத்திலிருந்து பாலைவனத்தில் பெற்றார். ஆடு மேய்ப்பவன் ஒருவர், எகிப்தியப் பார்வோனிடம் அவன் என்ன செய்ய வேண்டும் என்று கூறுவதைக் கற்பனை செய்து பாருங்கள்! பார்வோன் தன் அடிமைகளின் கூட்டத்தை புறப்பட்டுச் செல்லும்படி அனுமதிக்க முரட்டுத்தனமாக மறுத்து விட்டான். இருப்பினும் அதிகமான உபத்திரவமும் கூக்குரலும் தேசத்தில் ஏற்பட்ட பிறகு-எகிப்தியரின் வீடுகள் ஒவ்வொன்றிலும் புலம்புதல் உண்டான பிறகு-அவன் கடுமை குறைந்தவனானான். எகிப்தின் அடிமைகளாய் இருந்து புறப்பட்ட எபிரெயர்கள் சீனாய் மலையருகில் விடுதலை பெற்ற மக்கள்

*கொண்ட ஒரு தேசமாக ஆனார்கள். வரலாற்றின் ஓட்டமானது மாற்றப் பட்டது. மீண்டும் ஒருமுறை வரலாற்றுப்பூர்வமான தேவன் தமது வல்லமையையும் அருளிரக்கத்தையும் காட்சிப்படுத்தினார் (யாத். 3-20).*

> *கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும், அவைகளில் பிரியப்படுகிற*
> *எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது.*
> *அவருடைய செயல் மகிமையும் மகத்துவமுமுள்ளது,*
> *அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.*
> *அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி*
> *செய்தார்,*
> *கர்த்தர் இரக்கமும் மனுஉருக்கமுமுள்ளவர்.*
> *தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார்;*
> *தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைப்பார்.*
> *ஜாதிகளின் சுதந்தரத்தைத் தமது ஜனங்களுக்குக் கொடுத்ததினால்,*
> *தமது கிரியைகளின் பெலத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார்.*
> *அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள்;*
> *அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மையானவைகள் .....*
> *அவர் தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பி,*
> *தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக்*
> *கட்டளையிட்டார்;*
> *அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது*
> *(சங். 111:2-9).*

---

*குறிப்புகள்*

[1]Heinz Zahrnt, *The Question of God* (New York: Harcourt Brace Jovanovich, 1969), 287. [2]*தெர்த்துல்லியன் அவர்கள் லத்தீன் மொழியில் ஆதி முக்கிய கிறிஸ்தவ எழுத்தாளர்களில் ஒருவர் ஆவார். இவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தார்.* [3]Josephus *Antiquities* 2.10 and footnotes.

.

# நமது தேவன் ஒழுங்குணர்வு கொண்டவர்

*தேவனைப் பற்றிய நமது படிப்பில் இதுவரையிலும் நாம், அவர் எங்கும் நிறைந்திருப்பவர், எல்லையற்ற அறிவு உள்ளவர், சர்வ வல்லமையுள்ளவர், சிருஷ்டிப்பவர், மற்றும் வரலாற்றுப் பூர்வமானவர் என்று கண்டிருக் கின்றோம். இந்தப் பண்புகள் ஒவ்வொன்றும் நம்முடைய வாழ்வில் தொடர்பும் செல்வாக்கும் கொண்டுள்ளன என்று நாம் கண்டறிந்துள் ளோம். உண்மையில், நாம் கற்றுக் கொண்டுள்ள இந்த தேவன் இருந்திரா விட்டால் நாம் இருந்திருக்க மாட்டோம். "அவருக்குள் நாம் பிழைக்கி றோம், அசைகிறோம், இருக்கிறோம், ..." (அப். 17:28). நமது தேவன் அருகாமையில், பலத்துடன் மற்றும் புரிந்து கொள்ளுதலுடன் இருக்கின் றார். அவர் நமக்குத் தேவையானவற்றையும் அளித்து நம்மை வழி நடத்தி வருகின்றார். இது எல்லாவற்றிற்காகவும், இன்னும் அதிகமான வற்றுக்காவும் நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்கின்றோம்.*

*நமது நன்மைக்கு/நல்லிருப்புக்கு மிக முக்கியமானதாக உள்ள தேவனின் இன்னொரு இயல்பை இன்னமும் நாம் கவனிக்கவில்லை. தேவன் ஒழுங்குணர்வுள்ளவராய் இராதிருந்தால், நாம் ஆராய்ந்துள்ள தேவனுடைய பண்புகள் யாவும் நம்மை இயற்கைக்கு மாறான, பரிதாபமான நிலைக்கு வழி நடத்தியிருக்கக் கூடும். இங்குள்ள வாழ்வில் நமது நலமும், மற்றும் நமது நித்திய அடைவிடமும் கூட தேவனுடைய ஒழுங்குணர்வின் மீதே சார்ந்துள்ளது என்பதைப் பற்றி அதிகம் கூற வேண்டுவதில்லை. ஆகையால் இந்த மேலான பண்பைப் பற்றி நாம் கவனமாய்ப் படிப்போம்.*

## சத்தியம் உறுதிப்படுத்தப்பட்டது

*முற்றிலுமாக ஒழுங்குடன் இருப்பது என்றால் முற்றிலுமாகப் பரிசுத்தமாயிருத்தல் ஆகும். முற்றிலுமான பரிசுத்தம் என்பது ஒழுக்க ரீதியான மற்றும் ஆவிக்குரிய முழு நிறைவின் நிலையாக உள்ளது. தேவனைப் பற்றி மட்டுமே இது கூறப்பட முடியும். பூமியிலும் வானத்திலும் தேவனுடைய பரிசுத்தத்திற்கு வேதாகமம் பல உறுதிப்பாடுகளைக் கொண்டுள்ளது. பின்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்:*

*மரியாள் தனது மகனின் பிறப்பை முன்னெதிர்பார்த்து இருக்கையில், பாடலில் பரவசச் சிதறல் அடைந்தாள்: "வல்லமையுடையவர் மகிமை யானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது"*

*(லூக். 1:49).*

*அப்போஸ்தலரான யோவானுக்கு முன்பாகப் பரலோகத்தின் காட்சி ஒன்று திறக்கப்படுகையில் அவர் தேவனுடைய சிங்காசனமானது மனிதர்கள் மற்றும் தூதர்களால் சூழப்பட்டிருந்ததைக் கண்டார். "ஜீவன்கள்" எனப்பட்டவைகள் "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிற வருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்" என்று ஓய்வில்லாமல் பாடின (வெளி. 4:8ஆ). சிங்காசனத்தில் இருப்பவருக்கு "ஜீவன்கள்" மகிமையையும் கனத்தையும் ஏறெடுத்தன. "கர்த்தாவே, தேவரீர் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவை களும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கின்றன" என்று நித்தியமான வரைப் பாடி ஆராதித்த இருபத்தி நாலு மூப்பர்களும் அந்த ஜீவன்களுடன் சேர்ந்து கொண்டனர் (வெளி. 4:9-11). அவர்களின் "பரலோக நோக்கிலிருந்து" தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே பரிசுத்தராய் இருந்தார் என்று நாம் காண்கின்றோம். எல்லாம் அறிந்து, எல்லாம் வல்லவராய் இருப்பது என்பது அவருடைய இயல்பாக இருப்பது போலவே பரிசுத்தமாய் இருப்பதும் அவரது இயல்பாக உள்ளது.*

*ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருப்பதை யும் சேராபீன்கள் "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" என்று கூப்பிட்டுச் சொன்னதையும் ஏசாயா கண்ட பொழுது (ஏசா. 6:1-3), "பரலோகத்தின் காட்சியானது" மறுபடியும் முன்னணிக்கு வந்தது.*

*இந்த காட்சிகள் பூமியிலும் வானத்திலும் தேவனுடைய பரிசுத்தமான தன்மையானது அவரது படைப்புடன் விளக்கமாய்த் தொடர்பு படுத்தி எடுத்துரைக்கப்படுவதை வலியுறுத்துகின்றன: "பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது." அவர் மகிமையையும் கனத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராய் இருக்கின்றார், ஏனென்றால் அவரே ஒவ்வொன்றையும் படைத்தார். ஆகையால், அவரது படைப்பானது பரிசுத்தத்தின் ஒளி வட்டத்தினால் முடி சூட்டப்பட்டுள்ளது. படைப்பில் சக்தியையும், அழகையும் மற்றும் ஒழுங்கமைவையும் காண்பது போலவே ஒழுங்குப் பண்பையும் நாம் காண்கின்றோம்.*

## சத்தியம் அதிகார பூர்வமாக விதிக்கப்பட்டது

*படைப்பிலும் வரலாற்றிலும் நமக்காகத் தேவனுடைய சந்தர்ப்பப் பொருளை கலந்துரையாடி அறிந்துள்ள நிலையில், இப்பொழுது நாம் தேவன் நமக்காக வைத்துள்ள ஒழுக்கத்தின் சந்தர்ப்பப் பொருளைப் பற்றி அறிய விரும்புகின்றோம். தேவன் நமது வாழ்வை (படைப்பில்) தோற்றுவித்தவராக மற்றும் (வரலாற்றில்) தொடர்ந்திருக்கச் செய்பவராக இருக்கின்றார். அவர் மிக மேன்மையான பரிசுத்தம் உள்ளவராய் இருப்பதால், மனிதர்கள் ஒழுக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று*

எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த எதிர்பார்ப்பு சரியானதாகவே இருக்கின்றது. நாம் ஒழுக்கமுள்ளவர்களாகவே சிருஷ்டிக்கப்பட்டோம். வீழ்ச்சிக்கு முன்பாக இதுவே மனிதன் மற்றும் பெண் ஆகியோரின் நிலையாக இருந்தது. அவர்கள் தேவனைப் போல, பரிசுத்தமாய் இருந்த தால் தேவனுடன் அவர்கள் நேரடியான ஐக்கியத்தைப் பெற்றிருந்தனர். இருப்பினும், அவர்கள் பாவம் செய்த பிறகு, பயமும் வெட்கமும் அடைந்தனர். அவர்களின் ஆதி நிலையானது அழகற்றதாகத் திரும்பிற்று. அவர்களின் ஒழுக்கத் தூய்மை கடந்து போயிற்று. இது நாம் அனைவரும் உணர்ந்துள்ள பழங்காலத்திய வெளிப்படையான உண்மையாகும்:

> ... ஆயினும் நான் எங்கு சென்ற போதிலும் அங்கு, பூமியிலிருந்து மகிமையானது கடந்து சென்றதென்று அறிகின்றேன்.[1]

ஒரு காலத்தில் தூய்மையாய் இருந்தது இப்பொழுது தழும்பாக்கப் பட்டது.

தேவனுடைய மக்கள் தேவனிடத்திற்குத் திரும்பும்படியாகவும், மீண்டும் ஒருமுறை அவரது பரிசுத்தத்தில் பங்கேற்கும்படியாகவும் அழைக்கப்பட்டனர்: "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால் ... உங்களைப் பரிசுத்தமாக்கிக் கொண்டு, பரிசுத்தராயிருப்பீர் களாக" (லேவி. 11:44). அவர்கள் தேவனிடத்திற்குத் திரும்ப வர வேண்டும், தேவனுடைய உதவியினால் பரிசுத்தமான வாழ்வை நடத்த வேண்டும் என்ற தேவனுடைய விருப்பமானது ஒழுக்கத்தைப் பற்றிய ஏராளமான போதனைகள் வேதாகமத்தில் இருப்பதற்குக் காரணமாயிற்று. நமது ஒழுக்கக் கடமைப் பொறுப்புகளுக்கு தேவனுடைய பரிசுத்தமே அடிப்படையாய் உள்ளது. நாம் வாழ வேண்டிய வழியை அவர் கட்டளையிட்டுள்ளார். ஆகையால் நமது வாழ்க்கையைப் பற்றி "கட்டாயக் கடமை" உள்ளது. நாம் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்றால் நமது ஒழுக்க நடத்தைகள் அவரது போதனைக்கு ஒத்திருக்க வேண்டும்.

நாம் எப்படியிருக்க வேண்டும் மற்றும் என்ன செய்ய வேண்டும் என்ற இந்த "கட்டாயக் கடமையானது" மனச்சாட்சியின் அடிப்படையில் அமைவு பெற முடியாது. மனச்சாட்சிக்கு வேண்டுகோள் விடுப்பது என்பது மாண்புமிக்க வேண்டுகோளாய் இருக்கின்றது. இருப்பினும், நமது இருப்பின் மற்ற எல்லா அம்சங்களையும் போலவே நமது மனச்சாட்சியும் பாவத்தின் பிரசன்னத்தில் வீழ்ந்துள்ளது என்பதை நாம் உணர வேண்டும். ஆகையால், நமது மனச்சாட்சியானது குறைபாடுள்ளதாக இருக்கின்றது. ஒரு புறத்தில், நாம் ஒருக்காலும் நம்முடைய மனச்சாட்சிகளை மீறி நடக்கக் கூடாது; மறுபுறத்தில் நாம் ஒருக்காலும் அவற்றை நமது முடிவான வழிகாட்டியாக அனுமதிக்கக் கூடாது. தேவனுடைய கட்டளைகளே நமது வழிகாட்டியாய் இருந்து நமது சிந்தைகள் மற்றும் மனச்சாட்சிகள் ஆகியவற்றிற்குத் தகவல் அளிக்க வேண்டும். இது, நமது ஒழுக்கத் தன்மையானது நமது உள்ளுணர்வின் விருப்பங்களின் மீதல்ல, தேவனு டைய வசனத்தின் மீதே புற நோக்குடன் சாய்ந்துள்ளது என்று அர்த்தமாகின்றது.

நமது ஒழுக்கத்தின் தர அளவைகள் வேறெங்கும் சட்டப் பூர்வமாகக் காணப்பட முடியாது. உதாரணமாக, அதிகாரத்தை நல்லொழுக்கத்திற்கு ஒரு அடிப்படையாக நாம் உரிமைகோர முடியாது. நாடுகளின் நடுவிலோ அல்லது தனிநபர்கள் நடுவிலோ பலமுள்ளது சரியானதைச் செய்வதில்லை என்று நாம் அறிகின்றோம்.

விருப்பப்பட்ட ஒரு முடிவை நிறைவேற்றுவதற்காக ஏதோ ஒன்று வேலை செய்வதால் மட்டும் அது ஒழுக்கமுள்ளதாக இருப்பதில்லை என்றும் நாம் அறிகின்றோம். இது மட்டும் உண்மையாய் இருந்தால், இரண்டாம் உலக யுத்தத்தின் பொழுது, நாசிகளால் இனவெறிக் கொலையில் இலட்சக்கணக்கான மனித உயிர்கள் எடுக்கப்பட்ட நிகழ்ச்சியானது ஒழுக்கமுள்ளதாகவே இருந்திருக்கும். தீ வைப்பு நிகழ்ச்சியானது விருப்பப்பட்ட ஒரு முடிவை நோக்கியே செலுத்தப்படுகின்றது, ஆனால் அது ஒழுக்கமானதாய் இருந்ததில்லை. விரும்புகின்ற ஒரு முடிவை நியாயப்படுத்த பயன்படும் எந்த ஒரு வழிமுறையும் அந்த முடிவு விளைவை ஒழுக்கமுள்ளதாகச் செய்யுமென்றால், உலகளாவிய வகையில் வேண்டுகோளின்படி எடுக்கப்படும் கருக்கலைப்புகள் (ஆண்டுக்கு 1,500,000க்கு மேற்பட்டவைகள்) ஒழுக்கமுள்ளதாக இருக்குமே.[2] அப்படியிருக்கின்றதா?

"விஷயங்கள் அவ்வகையில்தான் உள்ளன" என்பதால் சில விஷயங்கள் ஒழுக்கமுள்ளவைகள் அல்ல. நாம் பரிபூரணப்பட்ட ஒரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தால், இயல்பாக வருகின்ற முறையில் செய்வதும் பரிபூரணப்பட்டதாக இருக்கும். மனிதர்கள் பரிபூரணமற்றவர்களாக, பாவம் நிறைந்தவர்களாக ஆனதால், நமது இயல்பான விருப்பங்கள் உண்மையான ஒழுக்கத்திற்கு அடிப்படையாக இருப்பதில்லை. அப்படியிருந்தால், திருடர்கள் வருவதை எச்சரிக்கை செய்யும் கருவி, பாதுகாப்புக் காவலர்கள் மற்றும் நாட்டில் உள்ள பூட்டப்பட்ட வீடுகள் - அல்லது சிறு குற்றவாளிகளும் பெருங் குற்றவாளிகளும் நிறைந்துள்ள சிறைகள் - ஆகியவற்றிற்கு ஒருவர் எப்படி விளக்கம் அளிப்பார்? பலமானது சரியானதைச் செய்வதில்லை என்றும் பயன்பாட்டியல் என்பது ஒழுக்கத் திற்கு அடிப்படையானதல்ல என்பதையும் நாம் யாவரும் அறிந்து உணருகின்றோம். விழுந்த போன உலகமானது உண்மையான ஒழுக்கம் "இயல்பாக வருகின்ற" அரங்கத்தை அளிப்பதில்லை. நாம் வேறு எங்காவது கண்ணோக்க வேண்டியதாக உள்ளது.

தேவனுடைய இயல்பானது அவரது பரிசுத்த தன்மையினால் மேன்மையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய பரிசுத்த தன்மையானது நமது ஒழுக்கமான வாழ்வுக்கு அஸ்திபாரமாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது. பழைய ஏற்பாட்டில் அவரது கூற்றானது தெளிவானதாகவும் தவறற்றதாகவும் உள்ளது: "உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (லேவி. 19:2ஆ). இது புதிய ஏற்பாட்டிலும் ரீங்காரமிடுகின்றது. "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேது. 1:15). நமது

ஒழுக்கத்திற்கு அடிப்படையாக உள்ள பரிபூரண ஒழுக்கம் கொண்ட தேவனை நாம் கண்ணோக்குகின்றோம். தேவன் சரியானவராய் இருப்பதால் நாம் எப்படிச் சரியானவர்களாய் இருப்பது மற்றும் சரியானவைகளைச் செய்வது என்பதைக் கூறுகின்ற அவரையே நாம் வேதாகமத்தில் காண்கின்றோம்.

நாம் எப்படி "இருக்க" வேண்டும்? நாம் எப்படி "இருக்க" வேண்டும் என்று தேவன் குறிப்பாகச் சொல்லுவதோடு மட்டும் நின்று விடுவதில்லை; அவர், நாம் எப்படி "இருக்க" வேண்டுமோ அப்படியிருந்தால் என்னவாக ஆவோம் என்பதையும் காண்பிக்கின்றார். தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து, "எனக்குச் சித்தமானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறதால் ..." (யோவா. 5:30ஆ) என்று கூறினார். தமது பிதாவின் சித்தத்திற்கு அவர் ஒத்துப் போவதில் தேவனுடைய ஒழுக்க மேன்மையை நாம் இயேசுவுக்குள் காண்கின்றோம். ஆகையால், கிறிஸ்துவுடன் நமது ஒத்துப் போவதில், நாம் நமது ஒழுக்கவீனங்கள் எல்லாவற்றையும் புறம்பே தள்ளி விட்டு, அவருடைய வாழ்வின் தூய்மையை நம்மில் காணப்படுவதற்கு அனுமதிக்கின்றோம். விசுவாசத்திலும் மனந்திரும்புதலிலும் நாம் ஞானஸ்நானத்தில் "கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளும்" பொழுது, நாம் அவருடன் அடக்கம் பண்ணப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி எழுப்பப்படுகின்றோம் (அப். 2:38; ரோமர் 6:3, 4; கலா. 3:26, 27). நமது விசுவாசத்தின் மூலமாக அவருடைய கிருபையினால் தேவன் விரும்புகின்றபடியாகின்றோம் (எபே. 2:8, 9).

## சத்தியம் செயல்படுத்தப்பட்டது

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற புதிய ஜீவன் என்பது பல முகப்புக்களைப் பெற்றிருந்தாலும், இந்தப் பாடத்தில் நாம் ஒழுக்கமுள்ள வாழ்வு என்பதிலேயே அக்கறை செலுத்துகின்றோம். நாம் ஒழுக்கத்துடன் எவ்விதம் வாழுவோம்? இதற்கான பதிலானது எளிமையானதாகக் காணப்படுகின்றது: நாளுக்கு நாள் என்ற அடிப்படையில் நாம் ஒழுக்கவீனமான சிந்தனை மற்றும் நடக்கைகளைத் தவிர்த்து, ஒழுக்கமுள்ள நடத்தையை செயல் முறைப் படுத்துகின்றோம். ஒழுக்கம் என்றால் என்ன? ஒழுக்கவீனம் என்றால் என்ன? முன்னதாக நாம் சில கொள்கைகளைக் கண்டோம்; இப்பொழுது நாம் குறிப்பிட்டவைகளை/திட்டவட்டமானவைகளைக் காண்போம். இருப்பினும், அவ்வாறு செய்வதில், பாடக் கருத்தை நாம் முடித்துப் போட்டு விட மாட்டோம். "சரியான" திசையை மட்டுமே நாம் சுட்டிக் காட்டுவோம்.

நமது தேவன் ஒழுங்குணர்வு கொண்டவராக இருக்கின்றார். அவருடைய பரிசுத்த தன்மையானது ஒழுக்கக் கடமைகள் யாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளது, இது வேத வசனங்களில் அடிக்கடி குறிப்பாக/திட்டவட்டமாக விளக்கப் படுகின்றது. எதிர்மறையான அறிவுறுத்தல்களின் பின்கண்ட வழிமுறைகளைக் கவனியுங்கள்: கொலை செய்யாதிருப்

*பாயாக, விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக, ஊனப்படுத்தாதே, கற்பழிக்காதே, பெற்றோர்களைக் கனவீனப்படுத்தாதே மற்றும் அவர்களைப் புண் படுத்தாதே, பொய் சொல்லாதே, நேர்மையற்றிருக்காதே, விபசாரம் அல்லது வேசித்தனத்தில் ஈடுபடாதே, நெருங்கிய உறவின் முறையினருடன் பாலுறவு கொள்ளாதே, ஓரினச் சேர்க்கையில் ஈடுபடாதே, அல்லது விகாரமானதை நடப்பியாது இருப்பாயாக.[3] இப்பொழுது, நேர்மறையான அறிவுறுத்தல்களின் பின்வரும் வழி முறைகளைக் கவனியுங்கள்: இரக்கமுள்ளவர்களாய், சமாதானம் பண்ணுகின்றவர்களாய், பெருந் தன்மையானவர்களாய், அன்பு செய்கிறவர்களாய், நேர்வழி செல்பவர் களாய், அக்கறையுள்ளவர்களாய், ஞானமுள்ளவர்களாய், தூய்மையானவர் களாய், பொறுமையுள்ளவர்களாய், சாந்தம் உள்ளவர்களாய், பரிவு, தாழ்மை மற்றும் மேன்மை குணம்/கனப்படுத்துதல் உள்ளவர்களாய் இருங்கள்.[4] இந்தப் பட்டியல் முடியவில்லையென்றாலும், இவை நமக்குச் சரியான திசையையே சுட்டிக்காட்டுகின்றன.*

*நமது தேவன் ஒழுங்குணர்வு உள்ளவராக இருக்கின்றார். அவர் நம்மைத் தமது சாயலில் படைத்தார். நாம் ஒழுங்குணர்வுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். ஒழுக்கம் என்றால் எதை அர்த்தப்படுத்துகின்றது என்பதற்கு அவர் திட்டவட்டமான வரையறை கொண்டுள்ளார். இந்தப்பாடத்தில் நாம் பின் கண்டவைகளைக் கற்றோம்: (1) முழுமையும் பரிசுத்தமான தேவனைப் பெற்றிருத்தல் என்பது அர்த்தப்படுத்துவது என்ன? (2) அவர் விழுந்துபோன தம்முடைய ஜீவன்களுக்கு (நமக்கு) நமது ஒழுக்கவீனம் மற்றும் பாவங்கள் ஆகியவற்றை விட்டுவிடுவதற்கு எவ்விதத்தில் ஒரு வாய்ப்பளித்துள்ளார்? (3) நாம் ஒழுக்கமுள்ள வாழ்வை வாழும்படி அறைகூவல் விடப்பட்டுள்ளது. சங்கீதக்காரர் பின்வருமாறு கூறியுள்ளார்:*

> *கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன்,*
> *உம்முடைய பூர்வ காலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்*
> *உம்முடைய கிரியைகளெல்லாம் தியானித்து,*
> *உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்.*
> *தேவனே, உமது வழி பரிசுத்த ஸ்தலத்திலுள்ளது;*
> *நம்முடைய தேவனைப்போலப் பெரிய தேவன் யார்?*
> *(சங். 77:11-13).*

---

குறிப்புகள்

[1]William Wordsworth,"Recollections of Early Childhood," in *Ode on the Imitations of Immortality,* lines 17-18. [2]F. LaGard Smith, *When Choice Becomes God* (Eugene, Ore.: Harvest House, 1990), 82-86. [3]*யாத். 21:15; லேவி. 18:6-8, 23; 19:11, 29, 35; 20:13; 24:19, 20; உபா. 5:17-20; 19:3அ; 22:25; 1 கொரி. 6:18.* [4]*மத். 5:7-9, 22, 28, 31, 39, 42-47; 6:1-4, 22, 23; 7:12, 24-27; 1 கொரி. 7:10-16; கலா. 5:14, 22; எபே. 5:3-5, 32; 1 பேது. 2:1, 11, 12; 3:16; 4:3, 4; 5:5, 6; 2 பேது. 1:7.*

# பிரிவு III:
# நம்முடன் தேவனுடைய உறவு

*"தேவனுடைய வரையறையற்ற தன்மை" என்ற முதல் பாகமானது தேவனுடைய பரந்த தன்மையை வலியுறுத்திற்று. நாம் அவருடைய எங்கும் நிறைந்த தன்மை, எல்லையற்ற அறிவு மற்றும் சர்வ வல்லமை ஆகியவற்றைக் கவனித்தோம். தேவனுடைய இந்த வானுலகப் பண்புகளை மட்டுமே நாம் பரிசீலனை செய்து கொண்டிருந்தால், இவ்வுலகில் மிகச் சிறு புள்ளிகளாய் இருக்கின்ற நம்மைப் போன்றவர்களுடன் அவர் உறவு வைக்க விரும்புவது ஏன் என்பதைப் புரிந்து கொள்வது கடினமாகி விடும்.*

*"நமக்காகத் தேவனுடைய சந்தர்ப்பப் பொருள்" என்ற இரண்டாவது பிரிவில், அவரை சிருஷ்டிகராகவும், நம்மை அவர் படைத்த உலகில் வைக்கப்பட்ட சிருஷ்டிகளாகவும் நாம் கண்டோம். தேவன் வரலாற்றில் ஒரு நாடகத்துவப் பணி செய்துள்ளதையும் அந்த வரலாற்று நாடகத்தில் நாம் ஒரு பாகமாய் இருக்கின்றோம் என்பதையும் நாம் உணர்ந்தோம். பிறகு நாம் தேவனுடைய மிக மேன்மையான பண்பாக இருப்பது அவருடைய பரிசுத்த தன்மையே என்று கவனித்தோம். ஆகையால், அவரது சிருஷ்டிப்பானது ஒழுக்கப் பண்புடையதாக இருக்கின்றது. அவரது அருளிரக்கத்தின் மூலமாக உலகத்தில் கிரியை செய்யும் அவருடைய வரலாறானது குறிப்பிட்ட நிறைவான முடிவுடன் கூடிய ஒழுக்க நியதியைப் பெற்றுள்ளது. அந்த நியதியை நோக்கிய ஒழுக்க அணி நடையில் நாம் பங்கேற்க வேண்டும் என்று அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கின்றார். இந்த அணிநடையை நாம் வெற்றிகரமாய் முடிப்பதற்கு நமக்கு அவரது உதவி, உற்சாகப் படுத்துதல் மற்றும் அன்பு ஆகியவை தேவைப்படுகின்றன. ஆகையால், நாம், நம்முடன் தேவனுடைய உறவு பற்றியும் அவர் தருகின்ற தெய்வீக உதவி பற்றியும் பரிசீலனை செய்வோம்.*

> *வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக் கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியை யுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோ. 3:16, 17).*

> *வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த*

*ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2 பேது. 1:20, 21).*

*தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனு டைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்திலே விசுவாச முள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட் பட்டாயிற்று. ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத் தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில் வருகிறான் (யோவா. 3:16-21).*

# நமது தேவன் வெளிப்படுத்தப்பட்டவராய் இருக்கின்றார்

ஒரு முக்கியமான கருத்தறிவில், தேவன் மறைக்கப்பட்டவராய் இருக்க முடியாது. அவரது இருப்பே வெளிப்படுத்துதலை விளைவிக்கின்றது. இயல்பாகவே அவர் சிருஷ்டிப்பவராய் இருப்பதால்,சிருஷ்டிக்கப்பட்டது அதன் சிருஷ்டிகரை வெளிப்படுத்துகின்றது. சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் நம்முடைய இருப்பே சிருஷ்டிப்புக்கு ஆதாரமாக உள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான், வத்திக்கான் நகரில் உள்ள சிஸ்டைன் தேவாலயத்தில் நின்று, அதன் கூரைப் பகுதிகளில் வரையப்பட்டிருந்த அற்புதமான சுவர்ச் சித்திரங்களை மதிப்புணர்வுடன் காணக் கூடிய மெய் சிலிர்க்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். செயலளவில் உண்மையான பயபக்தியுடன் நான் நின்று கொண்டிருக்கையில், இப்படிப்பட்ட கலைப் படைப்பொன்றை எந்த ஒரு நபரும் எப்படி நிறைவேற்றியிருக்கக்கூடும் என்று நான் ஆச்சரியப்பட்டேன், ஆனால் எவரேனும் ஒருவர் அதைச் செய்திருந்தால் அதற்காக நான் வியப்படையவில்லை! அந்த அழகிய சித்திரங்கள் இருப்பதே அவைகளை யாரேனும் ஒருவர் வரைந்திருந்தார் என்பதற்கு நேர்மறையான ஆதாரமாக உள்ளது. மேலும், வியப்பூட்டும் அந்தக் காட்சியானது ஓவியரின் பண்பு நலனுக்கான ஆதாரமும் அளித்தது. அந்தப் பணியை நிறைவேற்ற நீண்ட காலம் ஆகியிருக்கும் என்று நான் உணர்ந்தேன். மாபெரும் பொறுமை (சுமார் நாலறை ஆண்டுகாலம் மதிப்புடையது) தேவைப்பட்டிருந்தது. அசாதாரணமான திறமை தெளிவாய்த் தெரிந்தது. கண்டுணர்தல் மற்றும் விகிதாச்சாரம் ஆகியவற்றின் உன்னதமான அறிவை அந்த வேலைப்பாடு காண்பித்தது. சரீர வலிவு அவசியமாய் இருந்தது என்பது தெளிவாய் இருந்தது. சுருக்கமாய்க் கூறினால், கலைத் திறமைக்கு ஒரு ஓவியன் தேவை என்பது ஒரு கடந்த கால முடிவாக மட்டும் இருந்ததில்லை; அந்த உன்னதப் சிருஷ்டிப்பானது மேலான கலைஞனின் குறிப்பிட்ட சில பண்புகளை எனக்குக் கூறியது.

இது போலவே சிருஷ்டிப்பிலும் உள்ளது. இது யாரோ ஒருவருடைய மிக உயர்வான பொதுவான வெளிப்படுத்துதலாக உள்ளது. படைப்பின் பொதுவான வெளிப்பாட்டில் நாம், சிருஷ்டிப்பவர் இருத்தலின் “வெறும்” உண்மையைக் காட்டிலும் அதிகமானவைகளைப் பகுத்துணர முடியும். மேலும் நாம் சிருஷ்டித்தவரின் “பண்பு” பற்றிய சிலவற்றையும் காண

முடியும். உதாரணமாக, ஏற்கனவே தேவபக்தியுடன் தேவனை விசுவாசித்த தாவீதினால் பின்வரும் உற்று நோக்கல் ஏற்படுத்தப்பட்டது: "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (சங். 19:1). தாவீது தேவனுடைய கரங்களின் செயலில் மகிமையைக் கண்டார். இன்றைய நாட்களில் நாம், அண்டத்தின் மாபெரும் அளவு பற்றியும், நமது சூரிய மண்டலத்தின் துல்லியமான செயல்பாடுகள் பற்றியும் பெரும் வியப்படைகின்றோம். உண்மையில் நாம் நமது கடிகாரங்கள் மற்றும் நாட்காட்டிகள் ஆகிய வற்றைக் காணும் பொழுது இந்தத் துல்லியமான அமைப்பு முறையையே சார்ந்துள்ளோம். பகல் மற்றும் இரவு மற்றும் பருவங்கள் வந்து போகுதல் ஆகியவற்றின் ஒழுங்கு முறையை நாம் அறிகின்றோம். வானவியல் அறிஞர்கள் நமது சூரியனைச் சுற்றி வரும் கோள்கள் இருக்கும் இடத்தைப் பற்றியும், மிக தொலை தூரமான எதிர்காலத்திலும் கூட கிரகணங்கள் எப்பொழுது ஏற்படும் என்பது பற்றியும் நமக்குக் கூறுகின்றனர். ஆம், சிருஷ்டித்தவரின் சிருஷ்டிப்பைப் பற்றிப் படிப்பதினால், நாம், அவருடைய மகிமை, மாபெரும் தன்மை மற்றும் சிருஷ்டிகரின் ஒழுங்கமைவு முறை ஆகியவற்றில் சிலவற்றை அறிகின்றோம்.

இன்னொரு முக்கியமான கருத்தறிவில், தேவன் திரையிடப் பட்டுள்ளார். சிருஷ்டிப்பில் நாம் சிருஷ்டித்தவரின் *உண்மையையும்* மற்றும் சிருஷ்டித்தவரின் "பண்பினங்கள்" சிலவற்றையும் கூடக் காண்கின்றோம். இருப்பினும் சிஸ்டைன் பேராலயத்தில் உள்ள சித்திரங்கள் அவைகளை வரைந்தது யார் என்று சொல்லாதது போலவே, சிருஷ்டிக்கப்பட்டவைகள், அந்த சிருஷ்டிகர் *யார்* என்று நமக்குக் கூறுவதில்லை. அந்தச் சித்திரங்களைப் பார்த்ததினால் அல்ல, ஆனால் உச்ச மறுமலர்ச்சி காலத்தின் பொழுது இத்தாலியக் கலைகளின் வரலாற்றை வாசித்து படித்ததினால், மைக்கேல் ஆஞ்சலோ அவைகளை வரைந்தார் என்று நான் தெரிந்து கொண்டேன். அது போலவே, தேவனுடைய குறிப்பிட்ட வெளிப்படுத்துதலான வேதாகமத்தை நாம் வாசித்து படிக்கையில் அண்டத்தையும், நமது உலகத்தையும், நம்மையும் சிருஷ்டித்தவர் யார் என்று நாம் கண்டறிகின் றோம். அவரே மிகப் பெரிய கட்டிடக் கலைஞர் என்று வேதாகமத்தில் நாம் கண்டறிகின்றோம். வேத வசனங்களின் உதவியில்லாமல் நீங்களோ அல்லது நானோ, சிருஷ்டித்தவர் யார் என்று அறிந்திருக்க முடியாது.

இதனால்தான் தேவனைப் பற்றிய நமது கலந்தாய்வுகளில் வேதாகமத்தைப் பயன்படுத்துவதில் நாம் கவனத்துடன் இருக்கின்றோம். பொதுவான வெளிப்படுத்துதலானது (இயற்கை) சிருஷ்டித்தவர் இருக்கின்ற உண்மையையும், சிருஷ்டித்தவரின் குணங்கள் சிலவற்றையும் கூட நிலைநாட்டுவதற்கு உதவியாய் இருப்பதை நாம் கண்டறிந்தோம், ஆனால் சிருஷ்டித்தவரோ வேதாகமத்தின் தேவனாக இருக்கின்றார் என்று அடையாளப்படுத்துவதற்கு நாம் வேத வசனங்களிடத்தில் திரும்பினோம். மேலும் நாம், அவரது வல்லமையான செயல்பாடுகள் அவரது மக்களின் வரலாற்றில் இவரைப் பற்றிய ஒரு வெளிப்படுத்துதலாக உள்ளதென்றும் நாம் படித்தோம். இருப்பினும், வரலாற்றில் அவரது ஈடுபாட்டின்

முக்கியத்துவமானது அவரது ஒழுக்க இயல்பிலேயே அஸ்திபாரம் கொண்டுள்ளது. இந்த பெரும் முக்கியத்துவம் வாய்ந்த சத்தியமானது - அவரது பிரித்து வைக்கப்பட்ட செயல்களில் இருந்தல்ல - வேதாகமத்தில் இருந்தே வருகின்றது. ஆகையால், நாம் திரையிடப்பட்ட தேவனையும் மற்றும் ஒரு வெளிப்படுத்தப்பட்ட தேவனையும் பெற்றுள்ளோம். அவர் இயற்கையிலும் (சிருஷ்டிப்பில்) மற்றும் வேதாகமத்திலும் வெளிப் படுத்தப்படும் வரையிலும் அவர் திரையிடப்பட்டுள்ளார், மற்றும் அவருடைய சித்தத்தினுடைய அளவுக்கு மட்டுமே இது நடைபெறுகின்றது.

## அவரது செய்தித் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டார்

தேவன் தமக்குரிய சொந்த வழியில் தம்மை வெளிப்படுத்துகின்றார் என்று வேதாகமம் காண்பிக்கின்றது. அவர், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, சாமுவேல், நாத்தான், எசேக்கியேல் முதலியவர்களிடம் பேசினார்.[1] இந்த செய்தித் தொடர்பு அவரது சித்தத்தை அறியப்படுத்து வதற்காகவே ஏற்பட்டிருந்தது. அவர் தமது மக்கள் தக்கமுறையில் வழி நடத்தப்பட வேண்டும் என்று விரும்பினார். வரலாற்றுப் பூர்வமான உண்மைகளைக் காட்டிலும் அதிகமானவைகள் ஈடுபடுத்தப்பட்டன. அவர்களிடையில் அவரது செயல்பாடுகளுக்கும், அவர்களுடன் அவரது உறவுமுறைக்குமான பகுத்தறிவுள்ள காரணம் ஒன்று அவரது வெளிப் படுத்துதலின் உயர்வாக்கப்பட்டிருந்தது. ஆகையால், அவரது செயல்களும் அவரது வார்த்தைகளும் தேவனால் அளிக்கப்படும் பாதுகாப்பு, கவனிப்பு, வழிகாட்டுதல் மற்றும் ஒப்புரவு ஆகியவற்றைச் சித்தரிக்க இணைந்துள்ளன. அந்த சந்தர்ப்பப் பொருளில் அவரது சித்தம் வெளிப்படுத்தப்பட்டது.

## அவரது உடன்படிக்கையில் வெளிப்படுத்தப்பட்டார்

உடன்படிக்கையானது அதன் எல்லாக் கிளைத்தல்களுடனும் அவர்களுக்கான தேவனுடைய அக்கறையின் மையப் படைப்பாக இருந்தது. உடன்படிக்கையானது, இயற்கையைப் படித்தறிதல், வரலாற்றை அலசிப் பார்த்தல், அல்லது அண்டை மக்களிடமிருந்து தற்காலச் சட்டக் கோட்பாடுகளின் பகுதிகளைக் கடன் வாங்குதல் ஆகியவற்றின் மூலமாகப் பகுத்தறியப்படவில்லை.[2] அது சீனாய் மலையில் மோசேக்கு “பத்து கட்டளைகள்” கொடுத்தலில் இருந்து தொடங்கி தேவனால் நேரடியாகத் தரப்பட்டது.[3]

## அவரது செயல்கள் மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டார்.

காலங்களினூடே தேவன் தம் மக்களுக்குத் தமது சுய வெளிப்பாட்டுச்

செயல் முறையைத் தமது செயல்கள் மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றினால் தொடர்ந்து செய்தார். அவரது செயல்கள் அவரது வல்லமையில் அவரை வெளிப்படுத்தின. அந்தச் செயல்களுக்கு நோக்கங்கள் தந்த அவரது வார்த்தைகள் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டன.[4] தொடர்ந்து வந்த சந்ததிகள் பயனடையும்படியாக இது யாவும் எழுதி வைக்கப்பட்டன.[5] எழுதப்பட்டவைகளுக்கு மிஞ்சிப்போய் விடாதபடி அல்லது அவைகளைச் செய்வதில் குறைந்து போய் விடாதபடி அவைகளை நெருக்கமாய்க் கவனித்துப் பின்பற்றும்படி மக்கள் எச்சரிக்கப்பட்டனர்.[6]

தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட செயல்களும் வார்த்தைகளும் அவரது மக்களுடனான அவரது உறவுக்கு அவசியமான பகுதிகளாய் இருந்தன. அவர் செயல்படாது இருந்திருந்தாரென்றால், அவரது வல்லமையை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். அவர் பேசாது இருந்திருந்தாரென்றால், அவரது சித்தத்தை அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். இந்த "இரட்சிப்பின் வரலாறானது" எழுதப்பட்டிராது இருந்திருந்தால், அவர்கள் நினைவில் வைத்திருக்க மாட்டார்கள். அவர்கள் நினைவில் வைக்காதிருந்திருந்தால், அவரிடத்திலிருந்து அவர்கள் பிரிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களுடைய மாபெரும் முன்னோடிகளில் ஒருவர் பின்வருமாறு கூறியதில் வியப்பெதுவும் இல்லை.

> *கர்த்தர், என் கன்மலையும், என் கோட்டையும், என் ரட்சகருமானவர். தேவன் நான் நம்பியிருக்கிற துருக்கமும், என் கேடகமும், என் ரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் ரட்சகருமானவர்; என்னை வல்லடிக்கு நீங்கலாக்கி, ரட்சிக்கிறவர் அவரே (2 சாமு. 22:2, 3).*

## தீர்க்கதரிசிகளில் வெளிப்படுத்தப்பட்டார்

தேவனுடைய மாபெரும் மற்றும் மிகவும் முழுமையான வெளிப் படுத்துதல் இன்னமும் வரவேண்டியதாக இருந்தது. தேவனுடைய தீர்க்கதரிசிகள் அவரது சித்தமும் திட்டங்களும் வெளிப்படுத்தப்படுவதற்கு முக்கிய வாய்க்காலாக இருந்தனர். சீனாய் உடன்படிக்கையின் கீழ் அவர்கள் வாழ்கையில், வரப் போகிறதாயிருந்த புதிய உடன்படிக்கையைப் பற்றி அவர்கள் பேசினர். எரேமியா இந்த உடன்படிக்கையைப் பற்றி - இதன் தொடக்கம், இதன் இயல்பு மற்றும் இதை ஏற்றுக் கொள்பவர்களுக்கு இதன் பயன்மிக்க விளைவுகள் ஆகியவை பற்றி - விவரித்தார்:

> *இதோ நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப் பிடித்த நாளிலே, அவர் களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ... நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

> *இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி, கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன் (எரே. 31:31-34).*

*தேவனுடைய தீர்க்கதரிசிகளில் - ஒருவரைத் தவிர (உபா. 34:10-12) - மோசேக்கு ஒப்பானவர் எவரும் இல்லை. மோசே தம்மைப் போல ஒரு தீர்க்கதரிசி வருவார் என்று கூறினார். இந்த தீர்க்கதரிசிக்கு மக்கள் கவனமாய்ச் செவி கொடுத்தல் அவசியமாகும், ஏனென்றால் அவர் தேவனுடைய வார்த்தைகளையே பேசுவார் (உபா. 18:15-19).*

## அவரது குமாரனில் வெளிப்படுத்தப்பட்டார்

*இந்த தீர்க்கதரிசி பின்னாளில் பாடுபடும் மேசியாவாகிய இயேசு (அப். 3:17-26), மரணத்திற்குள்ளாக்கப்பட்ட நீதிமான் (அப். 7:52, 53) என்று அடையாளப்படுத்தப்பட்டார். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு, பஸ்கா உணவை உண்பதற்காகத் தமது சீஷர்களுடன் கூடினார். இந்த உணவின் போது, அப்பத்திற்கும் திராட்ச இரசத்திற்கும் அவர் புதிய அர்த்தத்தைக் கொடுத்தார். அவர் அப்பத்தைக் கொடுத்து, "நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாய் இருக்கிறது" என்றார். அவர் திராட்ச ரசம் நிறைந்த கிண்ணத்தை எடுத்து, "இதிலே பானம் பண்ணுங்கள், இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார் (மத். 26:26-28; மாற். 14:22-24; லூக். 22:19, 20). அவரது தியாகத்தின் மூலமாக அவர் புதிய மற்றும் இன்னும் மேன்மையான உடன்படிக்கையின் மத்தியஸ்தரானார். அவர் முதல் உடன்படிக்கையை வழக்கற்றதாக்கியதும், அதே வேளையில் பழைய உடன்படிக்கையின் கீழ் உண்மையாக வாழ்ந்திருந்தவர்களுக்கு மீட்பிற்கான வழியையும் அளித்தார் (எபி. 8-10).*

*இந்த நாசரேத்தூர் இயேசு தேவனுடைய மிக மேன்மையான வெளிப்படுத்துதலாய் இருக்கின்றார். ஏசாயா தீர்க்கதரிசியினால் "இம்மானுவேல்" என்று கூறப்பட்டவர் இவரே என்று அடையாளப்படுத்தப்பட்டார், "இம்மானுவேல்" என்பதற்குத் தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாகும் (ஏசா. 7:14; மத். 1:20-23). ஆகையால், தேவன் தம் மக்களுடன் கொண்டிருந்த வெளிப்படுத்தப்பட்ட உறவானது அவரது குமாரனாகிய இயேசு என்ற நபரில் மாபெரும் உச்சத்தை அடைந்தது.*

> *அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை அவர் சகல ஞானத்தோடும் புத்தியோடும் எங்களிடத்தில் பெருகப் பண்ணினார் ... தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார் (எபே. 1:7-10).*

குறிப்புகள்

[1]*ஆதி 13:14; 26:2; 28:13; யாத். 6:2, 8; 1 சாமு. 3:10; 2 சாமு. 7:4; எசே. 3:22.* [2]James B. Pritchard, ed., "The Middle Assyrian Laws," in *Ancient Near Eastern Texts Relating to the Old Testament,* 2d ed., trans. F. G. and Theophile J. Meeke (Princeton, N.J.: Princeton University, 1955), 180-88. [3]*அதாவது, எபிரெயச் சொற்றொடரான sereth haddbarim என்பது, "பத்து வார்த்தைகள்" என்று அர்த்தப்படுகின்றது; கிரேக்க மொழியில்* (LXX), *hoi deka logoi என்பது "பத்து வார்த்தைகள்" அல்லது* "Decalogue" *என்று அர்த்தப்படுகின்றது.* [4]Arnold B. Rhodes, *The Mighty Acts of God* (Richmond, Va.: CLC Press, 1964), 12-13. [5]*உபா. 31:24; யோசுவா. 1:8; நெகே. 8:13, 14; ஏசா. 30:8; எரே. 30:1, 2; முதலியன.* [6]*உபா. 4:1, 2; நீதி. 30:5, 6; மாற். 11:17; வெளி. 22:18, 19.*

# நமது தேவன் ஏவுதல் செய்கின்றவராய் இருக்கின்றார்

*தேவன் தம்மை எவ்விதத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார் என்ற பாடத்திற்குப் பிறகு, தேவன் தமது செய்தியாளர்களை எவ்விதத்தில் ஏவியிருக்கின்றார் என்பதைக் கவனிக்க நாம் திரும்ப வேண்டியிருப்பதில் வியப்பெதுவும் இருக்கக் கூடாது. ஏவுதல் என்பது வெளிப்படுத்துதலுக்கான ஒரு விசேஷித்த வழி முறையாகும். இந்தப் பாடத்தில் நாம் தொடர்புடைய ஆனால் தனிச் சிறப்பானவைகளும், நம்முடனான அவரது உறவுக்கான வைகளுமான இரண்டு அம்சங்களில் நமது தேவன் "ஏவுதல் செய்கின்ற வராக" இருக்கின்றார் என்பது பற்றிப் பேசவிருக்கின்றோம்.*

## நம்மீது அவரது செல்வாக்கு

*முதலாவதாக, தேவன் ஏவுதல் செய்கின்றவராக இருக்கின்றார், ஏனென்றால் அவர் யாராய் இருக்கின்றார் என்பதும், அவர் என்ன செய்கின்றார் என்பதும் கொண்டுள்ள செல்வாக்கிற்கு இணங்குகின்றவர் கள்மேல் மனமகிழ்ச்சியூட்டும், உணர்வூட்டும் மற்றும் மேன்மைப் படுத்தும் வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அவர் மாபெரும் பணியொன் றைச் செய்துள்ள மற்றும் தொடர்ந்து செய்து வருகின்ற மெய்யான மற்றும் ஜீவனுள்ள ஒரே தேவனாக இருக்கின்றார். அவருடைய மாபெரும் தன்மையும் வல்லமையும், அவரது சிருஷ்டிப்பிலும், நமக்கு உயிர்ப் பூட்டுகின்ற ஜீவனின் ஈவிலும் காணப்படுகின்றன. அவரே தோற்றுவித்தார் என்ற வகையில் நாம் அவரை அறிந்துள்ளோம். நாம் அவருக்குள் நம்முடைய தொடக்கத்தைக் காண்கின்றோம். நாம் அவரை நம்முடைய வழி நடத்துனர் என்ற வகையில் அறிந்துள்ளோம். அவர் வாழ்வுக்கு வழிகாட்டுதலைக் கொடுத்து, வரலாற்றை அர்த்தம் நிறைந்ததாக்குகின்றார். பாதுகாப்பவர் என்ற வகையில் அவரை நாம் அறிந்துள்ளோம். அவருடைய வல்லமையினால் நமது வாழ்வு நிலைநிறுத்தப்படுகின்றது. நாம் அவருக்காக வாழ்வதால் நிகழ்காலமானது தனிச் சிறப்புள்ளதாகின்றது. எதிர்காலமானது நமக்கான வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொண்டுள்ளது என்று நாம் அவருக்குள் உறுதியாய் கருத்துக் கொண்டுள்ளோம்; இந்த முழு உலகத்தை யும் அவர் தமது கரங்களில் தாங்குகின்றார்.*

தேவனைப் பற்றிய நமது கருத்தானது, அவர் நம்மைப் படைத்தவர், வழிகாட்டி மற்றும் நமது உண்மைத் தன்மையின் பாகம் என்பதாக உள்ளது. இவைகள் நமது இருப்பிற்கான காரணத்தில் சூழ்ந்து கொள்ளப் பட்டுள்ளன. நாம் தேவனில் நம்பிக்கை வைக்கும் பொழுது, வாழ்வானது வெறும் இருப்பைக் காட்டிலும் அதிகமானதாகின்றது. ஒவ்வொரு நாளின் செயல்பாடு என்ற நடைமுறை ஒழுங்கானது வாழ்வின் இன்னும் பெரிதான நோக்கத்தில் அமிழ்த்தப்பட்டு விடுகின்றது. உலக வாழ்வு சார்ந்த பணிகளின் சலிப்பு, மேம்போக்கான மதிப்புகளும் தேவனுடைய உலகத்தின் அழகை மதித்துணருதல் மற்றும் தேவனுடைய மக்களுடன் கொண்டுள்ள ஐக்கியத்தினால் சந்தோஷம் ஆகியவற்றால் இடம் மாற்றப்படுகின்றன. வாழ்வானது ஒரு துணிவுமிக்க செயலாகின்றது. வாழ்வதற்குப் பேரார்வம் கொள்வது என்பது நடைமுறையாகின்றது.

இது ஒரு Pollyanna மேம்போக்கான சித்தரிப்பாகும் என்று நீங்கள் கூறுகின்றீர்களா? இல்லவே இல்லை. அவருக்கு ஒப்புக் கொடுக்கும் மக்கள்மேல் ஏவுதல் செய்கின்ற ஒரு தேவனுடைய செல்வாக்கைப் பற்றி நாம் விளக்கப்படுத்திக் கொண்டுள்ளோம். மேற்கண்ட ஆய்வானது விருப்பம் நிறைந்த எண்ணமல்ல என்று நாம் அறிய முடியும். அவரது மக்களின் வாழ்வில் அவரது செல்வாக்கானது எவ்வளவாய் ஏவுதல் செய்கின்றதாய் உள்ளது என்பதற்கான பதிவேடுகளுக்கு நாம் வழி பெற்றுள்ளோம்.

ஆபிராம், எதிர்காலம் பற்றியும் தேவனுடனான அவனுடைய உறவுமுறை பற்றியும் அக்கறையை விளக்கப்படுத்திய பொழுது அவனுக்கு மாபெரும் உறுதிப்பாடு தரப்பட்டது. "நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு ... உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (ஆதி. 15:5, 6). வருங்கால சந்ததி பற்றிய வாக்குத்தத்தத்தாலும், தேவனுக்குள் அவருடைய விசுவாசம் தவறாததாயிருந்தது என்ற அறிவினாலும் ஆபிராம் உயர்த்தப்பட்டார்.

யோசுவாவின் நாட்களில் இஸ்ரவேலர்களின் வாழ்வானது சுலப மானதாய் இருந்ததில்லை. அவர்கள் தங்கள் மாபெரும் முன்னோடியான மோசேயை இழந்திருந்தார்கள். காலங்கள் நிச்சயமற்றவைகளாய் இருந்தன. கானானின் படையெடுத்தல் எவ்வேளையிலும் நடைபெறக் கூடியதாக இருந்தது. பலம் நிறைந்த, அகழிகளில் இருந்த மனிதர்களுக்கெதிரான இரத்தம் சிந்தும் யுத்தம் அவர்களை எதிர்நோக்கி இருந்தது. அப்படிப்பட்ட இறுக்கம் நிறைந்த வேளையில் யோசுவா மக்களை வழி நடத்தக் கூடியவராய் இருக்க முடிந்தது எப்படி? "கர்த்தர் யோசுவாவை நோக்கி, 'நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்' " (யோசு. 3:7) என்று கூறினார். யோசுவா தமது தேவனிடத்திலிருந்து பலத்த உற்சாக மூட்டுதலைப் பெற்றார். தேவன் வழியில் முன்சென்று நடத்துகின்றார்

*என்று நாம் நம்புகின்றபொழுது, கடினமான வேளைகளிலும் கூட தடைகளை வாய்ப்புக்களாக நோக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளது.*

*அன்னாள் என்பவள் எப்பிராயீம் மலை நாட்டைச் சேர்ந்த எல்க்கானா என்பவரின் மனைவியாய் இருந்தாள். அவர்கள் திருமணம் முடித்துப் பல ஆண்டுகள் ஆகியிருந்தது. அவளது கணவர் அவளை மிகவும் அன்பாக நேசித்தார். இருப்பினும் அவருக்கு அவள் ஒரு மகனைப் பெற்றுக் கொடுக்காததால் நிலை குலைந்து இருந்தாள். பழைய அருகாமை கிழக்கு நாடுகளில், கி.மு. இரண்டாவது ஆயிரமாண்டு காலத்தில் வாழ்ந்த பெண்களுக்கு பிள்ளையில்லாதிருத்தல் என்பது பேரழிவை உண்டு பண்ணும் அடியாக இருந்தது. திருமணமான, பிள்ளையில்லாத பெண்கள் ஒரு பெரிய பளுவை உணர்ந்தார்கள். அன்னாள் நிச்சயமாகவே அந்த அடியைப் பெற்றிருந்தாள். ஆகையால், தேவனுடைய கூடாரம் இருந்த சீலோவில் அவள் இருக்கையில் குழந்தை ஒன்று வேண்டும் என்று அவள் ஊக்கமாய் ஜெபித்தாள். அவளது ஜெபத்திற்குப் பதில் அளிக்கப்பட்டது. அவள் தனது மாபெரும் மகிழ்ச்சியில் தேவனுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் அந்தக் குழந்தைக்கு ஒரு பெயரிட்டாள்: அவள் அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள்.*[1]

> *அப்பொழுது அன்னாள் ஜெபம் பண்ணி, என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது; என் கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கிறது; என் பகைஞரின்மேல் என் வாய் திறந்திருக்கிறது; உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன். கர்த்தரைப் போலப் பரிசுத்தமுள்ளவர் இல்லை; உம்மையல்லாமல் வேறொருவரும் இல்லை; எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை (1 சாமு. 2:1, 2).*

*ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு, அவரிடத்திலிருந்து (தேவனிடத்திலிருந்து) தான் பெற்ற செய்தியினால் பரவசத்தில் தேவனை ஸ்தோத்தரித்த இன்னொரு பெண்ணைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். அவர் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து ஒரு குழந்தையை அவள் கர்ப்பம் தரிக்கச் செய்வதினால் அவளை ஆசீர்வதிக்கவிருந்தார். அவர் இயேசு என்று பெயரிடப்பட வேண்டியவராய் இருந்தார் (மத். 1:20, 21). அவளது வாழ்வில் ஏற்பட்ட ஒரு மாற்றம்தான் என்ன! மற்றும் நோக்கம், ஊழியம், சிலாக்கியம் ஆகியவற்றின் கருத்தறிவுதான் என்ன! அவளது நன்றியுணர்வும் மகிழ்ச்சியும் பாடலில் வெளிப்படுத்தப்பட்டன, "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகின்றது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது ... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது" (லூக். 1:46-49).*

*தேவனுடைய செல்வாக்கின் கீழ் வாழ்க்கையில் ஒருவர், எவ்வளவு நம்பிக்கையும் நேர்மறை உணர்வும் கொண்டவராய் இருக்க முடியும் என்பதற்கு பவுல் மாபெரும் முன்மாதிரிகளில் ஒன்றாக இருக்கின்றார். அப்போஸ்தலர் என்ற வகையில் அவரது வாழ்வானது குழப்பமும் துன்பத்தின் அழுத்தமும் நிறைந்ததாக இருந்தது. பவுல் பல உபத்திர*

*வங்களினால் பாடுபட்டார். ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்தார், மற்றும் தேவனுக்கு அவர் காண்பித்த ஆர்வப் பற்றினிமித்தமாக பல ஆண்டுகளைச் சிறையில் கழித்தார். அவர் நம்பிக்கையுள்ளவவராக இருந்தாரா? அவர், ''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலி. 4:13) என்று கூறினார். அவர் நேர்மறையான எண்ணம் கொண்டிருந்தாரா? அவர், "மேலும் என் சகோதரரே, கர்த்தருக்குள் சந்தோஷப்படுங்கள்" (பிலி. 3:1அ) என்று கூறினார். அவர் மனநிறைவுள்ளவராய் இருந்தாரா? அவர், "நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன்" (பிலி. 4:11ஆ) என்று கூறினார். அவரது வாழ்வைப் பற்றிய அவரது மதிப்பீடு என்ன? அவர் பின்வருமாறு கூறினார்:*

> *நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோ. 4:7, 8).*

*வேதாகமத்திலிருந்து வருகின்ற இப்படிப்பட்ட முன் மாதிரிகள் ஏராளமாய்க் காணப்பட முடியும். விளக்கப்படும் சத்தியம் ஒரே மாதிரியானதாகவே இருக்கும். தொடக்கத்தில் தேவனைப் பின்பற்றிய இவர்கள் அனுபவித்ததை, காலங்களினூடே கணக்கற்ற இலட்சக்கணக் கானோர் கண்டறிந்துள்ளனர். தேவன் உண்மையாகவே மாபெரும் தைரிய மூட்டுபவராக இருக்கின்றார். அவர் நம்மை மேலே உயர்த்துகின்றார். அவர் நம்மை வழி நடத்துகின்றார். அவர் வாழ்க்கைக்கு அர்த்தத்தையும் தனிச் சிறப்பையும் கொடுக்கின்றார். அவர் நம்மை நித்திய ஜீவனுக்குக் கூட அழைக்கின்றார். தேவன் ஏவுதல் செய்கின்றவராய் இருக்கின்றார் என்பதற்கு எந்த விதமான கேள்வியும் இல்லை.*

## வேதாகமத்தில் அவரது ஏவுதல்

*தேவன் தம்முடைய ஏவுதலின் இயல்பை இரண்டாவது வழிமுறை யொன்றில் - நம்பகத் தன்மையில் அடிப்படையான அஸ்திபாரமாய் இருக்கின்ற வேத வசனங்களில் அவரது ஏவுதலில் - விளக்கப்படுத்துகின்றார். ஆபிரகாம், யோசுவா, எலியா, மரியாள், ஸ்தேவான் மற்றும் பலர் தேவனிடத்தில் நம்பிக்கை வைத்ததாலும், அவரது ஆணைப்படி செய்த தாலும் வெற்றிகரமான வாழ்வை வாழ முடிந்தது எப்படி என்பதை வேதாகமம் நமக்கு கூறுகின்றது. வேத வசனங்கள் உண்மையானவைகளாய் இருக்கின்றன என்ற உறுதிப்பாட்டை நாம் பெற்றிராதிருந்தால், இவை யாவும் "உண்மையான வரலாறுகள்" தான் என்பதை நாம் அறிந்திருக்க முடியாது. இருப்பினும், அந்த உறுதிப்பாட்டை நாம் பெற்றுள்ளோம்.*

*வேதாகமம் புதை பொருள் ஆராய்ச்சி மற்றும் வேதாகமம்*

எழுதப்பட்ட காலத்திற்குச் சம காலத்தில் இருந்த பழங்கால எழுத்துக்கள் ஆகியவை வேதாகம வரலாற்றின் முறையான முடிவுகளை நிலை நாட்டுவதில் நீண்ட அளவு உள்ளது போன்ற கிறிஸ்தவத்தின் ஆதாரங்களின் களமானது மிகப் பரந்ததாக உள்ளது.[2] இந்த ஆதார மூலங்களைப் படிப்பது என்பது வேதாகமத்தைப் பற்றிய உயர்தரக் கண்ணோட்டத்தை அளிப்பதில் பயனுள்ளதாக இருக்க முடியும். ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றத்திற்காக நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்கின்றோம். இந்த ஆதாரங்கள் வேதாமத்தின் மீது நமக்குள்ள நம்பிக்கையை உயர்த்தியிருக்கையில், அவைகளின் வரலாற்று ரீதியான மிகச் சரியான தன்மை பற்றிய நமது அறிவை அவை தாங்கி நிற்பதால் அப்படிச் செய்கின்றன (நம்பிக்கையை உயர்த்துகின்றன). வேதாகமம் தேவனால் ஏவப்பட்ட வசனம் என்ற அதன் உரிமைகோருதலின்படியானதாக உள்ளதென்றால், அது (வேதாகமம்) மிகச் சரியானதாகவே இருக்க வேண்டும். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; ... அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர் திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16, 17) என்று நாம் வாசிக்கின்றோம்.

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்ற சொற்றொடரை நாம் கிரேக்க மொழியில் நோக்குகையில் (*pase graphe theopneustos*) பல்வகை மொழிபெயர்ப்புக்களினால் பொருள் தெளிவின்மை ஏற்படுகின்றது.[3] இது, தேவனால் சுவாசிக்கப்பட்டது என்ற அர்த்தம் கொண்ட *theopneustos* என்ற கிரேக்க வார்த்தையானது *ivinitus inspirata* என்ற இலத்தீன் வார்த்தையின் வழியாக மொழிபெயர்க்கப் பட்டதால், "தேவனால் ஏவப்பட்டது" (God-inspired) என்று ஆகின்றது. இந்த செயல்முறையில், "தேவன் வெளியிட்ட சுவாசம்" என்பது அதன் தலை திருப்பப்பட்டு "தேவன் உள்ளிழுத்த சுவாசம்" என்று அர்த்தப்படுத்த மாற்றப்பட்டது. 2 தீமோ. 3:16ல் பவுல், வேத வாக்கியங்கள் யாவும் தேவனுடைய தெய்வீக வல்லமையின் விளைவாக உள்ளன மற்றும் அவை எடுத்துரைக்கும் வழிமுறைகள் நமக்குப் பிரயோஜனமுள்ளவைகளாய் இருக்கின்றன என்று வலியுறுத்தினார். உண்மையில் அவருடைய (தேவனுடைய) "வெளியிட்ட சுவாசம்" என்ற வழிமுறையின் மூலம் தேவனுடைய சிருஷ்டிப்பு வல்லமை என்ற மிகப் பெரும் ஆய்வுப் பொருளானது வேதாகமத்தில் மற்ற இடத்தில் காணப்படுகின்றது. தேவனுடைய மனிதப் படைப்புச் செயலை நாம் படிக்கையில் இது செயல் விளக்கப்படுத்தப் படுவதை நாம் கண்டோம். நாம் அவரது படைப்புச் செயலின் மகிழ்வூட்டும் சித்தரிப்பானது சங். 33:6ல் விவரிக்கப்பட்டதைக் காண்கின்றோம்: "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது." இவ்விதமாக, "தேவன் வெளியிட்ட சுவாசம்" என்பது அவருடைய நோக்கம் நிறைவேறுவதற்காக அவர் ஊற்றிய அவரது வல்லமை என்பதை விவரிக்கும் ஒரு வழி முறையாக இருப்பதை நாம் காண்கின்றோம். ஜீவனைக் கொடுப்பதோ, அண்டத்தைப் படைப்பதோ, அல்லது அவருடைய வார்த்தையை/வசனத்தை எழுதுவதோ

*எது அவருடைய நோக்கமாயிருந்தாலும் இதுவே விஷயமாயுள்ளது. "தேவனுடைய சுவாசத்தினால்" சிருஷ்டிப்பு வந்தது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாகவே அவரது "சுவாசத்தினாலேயே" வேதாகமமும் வந்தது. இவ்விரண்டுமே அவரது வல்லமை மற்றும் கிரியை ஆகியவற்றினால் உண்டானவையாகும்.*

*வேதாகமத்தின் வரலாற்றுப் பூர்வமான மிகச் சரியான தன்மையைச் சுட்டிக்காட்டுகின்ற கிறிஸ்தவத்தின் ஆதாரங்களுக்கு நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்கையில், தேவனுடைய வசனத்தின்மீது நாம் கொள்கின்ற மதிப்பு மற்றும் அன்பு ஆகியவை பெருமளவும் விசுவாசத்தைச் சார்ந்த விஷயமாய் உள்ளது. எழுதப்பட்டுள்ள தேவ வசனத்திற்கு நாம் திரும்பும் பொழுது, நமது விசுவாசம் அங்கிருந்தே உண்டாக்கப்படுவதைக் காண்கின்றோம். புதை பொருள் ஆராய்ச்சியிலிருந்தோ அல்லது வேறு எந்த அறிவியலில் இருந்தோ இது உண்டாக்கப்படுவதில்லை (ரோமர் 10:15-17). எழுதப்பட்டுள்ள தேவ வார்த்தையின் வல்லமையானது விசுவாசத்தை உண்டாக்கும், விசுவாசத்தைக் காக்கும் வல்லமையுடையதாக இருக்கின்றது. நாம் வேறெங்கும் அனுபவித்திருக்கக் கூடியதைக் காட்டிலும் மிகப் பெரிய உள்ளான வல்லமை வேதாகமத்தில் இருப்பதை நாம் காண்கின்றோம்! கொந்தளிக்கும் புயல், பூமியதிர்ச்சிகள், உயர்ந்த அலைகள், காட்டுத் தீ முதலியவற்றைப் பற்றி நாம் அறிகின்றோம். வேத வசனங்களில் நாம், மனிதருடைய வாழ்வை மாற்றி, இரட்சிக்கக் கூடிய அளவு பெலமுடைய ஒரு வல்லமையை காண்கின்றோம்! இங்கு குறிப்பிடப்பட்ட அழிக்கும் சக்திகளைக் காட்டிலும், பாவத்தின் பேரழிவு வல்லமையைக் காட்டிலும், பிறப்பிலிருந்தே நாம் யாவரும் எதிர்கொள்ளுகின்ற மரணத்தைக் காட்டிலும் இந்த ஆதார மூலமானது அதிகம் வல்லமை யுள்ளதாக இருக்கின்றது.*

*இந்த வல்லமையானது நம்மை விடுதலையாக்க முடியும் (யோவா. 8:32). சங்கீதக்காரர், "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங். 119:105) என்று கூறினார். அப்போஸ்தலரான யோவான் இயேசுவைப் பற்றி, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா. 1:14) என்று கூறினார். வேதாகமத்தில் அவரது வார்த்தை பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது. அவர் ஒருவர் மூலமாகவே நாம் இல்லத்திற்குத் திரும்பவும் வழி நடத்தப்படுகின்றோம் என்று நாம் அவரைக் காண்கின்றோம் (யோவா. 14:1-6). ஏவுதல் பெற்ற மனிதர்களால் எழுதப்பட்ட வேதாகமத்தில், நாம் எப்பொழுதும் அறியக் கூடியவர் களிலேயே மிகவும் அதிகமாக ஏவுதல் பெற்ற நபரை நாம் சந்திக்கின்றோம். அவர், "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன்" (யோவா. 10:10ஆ) என்று கூறினார். ஒன்றைக் காட்டிலும் அதிகமான வழிமுறைகளில் நமது தேவன் உண்மையாகவே ஏவுதல் செய்கின்றவராக இருக்கின்றார்.*

*குறிப்புகள்*

[1]*Shmu'elஎன்பது "ஏல்(தேவன்)உடைய பெயர்" என்று அர்த்தப்படுகின்றது* (Francis Brown, S. R. Driver and Charles A. Briggs, *A Hebrew and English Lexicon of the Old Testament* [Oxford: Clarendon, 1958], 1028). [2]*"... கடந்த காலத்திற்கும் சுற்றிலுமுள்ள கலாச்சாரத்திற்கும் தொடர்பற்ற வகையில் வேதாகமமும் அதன் செய்தியும் உடனடியாக வெற்றிடத்தில் எழுந்தது என்று கூறுவதானது வேதாகமச் சிந்தனையின் ஏராளமான வளமைகளையும் வேதாகம கால உலகத்தையும் காணத் தவறும் செயலாகும். மற்றும், இது வேதாகமம் என்ன கூற வந்துள்ளது என்பதைத் தவறாகப் புரிந்து கொள்ளும் தீவிரமான இடர்ப்பாட்டிலும் இட்டுச் செல்லக் கூடியதாக உள்ளது. நித்திய தேவனின் காலமற்ற செய்தியானது சரியான காலத்தில் மனிதனுக்கு உரைக்கப்பட்டது ..."* (Harry Thomas Frank, *Bible Archaeology and Faith* [Nashville: Abingdon, 1976], 12). [3]The KJV, RSV, NAB, NEB, NIV can be consulted for comparison.

# நமது தேவன் அன்புகூருகின்றவராய் இருக்கின்றார்

*"நமது தேவன் ஒழுங்குணர்வு கொண்டவர்" என்ற பாடத்தில் நாம், தேவனுடைய மேன்மையான அல்லது அடிப்படையான பண்பாக இருப்பது பரிசுத்த தன்மையே, மற்றும் அவர் பரிசுத்தராய் இருப்பதால், நாமும் பரிசுத்தராய் இருப்பதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று கற்றோம். தேவனுடைய மற்ற எல்லாப் பண்புகளைப் போலவே இந்தப் பண்பும் அவரது தெய்வீக இயல்பின் பாகமாய் உள்ளது. இதை தேவனிடத்திலிருந்து தனிமைப்படுத்தி இதன் பூரணத்துவத்தில் சிந்தித்துப் பார்க்க முடியாது. இதுவே நமக்கான அவரது வெளிப்படுத்துதல்கள் யாவற்றுக்கும் அடிப்படையாக உள்ளது. அவர் பரிசுத்தராய் இருப்பதால் ஒழுக்க ரீதியாய்ச் செயல்படுவது அவரது இயல்பாக இருக்கின்றது.*

*அன்பு என்பது தேவனுடைய இன்னொரு அடிப்படைப் பண்பாக இருக்கின்றது. பரிசுத்தத்தைப் போலவே, அன்பும் கூட தேவனுக்குள் மட்டுமே பரிபூரணத்துவத்தில் காணப்பட முடியும். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவா. 4:8) என்று நாம் வாசிக்கும் அளவு அன்புகூருதல் என்பது தேவனுடைய இயல்பின் ஒரு பாகமாய் உள்ளது.*

## *அவரது அன்பு விவரிக்கப்படுகின்றது*

*தேவனுடைய பரிபூரணமான அன்பைப் பற்றிப் பேசுவதில் மனிதர்கள் இடர்ப்பாடு அடைந்துள்ளனர். பரிபூரணமான ஏதொன்றைப் பற்றியும் பேசுவதில் நமக்கு இடர்ப்பாடு உண்டாகின்றது. உண்மையில், பரிபூரணத்துவத்தினால் நாம் அடிக்கடி ஓரளவுக்கு வெட்கம் அடைகின்றோம். ஏனெனில் பரிபூரணத்துவத்தைப் பற்றி நாம் பேசும்பொழுதெல்லாம், நம்முடைய தனிப்பட்ட பூரணமற்ற தன்மைகளைப் பற்றி வேதனை நிறைந்த வகையில் அறிந்தவர்களாய் இருக்கின்றோம். இன்னொருவரின் வார்த்தைகள், செயல்கள் அல்லது நோக்கங்களை ஒருவர், ''நான் பரிசுத்தவான் அல்ல, ஆனாலும், ...'' என்ற தகுதிப்படுத்தும் விளக்கத்துடன் தாக்குவதை நாம் எவ்வளவாய் அடிக்கடி கேட்டிருக்கின்றோம்?*

*''ஒழுக்கக் கூறுகள்'' என்று வரும்பொழுது நாம் யாவரும் நமது*

வரையறைகளை உடையவர்களாய் இருக்கின்றோம். இது எப்பொழுதுமே உண்மையாய் இருந்துள்ளது. வரலாற்றின் ஓட்டம் முழுவதிலுமே ஒழுக்கங்கள் என்பது மிகவும் அக்கறைக்குரியதாக இருந்துள்ளது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கர்கள், ஞானம், தைரியம், தன்னடக்கம் மற்றும் நீதியான நடக்கை ஆகியவை நல்லொழுக்கங்களின் நான்கு முக்கியப் பகுதிகள் என்று நம்பினார்கள்.[1] கிறிஸ்தவ யுகத்தின் மத்திய காலங்களில், மேலே கூறப்பட்ட நான்கு ஒழுக்கங்களும் "இயற்கையான வைகளே" என்று கற்றறிந்தவர்கள் கண்டனர்; விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு ஆகியவை "இறையியல்" ஒழுக்கங்கள் என்று கருதப்பட்டன.

ஒழுக்கக் கூறு பற்றிய மேல் கண்ணோட்டத்தை வேதாகமம் அதிகம் உள்ளடக்கியதாக இருக்கின்றது. தாவீதின் ஏக்கம் நிறைந்த கதறுதலை நாம் எடுத்துரைக்க முடியும்: "தேவனே, சுத்த இருதயத்தை எனக்குள்ளே சிருஷ்டியும்." பேதுரு, "இயேசுவின் பாதத்தில் விழுந்து, 'ஆண்டவரே, நான் பாவியான மனுஷன், நீர் என்னை விட்டுப் போக வேண்டும்'" (லூக். 5:8) என்று கூறியதை நாம் எதிரொலிக்கலாம். கிறிஸ்தவப் பண்புகளை வலியுறுத்தும் புதிய ஏற்பாட்டின் இருபெரும் அட்டவணைகளில் நல்லொழுக்கக் கூறும் அன்பும் எவ்வளவு நெருக்கமாய் உறவு படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கவனியுங்கள்:

> கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ [prosphiles], நற்கீர்த்தியுள்வைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ [arete = நல்லொழுக்கம், ஒழுக்க மேன்மை], புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலி. 4:8).

> … நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய், உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், [arete = நல்லொழுக்கம், ஒழுக்க மேன்மை], தைரியத்தோடே [arete = நல்லொழுக்கம், ஒழுக்க மேன்மை] ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சைடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும் [philadelphia], சகோதர சிநேகத்தோடே [philadelphia] அன்பையும் (agape) கூட்டி வழங்குங்கள் (2 பேது. 1:5-7).

ஒழுக்கமும் அன்பும் இணைந்து இருக்க வேண்டும், நாம் அந்த மாபெரும் மாண்புமிக்க இணைவுடன் சேர்ந்திருக்க வேண்டும். இதுவே கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்கு அறைகூவலாய் உள்ளது.

போதுமானதாயில்லை என்ற பொதுவான நமது உணர்வானது இரு திசைகளில் இருந்து வருகின்றது: முதலாவது, "அன்பு" என்பது அர்த்தப் படுத்துவது என்ன என்பதுபற்றிய அறிவைப் பெரும்பாலும் இழந்து நிற்கின்ற உலகத்தில் நாம் வாழ்கின்றோம். நமது மொழியே நம்மைக் காட்டிக்கொடுக்கின்றது: "நான் ஐஸ்கிரீமை விரும்புகின்றேன்"; "நான் தேவனை நேசிக்கின்றேன்"; "நான் உன்னை அடைய வேண்டிய அளவுக்கு

*உன்னை நேசிக்கின்றேன்"; "மேலே உள்ள காணப்படாதவைகள் பற்றிய வரலாற்றைக் கூற நான் விரும்புகின்றேன்"; "நான் எனது மோட்டார் வாகனத்தை மிகவும் விரும்புகின்றேன்." இரண்டாவது, பொருட்கள் மற்றும் மக்களைப் பற்றிய நமது உறவு முறைமைகளில் "அன்பு" பற்றிய புரிந்து கொள்ளுதலில் நமக்குள்ள குறைபாட்டினால், தேவனுடைய அன்பின் மூலம் நாம் திகைப்படைகின்றோம். இந்த இரகசியமானது மாபெரும் சிறப்புக்குரியதாய் உள்ளது; ஆனால் மனிதத்துவ அளவில் நாம் அன்பின் அர்த்தத்தை இழந்திருக்கின்ற பொழுது, தேவனுடைய "அளவில்" அன்பினை நாம் புரிந்து கொள்ள முடியும் என்று எண்ணுவது எப்படி?*

*ஏங்க வைக்கும் இந்தக் கேள்வியைப் புரிந்து கொள்ள வழியொன்று உள்ளது, ஏனெனில் பவுல் பின்வருமாறு ஜெபித்தார்:*

> *... நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன் (எபே. 3:17-19).*

*இது நமது பக்கத்தில் மூன்று செயல்பாடுகளின் ஈடுபாட்டைக் கொண்டுள்ளது: ஜெபம், படிப்பு மற்றும் செயல்முறைப் படுத்துதல். ஜெபத்தில் நம்மை முழந்தாளிட அனுப்பாத தேவ அன்பைப் பற்றிய எந்த ஆராய்ச்சியும் தோல்வியில்தான் முடியும். வெற்றிகரமான நாடுதலுக்கு தாழ்மையான மற்றும் ஊக்கமான ஜெபம் அவசியமாய் உள்ளது. இருப்பினும் ஜெபம் மட்டுமே போதுமானதாய் இருப்பதில்லை.*

*தேவனுடைய அன்பைப் பற்றி நாம் நல்ல முறையில் புரிந்து கொள்ளுவதற்கு தேவனுடைய வசனத்தைப் படிப்பது அவசியமானதாக உள்ளது. நமக்குப் போதனையாக அவரது வசனம் எழுதப்பட்டுள்ளது (ரோமர் 15:4), மற்றும் நாம் தேவனுடைய வழியில் ஒளியூட்டப்படுவதற்கு அதைப் படிக்க வேண்டும் (2 தீமோ. 3:15). தேவனுடைய ஒழுக்க மேன்மை, சர்வ வல்லமை, எங்கும் நிறைந்திருக்கும் தன்மை, மற்றும் எல்லையற்ற அறிவு ஆகியவற்றை நாம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம். இந்த எல்லாப் பண்புகளின் எல்லையற்ற இயல்பானது தேவனுக்குள் இருப்பதை நாம் கவனித்திருக்கின்றோம். அன்பும் தேவனுக்குள் முடிவற்றதாக உள்ளது. அவரது அன்பு நித்தியமானது, என்றென்றும் உள்ளது என்று தேவனுடைய மக்கள் கூறியுள்ளனர் (1 இரா. 10:9; எரே. 31:3; ரோமர் 8:35-39).*

*தேவனுடைய அன்பின் நித்திய இயல்பானது ஒரு கேள்வியை எழுப்புகின்றது. மனிதர்களைப் படைப்பதற்கு முன் தேவன் யாரிடத்தில் அன்புகூர்ந்தார்? நம்மை நாம் காண்கின்ற இந்தச் சிறு உறையான காலத்திற்கு முன், நித்தியத்துவம் இருந்தது - அங்கு தேவன் இருந்தார் (ஏசா. 57:15). நமக்கு முன்பாக உள்ள இந்தக் கேள்வியானது பொருத்தமுடையது, இதற்கான பதில் தீர்வுக்குரியது. அன்பின் குறிக்கோள்*

ஒன்றை மறைமுகமாய் உணர்த்துவதால் அவசியமாகவே இந்தக் கேள்வி பொருத்தமுடையதாக உள்ளது. தேவத்துவத்தின் நபர்களை உட்படுத்து வதால் இதற்கான பதில் மிகவும் முக்கியமானதாக உள்ளது. சிருஷ்டிப்புக்கு முன்பே தேவனுடைய முழுமையான/பரிபூரணமான அன்பு இருந்ததால், இந்த அன்பானது பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரிடையில் தாராளமாய்ப் பெருக்கெடுத்த சுய செய்தித் தொடர்பாகும் என்று நாம் முடிவு செய்கின்றோம். இயேசு பிதாவினிடத்தில் ஜெபிக்கையில் "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடி" (யோவா. 17:24அ) என்று கூறி, இதை விளக்கப் படுத்தினார். பிறகு இந்த அண்டத்தைச் சார்ந்திராத வகையில் தேவன் தம்முடனேயே முழுமையான செய்தித் தொடர்பு கொண்டார், முழுமை யாகத் தமக்கு பக்தி செலுத்தினர், முழுமையாகத் தம்மைக் கொடுத்தார்.

இந்த முழுமையான கருத்தறிவில் இது தேவனுடைய அச்ச மூட்டும் அன்பாக உள்ளது. முழு நிறைவான ஒத்திசைவு, முடிவில்லாத சமாதானம், உயர் புனிதமான சுயசித்தம், கலக்கமற்ற மாறாத் தன்மை,[2] மற்றும் பரிசுத்தமான ஆசீர்வாதத் தன்மை ஆகியவை பரிசுத்த திரித்துவத்தினுள் சந்தர்ப்பப் பொருளாக நிலவுகின்றன. இது தேவனுடைய முழுமையான அன்பாக இருக்கின்றது; அவருடைய அன்பின் இலக்கானது அவருக்குள்ளேயே இருக்கின்றது.

## அவரது அன்பு வழங்கப்பட்டது

தேவன் தமது மாபெரும் அன்பைத் தமக்குள்ளாகவே காத்துக் கொண்டிருப்பது இல்லை; அது செல்லத் தக்கதாகவும் இருக்கின்றது. அதாவது அவரது அன்பின் குறிக்கோளானது அவருக்குப் புறம்பே அமைந்திருக்க முடியும். ஜீவனுள்ள தேவன் நமக்கு ஜீவனை அருளிச் செய்தது போலவே, முழு நிறைவான தேவன் நமக்கு சத்தியத்தை அருளிச் செய்தது போலவே, அன்புகூரும் தேவன் தம்மையே நமக்கு அருளிச் செய்தார்! நமக்காக தேவனிடமிருந்து வெளிப் பொங்கும் அன்பை நாம் அறிந்துணரும் பொழுது, அது நாம் நமது மனிதர்களிடம் பெற்றுப் பழக்கப்பட்டுள்ள அன்பின் வகையைச் சேர்ந்ததல்ல என்று உணருகின் றோம். தேவனுடைய பயங்கர வல்லமை, ஊடுருவிப்பாயும் அறிவு, மற்றும் நெருங்கிய பிரசன்னம் ஆகியவற்றை எண்ணுகையில் நாம் தொல்லை நீங்கியவர்களாய் இருக்கலாம் - ஏனென்றால் இந்தப் பண்புகள் யாவும் அவரது பரிசுத்தம், தூய்மை, ஒழுக்கப் பண்பு, மற்றும் "ஒழுக்க நெறி" ஆகியவற்றின் குடையின் கீழ் செயல்படுவதாய் உள்ளதென்ற நிச்சயம் நமக்கு உண்டு. தேவன் நம் மீது அன்புகூருகின்றார் என்பதை உணருத லானது நம்மை இளைப்பாறச் செய்ய முடியும் ஏனென்றால் தேவனுடைய அன்புகூருதலில் அவரது பரிசுத்த தன்மையின் விளக்கம்/வெளிப்பாடு உள்ளதென்று நாம் கூறுவோம்.

இப்படிப்பட்ட அன்புகூரும் ஒரு தேவனை நாம் பெற்றுள்ளோம் என்பதை அறிவதில் நாம் ஆழமாய் அசைக்கப்படுகின்றோம் மற்றும்

உண்மையாகவே நன்றி நிறைந்தவர்களாய் இருக்கின்றோம். இருப்பினும், அவர் நம் மீது கொண்டுள்ள அன்பிற்கும், நாம் அவர் மீது கொண்டுள்ள அன்பிற்கும் இடையே உள்ள மாபெரும் இடைவெளியினால் நாம் இன்னமும் குழப்பம் அடையலாம். ஜெபத்தைப் பற்றி இயேசுவின் சீஷர்கள் உணர்ந்தது போல நாம் அவரது அன்பைப் பற்றி உணரலாம். ஒரு வேளையில், இயேசு ஜெபம் செய்து முடித்திருந்த பின், அவரது சீஷர்களில் ஒருவர், "ஆண்டவரே, எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத் தாரும்" (லூக். 11:1ஆ) என்று கேட்டுக் கொண்டார். நாம் தேவனுடைய அன்பை அரவணைத்துக் கொள்வதற்கு, உலக சிந்தை அமைவினை உடைத்தெறிய வேண்டும். அன்பிற்கான அவரது உடன்படிக்கைத் தொடக்கத்திற்கு நாம் பதில்செயல் செய்ய வேண்டுமென்று விரும்பினால் தேவனுடன் சிந்தைகளில் நாம் கூட வேண்டும்.

முதலாவது நாம், "கிறிஸ்தவக் கருத்துணர்வில் அன்பு என்பது உணர்வு என்று அர்த்தப்படுவதில்லை. இது உணர்வுகளின் நிலைப்பாடு அல்ல ஆனால் சித்தத்தின் நிலைப்பாடாக உள்ளது: ..."[3] என்பதை நாம் உணர வேண்டும். அன்பு என்பதை உணர்வுத் தன்மைகளுடன் சமானப்படுத்தும் ஒரு சமூகத்தினால் வளமூட்டப்பட்ட பிறகு நாம் மேற்சொன்ன கருத்தை அதிர்ச்சிக்குரியதாகக் காணலாம். அன்பு என்றால் ஒருவேளை 90 சதவிகிதம் பாலியல் உறவுரீதியானதுதான் என்று நம்புகின்ற சமூகமானது தேவனுடைய அன்பைப் புரிந்து கொள்ளுதல் அல்லது மதித்தல் ஆகியவற்றில் இருந்து வெகுதூரத்தில் உள்ளதாகும். Eros என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லையென்றாலும், eroticism என்ற காம விகாரத்தின் அபாயங்கள் வலியுறுத்தப்படுகின்றன (மத். 5:27-29; 1 கொரி. 6:18-20).

தேவனால் அங்கீகரிக்கப்பட்ட அன்பானது மேற் கூறியதைக் காட்டிலும் உயர்வான தரத்தில் விளக்கப்பட/வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது நிச்சயமாகும். திருமணத்தின் நிறுவுதல் என்பது மனித இனத்தைப் பலுகிப் பெருகச் செய்யவும், பகிர்ந்துகொள்ளும் பாலுறவு அன்பின் நெருங்கிய தன்மைக்காகவும் தேவன் பரிந்துரைக்கும் வழி முறையாக உள்ளது. தேவன் திட்டமிட்டபடியாக ஒரு திருமணம் செயல்படும்பொழுது, அது அவரால் உயர்வாக மதிக்கப்படுகின்றது, அது கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்கும் உள்ள உறவுக்கு ஒப்பிடப்படுகின்றது (எபே. 5:22-33).

நட்புறவு என்பது அன்பின் இன்னொரு அழகிய விளக்கமாக உள்ளது. உண்மையில், இயேசு "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவா. 15:13) என்று கூறினார். Philos என்ற பெயர்ச் சொல்லானது புதிய ஏற்பாட்டில் வழக்கமாக நட்புறவைச் சுட்டிக்காட்டுவதற்குப் பன்னிரெண்டு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 11:11; லூக். 12:4). Phileo என்ற வினைச் சொல்லும் கூட வேத வசனங்களில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது, இது நண்பர்களுக்கு அன்பு (யோவா. 11:3), இயேசுவுக்கு அன்பு (யோவா. 11:15ஆ) மற்றும் பெற்றோர் மீது அன்பு (மத்.

*10:37) ஆகியவற்றைக் காண்பிக்கின்றது.*

## அவரது அன்பு செயல்விளக்கப்பட்டது

*அன்பாகவே இருக்கின்ற (1 யோவா. 4:8) நமது தேவனால் அன்பின் உயர்ந்த அளவு காண்பிக்கப்படுகிறது. Agapao என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அன்பானது வாழ்வின் உயர்ந்த தளத்திற்கு நம்மை அழைக்கின்றது. இது பரலோகத்தைத் தனது ஆதார மூலமாகக் கொண்டுள்ளது மற்றும் அங்கு நம்மை அழைத்துச் செல்லும்படி இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு மனத் தோற்றம் அல்ல. இது ஒரு வெறும் செல்வாக்கல்ல. நமக்கான தேவனுடைய அன்பானது இன்றியமையாததாக, ஜீவனுள்ளதாக தரமானதாக உள்ளது.*

*வரலாற்றில் அந்த அன்பின் மாபெரும் செயல் விளக்கமாக உள்ளது தேவனுடைய மாபெரும் அளித்தல் - அவரது குமாரன் இயேசு கிறிஸ்துவே, இது* agape, *எல்லாம் தரும் அன்பு ஆக இருந்தது. "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16). இயேசுவை கொடுத்த இந்த அளிப்பானது பிதாவானவர் நம்மீது கொண்டுள்ள அன்பை மட்டுமின்றி, குமாரனானவர் பிதாவினிடத்தில் கொண்டிருந்த அன்பையும் நமக்குக் காண்பிக்கின்றது. கெத்செமெனேயில் இயேசு, தமது பிதாவின் சித்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று மாபெரும் மனத் துயருடன் ஜெபித்தார்; அவர் விருப்பத்துடனே தம்மையே கொடுத்தார். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பிதாவின் சித்தம் நிறைவேறுவதற்கு நம்மையே தாராளமாய்க் கொடுத்தலானது, பூமியில் அன்பின் மாபெரும் அளவாய் உள்ளது.*

> *நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்து கொள்ளுகிறோம். நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல (1 யோவா. 5:2, 3).*

---

*குறிப்புகள்*

[1]Plato *The Republic* 427E-29B. [2]"Immutability" *என்பது தேவனுடைய மாறாத இயல்பைக் குறிக்கின்றது.* [3]C. S. Lewis, *M*ere *Christianity* (New York: Macmillan Co., 1960), 115.

# பிரிவு IV:

# பிதாவாக தேவன்

*மாறுகின்ற ஒரு உலகத்தில் மாறாத ஒரு தேவனை மனிதர்கள் அறிவது எப்படி? சில வழிமுறைகளில் நவீன வளர்ச்சிகள் என்பவை நமது புரிந்து கொள்ளுதலை மேகம் போன்று மறைத்துள்ளன.*

*மிகவும் குறிப்பிடத் தக்க சில மாற்றங்களுடன், நமது காலத்தில் இருக்கின்ற பெண்ணிய வாத இயக்கமானது பல அநீதிகளைத் திருத்த உதவியுள்ளது, அதே வேளையில் தவறான பயன்பாடுகளையும் எழுப்பி யுள்ளது. வேதாகமப் படிப்புகளின் பகுதியில், பெண்ணிய வாதமானது விடுதலை இறையியலுடன் ஒன்று கலந்து, திகைப்புக்குரிய மற்றும் குழப்ப மூட்டுகின்ற "மொழிபெயர்ப்புகளை" வேதாகமத்தில் விளைவித்துள்ளது. உதாரணமாக,* NRSV *வேதாகமமானது மிக நுட்பமான ஒன்றாகும். இதன் மொழிபெயர்ப்பாளர்கள் வேதாகமத்தை தேவனுடைய வசனம் என்று உயர்ந்த கண்ணோக்கைக் கொண்டுள்ளனர் என்பது தெளிவு; இருந்த போதிலும் அவர்கள், "சகோதரத்துவத்தில் உள்ளவர்கள்"* (brethren) *அல்லது "சகோதரர்கள்" என்று அர்த்தப்படும் adelphoi என்ற கிரேக்க வார்த்தையை ''சகோதர சகோதரிகள்'' என்றே சீராக மொழிபெயர்த்துள்ளனர். மொழிபெயர்ப்புக்களில் adelphoi என்ற பொதுப்பால் சொற்றொடரானது "சகோதரிகளையும்" உள்ளடக்கிய சந்தர்ப்பப் பொருள் கொண்டுள்ளதால், இந்த மொழிபெயர்ப்பாளர்கள் வசனத்தில் "சகோதர சகோதரிகளே" என்று போட விரும்பியதும், அதே வேளையில் அடிக்குறிப்பில் அந்த கிரேக்க வசனப் பகுதியானது "சகோதரர்கள்" என்று அர்த்தப்படுவதாகக் கூறியதும் ஏன் என்று ஒருவர் ஆச்சரியப்படலாம். மொழிபெயர்ப்பானது, வசனப் பகுதி கூறுவதைச் சரியாக வசனப் பகுதியில் கூற விட்டு, அதன் பொழிப்புரையையும் விளக்கத்தையும் அடிக்குறிப்பில் இருக்க அனுமதிக்க கூடாதா?* NRSV*யின் முகவுரையில் ஒரு விளக்கவுரைப் பத்தியிருந்தாலும், மொழிபெயர்ப்பாளர்கள் வேதாகமப் படிப்புகளின் சூழ்நிலைக்குச் சாய்ந்து, ஒரு கறை ஏற்படுத்தினார்கள் என்றே எனக்குக் காணப்படுகின்றது, மற்றபடி இது ஒரு உன்னதமான செயலாகும்.*

*"பால் சொற்கள்" என்பவை பிதாவாக தேவன் என்பதைக் குறித்து எந்த ஒரு ஆய்வுரை/கலந்துரையாடலுக்கும் உள்ளடக்கப்பட வேண்டிய ஒரு தலைப்பாக ஆயிற்று என்ற உண்மையை வாசகர்களுக்குக் கூறி எச்சரிக்கை செய்வதற்காகவே இந்த விமர்சனங்கள் ஏற்படுத்தப்பட்டன. கடந்த காலங்களில் இது ஒரு அவசியமான பிரச்சனையாய் இருந்ததில்லை. இப்பொழுது, தேவனுக்கு "பிதா" என்ற வார்த்தை மட்டுமே பயன்படுத்தப் படுவதை மறுத்தும், மற்ற "பால் சொற்களும்" அவசியமாகின்றது என்று*

*வலியுறுத்தியும் விடுதலை இறையியலாளர்கள் மற்றும் பெண்ணிய இயக்கத்தினர் ஆகியோர் ஒரு பரபரப்பை எழுப்பியுள்ளதால், இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்வதற்கான காலம் வந்துள்ளது.*[1]

*இந்த ஆலோசனைகளை மனதில் கொண்டு, நாம் தேவனை "பிதாவாக" இப்பொழுது நோக்கி, அவரது பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவருடனான இந்த உறவுமுறையை அரவணைப்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கின்றது என்பதைக் காண்போம்.*

---

*குறிப்பு*

[1]*இந்த பிரச்சனையின் தீவிரத்தை ஒருவர் சந்தேகித்தால், அவர்* National Council of Churches *என்ற குழுமத்தின் ஆதரவில் வெளியிடப்பட்ட* The Enclusive Language Lectionary *என்ற புத்தகத்தை வாசிப்பது அவசியமாகும். மேலும்,* Barry Hoberman *அவர்களின்,* "Translating the Bible" *என்ற கட்டுரையையும் The Atlantic Monthly* 255 (February 1985): *என்ற பத்திரிக்கையில் 43-58 பக்கங்களையும், விசேஷமாக பக். 56-58ஐக் காணவும்.*

# தேவன் நம்முடைய பிதாவாக இருப்பது எப்படி?

*தேவனுடைய மிக முக்கியமான சாராம்சமே* pneuma *என்பதாக உள்ளது, இதன் அர்த்தம் "ஆவி" என்பதாகும். "ஆவி" என்பது கிரேக்க மொழியில் பால்வேறுபாடற்ற சொல் ஆகும், இது அச்சொல்லானது ஆணையோ அல்லது பெண்ணையோ வெளிப்படையாகக் குறிப்பதில்லை என்று அர்த்தப்படுகின்றது. நாம், "pneumatiயில் அல்லது 'ஆவியில்' (பால்வேறுபாடின்றி) தொழுது கொள்ள வேண்டும்" என்று இயேசு கூறினார் (யோவா. 4:24). இது ஞானஸ்நானம் பெற்றவர்களைப் பற்றிய பவுலின் மாபெரும் உறுதிப்பாட்டை நமக்கு நினைவூட்டுகின்றது: "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்ல, அடிமையென்றும் சுயாதீனனென்று மில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:28).*

*பால் வேறுபாட்டை - அதாவது ஆண் மற்றும் பெண் என்பதை - உள்ளடக்காமல் பால் பற்றிப் பேசுவது என்பது சற்று வினோதமாகக் காணப்படலாம். இருப்பினும், கிரேக்க மொழி உட்பட பல மொழிகளில் இது பொதுவானதாகவே இருக்கின்றது.*

*பிறகு எப்படி நாம் தேவனை நம்முடைய பிதா என்று குறிப்பிடு கின்றோம்? இதற்கான பதிலானது இரு எண்ண மூலங்களில் உள்ளது.*

## நித்தியமான ஒரு பிதா

*நாம், தேவத்துவத்தினுள் இருக்கின்ற உள்ளான உறவுகளுக்கு நேரடியாகச் செல்லுகின்றோம். இவ்விடத்தில் தேவனுடைய இன்றியமை யாத இயல்பில் நாம் நமது கேள்விக்கு ஒரு பதிலைக் காண்கின்றோம். அவர் ஆவியைச் சாராம்சமாய்க் கொண்ட, மூன்று பேர் இணைந்த தேவனாக இருக்கின்றார், நித்தியமான தேவன், நித்தியமான பிதாவாகவும், நித்திய மான குமாரனாகவும், நித்தியமான ஆவியானவராகவும் இருக்கின்றனர். ஆகையால், தேவன் முதலாவதாக ஒரு பிதாவாகப் பேசப்படுகின்றார், ஏனென்றால் அவர் ஒரு பிதாவாக, தமது "ஒரே பேறான குமாரனுடன்" (யோவா. 3:16) நித்தியமான உறவுமுறை கொண்டுள்ளார். எப்பொழுதுமே, பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் ஆவியானவராகிய தேவன் இருந்துள்ளனர். குமாரனாகிய தேவன் படைக்கப்பட்டவரல்ல. ஆவியானவராகிய தேவன், பிதாவாகிய தேவனிடத்திலிருந்து புறப்படுகின் றவராகவும், குமாரனாகிய தேவனால் அனுப்பப்படுகின்றவராகவும்*

இருக்கின்றார் (யோவா. 15:26).

ஒரு பின் சந்ததியைப் "படைத்து - உற்பத்தி செய்ய" பெண் இணை ஒன்று நித்தியத்தில் தேவனுக்கு "தேவைப்பட்ட" சந்தர்ப்பம் என்று ஒன்று எப்பொழுதும் இருந்ததில்லை என்பதையே இது அர்த்தப்படுத்துகின்றது. இப்படிப்பட்ட ஒழுங்கற்ற கருத்துக்கள், பல தெய்வ வணக்கவியலிலும் மற்றும் புராணக் கதைகளிலும் வேர் கொண்டுள்ளன.[1] கானானியர்கள் மத்தியில் இனவிருத்திக்கென்றுள்ள கடவுள்களாகக் கருதப்பட்ட ஆண் மற்றும் பெண் தெய்வச் சிலைகள் பழைய ஏற்பாட்டில் பழித்துரைக்கப் பட்டு சட்டத்திற்கு விரோதமாக தாக்கப்பட்டுள்ளன.[2]

பிறகு, தேவனை பிதாவாகக் குறிப்பிடுதல் எவ்விதம் சாத்தியமாய் உள்ளது? அவர் தேவத்துவத்தின் ஆவிக்குரிய இயல்பில் நித்திய பிதாவாக இருப்பதால் நாம் அவ்விதம் செய்கின்றோம். சாராம்சத்தில் அவர் ஆவியாகவும், நபர்த்துவத்தில் அவர் பிதாவாகவும் இருக்கின்றார்.

## சிருஷ்டிக்கும் ஒரு பிதா

தேவனுடைய பிதாத்துவத்தைப் பற்றிய கேள்வியை பரிசீலனை செய்ய நாம் எடுக்கும் இரண்டாவது இலக்கானது தேவத்துவத்தின் உள்ளான இயல்புக்கு வெளியே செல்லுகின்றது. நாம் தொடர்ந்து செயல்படுகையில், திரித்துவத்தில் தனிப்பட்ட நபர்கள் காணப்பட்டாலும், அவர்கள் செய்துள்ள அல்லது செய்து கொண்டிருக்கும் செயல்களில் அவர்களின் ஒருமைப்பாடு காணப்படுகின்றது என்பதை மனதில் கொண்டிருக்க வேண்டும். இந்தக் கருத்தைத் தெளிவு படுத்துவதற்கு மூன்று உதாரணங்கள் உதவுகின்றன. சிருஷ்டித்தல் என்பது முதலாவது உதாரணமாக உள்ளது (ஆதி. 1:1, 2; யோவா. 1:1-3; எபி. 1:1-3அ). அது தேவனுடைய முழுமைத்துவத்தின் - திரித்துவத்தின் - செயலாக உள்ளது. வெளிப்படுத்துதல் என்பது இரண்டாவது உதாரணமாக உள்ளது (கலா. 1:12; எபே. 3:2-6). அதுவும் கூட தேவனுடைய முழுமைத்துவத்தின் - திரித்துவத்தின் - செயலாக உள்ளது. பாவநிவாரணம் என்பது மூன்றாவது உதாரணமாக உள்ளது. இது தேவனுடைய முழுமைத்துவத்தின்/ திரித்துவத்தின் - செயல் இங்கும் காணப்படுகின்றது (எபி. 9:14; 10:3-10).

இன்னும் அதிக உதாரணங்கள் குறிப்பிடக் கூடியதாக இருக்கையில், இவைகள் தேவன் தமது எல்லா செயல்களிலும் "முற்றிலுமாக" ஈடுபட்டார் என்று விளக்கப்படுத்தப் போதுமானவைகளாய் உள்ளன. சிருஷ்டிப்பு, வெளிப்படுத்துதல் மற்றும் பாவநிவாரணம் ஆகியவற்றில் பிதாவாகிய தேவன் மட்டுமே தனித்து ஈடுபட்டிருந்ததில்லை, இந்தச் செயல்களில் இந்த நபர்களின் பணிப் பொறுப்புக்களுடைய தனிப்பட்ட தன்மையானது அவர்களின் செயல்களினுடைய ஒருமைப்பாட்டை ஒன்றுமற்றதாக்கு வதில்லை, மாறாக அதை உயர்த்துகின்றன. உதாரணமாக, இரட்சிப்பின் முற்றான திட்டத்தில், பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவனை உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கும்படி அனுப்பினார். இருப்பினும், பிதாவாகிய தேவன் சிலுவையில் மரிக்கவில்லை; அல்லது

அவர் சிலுவையில் பாடுபடவில்லை. பிதாவாகிய தேவன் குமாரனாகிய தேவனை நமக்காக மரிக்கும்படி அனுப்பினார். குமாரனுடைய அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவருக்குச் சகல அதிகாரமும் வல்லமையும் கொடுத்த பிதா அவரை(குமாரனை)த் தமது வலது பாரிசத்திற்கு உயர்த்தினார் (மத். 28:18; யோவா. 3:16; அப். 2:23-33). தேவத்துவத்தின் இயல்பின் "உள்ளாக"வும், தேவத்துவத்தின் செயல்களில் "புறம்பாகவும்" நோக்கியபின் பிதாவாகிய தேவனைப் பற்றி நாம் என்ன முடிவு செய்கின்றோம்? அவர் பால்வகைத் தன்மையினாலோ அல்லது ஆண் தன்மையினாலோ நித்திய பிதாவாக இருப்பதில்லை, ஆனால் தெய்வீக இயல்பினாலேயே நித்திய பிதாவாக இருக்கின்றார். அவருடைய சிருஷ்டிப்புச் செயலானது முற்றிலும் பிதாவாகிய தேவனுடைய செயலாய் மட்டும் இராமல், தேவனுடைய முழுமைத்துவத்தின் செயலாக உள்ளது. எனவே ஏற்புடைமை - பங்கேற்றல் - என்பதினால் அவர் மனிதத்துவத்தின் விஷயங்கள் மற்றும் அடைவிடம் ஆகியவற்றில் தனிச் சிறந்த பணிப் பொறுப்பை ஏற்றுள்ளதை நாம் காண்கின்றோம்.

இந்த வெளிச்சத்தில், தேவனுக்கு "பிதா" என்ற சொற்றொடரானது பழங்காலத்தில் இருந்தவர்கள் இராணுவ வெறி கொண்டவர்களாய் இருந்தார்கள் என்பதற்குச் சான்றாயிருப்பதில்லை என்பது தெளிவு.[3] நாம் முன்பே கூறியபடி, விக்கிரகாராதனையும் பல தெய்வ வணக்கமும் கொண்டிருந்த சமூகங்கள் வழக்கமாகத் தங்கள் தெய்வங்களை ஆண்கள் மற்றும் பெண்களாகவே அறிந்துணர்ந்திருந்தனர். அவர்களின் இனப் பழக்கங்களில் பெரும்பான்மையானவை இல்லாவிட்டாலும் பல வழக்கங்கள் இனவிருத்திச் சடங்குகளாகவே இருந்தன. ஆண் தெய்வங்களும் அவைகளின் துணைகளும் காட்டுத்தனமான உணர்ச்சி வேகத்தில் கும்மாளமிட்டன. பழைய ஏற்பாடு மறுபடி மறுபடி காண்பிக்கின்றபடி, இந்தச் சடங்காச்சாரங்கள் இஸ்ரவேல் மக்களை அவ்வப்போது ஈர்த்து இழுத்தன. அவர்கள் தங்களைச் சுற்றியிருந்தவர்களிடம் கவனித்திருந்த தெளிவான வெளிக்காட்டுதல்களுடன் ஒப்பிடுகையில் அவர்களின் (இஸ்ரவேலர்களின்) தேவன் காணப்படாதவராகவும் கண்டிப்பானவராகவும் இருந்தார்.

ஆகையால், இஸ்ரவேலர்கள் தங்கள் தேவனை "பிதா" என்று அழைத்த பொழுது, அது எப்படியோ காலத்தின் போக்கை பிரதிபலித்தது என்று உரிமைகோருவது சரியானதாய் இருப்பதில்லை. அவர் ஒருவரே மெய்யான ஜீவனுள்ள தேவனாக இருக்கின்றார். "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்'' (உபா. 6:4). பல தெய்வக் கோட்பாடோ அல்லது தாய்த் தெய்வமோ இருந்ததில்லை. நியாயப் பிரமாணத்தினால் இந்தத் தடைகள் அவர்கள் மீது நிர்ப்பந்தம் செய்யப் பட்டன. மற்ற நாடுகளின் மத நடைமுறைகள் ஆண் தெய்வங்களையும் பெண் தெய்வங்களையும் குறிப்பிட்டன, ஆனால் இஸ்ரவேலரின் வெளிப் படுத்தப்பட்ட மதமானது அவ்வாறு குறிப்பிட்டதில்லை. உண்மையில், எபிரெய வேதாகமம் முழுவதிலும் ''பெண் தெய்வம்'' என்பதற்குத் தனியானதொரு வார்த்தைகூட இருந்ததில்லை.[4] "பிதாவுக்குரிய அமைவு

கள்" உள்ளதென்று உரிமைகோருதலானது, தேவனை "தாய்" என்று அழைப் பதற்குப் பதில் "தகப்பன்" என்று அழைத்தலில் முடிவதற்குக் காரண மாயிற்று, இது வேதாகம ரீதியிலான மற்றும் வேதாகம ரீதியில் இல்லாத ஏராளமான சாட்சியத்தை எதிர்ப்பதாக உள்ளது. இந்த உரிமை கோருதலானது தேவனுடைய உண்மையான வெளிப்படுத்துதல் என்ற வகையில் வேதவசனத்தின் சரியான தன்மையையும் மறுக்கின்றது. கர்த்தர் கற்பித்த ஜெபமானது "நமது பிதாவுக்கு" ஏறெடுக்கப்படுகின்றது என்ற அடிப்படையில் தொடராமல் நிறுத்தப்பட வேண்டும் என்று மக்கள் வாதிடுகையில், அது வேதாகமம் எழுதப்பட்ட காலங்களினுடைய தாயிராமல், நமது காலங்களின் கவலைக்குரிய ஒரு விளக்கமாய் உள்ளது.

## உலகளாவிய ஒரு பிதா

நித்திய திரித்துவத்தின் நபர்களினுடைய உறவுமுறையில் தேவன் பிதாவாக இருத்தல் பற்றி நாம் ஏற்கனவே பேசியுள்ளோம். இப்பொழுது, தேவனைப் பிதா என்ற வகையில் நாம் கருதுகையில், நாம் தேவன் தம்முடைய மக்களுக்குத் தந்த விரிவான வரலாற்றுப்பூர்வமான வெளிப்படுத்துதலான வேதாகமத்தைத் திரும்பிப் பார்க்கின்றோம். இங்கு நாம் தேவன் பிதாவென்று மூன்று மாறுபட்ட வழிமுறைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளார் என்பதை காண்கின்றோம். இவை யாவும் முக்கியமானவைகளாய் உள்ளன; இவை யாவும் தனிச் சிறப்புள்ளவை களாய் இருக்கின்றன.

தேவன் தமது சிருஷ்டித்தலின் வழி முறையினால் தேவன் உலகளாவிய பிதாவாய் இருக்கின்றார் என்பதை நாம் முதல் வழிமுறையில் கவனிக்கின்றோம். திரித்துவத்தின் மூன்று நபர்களுமே சிருஷ்டித்தலில் ஈடுபட்டனர் என்று நாம் கண்டுள்ளதால், சிருஷ்டிப்பில் பிதாவின் பணிப் பொறுப்பானது ஏற்றுக்கொள்ளத் தக்கவாறு வலியுறுத்தப்படுகின்றது என்று இப்பொழுது நமக்கு நினைவூட்டப்படுகின்றது. (அது போலவே, மீட்பின் வேலை முழுவதிலும் மூன்று நபர்களும் ஈடுபட்டனர், ஆனால் இரட்சகர் என்ற பணிப் பொறுப்பில் அவரது ஏற்புடைய தன்மையில் மட்டுமே நாம் தேவனுடைய குமாரன் இரட்சிப்பின் கிரயத்தைச் செலுத்தியதைக் காண் கின்றோம்.) தேவனுடைய சிருஷ்டிப்புடன் அவருக்குள்ள பிதா என்ற உறவுமுறையானது அவருடைய சிருஷ்டிக்கும் செயலால் எழுகின்றது. மனித இனமானது சிருஷ்டிப்பின் கிரீடமாகக் காணப்படுகின்றது, ஏனென்றால் தேவனுடைய சாயலும் தன்மையும் மனித இனத்தில்தான் ஊன்றப்பட்டுள்ளன (ஆதி. 1:26, 27).

தேவனுடைய சிருஷ்டித்தலின் பணியில் வெளிக்காட்டப்பட்ட வல்லமையானது அவரது சிருஷ்டிப்பு முழுவதற்கும் மேலான அவரது கர்த்தத்துவத்தை உறுதிப்படுத்துகின்றது. வேதாகமத்தின் பல வசனப் பகுதிகள் இந்த சிருஷ்டிகரான - பிதா மற்றும் வல்லமையுள்ள - கர்த்தர் என்ற இணைவைப் பிரதிபலிக்கின்றன. இவைகள் தேவனுக்கும் அவரது சிருஷ்டிப்புக்கும் இடையே உள்ள உலகளாவிய பிதாத்துவத்தின் நெருங்கிய

*உறவை ஆணித்தரமாய் எடுத்துரைக்கின்றன:*

> *தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவுகூருகின்றார்.*
> *... கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபிக்கிறார்; அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது (சங். 103:13, 14, 19).*

*தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் மீது ஆளுகை செலுத்துகையில் மனிதர்மீது கொண்டுள்ள தம் பரிவிரக்கத்தினால் பிதாவாய் இருக்கின்றார். தேவனுடைய உலகளாவிய பிதாத்துவமானது, அத்தேனே நகரின் எரோபேகஸின் கூட்டத்தில் பலதெய்வ வணக்க தத்துவவாதிகளிடத்தில் பவுல் ஆற்றிய உரையில் உணரப்பட்டது. அவர்களுடைய சொந்தக் கவிஞர்களில் ஒருவரே "நாம் அவருடைய சந்ததியாய் இருக்கின்றோம்" என்று கூறியதை அவர் (பவுல்) மேற்கோள் காட்டினார் (அப். 17:24-29, விசேஷமாய் 28ஐக் காணவும்). நாம் தேவனுடைய சந்ததியாரானால், அவர் நம்முடைய பிதாவாக இருக்கின்றார். இது எல்லா மக்களையும் குறிப்பதாக உள்ளது. இவ்விதமாக, சிருஷ்டித்தலினால் தேவன் ஒவ்வொருவருக்கும் உலகளாவிய பிதாவாக இருக்கின்றார்.*

*ஆதாமின் மரபைப் பற்றி வாசித்தல் என்பது ஆர்வத்திற்குரியதாக உள்ளது. "... தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவ சாயாலாக உண்டாக்கினார். அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களைச் சிருஷ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார்" (ஆதி. 5:1ஆ, 2). இருப்பினும், புதிய ஏற்பாட்டில் இந்தப் படைப்பைப்பற்றி விவரிக்கப் பயன்படுத்தப் பட்ட மொழிநடையானது "ஆதாமின் குமாரன், ஆதாம் தேவனால் உண்டானவன்" (லூக். 3:38ஈ) என்று இயேசுவின் (பின்னோக்கிய) வம்சாவழியின் நிறைவுக் கூற்றில் காணப்படுகின்றது. ஆதாமை (மனிதனை) தேவன் படைத்த செயலானது ஒரு "பிதாவின்" பணிப்பொறுப்பாகக் காணப்படுகின்றது. ஆதி மனிதனின் பிதா என்ற வகையில் அவர் மனித இனம் முழுவதற்கும் பிதாவாக உள்ளார்.*

## தேர்வு செய்வதற்குரிய ஒரு பிதா

*தேவன் தமது வாக்குத்தத்தம்/உடன்படிக்கையின் வழி முறையினால், தேர்வு செய்வதற்குரிய ஒரு பிதாவாகவும் இருக்கின்றார். மல்கியாவிலிருந்து வரும் வசனப் பகுதி யொன்று நமக்கு, சிருஷ்டிப்பினால் தேவன் உலகளாவிய பிதாவாயிருக்கிறார் என்பதிலிருந்து, வாக்குத்தத்தம்/உடன் படிக்கையினால் தேவன் தேர்வு செய்வதற்குரிய பிதாவாக இருக்கின்றார் என்ற சிந்தனையின் மாற்றுருவாக்கத்தைக் கொடுக்கின்றது. தேவன் மக்களுடன் தம்முடைய உடன்படிக்கையானது "ஜீவனும் சமாதானமும் உள்ளதாக" இருந்தது என்று கூறினார். மேலும் அவர், "நீங்கள் வழியில் இருந்து புறம்பே திரும்பி விட்டீர்கள்; ... நீங்கள் என்னுடைய வழியைக்*

காத்துக் கொள்ளுவதில்லை'' என்றும் கூறினார். பிறகு மல்கியா, உலகளாவிய சத்தியத்தின் அடிப்படையில் யூதர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். "நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்?''[5] (மல். 2:3-10). மேலான இரண்டு தத்துவங்களின்/கொள்கைகளின் அடிப்படையில் மல்கியா மக்களுடன் தர்க்கம் செய்தார்: தேவன் பிதாவாக உள்ளார், ஏனென்றால் அவரே சிருஷ்டித்தவர் ஆவார்; தேவன் இஸ்ரவேலின் பிதாவாக உள்ளார். ஏனென்றால் அவரது உடன்படிக்கை அவர்களுடன் இருந்தது.

வாக்குத்தத்தம்/உடன்படிக்கையின் வழிமுறையில் தேவன் தேர்வு செய்வதற்குரிய பிதாவாயிருத்தல் என்பது பழைய ஏற்பாட்டின் முக்கியமான ஆய்வுப் பொருளாக உள்ளது. முக்கியமான வளருதல் ஒன்று ஏற்படுவதை நாம் காண வேண்டும். சிருஷ்டித்தலின் வழிமுறையினால் உலகளாவிய பிதா என்ற வகையில், தேவன், பாவம் அவரிடத்தில் இருந்து மனிதனைப் பிரிக்காத வரையிலும் முழுமையான ஐக்கியம் கொண்டிருப்பதற்கு மனிதனுக்குப் போதுமான அடிப்படைக் காரணங்கள் உடையவராய் இருந்தார். நாம் கண்டுள்ளபடி, ஆதாம் தனது தூய்மையான நிலையில் "தேவனுடைய ஒரு குமாரனாக'' இருந்தான். மனிதன் பாவம் செய்த பொழுது அவன் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டான். அது முதல், வரலாறு முழுவதிலும், சிருஷ்டிப்பின் வழிமுறையின் மூலம் உலகளாவிய பிதா என்ற வகையில் தேவன் அவருடன் முழுமையான ஐக்கியம் கொள்வதற்குப் போதுமான அடிப்படைக் காரணங்களைப் பெற்றிருக்கவில்லை.

தேவனுடைய முதல் முயற்சியின் மூலமாக, ஆபிராம் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் (ஆதி. 12:1-3) மற்றும் உடன்படிக்கை (ஆதி. 17:1, 2) ஆகியவற்றினால் உற்சாக மூட்டப்பட்டு அவரைச் சேவிப்பதற்கு அழைக்கப்பட்டார். அவருடைய மகன் ஈசாக்கும் அவருடைய பேரன் யாக்கோபும் (இஸ்ரவேல்) அவ்விதமாகவே இருந்தனர் (ஆதி. 26:2-5; 35:9-12). தேவனுடைய இந்தச் செயல்கள் பிதாவாகிய தேவனுடைய செயலா? ஆம், நிச்சயமாக அப்படியே உள்ளது. தேவன் சீனாய் மலையில் தொடங்கி தாம் மக்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுப்பதற்கு முன்னரே, இஸ்ரவேலைத் தமது மூத்த குமாரன் என்று ஒப்புக் கொண்டிருந்தார் (யாத். 4:22). தேவனால் அழைக்கப்பட்ட மக்கள் உடன்படிக்கைக்கு தங்களின் உண்மைத் தன்மையின் அடிப்படையில் தாங்கள் மற்ற எல்லா மக்களிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததை அறிந்திருந்தார்கள் (யாத். 19:3-6).

காலங்கள் கடந்து செல்கையில், மக்கள் கானானுக்குள் நுழைந்தனர். அவர்கள் முன்னோடிகளாக நியாயாதிபதிகளைப் பெற்றிருந்தனர். கடைசியில், அரசத்துவம் நிலைநாட்டப்பட்டது. தாவீது, சாலொமோன் ஆகியோருடைய மின்னுகின்ற, பகட்டான மற்றும் வல்லமையான ஆளுகைகளின் நடுவிலும், தேவன் அவர்களுக்குத் தாம் பிதாவாயிருப்பதை

நினைவூட்டினார். தாவீதின் குமாரனைப் பற்றித் தேவன் தாவீதினிடத்தில், "... நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன் அவன் எனக்குக் குமாரனாயிருப்பான் ..." (2 சாமு. 7:12-14; 1 நாளா. 28:4-7ஐக் காணவும்) என்று கூறினார். தாவீதின் அரசத்துவத்தின் மகிமையான காலம் உடன்படிக்கை மற்றும் தேவனைத் தாவீது தமது பிதாவாக ஒப்புக் கொண்டது ஆகியவை பற்றி சங்கீதக்காரர் தேவனைப் புகழ்ந்து பாடினார். தேவன் தாவீதுடன் தமக்குள் உறவைப் பற்றிக் கூறியதை அவர் பதிவு செய்தார்: "அவன் என்னை நோக்கி, 'நீர் என் பிதா, என் தேவன், என் இரட்சிப்பின் கன்மலை'யென்று சொல்லுவான். நான் அவனை எனக்கு முதற் பேறானவனும் ... ஆக்குவேன்" (சங். 89:24-29).

தேவன் தாம் தெரிந்து கொண்ட மக்களுடன் பிதா/பிள்ளைகள் உறவு கொண்டிருந்ததை தீர்க்கதரிசிகளில் பலர் வலியுறுத்தினர். இது மக்கள் தங்கள் பிதாவாகிய தேவனுக்கு விசுவாசமற்றவர்களாய் இருந்தபொழுது கண்டனம் தெரிவிக்கும் சொற்றோடர்களாகவே அடிக்கடி பயன்படுத்தப் பட்டன. தேவன் அவர்களை விடுவிக்க பெர்சிய அரசனாகிய கோரேஸைப் பயன்படுத்தும் முறைபற்றி, ஒருமுறை அவர்கள் முறையீடு செய்து, கேள்வி யெழுப்பிய பொழுது, "தகப்பனை நோக்கி, 'ஏன் ஜநிப்பித்தாய்?' என்றும் தாயை நோக்கி: 'ஏன் பெற்றாய்?' என்றும் சொல்லுகிறவனுக்கு ஐயோ" (ஏசா. 45:9-11) என்பதே ஏசாயாவின் மூலமாக அவரது கூர்மையான பதிலாக இருந்தது. (இதே காரணத்திற்காக பவுல் இந்த வேதவசனங்களை ரோமர் 7:14-24ல் பயன்படுத்தியது ஆர்வம் மிக்கதொரு விஷயம் ஆகும்).

தேவன் தமது மக்களுக்குத் தேர்வு செய்வதற்குரிய பிதாவாய் இருக்கிறார் என்ற உறவு முறையானது அவரது பகுதியில் கர்த்தத் துவத்தையும், அவர்களது பகுதியில் ஊழியத்தையும் கொண்டது என்பதை இந்த வசனப் பகுதிகள் காண்பிக்கின்றன. தேவனுடைய மக்கள் விக்கிரகாராதனைக்காரர்கள் ஆன பொழுது தமது மக்களைப் பற்றிய தேவனின் தெளிவான விலகுதலை இது கொண்டு வருகின்றது. "கட்டையைப் பார்த்து, 'நீ என் தகப்பன்' என்றும்; கல்லைப் பார்த்து, 'நீ என்னைப் பெற்றாய்' என்றும்" (எரே. 2:26-28) அவர்கள் கூறிய பொழுது அது வெட்கக் கேடாக இருந்தது. அவரது சித்தத்திற்கு எதிரான அவர்களின் கலகமும் மற்றும் உண்மையற்ற தன்மையும் கனவீனமானதென்று பிதா என்ற வகையில் சேனைகளின் கர்த்தரால் விவரிக்கப்பட்டது, அவர்கள் தங்களின் எஜமானர் என்ற வகையில் அவரிடத்தில் பயந்திருந்ததில்லை (மல். 1:6).

தீர்க்கதரிசிகள், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்ற தங்களின் முன்னோர்களுக்கு மட்டுமே தேவன் தேவனாயிருந்தார் என்று முற்றாகக் கூறவில்லை. அவர் தாம் தேர்ந்து கொண்ட மக்களுக்கு எப்பொழுதுமே பிதாவாக, அவர்கள் சார்ந்திருக்கக் கூடிய ஜீவனுள்ள ஒரே தேவனாக இருக்கின்றார்: "தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர்; ஆபிரகாம் எங்களை அறியான், இஸ்ரவேலுக்கு நாங்கள் அறியப்பட்டவர்களுமல்ல; கர்த்தாவே, நீர் எங்கள் பிதாவும், எங்கள் மீட்பருமாயிருக்கிறீர்; இது பூர்வ கால முதல் உம்முடைய நாமம்" (ஏசா. 63:16). அவர்கள், "இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை

*உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை" (ஏசா. 64:8) என்று ஒத்துக் கொண்டார்கள்.*

*இஸ்ரவேலின் நிகழ்வு நிறைந்த வரலாற்றை பஞ்சம், கொள்ளை நோய், தண்டனை, கலகம், அடிமைத்தனம், விக்கிரகாராதனை, யுத்தம் முதலியவைகள் மிகவும் அடையாளப் படுத்தியிருந்த போதிலும், தேர்வு செய்வதற்குரிய பிதாவாகிய தேவன் தம்மை அவர்களின் பிதா என்று எப்பொழுதுமே ஒப்புக் கொண்டார் (எரே. 31:9ஈ). அவர் தமது வாக்குத்தத்தம்/உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராய் நிலைத்திருந்து, தமது அன்பான பிள்ளைகளுக்குத் தொடர்ந்து மன்னிப்பின் கரத்தை நீட்டினார். பழைய ஏற்பாட்டில் மிகவும் கிளர்வூட்டும் வேத வசனப் பகுதிகள் ஒன்று, வழி தப்பித்திரிந்த தமது பிள்ளைகளின்மேல் தேவன் கொண்டிருந்த கைம்மாறு கருதாத அன்பை விவரிக்கின்றது:*

> *இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன். அவர்கள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலகிப் போய்விட்டார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டினார்கள். நான் எப்பிராயீமைக் கைபிடித்து நடக்கப் பழக்கினேன்; ஆனாலும் நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று அறியாமற் போனார்கள். மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறு களால் நான் அவர்களை இழுத்தேன், அவர்கள் கழுத்துகளின் மேல் இருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப்போல் இருந்து, அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங் கொடுத்தேன் (ஓசி. 11:1-4).*

---

*குறிப்புகள்*

[1]Will Durant, *Our Oriental Heritage* (New York: Simon and Schuster, 1954), 60 ff,; Edith Hamilton, *Mythology* (New York: New American Library of World Literature [Mentor Book], 1959), 24-28.[2]*யாத். 20:1-6; உபா. 23:17; நியா. 10:6-10; 1 இரா. 11:4, 5, 33; 2 இரா. 21:3; 23:13. அஸ்தரோத் என்பது பாகால்களின் பெண் துணையாகவே அடிக்கடி கருதப்பட்டது.*[3]*அதாவது, தேவனை "பிதா" என்று குறிப்பிடுவதானது ஆண்கள், பெண்களைக் காட்டிலும் மேலானவர்கள் என்ற தப்பெண்ணம் கொண்ட நம்பிக்கைக்கு அடிப்படையாக இருந்ததில்லை.*[4]*ஆங்கில மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளில் 1 இரா. 11:5, 33ல்* "goddess"/*"தேவி" என்ற சொற்றொடர் உள்ளது, ஆனால் அஸ்தரோத் என்பது சீதோனியர்களின் பெண் தெய்வமாக (இறைவி/தேவி) இருந்ததால் இது அடையாளப்படுத்தும் சந்தர்ப்பப் பொருளினால் மட்டுமே அமைந்துள்ளது. எபிரெய மொழியில் இவ்விடத்தில் அஸ்தரோத்தை அடையாளப்படுத்த "அவர்களின் தேவர்(கள்)" என்று அர்த்தப்படும் elohe என்ற வார்த்தை மட்டுமே உள்ளது, அது எடுத்துக்காட்டாக ஆதி. 26:24ல் உள்ளது போல எபிரெயர்களின் தேவனைக் குறித்த பொழுது பயன்பட்ட வார்த்தையே ஆகும்.* [5]For further comments, see Robert C. Dentan, "Malachi," in *The Interpreter's Bible,* vol. 6, ed. George Arthur Buttrick (Nashville: Abingdon, 1956), 1134.

# நமது ஆவிக்குரிய தகப்பனாக தேவன்

தேவன் எவ்விதத்தில், *நித்திய* பிதாவாக, (தேவத்துவத்தில்) *உலகளாவிய* பிதாவாக (சிருஷ்டிப்பில்) மற்றும் *தேர்வு செய்வதற்குரிய* பிதாவாக (அவரது வாக்குத்தத்தத்தில்/உடன்படிக்கையில்) காணப்படலாம் என்பதை ஆராய்ந்திருக்கின்றோம். இப்பொழுது *ஆவிக்குரிய* பிதாவாக தேவனுடைய செயல்பற்றிய ஒரு பாடத்தை நாம் தொடங்குவோம்.

## *பிரிதலின் பிரச்சனை*

உலகளாவிய தகப்பன் என்ற வகையில் தேவன் மனிதருடன் முழு ஐக்கியம் கொண்டிருந்தார். பாவமானது அந்த உறவு முறையைப் பாழாக்கிப் போடும் வரையிலும் அவர் இவ்விதமாய் முழு ஐக்கியம் கொண்டிருந்தார். தோட்டத்தை விட்டும் ஜீவ விருட்சத்தை விட்டும் ஆதாமையும் ஏவாளையும் வெளியே அனுப்பியபொழுது தேவன் மேம்போக்காகச் செயல்படவில்லை. தேவனுடைய இயல்பு மற்றும் அவர்களின் (ஆதாம் ஏவாள் ஆகியோரின்) பாவம் நிறைந்த நிலை ஆகியவற்றினாலேயே பிரிதலின் இந்த நிலைமை ஏற்பட்டது. தேவன் முற்றிலும் பரிசுத்தராக இருக்கின்றார்; அவர்கள் பாவம் நிறைந்தவர்களாக (பரிசுத்தமற்றவர்களாக) ஆனார்கள். பாவம் ஒருமுறை தோன்றிய பின், பிரிவானது தவிர்க்க முடியாததாக ஆயிற்று. அதற்கு முன்னதாக ஒரு எச்சரிக்கையும், அதைத் தொடர்ந்து ஒரு வாக்குத்தத்தமும் இருந்தன (ஆதி. 2:17; 3:15). பிரிதலின் வழிமுறையானது சகல ஞானமும் அன்பும் நிறைந்த தேவனால் கையாளப்பட்ட வகையைப் பற்றியே நாம் ஆதி. 3ல் வாசிக்கின்றோம். இந்தப் பிரிவானது தானாகவே முற்றிலும் நிர்மூலமாக்குதலாக இருந்ததில்லை; நிச்சயமாகவே இது பாவத்தின் விளைவாகவே இருந்தது. பாவமானது நாம் கடக்க முடியாத ஒரு தடையை உண்டாக்குகின்றது (ஏசா. 59:1, 2). உண்மையில், "பாவத்தின் சம்பளம் மரணமாகவே" (ரோமர் 6:23அ). உள்ளது. மனிதரில் பாவம் பிரசன்னமாயிருக்கையில் அதைத் தேவன் கையாண்ட வழிமுறையை நாம் பின்பற்றும் போது இந்தக் கொள்கை காலாகாலமாக இயங்குகின்றது.

முதல் யுகமானது தேவனுடைய சாயாலாக மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதுடன் தொடங்கியது. அவர்கள் பாவம் நிறைந்தவர்களாக ஆனது வரைக்கும் இது (இந்த யுகம்) இடையூறின்றித் தொடர்ந்தது. சிருஷ்டிப்புக்கும் வீழ்ச்சிக்கும் இடையில் உள்ள காலம் சார்பளவில் மிகக் குறுகியது

என்று நாம் நினைக்கத் தலைப்படுகின்றோம், ஒருவேளை ஆதியாகமத்தின் முதல் மூன்று அதிகாரங்களில் இது கூறி முடிக்கப்பட்டுள்ளதால் நாம் அவ்வாறு நினைத்திருக்கலாம். உண்மையில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத்தைப் பற்றி நாம் அறிந்திருப்பதைக் காட்டிலும் அதிகமாக, அவர்கள் தோட்டத்தில் இருந்த கால அளவைப் பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை - இதே காரணத்தினால்தான் நாம் அவ்வாறு நினைக்கின்றோம். இவை நமக்கு கூறப்படவில்லை. அவர்கள் தோட்டத் திலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு, தேவன் அவர்களின் அடைவிடத் தைப் பற்றித் தொடர்ந்து அக்கறையுள்ளவராய் இருந்தார். இருப்பினும், தேவனுக்கும் அவரது மனிதப் படைப்பிற்கும் இடையில் இருந்த ஐக்கியமானது மாறுபட்ட பண்புடையதாக ஆயிற்று. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்வதற்கு முன்பு, நேரடியான, ''உரையாடலுக்குரிய'', உடனடியான தன்மை இருந்தது. அவர்கள் பாவம் செய்த பிறகு, தனி நபர்கள் தேவனுக்குப் பலி செலுத்தி அவரது நாமத்தைத் தொழுது கொள்ளத் தொடங்கினர் (ஆதி. 4:3, 4, 26ஆ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பாவம் பிரித்து வைத்திருந்தது, ஆனால் தேவன் (அவர்களை) முற்றிலும் நிர்மூலமாக்காதிருந்தார். தேவன் தொடர்ந்து மனித குலத்தின் உலகளாவிய தகப்பனாகவே இருந்தார், ஆனால் அவர்களின் பாவம் நிறைந்த நிலைமையின் காரணமாக, தேவனுடன் முழு ஐக்கியம் கொள்வதற்கு அந்த உறவுமுறை போதுமானதாக இருக்கவில்லை.

## ஆயத்தப்படுதலின் செயல்முறை

இந்த வாக்குத்தத்தம்/உடன்படிக்கையின் வழியாக, தேர்ந்தெடுத்த செயல்முறையைத் தேவன் தொடங்கிய வேளையில், அவர் உலகளாவிய தகப்பனாக இருப்பதை விட்டொழித்தார் என்று இது அர்த்தப்படுத்த வில்லை. இருப்பினும், அவர் உலகளாவிய தமது பிதாத்துவத்தை மனித குலத்தின் உயிர் வாழ்வுக்கு அடிப்படைக் களமாகக் கருதவில்லை என்பதை அவரது தொடர்ந்து செயல்பாடு காண்பிக்கின்றது. ஆகையால், ஆதி. 3:15ல் அவரது ஆதி வாக்குத்தத்தத்தின் அடிப்படையில், நோவாவுடனான வாக்குத்தத்தம் மற்றும் உடன்படிக்கையின் மூலமாக அவர் மனித இனத்தைக் கையாளத் தொடங்கினார்:

> வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள சகல மாம்சஜந்துக்களையும் அழிக்க நான் பூமியின்மேல் ஜலப்பிரளயத்தை வரப் பண்ணுவேன்; பூமியிலுள்ள யாவும் மாண்டுபோம். ஆனாலும் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்; நீயும் உன்னோடேகூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும், பேழைக்குள் பிரவேசியுங்கள் (ஆதி. 6:17, 18).
>
> அப்பொழுது நோவா, கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்து கொண்டு, அவைகளைப் பலிபீடத்தின் மேல்

தகனபலியாகப் பலியிட்டான். சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர், இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷருடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கி பொல்லாததாயிருக்கிறது; நான் இப்பொழுது செய்ததுபோல இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்ப தில்லை என்றார் (8:20, 21).

பின்னும் தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி, நான் உங்களோடும், உங்களுக்குப் பின்வரும் உங்கள் சந்ததியோடும், உங்களோடே பேழையிலிருந்து புறப்பட்ட சகல ஜீவ ஜந்துக்கள் முதல் இனிப் பூமியில் உண்டாகப் போகிற சகல ஜீவ ஜந்துக்கள் பரியந்தம், பறவைகளோடும், நாட்டு மிருகங்களோடும், உங்களிடத்தில் இருக்கிற பூமியிலுள்ள சகல காட்டு மிருகங்களோடும் என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன். இனி மாம்சமானவைகளெல்லாம் ஜலப்பிரளயத் தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரயாளம் உண்டாவதில்லையென்றும், உங்களோடே என் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார். அன்றியும் தேவன்: எனக்கும் உங்களுக்கும், உங்களிடத்தில் இருக்கும் சகல ஜீவ ஜந்துக்களுக்கும், நித்திய தலைமுறைகளுக்கென்று நான் செய்கிற உடன்படிக்கையின் அடையாளமாக, நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும் (9:8-13).

தேவன் ஜலப்பிரளயத்தின்போது செய்தது போல மறுபடியும் ஒருக்காலும் மனித இனத்தை அழிக்க மாட்டார் என்பதே இந்த வாக்குத்தத்தத்தின்/உடன்படிக்கையின் முக்கியமான அம்சமாய் இருந்தது. ஆகையால், தேவனிடத்திலிருந்து அவரது படைப்புக்கு வந்த இந்த பயனுள்ள விஷயமானது மனித இனத்தின் சரீரப் பிரகாரமான வாழ்வுக்குக் குறிப்பாகும் என்பது தெளிவு. இது உலகளாவிய தேவனால் ஏற்படுத்தப் பட்ட மாபெரும் கிருபையுள்ள உறுதிப்பாடாக இருந்தது. இது ஒரு நற்செய்தியாக இருந்தது; இது நிபந்தனையற்றதாக இருந்தது. இது “என்றென்றும்” உள்ளதாகும். பெருவெள்ள அழிவின் போது செய்தது போல தேவன் முழுமையான வகையில் இனி ஒருக்காலும் பேரழிவை இந்த உலகம் இருக்கும் வரை ஏற்படுத்த மாட்டார் என்று நாம் உறுதிபடக் கூறலாம். மனித இனத்தின் மாம்சப் பிரகாரமான உயிர் வாழ்தல் என்பது நிறைவான உயிர்வாழுதலாய் இல்லாதிருப்பினும், தேர்வு செய்வதற்குரிய பிதா என்ற வகையில் தேவன் தம்முடைய மகத்துவமான பணிப் பொறுப்புகளை தொடங்குவதற்கு அது வரலாற்றுக் களத்தை அமைத்துத் தந்தது.

பாவம் நிறைந்த மனித இனத்தை மீட்பதற்குத் தேவன் தமது வரலாற்றுச் சகாப்தத்தை செயல் படுத்துவதற்காக ஒரு குறிப்பிட்ட மக்கள் இனத்தைத் தேர்ந்தெடுத்ததில் தேவனுடைய அருளிரக்கம் எவ்விதத்தில் மலர்ந்தது என்று நாம் காண்கின்றோம். இந்தச் செயல் முறையானது எபிரெயரான ஆபிராமிடத்திலிருந்து தொடங்கியது.[1] தேவன் ஆபிராமுக்கு,

தமது ஆசீர்வாதத்தையும், பெரும்பெயரையும் மற்றும் நாட்டையும் வாக்குத்தத்தம் அருளிச் செய்தார். மேலும், அவர் (ஆபிராம்) மூலமாக எல்லா நாட்டவர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் அல்லது அவர்களை ஆசீர்வதிப்பேன் என்றும் அவர் வாக்குத்தத்தம் செய்தார். திரளான இந்த மாபெரும் வாக்குத்தத்தமானது உடன்படிக்கையினால் முத்திரையிடப் பட்டது. ஆபிரகாம் தேவனிடத்தில் கொண்டிருந்த முழுமையான நம்பிக்கையுடன் இந்த எல்லாச் சலுகைகளையும் பெற்றுக் கொண்டார், தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை அவருக்கு (ஆபிரகாமுக்கு) நீதியாகக் கண்ணோக்கினார். நிறைவாக, ஆபிரகாமின் வித்தின் மூலமாக/சந்ததியின் மூலமாக எல்லா நாட்டவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே தேவனு டைய திட்டமாகும் என்பதும் வலியுறுத்தப்பட வேண்டும்.

ஆபிரகாமின் சந்ததியார் பல லட்சக் கணக்கில் பெருகிய பின்னர், அவர்களுக்கு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக் கொண்ட வேளையில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இந்த மக்கள் இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டனர். ஆபிரகாமின் பேரனான யாக்கோபுக்கு அவரது பெயரானது இஸ்ரவேல் என்று மாற்றப்பட்டிருந்தது. சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொண்ட அவரது சந்ததியார் இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரத்தார் அல்லது இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டனர். சீனாய் மலையில் தொடங்கியதும், மோசே மூலமாக இஸ்ரவேலருக்கு தேவன் கொடுத்ததுமான நியாயப் பிரமாணமானது குறிப்பாக அவர்களுக்கானதாகவே இருந்தது. இது தேர்வு செய்வதற்குரிய தகப்பனுடைய செயல்பாட்டின் இன்னொரு படியாக இருந்தது. அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாய் இருந்தனர்; மோசேயின் பிரமாணமானது அவர்களுக்குத் தேவனுடைய பிரமாணமாய் இருந்தது. பூமியில் இருந்த மக்களில் அவர்கள் "விசேஷித்தவர்கள்" என்பதால் தேவன் அவர்களைத் தேர்ந்து கொள்ள வில்லை. மாறாக, தேவன் அவர்களைத் தேர்ந்து கொண்டதே அவர்களின் முற்பிதாக்களுக்கு - ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோருக்கு - அவர் ஏற்படுத்திய வாக்குத்தத்தை அவர்கள் (இஸ்ரவேலர்) மூலமாய் தேவன் நிறைவேற்றுவதற்கு அவர்களைத் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாக்கிற்று (உபா. 9:4, 5).

மறுபடியும் நாம், மலருகின்ற அவரது திட்டத்தின் ஒன்றின் மேலொன்று கவிந்துள்ள அம்சத்தை வலியுறுத்துகின்றோம். அவர் இப்பொழுது தெரிவு செய்வதற்குரிய ஒரு தகப்பனாகக் காணப்பட்டாலும் அவர் தாம் ஒவ்வொருவர் மீதும் அக்கறையுள்ளவரென்று தம்மை வெளிப்படுத்துகின்றார். தேவன் ஒரு நாட்டாரின் மூலமாக தமது தெரிவு செய்யும் செயல்முறையை நடத்தியிருக்கும் வேளையிலும் கூட, எல்லார் மீதும் அவர் கொண்டுள்ள அக்கறையானது மூன்று முக்கிய பகுதிகளில் இருந்து விவரிக்கப்படலாம்.

முதல் முக்கிய பகுதியானது நியாயப்பிரமாணத்தினுடையதாக உள்ளது. மூன்று உதாரணங்கள் போதுமானவைகள் ஆகும். முதல்

உதாரணமானது சட்டக் கோட்பாடுகளின் பகுதியில் அமைந்துள்ளது. இஸ்ரவேலர்கள் தங்கள் நடுவில் தங்கியிருக்கும் அந்நியர்களை ஒடுக்கவோ அல்லது தவறாக நடத்தவோ கூடாதிருந்தது (யாத். 22:21; 23:9; லேவி. 19:33). இரண்டாவது உதாரணமானது தர்ம காரியங்களைப் பற்றியதாகும். அறுவடை வேளையில் அவர்கள் தங்கள் திராட்சத் தோட்டங்களில் உள்ள திராட்சச் செடிகளில் சில பழங்களையும், நிலத்தில் தவறி விழுகின்ற பழங்களையும் ஏழைகளும் அந்நியர்களும் எடுத்துக் கொள்ளும்படி விட்டுவிட வேண்டியதாய் இருந்தது (லேவி. 19:10). மூன்றாவது உதாரணமானது, தேவன் எல்லா மக்கள் மீதும் அக்கறையாய் இருந்தார் என்றும், எல்லாரும் தம்மிடம் பயபக்தியாயிருக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார் என்பதையும் காட்டுகின்றது:

> கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன் கொலை செய்யப்பட வேண்டும்; சபையார் எல்லாரும் அவனைக் கல்லெறிய வேண்டும்; பரதேசியானாலும் சுதேசியானாலும் கர்த்தரின் நாமத்தைத் தூஷிக்கிறவன் கொலை செய்யப்பட வேண்டும்.
>
> உங்களில் பரதேசிக்கும் சுதேசிக்கும் ஒரே நியாயம் இருக்கு வேண்டும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார் (லேவி. 24:16, 22).

எல்லா மக்களுக்காகவும் தேவனுடைய அக்கறையை நாம் காணும் இரண்டாவது முக்கியமான பகுதி வரலாறு ஆகும். வேதாகம வாசகர் ஒவ்வொருவரும் யோனாவின் வரலாற்றை நன்றாக அறிந்தவராகவே இருக்கின்றார். நாம் வாசிப்பதற்கு முன்னமே கூட, யோனாவைப் பற்றியும் அவரை விழுங்கிய பெரிய மீனைப் பற்றியும் நம்மில் பலர் கேள்விப்பட்டு இருந்தோம். அவர் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் நாசரேத்திற்கு அருகில் இருந்த ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அந்த வேளையில், இரண்டாம் எரோபெயாம் இஸ்ரவேலின் அரசராய் இருந்தார். அசீரியப் பேரரசின் தலைநகரான நினிவே பட்டணத்தின் மக்கள் மிகவும் துன்மார்க்கராய் இருந்தபடியால் அங்கு அழிவின் செய்தியொன்றைப் பிரசங்கிக்கும்படி யோனா தேவனால் அனுப்பப்பட்டார். அவர் அங்கு போவதற்கு முதலில் தயங்கினாலும், பின்பு தேவனுடைய கட்டளைக்கு இணங்கிய அவர் அந்த நகரத்தில் பிரசங்கித்தார். தேவகோபத்திற்குத் தப்பிக் கொள்வதற்கு மனந்திரும்புதலின் நிபந்தனையானது மறைவாய் உணர்த்தப்பட்டது நினிவேயின் மக்களால் உணர்ந்தறியப்பட்டது. அவர்கள் மனந்திரும்பி, தேவனிடத்தில் ஜெபித்தார்கள்; ஆகையால், அவர்கள் அழிக்கப்படாமல் காக்கப்பட்டனர்.

முதல் பகுதியானது, தேவனுடைய தெரிந்துகொண்ட நாடாய் இராதவர்களான மக்களின் நல்வாழ்விற்கு தேவன் சகலமும் வழங்கியதைக் காண்பிக்கின்றது. அவர்கள் சுய விருப்பத்துடனேயே தங்களை நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படுத்தி, அதன் நல்லொழுக்க விதிகளைக் கடைப் பிடித்து, அதன் பயன்களைப் பெற முடிந்தது. இதைச் செய்வதினால்

அவர்கள் இஸ்ரவேலின் தேவன் - *Yahweh* - மேல் தங்களுக்குள்ள நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள்.

இரண்டாவது பகுதியானது நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த இஸ்ரவேலராகவோ அல்லது அவர்களுடன் தங்கியிருந்த அந்நியராகவோ இராத மக்களுக்கும் கூட தேவன், நம்பிக்கையின் செய்தியொன்றை அளித்தார் என்று காண்பிக்கின்றது. அசீரியர்கள் மனந்திரும்பி, தேவனை விசுவாசித்து, அறிவிக்கப்பட்ட அவரது வசனங்களுக்குப் பதில்செயல் செய்ததால் காக்கப்பட்டார்கள் (யோனா. 3:5, 10). நாம் கற்றறிந்துள்ள காலங்கள் முழுவதிலும் பூமியில் உள்ள மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் ஆசீரியர்கள் போன்ற வகையினராகவே இருந்தனர் என்பதை மறப்பது என்பது மிகவும் சுலபமாக உள்ளது. அவர்கள் தாங்கள் அறிந்தவற்றின் அடிப்படையிலேயே தேவனுக்குப் பதில் கூற வேண்டியிருந் தது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ஏராளமான இந்த மக்கள் பவுலினால் பேசப்பட்ட புறஜாதியார் உலகத்தின் பாகமாய் இருக்கின்றனர்:

> அன்றியும் நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாண மில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாண மாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். என் சுவிசேஷத்தின் படியே, தேவன் இயேசு கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே இது விளங்கும் (ரோமர் 2:14-16; இன்னும் விரிவான சந்தர்ப்பப் பொருளுக்கு ரோமர் 1:18-2:16ஐ வாசிக்கவும்).

தேவன் உலகளாவிய தகப்பன் என்ற வகையில் தம்முடைய மனிதக் குடும்பத்தின் மீது அன்புகூருகின்றார், அதே வேளையில், எபிரெயர்களைத் தேர்வு செய்கிற ஒரு தகப்பனாயிருந்து அவர்கள் மூலமாகத் தமது ஆச்சரியமான செயல்களைச் செய்தார்.

எல்லா மக்களுக்காகவும் தேவனுடைய அக்கறையை நாம் காணும் மூன்றாவது முக்கிய பகுதியானது தீர்க்கதரிசனம் ஆகும். தேவன் தாம் தெரிந்து கொண்ட மக்களை வழி நடத்திச் செல்லுகையில், தம்முடைய வசனத்தின் மூலமாக எதிர் காலத்திற்கு அவர்களின் கண்களை மெதுவாய்த் திறந்து வைக்கத் தொடங்கினார். அவர் தமது மக்களைத் தேர்ந்து கொண்ட வேளையில் அவர்களுக்கு ஏற்படுத்தின வாக்குத்தத்தங்களை உண்மை யுடன் காத்துக் கொண்டார். உடன்படிக்கையினால் வகுக்கப்பட்ட இந்த வாக்குத்தத்தங்கள் பெருமளவில் உலகப் பிரகாரமானதாகவும், இயல்பில் நிபந்தனையுள்ளதாகவும் இருந்தன. அவைகளில் பெரும்பான்மையானவை நித்தியமாகவோ அல்லது மாற்றப்பட முடியாததாகவோ இருக்கும்படியாக வடிவமைக்கப்படவில்லை. உதாரணமாக, தேவன் ஆபிரகாமை "எபிரெய

இனத்தின் தகப்பனாக'' இருக்கும்படி தேர்ந்து கொண்டார். அவரது தேர்ந்தெடுத்தலானது வாக்குத்தத்தத்தினால் விளக்கப்பட்டது (ஆதி. 12:1-3). இருப்பினும், நிபந்தனைகள் இணைக்கப்பட்டிருந்தன; காத்துக் கொள்ள வேண்டிய ஒரு உடன்படிக்கை இருந்தது. "பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி, 'இப்பொழுது நீயும், உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததியும், என் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுங்கள்'" (ஆதி. 17:9). விருத்தசேதனமே உடன்படிக்கையின் அடையாளமாய் இருந்தது. ஆபிரகாம் தேவனிடத்தில் முற்றிலும் நம்பிக்கை வைத்தார். ஆபிரகாம் தமது விசுவாசத்திற்கு வைக்கப்பட்ட பரீட்சையில் நிலை நின்ற பொழுது, தேவன் அவரிடத்தில், "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. 22:18) என்று கூறினார்.

தேவனுடைய மக்களுடனான அவரது வாக்குத்தத்தம்/உடன் படிக்கையின் உறவினுடைய ஒரு பாகமாக இருந்த மோசேயின் நியாயப் பிரமாணமானது சீனாய் மலையில் தொடங்கியது. அது பிரமாணத்தின் வடிவில் இருந்தாலும், அதிலும் கூட வாக்குத்தத்தங்கள் அடங்கியிருந்தன. தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களுக்கான இந்த வாக்குத்தத்தங் கள் நித்தியமானதாகவோ அல்லது நிபந்தனையற்றதாகவோ இருக்கும் படியாக வடிவமைக்கப்படவில்லை. உதாரணமாக, கட்டளைகளில் ஒன்று இந்த பூமிக்குரிய வாக்குத்தத்தம் அடங்கியதாக இருந்தது: ''உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணு வாயாக" (யாத். 20:12). பல உதாரணங்களைக் கூட்ட முடியும். தெளிவு மற்றும் விளக்கமான நிலைக்காக நாம், உபா. 26:16 - 30:20ல் மாபெரும் உடன்படிக்கை முன்னிறுத்தப்படும் காட்சிகளைக் குறிப்பிடுவோம். இங்கு நாம், தேவனுடைய பகுதியில் வாக்குத்தத்தம்/உடன்படிக்கை/பிரமாணத் தின் முழு உறவு முறையையும், அவரது மக்களின் பகுதியில் நம்பிக்கை/ கீழ்ப்படிதலையும் காண்கின்றோம். இந்த உறவு முறையைக் காத்துக் கொள்ளத் தவறியவர்களின் முழுமையான பேரழிவையும் நாம் காண்கின் றோம். மீண்டும் இது, இஸ்ரவேலர்களுக்கு இயற்கையாகத் தரப்பட்ட பெரும்பாலான ஆசீர்வாதங்களின் உலகப் பிரகாரமான இயல்பையே வலியுறுத்துகின்றது.

மேற் சொன்ன கருத்துக்கள் யாவையும், தேவனுடைய மக்கள் கல்லறைக்கு அப்பால் இருந்த வாழ்வு பற்றி அறியாதிருந்தனர் என்றோ அல்லது, தேவன் பொழியும் ஆசீர்வாதங்கள் "இனிவரும் வாழ்வுக்கும்" கூட நீட்டிக்கப்பட முடியும் என்பதை உணராதிருந்தனர் என்றோ மறைமுகமாய் உணர்த்துவதில்லை. இன்னமும் கூட, இந்தக் கருத்துக்கள், விசேஷமாய் ஒருவர் தீர்க்கதரிசிகளின் வசனங்களுக்குத் திரும்பாதிருந்தால், எவ்வளவு அரிதாக விளக்கப்படுகின்றன என்பதைக் காண மிகவும் வியப்பாய் உள்ளது.

தாவீது அரசர், பத்சேபாளிடத்தில் தமக்குப் பிறந்து, வியாதிப் பட்டிருந்த பிள்ளைக்காக ஜெபித்ததை நாம் காண்கின்றோம். அந்தப் பிள்ளை இறந்த பிறகு தாவீது ஆராதிப்பதற்கு விருப்பம் தெரிவித்தார்.

அவரது உதவியாளர்கள் திகைப்படைந்தார்கள். "அது மரித்திருக்கிற இப்போது, நான் உபவாசிக்கவேண்டியது என்ன? இனி நான் அதைத் திரும்பி வரப்பண்ணக்கூடுமோ? நான் அதினிடத்திற்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்துக்குத் திரும்பி வரப்போகிறது இல்லை" (2 சாமு. 12:23) என்பதே அவர்களுக்கு அவர் அளித்த விளக்கமாய் இருந்தது. இது மரணத்திற்குப் பின்பு உள்ள வாழ்க்கையில் கொண்டுள்ள நம்பிக்கைக்கு மறுக்கப்பட முடியாத முன்மாதிரியாக இல்லாதிருப்பினும், பல விளக்கவுரையாளர்களால் இவ்வாறே இது யூகிக்கப்படுகின்றது.[2]

தீர்க்கதரிசன எழுத்துக்களுக்குப் புறம்பே உள்ள மற்ற கூற்றுகள் மரணத்திற்குப் பின் உள்ள வாழ்க்கையின் உறுதிப்பாடாக அடிக்கடி கருதப்படுகின்றன/கண்ணோக்கப்படுகின்றன. (யோபு 14:7-14; சங். 16:9-11; 73:24-26 ஆகியவற்றைக் காணவும்.) "ஆனாலும் தேவன் என் ஆத்துமாவைப் பாதாளத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், அவர் என்னை ஏற்றுக் கொள்வார்" (சங். 49:15) என்பது இனிவரும் வாழ்வை உறுதிப்படுத்துகின்ற தெளிவானதொரு கூற்றாக இருக்கின்றது.[3]

நாம் தீர்க்கதரிசன எழுத்துக்களுக்குத் திரும்புகையில், இரண்டு கூற்றுக்கள் வலியுறுத்தப்படும். ஏசா. 26:19ல் முதலாவது கூற்று காணப் படுகின்றது: "மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர் களோடே கூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின் மேல் பெய்யும் பனி போல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப் பண்ணும்." இந்த வசனமானது பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து யூதர்கள் விடுவிக்கப்படுதல் மற்றும் அவர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்புதல் ஆகியவற்றை ஒரு சந்தர்ப்பப் பொருளில் எடுத்துரைக்கின்றது. அவர்களுக்கு இது, ஒரு புதிய அமைப்பு, வாழ்வு, சுதந்திரம் மற்றும் தங்கள் தேவனுடைய ஆலயத்தில் தங்கள் தேவனுடன் ஒரு புதிய உறவுமுறை ஆகியவற்றை மறைமுகமாய் உணர்த்திற்று. இந்த அற்புதம் நிறைந்த செய்தியானது சரீர உயிர்த்தெழுதலின் ஒப்புவமையினால் முன்னிறுத்தப்பட்டது. உயிர்த் தெழுதல் பற்றிய ஏசாயாவின் ஒப்புவமையானது அவரது வாசகர்கள் உயிர்த் தெழுதல் பற்றிய கருத்துக் கொண்டிராதிருந்தாலோ அல்லது உயிர்த் தெழுதலில் விசுவாசம் இல்லாதிருந்தாலோ மிகச் சிறந்த வகையில் அர்த்தமற்றதாகவும், மிக மோசமான வகையில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டோ அல்லது தவறாக வழி நடத்தியோ இருக்கும் என்று நாம் உணருகின்றோம். இவ்விதமாக நாம் இங்கு, ஒப்புவமையினால் உயிர்த்தெழுதலின் விசுவாசத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப் படக்கூடிய உறுதியான நம்பிக்கையைப் பெறுகின்றோம். தானியேல் 12:2, 3 வசனங்கள் இரண்டாவது குறிப்பாக இருக்கின்றது:

> பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்

*களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் பிரகாசிப்பார்கள்.*

இந்த வசனப் பகுதியானது நான்கு முக்கிய போதனைகளை வலியுறுத்துகின்றது: (1) உயிர்த்தெழுதலானது பலருக்கு என்றென்றும் உள்ள வாழ்க்கையை விளைவிக்கும். (2) மற்றவர்களுக்கோ அது வெட்கத்தையும் நித்திய நிந்தையையும் கொண்டு வரும். (3) ஞானவான்கள் பரலோக ராஜ்யத்தில் "சிறப்புற நிலை நிற்பார்கள்." (4) சுவிசேஷ ஊழியத்துவம் உடையவர்கள் தாங்கள் நீதிக்குள் நடத்தினவர்களுடன் என்றென்றைக்கு முள்ள சதா காலங்களிலும் பிழைத்திருப்பார்கள்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனமானது கி.மு. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் எழுதப்பட்டது என்றும் தானியேலின் தீர்க்கதரிசனமானது கி.மு. ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்றும் வேதாகமத்தின் பழைமை வாத கல்வித்துவம் கருத்துக் கொண்டுள்ளது. ஆபிரகாம் அழைக்கப்பட்ட காலத்துடன் ஒப்பிடுகையில் ஒரு பிற்பட்ட காலத்தில் தேவன் பலருக்கு மாபெரும் ஆசீர்வாதமாக இருக்கும் சரீர உயிர்த்தெழுதல் பற்றி தீர்க்கதரிசனமாய் உரைக்கத் தொடங்கினார். இந்த மாபெரும் காட்சியானது திறக்கப் படுகையில், தேவன் ஆவிக்குரிய தகப்பன் என்ற வகையில் தமது பணிப் பொறுப்பை நிறைவேற்றும் காலம் வந்தது.

## வெளிப்படுத்துதலின் வளர்ச்சி

தேவனை, (தேவத்துவத்தில்) நித்திய பிதாவாக, (சிருஷ்டிப்பில்) உலகளாவிய பிதாவாக, மற்றும் (வாக்குத்தத்தத்தில்/உடன்படிக்கையில்) தேர்வு செய்கின்ற பிதாவாக நாம் நோக்கியிருக்கின்றோம். உலகளாவிய பிதா என்ற அவரது பணிப் பொறுப்பானது எவ்விதத்தில் தெரிந்து கொள்ளும் பிதா என்ற அவரது பணிப் பொறுப்பின் மீது கவிந்துள்ளது என்பதையும் நாம் கண்டோம், மற்றும் ஆவிக்குரிய பிதா என்ற அவரது பணிப் பொறுப்பானது தேர்வு செய்கின்ற பிதா என்ற பணிப் பொறுப்பில் எவ்விதம் கவிந்துள்ளது என்றும் நாம் சுருக்கமாகக் குறிப்பிட்டிருக் கின்றோம். இப்பொழுது நாம் தேவன் ஆவிக்குரிய பிதாவாக இருத்தல் பற்றி அதிக விபரமாகப் படிப்போம்.

தேவனுடைய திட்டமானது வரலாற்று நிகழ்வுகளில் சில கவிந்து கொள்ளுதலுடன் விரித்துரைக்கப்பட்டிருந்தாலும், உண்மையில் ஒரு மாபெரும் திட்டமே வரலாற்று மேடையில் முன் வைக்கப்பட்டது. மாற்று ஓட்டம் என்பது நல்லதொரு விளக்கத்தை அளிக்கின்றது. மாற்றோட்டம் என்பது உண்மையில் ஒரே பந்தயமாய் இருக்க, ஒரு ஓட்டக்காரர் ஓட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தம் குழுவில் அடுத்துள்ள உறுப்பினரிடத்தில் சிறு தடியை கொடுக்கின்ற "கவிந்து கொள்ளுதல்" உள்ளது. அது போலவே தேவன் தம்முடைய மூன்று நபர்த்துவத்தில் தமது மாபெரும் திட்டத்தின் வளர்ச்சிப் படிகள் அனைத்திலும் ஈடுபட்டார். இந்தத் திட்டத்தில் பிதாவாகிய தேவனின் பணிப் பொறுப்பு மையமானது

என்று நாம் வலியுறுத்தியுள்ளோம், ஆனால் இந்த வலியுறுத்தமானது தேவன் தம் முழுமைத்துவத்தில் கொண்டுள்ள பணியை எவ்விதத்தில் குறைத்து விடுவதற்கானதாக இருப்பதில்லை.

தேவனுடைய வளருகின்ற வெளிப்படுத்துதல் என்று நாம் அழைக்கும் விஷயத்தினால் நாம் நமது படிப்பில் அளவற்ற வகையில் உதவியளிக்கப் பட்டோம். நாம் உயிர்த்தெழுதலின் பாடக் கருத்தை ஆராய்வதற்கு முன்னரே இது ஏற்கனவே வந்துள்ளது. மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை என்ற கருத்தின் ஆதி வளர்ச்சியில் அது சரீர உயிர்த்தெழுதலைக் கொண்டிருப்பது அவசியமாய் இருந்ததில்லை என்பது உறுதி. பழைய ஏற்பாட்டில் "Sheol" ("பாதாளம்") என்ற வார்த்தையின் பயன்பாட்டைச் சுற்றியுள்ள குழப்ப நிலையில் இப்படியிருந்ததாகவே காணப்படுகின்றது.[4] இருப்பினும், ஏசாயா மற்றும் தானியேல் ஆகியோரின் தீர்க்கதரிசனப் புத்தகங்களில் நாம் கண்டுள்ளபடி, நேரடியான கூற்றுகள் மரித்தோரின் சரீர உயிர்த்தெழுதல் பற்றி உறுதிப்படுத்தின. வளருகின்ற இந்த விழிப்புணர் வானது ஏசாயா அல்லது தானியேல் ஆகியோரிடம் இருந்த மேன்மையான புத்திக் கூர்மையின் விளைவாக ஏற்பட்டதல்ல. அவர்கள் தேவனுடைய தீர்க்கதரிசிகள் என்ற வகையில் தேவனுடைய வெளிப்படுத்துதலைப் பெற்றார்கள்.

தேவனுடைய வளருகின்ற வெளிப்படுத்துதலானது நமது படிப்பிற்குப் பொருத்தமுடைய இன்னொரு வழியிலும் கிடைக்கின்றது. மோசே தேவனு டைய வசனத்தை மக்களுக்குப் பேசிய பொழுது "ஒரு தீர்க்கதரிசி" என்று குறிப்பிட்டதைக் கவனியுங்கள்:

> உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக ... உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவனெவனோ அவனை நான் விசாரிப்பேன் (உபா. 18:15-19).

இந்த வசனப் பகுதியானது இதன் சந்தர்ப்பப் பொருளில், தேவனுடைய ஊழியக்காரர்கள், தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசப்பட்டு, மோசே, ஏசாயா, எசேக்கியேல் மற்றும் ஆமோஸ் முதலிய மனிதர்களின் மூலமாகப் பல நூற்றாண்டுகளாக ரீங்காரமிட்ட தேவனுடைய குரலைக் குறிப்பிடுகிறது என்பது மிகவும் சரியானது ஆகும். இருப்பினும், தேவனுடைய வளர்ச்சி பெறும் வெளிப்படுத்துதலினால், புதிய ஏற்பாட்டில் இந்தத் தீர்க்கதரிசனமானது தகுதியான காலத்தில் எழும்புகின்ற கூடுதல் அர்த்தத்துடன் பதியப்பட்டதை நாம் காண்கின்றோம். மேசியாவான இயேசுவே உயிர்த்தெழுப்பப்பட்ட அதிகாரமுடைய தீர்க்கதரிசியாவார் என்று மோசேயும் கூட உரைத்திருந்ததைப் பற்றிப் பேதுரு, "இஸ்ரவேலின் மனிதர்கள்" அடங்கியிருந்த ஒரு கூட்டத்தாரிடம் விளக்கப் படுத்தினார்.[5]

வேதாகமத்தில் காணப்படும் வளருகின்ற வெளிப்படுத்துதலின் இந்த இரு முன்மாதிரிகளினுடைய முக்கியத்துவமானது நமது பாடத்தில் நேரடியான தொடர்புடையதாய் உள்ளது. முதலாவதாக, தேவன் நமக்காக நீண்ட காலமாகவே ஒரு திட்டம் வைத்திருந்தார் என்று நாம் காண்கின் றோம். அது ஒரு துண்டுணவாகவோ, துன்பத்தை மையப்படுத்தியதாகவோ, தேவனுடைய பகுதியில் முடிவெடுக்கும் செயல் கொண்டதாகவோ இருந்ததில்லை. இரண்டாவதாக, தேவனுடைய திட்டமானது அதன் முழுமையில் அற்புதமாக மலருகையில் அது நமக்கு அவரது வசனத்தில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளதை நாம் ஆராய்ந்து அறியக் கூடியவர்களாய் இருப்பதற்காக நாம் நன்றி நிறைந்தவர்களாய் இருக்கின்றோம்.

மேசியாவாகிய இயேசு இந்த உலகிற்கு வருதல் என்பது ஏராளமான விளம்பரம்/அறிவித்தல் கொண்டதாயிருந்தது. அவர் அதிகாரமுடைய ஒருவர் என்று மோசே குறிப்பிட்டிருந்தார். பழைய ஏற்பாட்டில் மேசியாவைப் பற்றிய வசனப் பகுதிகள் அடிக்கடி தோற்றமளிக்கின்றன.[6] "மேசியா" (எபி.: mashiah; கிரேக்கம்.: Christos) என்ற வார்த்தை "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்று அர்த்தப்படுகின்றது.[7]

இஸ்ரவேலின் இராஜாவைத் தேவன் ''ஆனந்த தைலத்தினால்'' அபிஷேகம் செய்வித்தல் பற்றி சங்கீதக்காரர் உரைத்தார்:

> தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது,
> உமது இராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள
> செங்கோலாயிருக்கிறது.
> நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுக்கிறீர்;
> ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப்
> பார்க்கிலும்
> உம்மை ஆனந்ததைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்
> (சங். 45:6, 7)

வளருகின்ற வெளிப்படுத்துதல் என்ற கோட்பாட்டினால், இந்த வசனப்பகுதியானது தேவன் தம் குமாரனை மேசியாவாகத் தேர்ந் தெடுத்தலைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நாம் காண்கின்றோம் (எபி. 1:8, 9).

பிதாவானவர் தமது குமாரன் உண்மையில் என்ன செய்ய வேண்டும் என்பதற்காக அவரைத் தேர்ந்தெடுத்தார் அல்லது ''அபிஷேகம் பண்ணினார்"? இந்தக் கேள்விக்கான பதிலானது எப்பொழுதும் ஏற்படுத்தப் பட்டுள்ள கூற்றுக்கள் எல்லாவற்றிலும் மிகவும் தனிச் சிறப்புடையதாகும், யோவான் 3:16, 17ல் நாம் இதற்கான பதில் கூறப்பட்டுள்ளதைக் காண்கின்றோம்:

> தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்

படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

"பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" என்று 1 தீமோ. 1:15ல் பவுல் நமக்கு இந்த சத்தியத்தைக் கொடுத்தார்.

மீட்பிற்கான தேவனுடைய திட்டத்தின் சிக்கலான தன்மை பற்றி நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? மனிதன் பாவம் செய்த பொழுது அவர் (தேவன்) ஏன் அவனை உயிர் வாழ்தலில் இருந்து துடைத்தெறியவில்லை என்றோ - அல்லது அவர் ஏன் முன்னதாகவே மனிதனை இரட்சிக்கவில்லை என்றோ - நீங்கள் ஆச்சரியப்பட்டதுண்டா? அவரது திட்டம் கடந்த காலங்களில் இருந்தே செயல்விளைவுள்ளதாக இருந்து கொண்டிருப்பது ஏன்? இந்த கேள்விகள் எழுந்ததால் யோசனை தெரிவிக்கப்பட்ட சிரமங்கள் தேவனுடைய மற்றும் மனித குலத்தினுடைய அடிப்படையான இயல்பின் காரணமாகவே உண்டாயின என்று யோசனை தெரிவிப்பது ஏறக்குறைய பொருத்தமற்றதாக/நகைப்புக்குரியதாகக் காணப்படுகின்றது - ஆனால் இதுவே உண்மையாக உள்ளது.

தேவன் மற்றும் மனித குலம் ஆகியோருக்கிடையில் உள்ள உறவுமுறையின் முக்கியமான வளர்ச்சிகள் சிலவற்றை நாம் கவனிப்போம். தேவன் அன்புள்ளவராக, பரிசுத்தமானவராக, நீதியுள்ளவராக, கிருபையுள்ளவராக மற்றும் மன்னிக்கின்றவராக இருக்கின்றார். அவரது மனித சிருஷ்டியானவன் தூய்மையும் பரிசுத்தமும் நிறைந்ததாக - தேவனைப் போலவே - சிருஷ்டிக்கப்பட்டான். ஆணையும் பெண்ணையும் தேவன் படைத்தது ஒரு அன்பின் செயலாக இருந்தது, அன்பு என்பது எப்பொழுதுமே பதில்செயல் ஒன்றை நாடுகின்றது - அது கடமைப் பொறுப்பின் அன்பினால் உண்டானதாயிராமல், கொடுத்து வாங்கும் அன்பினால் உண்டானதாயிருக்க வேண்டும். தேவனுக்கு மனிதர்கள் பதில்செயலாகக் காட்டும் அன்பானது உண்மையானதாய் இருப்பதற்கு, அவர்கள் தெரிவு ஒன்றை உடையவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் அன்புகூருவதைத் தெரிவு செய்யக் கூடியவர்களாகவும், அவருடைய சித்தத்திற்கு அகமகிழ்வுடன் இணங்குபவர்களாகவும் இருக்க வேண்டிய தாயிருந்தது; இல்லையென்றால், அவர்களின் உறவுமுறையானது அன்புடையதாகவோ அல்லது தேவபக்தி உடையதாகவோ இருக்க முடியாது. அவர்கள் தேவனைத் திருப்திப்படுத்துவதற்குப் பதிலாகத் தங்களையே திருப்திப் படுத்திக் கொள்ள முடிவு செய்த பொழுது தவறான தெரிவு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டனர். இது தேவனுக்கும் மனிதர்களுக்கும் இடையில் ஒரு உடைப்புக்கு/ஒப்பந்த மீறுதலுக்குக் காரணமாயிற்று, ஏனென்றால் தேவனுடைய பரிசுத்தமான இயல்பு மற்றும் மனிதர்களின் பாவம் நிறைந்த தன்மை ஆகியவற்றினாலேயே இந்த உடைப்பு ஏற்பட்டது.

"பிரிந்து போனவர்களை" மீண்டும் கொடுத்து வாங்கும் அன்புறவு முறையில் கொண்டு வந்து சேர்ப்பதற்கு தேவன் தமது அன்பின் இயல்

பினால் அவர்களை அணுகினார். இருப்பினும், இது சிக்கலான கூறுகள் உடையதாக இருந்தது. தேவன் முற்றிலும் தூய்மையானவராய் இருந்ததால், அவர்களின் பாவம் நிறைந்த நிலைமையிலேயே அவர்களை மறுபடியும் ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. முற்றிலுமான தூய்மையானது தூய்மையற்ற நிலையுடன் கலக்க முடியாது. தேவன் முற்றிலும் நீதியுள்ள வராய் இருப்பதால் அவர்களின் பாவங்களை அவர் வெறுமனே மன்னித்து விட முடியாதிருந்தது. பாவம் அதற்குரிய கிரயத்தைக் கொண்டிருந்தது. அதை நீதி வேண்டியது.

கடக்க முடியாத சிக்கலாகக் காணப்படும் இதற்குத் தேவன் மேற்கொண்ட தீர்வில் எல்லையற்ற அறிவுடைய தேவனின் ஞானமானது காணப்படுகின்றது. இது வேதாகமத்தின் பக்கங்கள் மற்றும் ஆயிரக்கணக் கான ஆண்டுகளின் பரவல் ஆகியவற்றில் மலருகின்றது. நாம் படித்துள்ள படி, விசேஷித்த மக்களின் மூலமாக எல்லா இனங்களும் ஆசீர்வதிக்கப் படும்படி அவர் அந்த மக்களை அழைத்ததை நாம் கண்டிருக்கின்றோம். இந்த மக்கள் எவ்விதமாய் விக்கிரகாராதனைக்குத் திரும்பி, அவரது அன்பைச் சோதித்தனர், அவரது நியாயப்பிரமாணங்களை மீறினர் என்பதைக் கவனிக்கையில் நாம் ஆச்சரியம் அடைந்துள்ளோம். அவரது பரந்து விரிந்த பொறுமையையும் மற்றும் நீடிய பொறுமையையும் குறித்து நாம் பெரும் திகைப்படைந்திருக்கின்றோம். அவர் தம் தீர்க்கதரிசிகள் மூலமாக அவர்களைத் தொடர்ந்து திரும்ப அழைத்துக் கொண்டிருந்தார். அவர்கள் (தீர்க்கதரிசிகள்) மூலமாக அவர்களுக்கு (மக்களுக்கு) அவர் (தேவன்) எல்லா மக்களுக்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் மேசியாவின் வருகை பற்றித் தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டிருந்தார்.

முடிவான தீர்வுக்கான வழியைத் தேவன் தயாரித்துக் கொண்டிருந்தார். அது ஒரு சுலபமான தீர்வாக இருந்ததில்லை, ஆனால் அது மட்டுமே முற்றிலும் பரிசுத்தமும், நீதியும், அன்பும் உள்ள தேவனுடைய பண்பு எதையும் மீறாத ஒரு தீர்வாக இருந்தது. அவரது (அந்தத்) தீர்வு மட்டுமே மனிதர்கள் தூய்மையான நிலையில் அவருடன் மறுபடியும் ஒப்புரவா வதற்கு அவர்களை அனுமதிக்கக் கூடியதாக இருந்தது.

தேர்ந்து எடுக்கின்ற பிதா என்ற வகையில் தேவன் தாம் தேர்ந்து கொண்ட மக்களுக்குப் பல ஆசீர்வாதங்களின் விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களைக் கொடுத்தார் என்று நாம் கவனித்திருக்கின்றோம். எல்லா இனத்தாரையும் தமக்குள் ஆசீர்வாதம் பெறுகிறவர்களாக்கக் கூடிய மேசியா ஒருவர் நிறைவாக ஆபிரகாமின் சந்ததியில் தோன்றுவார் என்று தேவன் தீர்க்கதரிசனமாக உரைத்தார். ஆகையால், தேவன் மனித இனத்தைத் தமக்குள் ஒப்புரவாக்கிக் கொள்ளும் தமது முயற்சியில் இன்னொரு பணிப் பொறுப்பிற்குத் திட்டமிட்டார் என்பது தெளிவு. சிருஷ்டிப்பில் உலகளாவிய பிதா என்ற வகையில் தேவனுடைய பணிப் பொறுப்பானது இரட்சிப்புக்குப் போதுமானதல்ல என்று நாம் அறிகின்றோம், ஏனென்றால் இரட்சிப்பிற்கான அவரது ஆசீர்வாதங்கள் எல்லா மனிதர்களுக்கும் ஒரு காலத்தில் கிடைப்பதற்காக வழியைத் தயார் செய்வதற்கு ஒரு மக்கள் கூட்டத்தை தெரிவு செய்யும் பிதாவாக அவர்

ஆனார். ஆகையால், உலகளாவிய பிதா என்ற வகையில் அவரது செயல்களோ அல்லது தெரிவு செய்கின்ற பிதா என்ற வகையில் அவரது செயல்களோ நிறைவான தீர்வு என்று அவரால் அர்த்தப்படவில்லை.

## மீட்பின் திட்டம்

தேவன் ஆவிக்குரிய பிதா என்ற வகையில் தமது குமாரனை தூய்மையான, விலைமதிப்பற்ற, முழு நிறைவான பலியாக சிலுவையில் மனித குலம் முழுவதின் பாவங்களுக்காக ஒப்புக் கொடுத்த பொழுது அவருடைய (தேவனுடைய) நிறைவான தீர்வானது வரலாற்று உண்மையாயிற்று. இந்தப் பலியானது விவாதித்து அறிவதற்கு மிகக் கடினமானதாக உள்ளது. இது நாம் கூறக்கூடிய ஆனால் முற்றிலும் புரிந்து கொள்ள முடியாத அம்சங்கள் உடையதாகும். இது நாம் புரிந்து கொள்ள இயலாத அளவுகள் கொண்ட ஒரு அன்பைக் காட்டுகின்றது. இது பாவத்தின் வல்லமை மற்றும் பயங்கரம் ஆகியவற்றை தேவன் காண்கின்ற முறையில் விளக்கப்படுத்துகின்றது. இது பாவத்தை ஆளுமைத்தன்மையின் குறைபாடு என்ற வகையில் நோக்கும் மனிதக் கண்ணோட்டத்திற்கு நேர்மாறானதாக உள்ளது. தேவன் தமது வாக்குத்தத்தங்களுக்கு உண்மையுள்ளவராய் இருக்க வேண்டும் என்ற அவரது தீர்மானத்தின் கண்டிப்பான உண்மை நிலையினால் இது நம் மனதில் ஆழப்பதிகின்றது. இது நமது பாவத்திலிருந்து வெளிவந்து நமது வழியில் செயல்பட வேண்டும் என்பதற்கு நமது தற்பெருமையான இணக்கங்களைத் தூளாக நொறுக்குகின்றது. இது, தேவன் தாம் தூய்மையும் நீதியும் உள்ளவராய் நிலைத்திருக்கும் அதே வேளையில், அந்தக் குமாரனை ஏற்று அவருக்குத் தம்மை ஒப்புக் கொடுப்பவர்களின் பாவங்களை மன்னிப்பதற்கு ஏதுவாகத் தமது குமாரனையே பலியாக ஒப்புக் கொடுத்த பிதாவின் நேர்மைப் பண்பைக் கண்டு நாம் வியந்து நிற்கும்படி செய்கின்றது.

ஆவிக்குரிய பிதாவானவர் தமது குமாரனுடன் கொண்டுள்ள இந்த நெருங்கிய பிணைப்பானது வேதவசனங்களில் மாபெரும் விபரங்களுடன் சொல்லப்பட்டிருக்கின்றது. ''நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்'' (கலா. 4:4, 5) என்று நாம் வாசிக்கின்றோம். இயேசு, கன்னியாகிய மரியாளிடத்தில் நம்புவதற்கு அரிய வகையில் பிறந்தது என்பது தேவனுடைய குமாரன் "ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர்" ஆக இருந்த தற்கு வழியாயிற்று. ''பரிசுத்த ஆவி உன் மேல் வரும்; உன்னதமான வருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" (லூக். 1:35) என்று தேவ தூதனால் மரியாளுக்குக் கூறப்பட்டது.[8]

இயேசு, மோசேயின் பிரமாணம் வழக்கத்தில் இருந்த பொழுது பிறந்தது மட்டுமின்றி, அவர் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்ட

வராகவே தம் வாழ்க்கையை வாழ்ந்தார். இருப்பினும், தம் தியாகம் நிறைந்த மரணத்தில் அவர், "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராத படிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து" (கொலோ. 2:14; எபி. 10:5-10) ஒழித்தார்.

கிறிஸ்துவின் பலியானது பழைய பிரமாணத்தின் நிறைவேறுதலாக இருந்ததுடன், அதன் (பழைய பிரமாணத்தின்) கீழ் உண்மையுள்ளவர் களாய் வாழ்ந்திருந்தவர்களுக்கு மீட்பின் வழியாகவும் இருந்தது. நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கின்றார் (எபி. 9:15).

மேலும் நாம், "புத்திரர்களுக்குரிய முழு உரிமைகளையும் பெற்றுக் கொள்ளும்படியாகவே" (எபி. 12:7-11) இந்தப் பலி ஏற்படுத்தப்பட்டது.

இயேசுவின் பூமிக்குரிய வாழ்வை நாம் படிக்கையில், அவர் தம்முடைய பரலோகத்தின் பிதாவுடன் கொண்டிருந்த நெருங்கிய உறவானது நமது மனங்களில் ஆழப்பதிகின்றது. ஒரு சிறு பிள்ளையாய் (குழந்தையாய்) இருந்த நிலையிலும் அவர் தமது பிதாவுக்கடுத்தவைகளில் தாம் இருக்க வேண்டும் என்று அறிந்திருந்தார் (லூக். 2:29). இயேசுவின் ஞானஸ் நானத்தில் அவரது தனிப்பட்ட ஊழியம் தொடங்கிய போது அவரது பிதா மிகவும் ஊன்றிக் கவனிக்கின்றவராய் இருந்தார். அவர் தம் குமாரன் மீதான தமது அன்பையும் அவர் மீது தம்முடைய மகிழ்ச்சியையும் அறிவித்தார் (மத். 3:17). இயேசுவின் மறு ரூபத்தின் போது, அவருடைய பிதாவின் குரலானது அவர் தம் குமாரன் மீது கொண்டிருந்த அன்பையும் மகிழ்வையும் மீண்டும் வலியுறுத்தியது - அதில் "இவருக்குச் செவிகொடுங்கள்" (மத். 17:5) என்ற வலியுறுத்துதலும் கூட்டப்பட்டிருந்தது.

இயேசு தமது பிதாவுடன் கொண்டிருந்த நெருங்கிய பிணைப்பை அவரது ஜெபங்கள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. பதிவாகியுள்ள அவரது மிக நீண்ட ஜெபமானது சிருஷ்டிப்பிற்கு முன் காலத்தில் பிதாவுடன் அவருக்கிருந்த மகிமையான பிரசன்னத்தையும், அவர் இப்பூமியில் தமது பிதாவை எவ்விதம் மகிமைப்படுத்தினார் என்பதையும் காட்டுகின்றது. அவர் தம் பிதா தம்மீது கொண்டிருந்த நித்திய அன்பு பற்றியும், அந்த அன்பு தம்மைப் பின்பற்றுபவர்களுக்கும் இருக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தைப் பற்றியும் உரைத்தார் (யோவா. 17; வ. 5, 24, 26 ஆகியவற்றைக் கவனிக்கவும்). தமக்கு நேரிட்ட மிகக் கொடுமையான அனு பவங்களிலும் கூட இயேசு தம் பிதாவின் சித்தம் நிறைவேற வேண்டும் என்று ஜெபித்தார். சிலுவையில் தமது மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில், அவர் "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல,

உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது'' (மத். 26:39) என்று ஜெபித்தார். சிலுவையில் தொங்கிய பொழுது, "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்றார். பிறகு அவர் மரிக்கையில், "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்பதே அவரது கடைசி வார்த்தைகளாய் இருந்தன (லூக். 23:34, 46). தேவன் இயேசுவின் ஆவிக்குரிய பிதாவாகவும் இருந்தார் என்று நாம் அறிகின்றோம்.

இயேசு தம் மரணத்தினால் மோசேயின் பழைய உடன்படிக்கையை (பிரமாணத்தை) நிறைவேற்றி, ஒரு புதிய ஏற்பாட்டை நிலைநாட்டி யிருந்தாலும், அவர் பழைய உடன்படிக்கையின் கீழாகவே வாழ்ந்து மரித்தார். இது, "காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத் திற்கு அனுப்பப்பட்ட'' (மத். 15:24), தாவீதின் மனிதத்துவ அரச பரம்பரையில் வந்த (லூக். 3:23-31) ஒரு யூதராக அர்த்தப்படுகின்றது. அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழாக இருந்த தமது சொந்த மக்களுக்கே போதித்து பிரசங்கித்துக் கொண்டிருந்தார். (இயேசு, புறஜாதியார் தம்மிடம் அணுகிய வேளைகளில் அவ்வப்போது பதில்செயல் செய்திருந்தார் [உதாரணம்., மத். 15:21-28].) ஆகையால் பிதாவைப் பற்றிய அவரது போதனையில் பெரும்பகுதியானது தேர்வு செய்கின்ற பிதா என்ற வகையில் தேவனை அறிந்திருந்த மக்களுக்கானதாகவே இருந்தது. தேவனைப் பற்றி ''உங்கள் பிதா'' என்று அவர் (இயேசு) அடிக்கடி உரைத்தார் (மத். 5:16, 45, 48; 10:29).

நாம் கண்டிருக்கின்றபடி, தேவன் பாவம் நிறைந்த மனித இனத்துடனான தமது செயல்பாடுகளில், இன்னும் மிக அதிகமாய்ப் புரிந்துணரக் கூடிய ஒரு யுகத்தைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தார். தேவனுடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஒவ்வொருவரும், ஆவிக்குரிய பிதா என்ற வகையில் தேவனை அறியும் வாய்ப்புப் பெறுவதற்கான காலம் "நிறைவேறி வந்தது." ஆகையால், இயேசு தம் சீஷர் களுக்கான தமது பிதாவின் சித்தத்தைப் பற்றியும், அந்த சித்தத்தைக் கடைப் பிடிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் உரைத்ததைக் காணுவதில் வியப்பெதுவும் இல்லை (மத். 7:21). பிதாவாக தேவனையும், சகோதரராகத் தம்மையும் கொண்டுள்ள குடும்ப உறவுக்கு அடிப்படையானதாக பிதாவுக்குக் கீழ்ப்படிதல் என்ற இந்த விஷயத்தை அவர் வலியுறுத்தினார் (மத். 12:48-50). அத்துமீறி நுழைபவர்களால் இந்தக் குடும்ப வட்டமானது உடைக்கப்படுவதைப் பிதா அனுமதிக்க மாட்டார் (மத். 15:13).

தேவன் தம்முடைய (இயேசுவினுடைய) பிதா என்ற வகையில் இயேசு அடிக்கடி பேசினார். தம்மைப் பின்பற்றுபவர்களிடத்தில் இதை அவர் குறிப்பிட்ட ஒரு உரிப்பெயர்ச் சொல்லினால் வலியுறுத்தினார்: "என் பிதா!" (மத். 18:35; 20:23). "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத். 10:32, 33) என்று கூட அவர்களுக்கு அவர் போதித்தார். இவை போன்ற - இன்னும் மற்ற பல - போதனைகள், அவர் தேவனைத் தமது பிதா என்று குறிப்பிட்ட வழியில் தனிச் சிறப்பானது

ஏதோ இருந்தது என்று அவரது சீஷர்களை, விசேஷமாக அவரது அப்போஸ்தலர்களை எச்சரித்திருக்க வேண்டும்.

இயேசுவின் தாயாகிய மரியாள் தொடக்கத்திலேயே/முன்னதாகவே "இரகசியத்தை" அறிந்திருந்தாள். அவரது தெய்வீகத் தொடக்கத்தை அவள் அறிந்திருந்தாள். அவருடைய அற்புதமான பிறப்பின் உண்மை சார்ந்த இயல்பை அவள் நிச்சயமாகவே அறிந்திருந்தாள். அவளுடைய கணவரும் நீதிமானாய் இருந்தவருமான யோசேப்பு மரியாளின் கர்ப்பத்தைப் பற்றி மிகுந்த விவேகத்துடன் செயல்பட்டார். மேலும், இயேசு இளம் வயதிலேயே, யோசேப்பைப் பற்றிக் குறிப்பிடாமல், தமது பிதாவைப் பற்றிப் பேசியதை அவள் கேட்டாள். ''அவருடைய தாயார் இந்தச் சங்கதிகளை யெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக் கொண்டாள்'' (மத். 1:18-25; லூக். 1:26-38; 2:41-52).

இயேசுவைப் பின்பற்றியவர்கள் அவருக்கும் அவருடைய பிதாவிற்கும் இடையில் உள்ள தனிப்பட்ட உறவை ஒரு வேளை அறிந்துணர்ந் திருக்கலாம். இருப்பினும், அந்த அறிவுணர்வானது மிக மெதுவாகவே வந்ததாகக் காணப்படுகின்றது. அவர்களும் தேவனைத் தங்கள் பிதாவாகக் கொண்டிருந்ததில்லையா? இஸ்ரவேலைத் தேவன் தம்முடைய குமாரன் என்று அழைத்திருந்ததில்லையா? (எரே. 31:9). இயேசு போதித்திருந்த படியாக அவர்கள் தேவனை ''எங்கள் பிதாவே'' என்று அழைக்க முடியாதிருந்ததா? (மத். 6:9). ஆம் அவர்களால் முடிந்தது, அவர்கள் அதைச் செய்தனர்.

தேவனை இஸ்ரவேலர்கள் தங்களின் பிதா என்று கண்ணோக்கியதைக் குறித்துப் பழைய ஏற்பாட்டை நாம் படித்திருக்கின்றோம். இயேசுவின் நாட்களில் இருந்த யூதத்துவமானது பிதாவாக தேவன் என்ற நெருக்கமான கருத்தைப் பிரதிபலித்தது என்றும் நாம் அறிகின்றோம்.

இருப்பினும், தேவனுடன் இயேசுவுக்கிருந்த பிதா/குமாரன் என்ற தனிச்சிறந்த வகையிலான உறவின் முழுச் செயல் விளைவையும் புரிந்து கொள்வதென்பது யூதர்களுக்குக் கடினமானதாக இருந்தது. தேவனுடைய குமாரன் என்ற வகையில் இயேசுவானவர், "தேவனுடைய புத்திரர்கள்" என்று அழைக்கப்பட்டவர்களிலிருந்து எவ்விதத்திலாவது மாறுபட்டி ருந்தார் என்பதை எவ்விதத்தில் அவர்களை அறிய வேண்டியதாய் இருந்தது? அவருக்கு முன்பே இருந்த மாபெரும் தலைவர்கள் அவருடைய புத்திரர்கள் என்று அழைக்கப்பட்டிருந்ததில்லையா? (2 சாமு. 7:14; சங். 89:26, 27). ஆம். எனவே, அவர்கள் "முழுமையான சத்தியத்தை" அறிவதற்காக ஆவிக்குரிய பிதாவாகிய தேவன் ஒரு வெளிப்படுத்துதலை ஏற்படுத்த வேண்டியதாயிற்று என்று அறிவதில் நாம் வியப்படையக் கூடாது.

கன்னியான மரியாள் ஒரு குழந்தையைப் பெறுவாள் என்று தேவனிடத்திலிருந்து வந்த தூதுவச் செய்தியாளர் யோசேப்பிடம் கூறியிருந்தார்: "அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத். 1:20ஆ, 21). இவ்விதமாக, ஏசாயாவின்

*தீர்க்கதரிசத்தினுடைய துணை நிறைவேற்றம் ஏற்பட்டது: "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத். 1:22, 23; ஏசா. 7:14). இயேசு இவ்வுலகத்தில் அற்புதமான வகையிலான பிறப்பை அனுபவித்தவராகவும், தேவன் என்ற வகையில் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றவராகவும் இருக்கின்றார்! நாம் கூறியுள்ளபடி, மரியாள் அந்த வேளையில் பல விஷயங்களைத் தனது இருதயத்தில் வைத்திருந்தாள்.*

*இது பற்றிய எல்லாவற்றையும் இது முன்னிறுத்தப்பட்ட வகையில் தீவிரமானதாக நாம் எடுத்துக் கொண்டால், இது எவ்வளவு வியக்கத் தக்கதாக இருக்கிறது என்று நாம் உணருவோம். உலகத்தின் வரலாறானது எதிர்பார்க்கப்பட்ட அதன் ஓட்டத்திலிருந்து திசை மாற்றப்பட்டது. காலங்கள் மாறிக் கொண்டிருந்தன. ஒரு புதிய மற்றும் மகிமையான சகாப்தம் தயாராகிக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் கொண்ட நிகழ்ச்சிகளை எடுத்துரைத்தல் என்பது அழியக் கூடிய வெறும் மனிதர்களுக்குக் கடினமான செயலாக உள்ளது. வரலாற்றில் இயேசுவின் பிரவேசத்திற்கு தெய்வீக விளக்கம் ஒன்று தேவைப்பட்டது என்பது சிறிதளவு ஆச்சரியமானதே அல்ல. அதுவும் கூட மெதுவாகவே புரிந்து கொள்ளப்பட்டது. இயேசு தமது மாபெரும் ஊழியத்திற்காக இங்கிருந்த வேளையில் அவரை அடையாளம் காண இடர்ப்பாடு அடைந்திருந்த மக்கள், இன்று மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்களைத் திறந்து இந்த மாபெரும் சத்தியங்களைப் பகுத்துணர நாம் பெற்றுள்ள சிலாக்கியத்தைப் பெற்றிருந்ததில்லையே!*

*இருப்பினும், பிதாவானவர் தம் குமாரனின் உண்மை இயல்பை வெளிப்படுத்துவதைத் தொடர்ந்து செய்தார் என்று நாம் வாசிக்க முடியும். எடுத்துக்காட்டாக, இயேசுவை விவரிக்கும் நாத்தான்வேலின் வார்த்தைகளில் சத்தியம் இருக்கின்றது: "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" (யோவா. 1:49). இயேசு அவனது உண்மைத் தன்மையைப் புகழ்ந்துரைத்தார் - ஆனால் அந்தக் காலகட்டத்தில் இருந்த யூதர்களின் மன அமைவில் ஆழப்பதிந்திருந்த பழைய நாட்டுணர்வை அவருடைய வார்த்தைகள் இடித்துப் போடவில்லையா? நாத்தான்வேல் அப்படிப்பட்ட செல்வாக்குகளில் இருந்து விடுதலையானவராய் இருந்தாரா?*

*ஒரு தேசியப் புத்துயிர்ப்பிற்காகவும், தாவீது மற்றும் சாலொமோனின் ஆளுகையின் காலத்தில் தங்களின் முற்பிதாக்கள் மகிழ்ச்சியுடன் அநுபவித்திருந்தது போல தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட குமாரனை இராஜாவாகக் கொண்டு மகிமையுள்ள ஆளுகையைத் தாங்கள் எதிர்நோக்கவும் ஏங்கியிருந்தார்கள். திரளான யூத மக்கள் இயேசு தங்களின் அரசராயிருக்க வேண்டும் என்று எண்ணி ஏங்கினார்கள் (யோவா. 6:15).*

*ஒருமுறை, மரணத்தின் மீதான இயேசுவின் வல்லமையானது அதைக் கவனித்தவர்கள் குறிப்பிடத் தக்க உறுதிப்பாடு கொள்ளும்படி வழி*

நடத்திற்று. "மகா தீர்க்கதரிசியானவர் நமக்குள் தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும்" (லூக். 7:16) அவர்கள் கூறினார்கள். இது அவர்கள் பய உணர்வினால் நிறைந்திருந்த பொழுது ஏற்படுத்திய மாபெரும் அறிவிப்பாய் இருந்தது, ஆனால் இந்தப் போற்றுதலானது இயேசுவைத் தேவனென்று அங்கீகரித்ததா? தேவன் தாமே அவதாரம் எடுத்தார் என்ற மறைமுகக் கருத்தின்றி, தேவனுடைய வசனங்கள் மற்றும் செயல்கள் ஆகியவற்றினால் அவர் இஸ்ரவேலருடன் இருந்த நிகழ்ச்சியானது நடந்திருந்ததை அவர்கள் கண்டிருந்தனர் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்.[9] இயேசு தமது தெய்வீகத்துவத்தை உரிமையுடன் உறுதிப்படுத்திய பொழுது, அது மதத் தலைவர்களிடமிருந்து ஏளனம், இகழ்ச்சி மற்றும் துன்புறுத்துதல் ஆகியவற்றை வெளிக் கொண்டு வந்தது (யோவா. 8:42-59).

கற்றறிந்த மனிதரான நிக்கொதேமு, "ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" (யோவா. 3:2) என்று கூறிய போது இயேசுவைப் பாராட்டும் விதமாகவே பேசினார் என்பது உறுதி. ஒரு "போதகர்" இன்னொரு "போதகரிடத்தில்" என்ற வகையில் நிக்கொதேமு, இயேசு நிகழ்த்திய "அடையாளங்களில்" தேவனுடைய வல்லமையையும் ஆசீர்வாதத்தையும் கண்டார். நிக்கொதேமு இன்னும் அதிகமானவற்றைக் கண்டாரா? அப்படியிருக்க அவசியம் இல்லை. இருப்பினும், தேவன் தம் குமாரனுடைய உண்மையான இயல்பை வெளிப்படுத்தக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார் என்று *நாம்* அறிகின்றோம். தேவனுடைய வளருகின்ற வெளிப்படுத்துதலானது தொடர்ந்தது.

இயேசுவின் கேள்விக்குப் பதிலுரையாகப் பேதுரு, குறிப்பிடத் தக்க அறிக்கையை ஏற்படுத்தினார், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" (மத். 16:16). ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளவைகளைக் காட்டிலும் இந்த அறிக்கையானது அதிக தனிச் சிறப்புடையதாக இருந்ததா? இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று நாம் அறிகின்றோம். முதலாவதாக, இது இயேசுவின் கேள்விக்கு நேரடியான பதிலுரையாக இருந்தது. இரண்டாவதாக, இயேசுவின் பரலோக பிதாவிடமிருந்து வந்த *வெளிப்படுத்துதலினாலேயே* பேதுரு இவ்வித அறிக்கை செய்ய முடிந்தது என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (மத். 16:17). இயேசுவின் முழு அடையாளம் பற்றி சத்தியமானது இந்த அறிக்கையில் மறைந்துள்ளது.

இந்த அறிக்கையின் மறைவான கருத்துக்களை முழுவதையும் பேதுருவே கூட அறியாதிருந்தார் என்று நாம் யூகிப்பதற்குச் சில காரணங்கள் உள்ளன. இந்த அறிக்கைக்குப் பிறகு, மிகக் குறுகிய காலத்திலேயே இயேசு தமது மரணத்தைப் பற்றிப் போதித்ததைப் பேதுரு கடிந்து கொண்டு அதனால் கடுமையாகக் கண்டனம் பெற்றதை நாம் காண்கின்றோம் (மத். 16:21-23). பேதுரு தாம் முழுமையாகப் புரிந்திராததின் முக்கியத்துவத்தில், ஏவுதலினால் கூட அவர் இவ்விதமாய்க் கூறுவது கேள்விக்கு அப்பாற்பட்டதாய் இருந்ததில்லை என்பதையும் நாம் அறிகின்றோம் (அப். 2:39;

*10:28-34).* பேதுரு உணர்வெழுச்சி மிகுந்த வேளைகளில் வேகமாகப் பேசியிருக்க முடியும் என்று நாம் அறிகின்றோம் (மத். *17:4, 5;* மாற். *9:5, 6;* லூக். *9:33).* தமது எஜமானருக்கு மாபெரும் கடமையுணர்வைக் காட்டிய வேளையிலும் கூடப் பேதுரு, துன்பத்தின் கீழ் நிலைநிற்காத, இருதயத்தில் உணரப்பட்ட ஒரு உறுதிப்பாட்டை மொழிந்திருக்க முடிந்தது (மத். *26:33-35, 69-75).* ஆகையால், பேதுரு, மதிப்பிற்குரிய மற்றும் உண்மையான தம் அறிக்கையான இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதன் முழுத் தனிச் சிறப்பையும் அநேகமாக உணர்ந்திருக்க மாட்டார் என்றே நாம் முடிவு செய்கின்றோம்.

இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் வரையிலும் கூட மனித உதடுகள் அவரை இம்மானுவேல் என்று அறிவித்ததில்லை என்பதில் நாம் வியப்படையக் கூடாது. பூமியையே அசைக்கின்ற இந்த சத்தியமானது நம்பிக்கையே இல்லாதிருந்த ஒரு நபரால் உச்சரிக்கப்பட்டது! தோமா இயேசுவின் வல்லமையைக் கண்டிருந்தார். அவரது இணையற்ற போதனைகளை அவர் (தோமா) கேட்டிருந்தார். அவரது முழு நிறைவான, நீதியான வாழ்வை உற்று நோக்கும் சிலாக்கியத்தை அவர் (தோமா) மகிழ்வுடன் அனுபவித்திருந்தார். வருத்தத்தில் இருந்தவர்கள்மீது அவர் கொண்டிருந்த மன உருக்கத்தை அவர் கண்டிருந்தார். ஒருவேளை அவர் (தோமா) இயேசு தாமே "நானே இருக்கிறவர்" (யோவா. *8:58)* என்று கூறியதைக் கேட்டிருக்கலாம்.

தோமா உயிர்த்தெழுந்த கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருக்கையில் அவருடைய மனதில் இவை யாவும் கவனத்தில் கொண்டு வந்திருக்கப்படச் சாத்தியக்கூறு உள்ளது. அவர் கண்டது எதுவோ அது அவரது கவனத்திற்குரிய வகையில் கூற்றாகவோ, உபதேசமாகவோ அல்லது முன் மொழியப்பட்ட சத்தியமாகவோ தொகுக்கப்பட்டதாக இனியும் இருந்ததில்லை. இயேசுவின் சரீரத்தில் சிலுவையில் அறையப்பட்ட தழும்புகளை அவர் (தோமா) கண்டார். அவர் தாம் உயிர்த்தெழுதலை நோக்கிக் கொண்டிருந்ததை அறிந்தார் - மற்றும் தேவனைத் தவிர வேறு எவருக்கும் மரணத்தின் மீது வல்லமை இல்லை என்பதையும் அவர் அறிந்தார். ஆகையால், "தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக, 'என் ஆண்டவரே! என் தேவனே' என்று கூறினார்" (யோவா. *20:28).*

கடைசியாக, ஆவிக்குரிய பிதாவாகிய தேவன் இதைத் தெளிவாக ஏற்படுத்தியிருந்தார் . நாசரேத்தூர் இயேசு அவருடைய ஆவிக்குரிய குமாரனாக - மாம்சத்தில் *தெய்வீகத்துவமுள்ளவராக* இருக்கின்றார்!

---

குறிப்புகள்

[1]ஆதி. *12:1-3; 13:14-17; 14:13; 15:1-6, 13-16; 17:1-4* ஆகியவற்றைக் காணவும்.
[2]John Peter Lange, "Samuel" in *Commentary on the Holy Scriptures: Critical Doctrinal and Homeletical,* trans. and ed. Philip Schaff (Grand Rapids, Mich.: Zondervan, n.d.), 475.
[3]"அதாவது, எளிமையானவரின் கட்டியெழுப்புதலினால், நான் மரித்தோரிலிருந்து

உயிர்த்தெழுதலையும், மகிமையில் பிரவேசிப்பதையும் பெறுவேன், மரணம் என் மீது ஆளுகை செய்யாது" (Adam Clarke, *The Holy Bible With a Commentary and Critical Notes*, vol. 3, *Psalms* [Nashville: Abingdon, n.d.], 377). [4]*She'ol* என்பது "மரித்தவர்களின் வட்டாரம்" ஆகும். Merrill F. Unger and William White, Jr., eds., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), s.v. "death." [5]அப். 3:17-23. Cf. Robert Jamieson, A. R. Fausset, and David Brown, *Commentary Critical and Explanatory on the Whole Bible*, vol. 2 (Grand Rapids, Mich.: Zondervan, n.d.), 176-77. [6]மேசியாத்துவக் குறிப்புக்கள் காணப்படக் கூடிய பல அதிகாரங்களை நாம் குறிப்பிடவில்லை. மேலும் படிப்பதற்கு இங்கு சில வசனங்கள் அட்டவணைப் படுத்தப்படுகின்றன: சங். 2; 16; 22; 110; ஏசாயா 2; 7; 9; 40; 53; எரே. 23; மல். 3; 4. [7]இராஜாக்களைத் தேர்ந்தெடுக்கும் பழங்கால நடைமுறையை நாம் படிக்கும் பொழுது, அபிஷேகம் செய்வித்தலின் செயல்முறையினுடைய தனிச் சிறப்பு காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, சாமுவேல் "தைலக் குப்பியை எடுத்து, அவர் (சவுலின்) தலையின்மேல் வார்த்து, அவனை முத்தஞ் செய்து, 'கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா?" (1 சாமு. 10:1) என்றபோது சவுலைத் தேவன் தேர்ந்தெடுத்ததை அவர் (சாமுவேல்) சுட்டிக்காட்டினார். இவ்விதமாக, தேவனால் "அபிஷேகம் பண்ணப்பட்டதை" நாம் வாசிக்கும்பொழுது, தேவனால் "தேர்ந்து கொள்ளப்பட்ட ஒருவரைப்" பற்றி நாம் வாசிக்கின்றோம். [8]முழுமையான சந்தர்ப்பப் பொருளுக்கு லூக். 1:26-37ஐ வாசிக்கவும். [9]1 இரா. 17:22-24; 2 இரா. 4:32-36; எரே. 29:10. மேலும், லூக். 7:16ஐப் பற்றி H. Leo Boles அவர்களின் *A Commentary on the Gospel of Luke* (Nashville: Gospel Advocate Publishing Co., 1940; reprint, 1959), 151. என்ற நூலில் காணவும். "அவர்கள் ஒரு தரம் எலியாவையும் எலிசாவையும் மறுபடி நினைவுகூர்ந்து, இவர்களைப் போல மாபெரும் தீர்க்கதரிசி 'தங்களின் நடுவில்' எழுந்திருந்ததாகவும், தேவன் தம் மக்களை ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு மறுபடியும் சந்தித்தார்" என்றும் Boles அறிவித்தார்கள்.

# தொகுப்புரை

நமது பயணத்தின் தொடக்கத்தில், தேவனுடைய இயல்பை ஊடுருவி நோக்குதல் என்பது எவ்வளவு துடுக்குத் தனமுள்ளதாக இருக்கிறது என்று நாம் கூறியதை நீங்கள் மறுபடி நினைவுகூருவீர்கள். வழியில் வலிமை மிக்க அறைகூவல்கள் இருந்த போதிலும், நமது வீர வரலாற்றில் நாம் ஒன்றிணைந்து வளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றோம். தேவன், தமது சிருஷ்டிப்பிலும், தமது குமாரனிலும், மற்றும் வேத வசனங்களிலும் தம்மை வெளிப்படுத்தாமல் இருந்தால் நமது ஆராய்ச்சியில்/தேடுதலில் எந்த வளர்ச்சியும் ஏற்படுத்தி இருக்க முடிந்திராது என்று நாம் அறிக்கை யிடுகின்றோம். தேவன் தம்மைப் பற்றி வெளிப்படுத்தியிராதவைகளை நாம் அறிய முடியாது - என்றென்றுமாக! இது உண்மையில் நாம் இரு உண்மைகளை அறிந்தவர்களாய் இருக்கும்படியாக்குகின்றது. முதலாவது நாம் அவருடைய உதவியின்றி அவரை அறிய வருவதற்கு முற்றிலும் உதவியற்றவர்களாய் இருக்கின்றோம். இரண்டாவது, சிருஷ்டிப்பு தொடங்கி, ஒரு தேவன் இருக்கின்றார் என்பதை அறியும்போது, நிச்சயமாய் அமைதலுடன் இருக்க முடியும். தேவன் எப்படியிருக்கின்றார் என்பதை யும், நாம் எப்படியிருக்க வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்றும் அவர் விரும்புவது என்ன என்பதையும் வேதாகமத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும். நாம் ஒன்றுகூடிப் படிப்பதில் வேதாகமத்தை விரிவாகப் பயன்படுத்துவதின் காரணத்தை இது விளக்கப்படுத்துகின்றது.

பிதா என்ற வகையில் தேவனுடைய பல்முகப்புக் கொண்ட பணிப் பொறுப்பு பற்றி என்னைப் போலவே நீங்களும் திகைப்படைந்து மற்றும் பயபக்தியடைந்திருப்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். நமது பயணங் களில் காலத்தின் மூலைகளுக்கு நாம் திரும்பியிருக்கையில், நீண்ட காட்சி களானவை, தேவன் நித்திய பிதாவாக, சிருஷ்டிக்கும் பிதாவாக, உலகளாவிய பிதாவாக, தெரிவு செய்கின்ற பிதாவாக, மற்றும் ஆவிக்குரிய பிதாவாக இருப்பதைக் காண்பித்துள்ளன.

ஏதேன் தோட்டத்தில் ஆணும் பெண்ணும் ஆரம்ப காலத்தில் கொண்டிருந்த பரிசுத்த முழுமையை - பிதாவைப் போலவே இருந்த சிருஷ்டிகளாய்க் காணப்பட்டதை - அந்தப் பழங்காலத்தின் தெளிவற்ற காட்சிகளின் வழியாக நாம் உற்று நோக்கிய போது நமது இருதயங்கள் சந்தோஷத்தினால் குதித்தன. அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய், வெளியேற்றத்தைப் பெற்று, அவரிடமிருந்து பிரித்திருந்த நிலையின் விளைவுகளினால் அவதிப்பட்டதை நாம் கவனிக்கையில் உடைந்த இருதயத்துடன் நாம் நின்றோம். விழுந்து போன மனித இனத்தை மறுபடியும் மீட்டமைப்பதற்குத் தேவனுடைய பொறுமையான செயலை நாம் பின்தொடருகையில் நமது ஆவிகள் உயிர்ப்பிக்கப்பட்டன. கொந்தளிக்கும் மோசடிகள்/ஒழுக்கக் கேடுகள் இருந்த போதிலும்,

நீதியுள்ள சில ஆத்துமாக்களைத் தேவன், வெள்ளப்பெருக்கில் இருந்து நோவா மற்றும் பேழை ஆகிய வழிமுறையில் இரட்சித்தார். விக்கிரகாரா தனையும் பல தெய்வ வழிபாடும் இருந்த போதிலும் தேவன் தமது மக்களை ஒரு புதிய திசையில் வழி நடத்தும் நபராக ஆபிரகாமை அழைத்ததன் மூலம் (கலா. 3:6-9) தமது மாபெரும் வடிவமைப்பில்/திட்டத்தில் தொடர்ந்து உறுதியாய் இருந்தார். மோசேயின் மூலமாக, தேவன் தம் மக்களை மேசியாவாகிய கிறிஸ்துவினிடத்தில் நிறைவாக வழி நடத்திச் செல்லுவதற்கு வடிவமைக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தினால் காத்துக் கொண்டதை நாம் காண்கின்றோம் (கலா. 3:23-25).

பிறகு நாம் தனிச் சிறப்பான வகையில் பிறந்த தேவகுமாரன் இவ்வுலகத்திற்கு வந்தது பற்றி ஆராய்ந்தோம். தேவனுடைய கண்ணோக்கில், "காலம் நிறைவேறின போது" அவருடைய குமாரன் இந்தப் பூமிக்கு நண்பகலின் சூரியனைக்காட்டிலும் மாபெரும் பிரகாசத்துடன் வந்ததை நாம் கண்டோம். உண்மையில் அவரது தனிச் சிறப்பான தன்மை, கம்பீரம், நபர்த்துவம் மற்றும் மகிமை ஆகியவை, இந்தப் பரிசுத்தமும் நீதியும் உள்ள மனிதர் உலகத்தின் பாவங்களுக்காகத் தம்மைப் பலியாக ஒப்புவிக்கும் பொழுது சூரியனின் பிரகாசமும் கூட இருளில் மறையும் அளவுக்கு வற்புறுத்தி நம்ப வைப்பதாகவும், மிக மேலான தேவத்துவம் உள்ளதாகவும் இருந்தன (மாற். 15:33). இயேசுவுக்கு முன்பாக நின்று கொண்டு அவர் மரிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த ரோமானிய நூற்றுக்கு அதிபதி "மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்" (மாற். 15:39) என்று கூறுமளவுக்குக் கூட, அந்தக் காட்சியானது மிகத் தெளிவானதாகவும், உருவக்குத்துகிறதாகவும், ''மற்ற உலகத்தின்'' கூறுகளினுடைய செயல் விளக்கம் கொண்டதாகவும் இருந்தது.

நாம் நம்புவதற்கு அரிய ஒரு பயணத்தில் இருந்திருக்கின்றோம். கடைசியாக நாம், தேவன் தம்மை நாசரேத்தூர் இயேசுவின் ஆவிக்குரிய பிதாவாகச் சித்தரிப்பதைக் கண்டிருக்கின்றோம் - ஆனால் இதுவே இந்த வரலாற்றின் முடிவாக உள்ளதா? இயேசு, தேவனைத் தம்முடைய ஆவிக்குரிய பிதா என்று காண்பிப்பதற்காக மட்டுமே இந்த உலகத்திற்கு வந்தாரா? இது நமது மாபெரும் துதிக்கும் ஆச்சரியத்திற்கும் பாத்திரமான சிந்தைக்கு அச்சமூட்டும் ஒரு வெளிப்படுத்துதலாக உள்ளது. இருப்பினும், நமது சிந்தைகளை அதிகமாய் அகலப்படுத்துக் கூடியதும், நன்றியுணர் வினாலும் நன்றி செலுத்துதலினாலும் நமது ஆவிகளை உயரச் செய்யக் காரணமானதுமான அதிக விஷயங்கள் உள்ளன. இயேசுவின் ஆவிக்குரிய பிதா என்ற வகையில் தேவன் நாமும் கூட ஆவிக்குரிய தகப்பனாக அவரைப் பெற்றுக் கொள்ளும்படியாக தமது குமாரனை நமது பாவங்களுக்காகப் பலி செலுத்தினார் என்று இப்பொழுது நாம் அறிகின்றோம். இதுவே தேவன் நம் மத்தியில் செய்த செயலின் உச்சக் காட்சியாக உள்ளது. காலம் முடிவுறும் வரையிலும் இதைக் காட்டிலும் பெரிய செயல் எதுவும் வரப் போவதில்லை. வரப்போகிற நூற்றாண்டுகளில் தேவன் வேதாகமத்தில் விவரிக்கப் பட்டுள்ளது போலத் தகப்பனாக இன்னொரு பணிப் பொறுப்பை ஏற்றுள்ளதாக ஒரு யுகத்தை விவரிக்கும் இன்னொரு புத்தகம் எதுவும்

இருக்கப் போவதில்லை. கிறிஸ்தவ யுகத்தில் மீட்பிற்கான அவரது மாபெரும் திட்டத்தின் உச்ச முடிவை நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இது ஒரு ஆச்சரியப்படுத்துகின்ற திட்டமாக உள்ளது. இது தேவனுடைய ஒப்புரவாக்கும் ஊழியத்தின் சிகரமாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் இதன் முழுமையான நிறைவேற்றத்தைத் தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே கண்டார்.

> *தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்ற மில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார் (எபே. 1:4-6).*

கிருபையும் அன்பும் கொண்ட ஒரு பிதாவினால் என்ன ஒரு மாபெரும் மகிமையுள்ள செயல் செய்யப்பட்டுள்ளது! நாம் அவருடைய பிள்ளைகளாகும்படிக்கு நமக்கு அவர் ஒரு வழியை அளித்துள்ளார். அவர் நமது ஆவிக்குரிய தகப்பனாயிருக்கும்படி விரும்புகின்றார். காலத் தொடக்கத்தில் அவர் மனித இனத்தைத் தூய்மையானவர்களாய்ச் சிருஷ்டித்தபடியாகவே, நம்மை மறுபடியும் உருவாக்குவதற்கு அவர் ஏங்குகின்றார். நாம் அவருடைய குடும்பத்தில் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நாம் “வீடு வந்து சேர வேண்டும்” என்று அவர் விரும்புகின்றார்.

அவரது கிருபையுள்ள ஏற்பாடுகளுக்கு நாம் எவ்விதம் பதில் தருகின்றோம்? அவரது ஒப்பிடப்பட முடியாத அன்பான அளிப்பை - இயேசு கிறிஸ்துவை - நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம் (யோவா. 8:24). அவரை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து, நாம் மனந்திரும்பு தலில் அவரிடம் திரும்புகின்றோம் (லூக். 13:1-5) மற்றும் நமது பாவமன்னிப்புக்காக அவருக்குள் ஞானஸ்நானப் படுத்தப்படுகின்றோம் (மத். 28:18-20; அப். 2:38, 39). இந்த அடக்கத்தில் நாம் பாவத்திற்கு மரித்து, மறுபிறப்பில் புதிய ஜீவனுக்கென்று நாம் எழுப்பப்படுகின்றோம் (யோவா. 3:3-5; கலா. 3:26-29; ரோமர் 6:1-12). இந்த வழிமுறையில் கிறிஸ்துவில் நம் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ள நிலையில், பரலோகத்தில் இருக்கும் நமது ஆவிக்குரிய பிதாவின் முன்னிலையில் அவரால் நாம் அறிக்கையிடப் படுவோம் என்பதை அறிகின்றோம் (மத். 10:32, 33). கிறிஸ்துவுக்குள் நாம் தேவனுடைய “புது சிருஷ்டி”யாக இருக்கின்றோம்.

> *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.*

*அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி (2 கொரி. 5:17-19அ).*

மாற்றுச் செயல் செய்யப்பட்டுள்ளது. நமது பாவங்களுக்காகத் தேவன் தமது குமாரனைப் பலியாக ஒப்புக் கொடுக்கும் அவரது திட்டமானது மகிமையான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. "கிறிஸ்துவுக்குள் உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளும்" தேவனுடைய அளிப்பை நாம் ஏற்றுக் கொள்ளும்பொழுது அவருடைய குமாரனாகிய இயேசுவின் மூலமாக தேவன் நமது ஆவிக்குரிய பிதா ஆகின்றார். நமது நித்திய அடைவிடத்திற்கு என்ன ஒரு மாபெரும் வாய்ப்பு நிலை! ஆவிக்குரிய பிதாவை நமது மேன்மை தாங்கிய சக்கரவர்த்தியாகவும், இயேசுவை நமது இரட்சகராகவும் சகோதரராகவும் மற்றும் நண்பராகவும் கொண்டுள்ள நிலையில், நாம் தேவனுடைய ஊழியத்தின் ஒரு பகுதியாகின்றோம், இது இந்த முழுப் பிரபஞ்சத்தின் புத்தி கூர்மையுள்ள சிருஷ்டிகள் யாவும் தேவனுடைய மிக மேன்மையான ஞானத்தின் தாக்கம் பெறும்படியான பயபக்தி நிறைந்த ஏவுதலாய் இருக்கின்றது. எபே. 3:10-12 பின்வருமாறு கூறுகின்றது:

*உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசு கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திட நம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது.*